வெளியீடு—6—1—1968]
Issued—6—1—1968]

A.S.D(B)
22 FEB 1968

தமிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்
MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

287

பணித்துறை வெளியீடு
OFFICIAL REPORT

புதன்கிழமை, 1967 ஜூன் 28
Wednesday, 28th June 1967

தொகுதி III—எண் 1
Volume III—No. 1

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை,
சென்னை-9.
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

V211,31 N67
N67.3.1;1

V211,31 N67
N67.3·131
MADRAS RECORD OFFICE
22 FEB 1968
65010

உள்ளடக்கம்

		பக்கங்கள்
1	வினாக்கள்—விடைகள்	1–24
2	1967–68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—	
	கோரிக்கை எண் III—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் ..	25–72
3	அரசினர் மசோதா—	
	1967-ம் ஆண்டு தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) மசோதா (எண் 7/1967) ..	72–95
4	பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்	95

தமிழகச் சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1967, ஜூன் 28

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப் பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் 'வினாக்கள், விடைகள்'. உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள்.

விளு எண்கள் 83, 93 தள்ளி வைக்கப்படுகின்றன.

தமிழ்த் துணைப் பேராசிரியர்கள்.

* 94 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசினர் கல்லூரிகளில், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு மட்டும் பேராசிரியர் பதவி உயர்வு தரும்போது அதே போன்று பணியாற்றும் தமிழ்த் துணைப் பேராசிரியர்களுக்கு பேராசிரியர் உயர்வு தராத காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த கேள்வியின் அடிப்படை அனுமானம் சரியல்ல. தமிழகக் கல்வித் துறையின் கீழுள்ள பணியாளர்த் தொகுதியிலுள்ள தமிழ்த் துணைப் பேராசிரியர்களும் ஆங்கிலத் துணைப் பேராசிரியர்களைப் போலவே காலி நேரிடும்போது தமிழ்ப் பேராசிரியர்களாக பதவி உயர்த்தப்பட்டு வருகிறார்கள்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, புதிதாகத் தொடங்கப் பட்டிருக்கிற அரசினர் கல்லூரியில் தமிழுக்குப் பேராசிரியர் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதைப்பற்றி விவரம் தெரியவில்லை. இப்போது தமிழில் பேராசிரியர்கள் 21 பேர்களும் துணைப் பேராசிரியர்கள் 90 பேர்களும், ஆங்கிலத்தில் 26 பேராசிரியர்களும் 115 துணைப் பேராசிரியர்களும் உள்ளார்கள். ஆகையால், ஆங்கிலத் துறையிலே எவ்வாறு உயர்த்தப்படுகின்றதோ, அதுபோன்றுதான் தமிழ்த் துறையிலேயும் உயர்த்தப்படுகிறார்கள். தமிழ்ப் பேராசிரியர்கள் எல்லாக் கல்லூரிகளிலும் வைத்துக்கொள்ளவேண்டுமென்ற யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அவைத்தலைவர் அவர்களே, ஆங்கிலப் பேராசிரியர்களுக்கும் தமிழ்ப் பேராசிரியர்களுக்கும் சம்பளம் ஒரே அளவில் இருக்கிறதா அல்லது சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறதா? அவ்வாறு இருப்பதற்குக் காரணம் என்ன? அதைத் தவிர்ப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : மன்றத் தலைவர் அவர்களே, உயர் நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் முதல்நிலைத் தமிழ் ஆசிரியர்கள், இரண்டாவது நிலைத் தமிழ் ஆசிரியர்கள் என்ற இரண்டு பிரிவாகப் பிரித்திருப்பதால் அவர்கள் முழு தகுதி பெற்ற தமிழ் ஆசிரியர்களாக எல்லோரும் பணியாற்ற முடியாத நிலைமை இருக்கிறது. ஆகையால் அப்படிப் பிரித்திருப்பதை நீக்கி, பயிற்சி பெற்றோ, பெருமலோ பணி யாற்றும் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் போல் அவர்களுக்கும் வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் உறுப்பினர் கருத்து கவனத்தில் கொள்ளப்பட்டு ஆராயப்படும்போது கவனிக்கப்படும்.

புதுக் கல்லூரிகள் துவக்கம்.

*95 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** } **திரு. கரு. சீமைச்சாமி :** } மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரைப் பல்கலைக் கழகத்தோடு இணையும் சட்டக் கல்லூரி ஒன்றை அரசு மதுரை நகரத்தில் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : மதுரைக்குச் சட்டக்கல்லூரி அவசியம் என்று உணர்ந்து இனிமேலாவது அதைச் சீக்கிரம் தொடங்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மதுரைப் பல்கலைக்கழகத்தை ஒட்டி ஒரு சட்டக்கல்லூரியை ஏற்படுத்தவேண்டுமென்ற கோரிக்கை இப்பொழுது மதுரை வழக்கறிஞர் சங்கத்திடமிருந்து வந்திருக்கிறது. ஆகையால் ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்தவேண்டுமென்ற உணர்வு அரசுக்கு இருந்தாலும் அதனுடைய ஆண்டு நிர்ணயம் பற்றிய கருத்துக்களை பொருத்தும், பற்றவைகளைப் பொருத்தும் இந்திய பார் கவுன்சில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிற காரணத்தாலும் அது வந்த பிறகு கவனித்துக் கொள்ளலாம் என்ற கருத்து இருக்கிறது. அது கிடைத்த தற்குப் பிறகு இதுபற்றி ஆலோசிக்கலாம் என்று கருதுகிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : இப்பொழுது இல்லையென்று சொன்னார்கள். மதுரையிலே ஒரு ஹைகோர்ட் வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கனவே இருக்கிறது. அதற்கு முன்னோடியாகச் சட்டக் கல்லூரியை ஆரம்பித்தால் நல்லது. ஆகையால், அதை மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : இப்போது ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை. சட்டக் கல்லூரி வேண்டுமென்ற உணர்வு அரசாங் கத்திற்கு இருக்கிறது. ஆகையால் இந்திய அரசின் கணக்கும், விதிமுறை களும் வந்ததற்குப் பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the full strength of students that have got to be admitted in the Law College, Madras is not filled up and sufficient number of students are not forthcoming and many seats are kept vacant every year ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழிழியன் : இதைப்பற்றிய விவரம் இல்லை.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ : வைத்தியக் கல்லூரி களுக்கு மாணவர்கள் மனு செய்வதுபோல், சட்டக்கல்லூரியிலே சேரு வதற்கு மனு செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் போதுமான அளவிற்கு மாணவர்கள் வரவில்லை என்று தெரிவித்தார்கள். நிலைமை அதுவாகத்தான் இருக்குமென்று கருது கிறேன்.

திரு. எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, தமிழகத்திலே எத்தனைச் சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. குறிப்பாக, மதுரை, தஞ்சை திருச்சி முதலிய தென்மாவட்டங்களிலே இதுவரை தென் மாவட்டங் களுக்கென்று ஒரு சட்டக்கல்லூரி இல்லாத காரணத்தினாலே உடனடியாக மதுரையிலோ அல்லது திருச்சியிலோ ஒரு சட்டக் கல்லூரியை ஆரம்பிப் பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது சென்னை பல்கலைக்கழகத்தின் கீழே ஒரு கல்லூரி இருந்து வருகிறது மதுரைப் பல்கலைக் கழகத்தையொட்டி அங்கே ஒரு சட்டக் கல்லூரி வேண்டுமென்ற உணர்வு இருக்கிறது. இந்திய அரசின் முடிவு வந்த பின் முடிவு எடுக்கப்படும்.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : இப்போது ஒரு சட்டக் கல்லூரி இருக் கின்ற நிலை இருக்கும்போது, மதுரையிலே சர்வகலாசாலை இருக்கின்ற காரணத்தினால் அங்கே ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்தித் தருவதற்கு உரிய நேரத்திலே உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தென் மாவட்டத்தில் ஒரு சட்டக்கல்லூரி ஏற்படும் என்ற நிலைமை ஏற்படும்போது அது மதுரை யிலே தான் அமைவதாக இருக்கும்.

திரு. சு. துரைசாமி: கோவை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரிகள், தொழில் கல்லூரிகள், என்ஜினீயரிங் கல்லூரிகள் எல்லாம் இருப்பதனால் கோவையிலே ஒரு சட்டக் கல்லூரியை வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய் யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எங்கு ஏற்படுத்த வேண்டுமோ அங்குதான் ஏற்படுத்த வேண்டும். கோவை மாவட்டத்திலே பல கல்லூரிகள் இருப்பதனாலே அங்கேயும் ஏற்படுத்தவேண்டும் என்ற நிலை பொருந்திவராது.

திரு. கே. வினாயகம் : ஐயா, சட்டப்படிப்பைப் பொறுத்தவரையில் மாஸ்டர் ஆப் லா படிப்பு சென்னை சர்வகலாசாலையில் இருக்கிறதே தவிர, அது சட்டக்கல்லூரியிலே நடத்தப்படுவதில்லை. இந்த ஆண்டிலேயாவது எம்.எல். டிக்கிரி படிப்பை சட்டக்கல்லூரியிலே ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதைப்பற்றிய முடிவை எடுக்கவேண்டியது பல்கலைக்கழகம் தான். கனம் உறுப்பினருடைய கருத்தை பல்கலைக்கழகத்திற்கு எழுதி அனுப்பலாம். பல்கலைக்கழகம் அதை ஏற்றுக்கொண்டு நமக்கு சிபார்சு செய்தால் அதன் மீது முடிவு எடுக்கலாம்.

திரு. பெ. மலைச்சாமி : சட்டக் கல்லூரி படிப்பிற்கு இரண்டு ஆண்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதை மூன்று ஆண்டுகளாக மாற்றுவதற்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து தகவல் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இது விரிவுபடுத்தப் படுமா என்பதுபற்றி இந்திய பார் கவுன்சில் யோசித்துக்கொண்டு வருகிறார்கள். முடிவு ஒன்றும் வரவில்லை.

திரு. கரு. சீலமைச்சாமி : இரண்டு ஆண்டுகள் படிப்பதால் தரம் குறைவாக இருக்கிறது. ஆகையால், அதை மூன்று ஆண்டுகளாக உயர்த்த வேண்டுமென்ற சிபார்சு இருக்கிறதா ? இந்த அரசாங்கத்தினுடைய கருத்து என்ன ? அதை ஏற்றுக்கொள்ளுகிறதா அல்லது மறுக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதைப்பற்றி அவர்கள் என்னென்ன காரணங்களைத் தெரிவிக்கிறார்கள் என்பதை எல்லாம் முழு கவனத்தோடு பார்த்த பிறகுதான் இறுதி முடிவு இந்த அரசாங்கம் எடுக்கும்.

திரு. மா. இராசாங்கம் : மற்ற கல்லூரிகளிலே இடம் கிடைக்கவில்லை என்பது போன்ற நிலைமை சட்டக் கல்லூரியிலே இல்லை என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றிய விவரம் இல்லை.

THIRU K, S, KOTHANDARAMAIAH ; Will the Hon, Minister for Education and Industries be pleased to state the total number of seats in the existing Law Colleges ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, எதிர் காலத்தில் நீதி மன்றங்களில் எல்லாம் நடவடிக்கைகள் தாய்மொழியிலே இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் சட்டக் கல்லூரியில் தமிழைப் பாடமொழியாகக் கொண்டுவருவதற்கு பழைய அரசாங்கம் முயலவில்லை. இப்பொழுது இருக்கிற அரசாங்கமாவது அதைக் கொண்டுவர முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் உறுப்பினருடைய கேள்வி மூலக் கேள்வியோடு தொடர்பு உடையது அல்ல என்றாலும் எல்லாத் துறைகளிலும் தமிழையே ஆட்சி மொழியாக கொண்டு வர வேண்டுமென்று படிப்படியாக எல்லா இடங்களுக்கும் தமிழ் கொண்டு வரப்படும்.

திரு. கே. விநாயகம் : சட்டக்கல்லூரியிலே படிக்கின்ற படிப்பு ஆனது பிற்காலத்திலே வழக்கறிஞர் வேலைக்கு எந்தவிதமான தொடர்பும் உடையதாக இல்லை. பயன் படவும் இல்லை. முக்கியமாக, எடுத்துக் கொண்டால் ரோமன் லா என்று படிக்கிறோமே தவிர வழக்கறிஞராக வரும்போது அதைவிட்டுவிட்டு புதிய நிலைமை ஏற்படுகின்ற காரணத்தால் இப்போது வழக்கத்திலோ பழக்கத்திலோ பயன்படக்கூடிய வகையிலே கல்வியை மாற்றுவதற்கு பிற்காலத்தில் வழக்கறிஞர்கள் இருக்கக்கூடிய முறையில் கல்வியை சட்டக்கல்லூரியிலே அமைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசாங்கம் இதைப்பற்றி முடிவு செய்வதற்கில்லை. கனம் உறுப்பினருடைய கருத்தை பல்கலைக் கழகத்திற்குத் தெரிவித்தால் பல்கலைக்கழகம் அதை ஆராய்ந்து அதை ஏற்றுக்கொண்டு அரசாங்கத்திற்கு சிபார்சு செய்தால் அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் கூறுவது தவறான கருத்து. சட்டக்கல்லூரியிலே அப்படிச் சட்டம் படிப்பதோடு வேறு சட்டங்களையும் படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ரோமன் லா என்பது அப்படிப்பட்ட வகையிலேதான் உருவாக்கப்பட்டது. அது அந்த வகையிலே தோற்றுவிக்கப்பட்டது என்பதை எல்லோரும் அறிவார்கள். படித்திருப்பவர்கள் நீதி மன்றங்களிலே பயன்படக்கூடிய சட்டங்களைப் பயிலுவதற்குத்தான் அப்ரண்டிஸ் கோர்ஸ் வைக்கப்பட்டு அதிலேகூட ப்ரொசீஜரல் லா என்று எல்லாம் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் சட்ட கவுன்சிலிலே முடிவு தெரிந்ததற்குப் பிறகுதான் இந்திய பார் கவுன்சிலிலே முடிவு எடுக்கிறார்கள். அது தெரிவித்த பிறகுதான் நம்முடைய அரசு ஒரு முடிவு எடுக்கும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : நமது மாநிலத்தில் ஒரே ஒரு சட்டக் கல்லூரி தான் இருக்கிறது. எல்லா கல்லூரிகளும் விரிந்துவருகிற இந்த நேரத்திலே சட்டக் கல்லூரியை மட்டும் விரிவுபடுத்தாததற்குக் காரணம் என்ன ? அதுவும் குறிப்பாக, சட்டக் கல்லூரியில் இடமில்லை என்று ஈவினிங் கல்லூரிகள் நடத்துகிறார்கள். ஆகவே, இந்த நிலைமையைப் போக்கு வதற்கு மதுரை போன்ற ஒரு மத்தியமான இடத்தில் கல்லூரி ஒன்றை உடனடியாகத் துவக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலிலேயே நான் விடை அளித்தேன். மற்ற கல்லூரிகள் துவக்குவதற்கும், சட்டக்கல்லூரி துவக்குவதற்கும் வேறுபாடு இருக்கிறது. மற்ற கல்லூரிகளைப் பொறுத்த அளவில் செலவு அதிகம் ஆகும். ஆனால், சட்டக் கல்லூரியில் வருமானம் தான் அதிகம் இருக்கிறது. மற்ற கல்லூரிகளைப் போல் அதற்கு ஆய்வுக் கூடம் போன்ற அத்தகைய ஏற்பாடுகள் செய்யத் தேவையில்லை. இடத்தைப்பெருக்கி, பெஞ்சுகளை அதிகமாக்கினால் சட்டக் கல்லூரியில் இடமிருக்கும். அந்த வகையில் எவ்வளவு பேர்கள் வந்தாலும் எடுத்துக் கொள்கிற அளவுக்கு சென்னை சட்டக் கல்லூரி இருந்துகொண்டு வருகிறது. தென் மாவட்டங்களைப் பொருத்தும், மதுரை பல்கலைக்கழகத்தை ஒட்டியும் ஒரு சட்டக் கல்லூரி துவக்கவேண்டுவது அவசியமென்றால், அதற்கான இடம் மதுரையாக இருக்கலாமா என்று ஆலோசனையில் இருக்கிறது.

THIRU T. MARTIN : May I request the Honourable Minister for Education to state whether there is any selection board or committee for the admission of students in the Law College ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி வேண்டும். அதைப்பற்றி விவரம் இல்லை.

திரு. இரா. மாணிக்கவாசகம் : சட்டக்கல்லூரியில் மாணவர்கள் அதிகமாக இருப்பதைப்போன்று, மாணவிகளும் அதிகமாக வருவதற்கு வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாணவிகள் எவ்வளவு பேர்கள் வந்தாலும் ஏற்றுக்கொள்கிறநிலைதான் இருந்து வருகிறது.

New colleges.

*96. *Q.*—THIRU K. VINAYAKAM : } Will the Honourable
THIRU M. WILLIAM : }
Minister for Education and Industries, be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have decided to open two new colleges in the academic year 1967–68 ;

(*b*) if so, the places where they are to be opened ; and

(*c*) whether they are intended for girls or for boys or for both ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்—(அ) ஆம்.

(ஆ) செய்யாறு—மாயூரம்.

(இ) ஆண்களுக்கு என செய்யாற்றிலும் பெண்களுக்கு என மாயூரத்திலும் கல்லூரி திறக்கப்படும்.

திரு. கே. விநாயகம் : செய்யாறில் திறக்கப்படும் கல்லூரி முதல் கிரேடு காலேஜாக இருக்குமா அல்லது செகண்டு கிரேடு காலேஜாக இருக்குமா ? பி.யூ.ஸி-யில் சேர்க்கப்படும் "ஸ்டெரந்த்" எவ்வளவாக இருக்கும் செய்யாறில் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது ஆரம்பத்தில்
துவக்கப்படும்பொழுது செகண்டு கிரேடு காலேஜாக இருக்கும். பெரிசுப்
போக விரிவு செய்யப்படும். தேவையை ஒட்டி அது முதல் தரமான
காலேஜாக ஆக்கப்படும். எண்ணிக்கை எவ்வளவு என்பது தெரியவில்லை.
தனிக்கேள்வி போடவேண்டும்.

THIRU M. WILLIAM : In view of the fact that hundreds of
people are refused admission in the colleges and also in view of the
fact that there is no Government college in Kanyakumari District
will the Honourable Minister be pleased to start a Government
College at Thackalai which is a central place in that district ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி கோரிக்கை
இதுவரையில் வந்ததாகத் தெரியவில்லை. ஒரு கல்லூரி துவக்கப்படுவ
தற்கு அடிப்படையாக என்னென்ன நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்ற
னவோ அந்த நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற அளவுக்கு அங்கிருந்து
கோரிக்கை வருமானால், அதுபற்றி கவனிக்கப்படும்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாட்டோ : திருநெல்வேலி மாவட்டத்தில்
அரசாங்கம் ஆரம்பித்துவைத்திருக்கிற கல்லூரி எதுவுமில்லை. குறிப்பாக,
பெண்களுக்குப் போதுமான இடம் கல்லூரிகளில் கிடைக்கவில்லை என்ற
காரணத்தினால், திருநெல்வேலி மாவட்டத்தில் பெண்கள் கல்லூரி
ஒன்றை துவக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருநெல்வேலி மாவட்
டத்தில் போதுமான அளவுக்கு அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட
கல்லூரிகள் இல்லையென்றாலும், தனிப்பட்டவர்கள் நடத்தும் கல்லூரிகள்
இருந்து வருகின்றன. நான் முதலில் எடுத்துச் சொன்னமாதிரி
அவசியத்தை ஒட்டி அதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றித்தரும்
அளவுக்கு கோரிக்கை வந்து, அதற்கான சூழ்நிலையையும் ஏற்படுத்தித்
தருவதற்கு முன்வருவார்களேயானால், அதுபற்றி ஆராயப்பட்டு தக்க முடிவு
எடுக்கப்படும்.

DR. H. V. HANDE : The situation with regard to admission in
colleges has become practically explosive, especially this year,
because the students are not able to get seats and there is a huge
disproportion between the number of seats available and the number
who seek admission. In view of this, will the Government come
forward to start new colleges ? Three or four private colleges were
started. For the last two years no private college has been started.
Will the Government come forward with a concrete proposal to
start new colleges or at least issue instructions to see that new
sections are opened as was done last year with the concurrence of
the Vice-Chancellor ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆண்டுக்கு ஆண்டு
நெருக்கடி வளர்ந்து வருகிறது என்பதை அரசு உணர்கிறது. இந்த
ஆண்டு 8 கல்லூரிகள் புதியதாக துவக்கப்படும். அரசினரின் சார்பாக
இரண்டு கல்லூரிகளும், தனிப்பட்டவர்களால் 6 கல்லூரிகளும் துவக்கப்
படும். குறிப்பிட்ட கல்லூரிகளில் இடம் பெறவேண்டும் என்று சிலர்
விரும்புகின்ற காரணத்தினால்தான் இந்த நெருக்கடி இருந்துகொண்டிருக்
கிறது. பல்வேறு கல்லூரிகளில் இடங்கள் இருக்கின்றன. அந்தக்
கல்லூரிகளுக்கும், புதியதாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகளுக்கும் போகிற
நிலைமை ஏற்பட்டால் இட நெருக்கடியை தவிர்க்கலாம். அப்படி
யும் தவிர்க்கப்படாத அளவுக்கு சூழ்நிலை ஏற்படுமேயானால், ஷிப்டு ஸிஸ்டம்
வைத்து அதில் மாணவர்கள் சேர்க்கப்படலாம் என்று பல்கலைக்கழக
துணைவேந்தர் அவர்களுக்கு ஆலோசனை கூறியிருக்கிறேன். அவர்களும்
அதைப்பற்றி ஆராய்ந்து தக்க முடிவு எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : சேலம் மாவட்டத்தில் அரசினர்
கலைக் கல்லூரி ஒன்றே இருப்பதினாலும், பெண்களுக்கென்று தனிப்
பட்டவர்கள் நிர்வாகத்தில் நடைபெறுகின்ற கல்லூரி ஒன்றே இருக்கக்
கூடிய காரணத்தினாலும் சேலம் மாவட்டத்தில் மாணவர்களுக்கு
போதுமான இடம் அளிக்க முடியவில்லை என்பது அரசாங்கத்திற்குத்
தெரியுமா ? இந்த நிலைமையைப் போக்க சேலம் மாவட்டத்தில்
மற்றொரு அரசினர் கல்லூரியும், மகளிர் கல்லூரியும் ஏற்படுத்த
அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? தவிர, அங்கே சேலம் மாவட்டத்
தில் எம். ஏ. படிப்பதற்கு, போஸ்டு கிராஜுவேட் போன்ற மேல்
உயர்மட்ட படிப்பிற்கும், மற்றபடி பி. காம் கோர்ஸுக்கும் தேவையான
வேறு பிரிவுகளை துவக்குவதற்கும் அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அங்கே இருக்கிற இட
நெருக்கடியைப் போக்குகின்ற அளவுக்கு புதிய கல்லூரி ஏற்படுத்தப்
படுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். நான் முதலில்
குறிப்பிட்ட மாதிரி, கல்லூரிகளின் எண்ணிக்கை குறைவு என்பதை
அரசாங்கம் உணர்ந்து சில பல இடங்களில் புதிய கல்லூரிகளை துவக்குவதற்
கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த
ஆண்டு துவக்குவதற்கு ஏற்பாடுகள் இல்லாவிட்டால், அடுத்த ஆண்டில்
துவக்குவதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று ராசிபுரம் போன்ற
இடத்தில் சொல்லுகிறார்கள். அதை ஒட்டியும், அரசாங்கம் சொல்லு
கின்ற அத்தகைய நிபந்தனைகளை நிறைவேற்றும் வகையிலே அந்த
அடிப்படையிலே கோரிக்கை வைக்கப்படுமானால், அதைப் பற்றி அரசாங்கம்
கவனிக்கும். போஸ்டு கிராஜுவேட் கல்விக்கு வசதிகள் ஏற்படுத்துவது
பற்றி பல்கலைக்கழகம் முடிவு செய்யவேண்டும். பல்கலைக் கழகத்திற்கு
விண்ணப்பித்துக்கொண்டால், அதைப் பல்கலைக்கழகம் ஆராய்ந்து தக்க
நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : திண்டிவனம் பகுதி புயலால் பாதிக்கப்
பட்டதால், அங்கே பணம் வசூல் செய்வது மிகவும் சிரமமாக இருக்கிறது.
ஆகவே, அரசாங்கமே முன்வந்து உதவி செய்து, அங்கு ஒரு கல்லூரியை
துவக்கிவைக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிகள் எந்த
இடங்களிலே தேவை என்பதை முதலில் ஆராய்ந்து உணர்ந்து,
தக்க முடிவு எடுக்கவேண்டும். ஒரு இடத்திலே கல்லூரி ஆரம்பித்தே
தீரவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு, அதற்கு வேண்டிய நிபந்
தனைகள் நிறைவேற்றப்படுவதற்கான நிலைமையைப்பற்றி ஆராயவேண்டும்.
இவைகளெல்லாம் முதலில் கவனிக்கப்படவேண்டும். கல்லூரி அவசிய
மாகிறது என்றால், அதற்கு பல்கலைக்கழகம் அனுமதி வழங்குகிறதா
என்பதெல்லாம் முடிவு செய்யப்பட்ட பிறகு, கவனிக்கப்படவேண்டியது
புயலால் பாதிக்கப்பட்டதால் தேவையான பணம் வசூல் செய்ய முடியுமா
என்பது.

திரு. மா. இராசாங்கம் : தலைவர் அவர்களே, கல்லூரிகளில் சேர
இருக்கிற மாணவ-மாணவிகள் எந்தக் கல்லூரியில் இடம் இருக்கிறது
என்று சரியாகத் தெரியாமல் பல கல்லூரிகளுக்கு அலைந்துகொண்டிருக்
கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எந்தெந்த
கல்லூரிகளில் இடங்கள் இருக்கின்றன என்று வானொலியில்
அறிவிக்கப்போவதாக செய்தி விடுத்திருந்தார். இது வரையில் அந்த
மாதிரி செய்தி வானொலியில் அறிவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஒரு
கல்லூரியிலும் இடம் இல்லையா ? என்ன காரணம் ? என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிகளில் மாணவர்
களைச் சேர்க்கப்படுகிற முயற்சியே இப்போதுதான் எடுக்கப்படுகிறது. சில
கல்லூரிகளில் இன்னும் 2–3 நாட்களுக்குப் பிறகு தான் மாணவர்களை
சேர்க்க இருக்கிறார்கள். சில நாட்கள் சென்ற பிறகு, மாணவர்களைச்

சேர்ப்பதில் சங்கடங்கள் ஏற்பட்டு, பல இடங்களில் நிறைவு செய்யப்பட்டு, சில இடங்களில் நிறைவு செய்யப்படாது இருக்குமானால், அதைப்பற்றி விவரங்களைச் சேர்த்து செய்தித் தாளில் அறிக்கை விடலாமா என்று அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவர் அவர்களே, ஒரு சில கல்லூரிகளில் இட நெருக்கடி ஏற்படக் காரணம், மற்ற கல்லூரிகளின் தரம் கொஞ்சம் குறைந்திருப்பது தான். அவைகளின் தரத்தை உயர்த்த ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இது நம்முடைய முயற்சியினாலே செய்யக்கூடியதல்ல. 100 ஆண்டுகளாக, 50 ஆண்டுகளாக இருந்து ஒரு கல்லூரி வளர்ந்திருக்கிறது என்றால் அதற்குப் பெயரும் புகழும் இருக்கத் தான் இருக்கும். புதிதாக வரக் கூடிய கல்லூரிகளுக்கு எல்லா வசதிகளும் இருக்க முடியாது, இட வசதி, கட்டட வசதி இருப்பதில்லை. புதிய கல்லூரி கவர்ச்சிகரமாக இருக்காதுதான். படிப்பின் தன்மை, நெருக்கடி நிலைமை இவைகளை உணர்ந்து அந்தக் கல்லூரிகளிலும் மாணவர்கள் சேரவேண்டியதுதான்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தனியார்களுக்கு கல்லூரியை அனுமதி நடத்த வழங்கும்போது ஏதாவது நிபந்தனையோடு அனுமதி வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கம் துவக்கும் கல்லூரிகளுக்கு பலவிதமான நிபந்தனைகள் விதிக்கப்படுகிற காரணத்தினால், தனியார் கல்லூரிகளுக்கு அதை விட அதிகமான நிபந்தனைகள் விதிக்கப்படவேண்டும். அதைப்பற்றிய விவரம் இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, may I know from the Honourable Minister, what are the basic requirements or requisites or conditions imposed for starting a new college by the Government ? Does it depend on the educational necessity of the area and what is the financial commitment for that college to be started ? Will the Honourable Minister assure this House that no student who seeks admission to the P.U.C. course will be turned out for want of seats in our State. Some arrangements will have to be made to provide seats for them. Will the Government think about this problem ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் உறுப்பினர் கூறியபடி புகுமுக வகுப்பில் சேர விரும்புகிற அத்தனை பேர்களையும் சேர்த்துக்கொள்ள வழி செய்யவேண்டுமென்பதுதான் நோக்கம் என்றாலும், நிதி வசதி, மற்ற வசதிகளைப் பொறுத்து, கல்லூரிகளைத் துவக்குவதில் நாம் வரையறை செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு கல்லூரி ஆரம்பிக்கவேண்டுமென்றால், இப்போது இருக்கிற முறைப்படி அந்தப் பகுதியில் உள்ளவர்கள் 5 லட்சம் ரூபாய் இடமாகவோ, கட்டடமாகவோ, தொகையாகவோ தருவார்களானால்—இரண்டு, மூன்று ஆண்டுகளில் கொடுக்கும்படியாக ஈவு வைத்திருக்கிறார்கள்—அதற்குப் பிறகு அரசாங்கம் கல்லூரியை ஏற்று நடத்த முன் வருகிறது. அப்படி அரசாங்கம் ஏற்று நடத்தும்போது அந்தக் கல்லூரியை முழு வசதிகளோடு ஆக்கித்தர 20 லட்சம் ரூபாய் அரசாங்கம் செலவு செய்யவேண்டியிருக்கிறது. 5 லட்சம் ரூபாய் இடமாகவோ, கட்டடமாகவோ, தொகையாகவோ வரும்போதுதான் ஒரு இடத்தில் கல்லூரி ஆரம்பிப்பதைப் பற்றி கவனிக்கப்படும் என்ற கொள்கை இப்போது கடைப்பிடிக்கப்படுகிறது.

திரு. ஊ. துரைசாமி : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு திருப்பூரிலே ஆரம்பிக்கப்பட்ட கலைக் கல்லூரியில் இந்த ஆண்டு பி. ஏ. பட்டப் படிப்பு ஆரம்பிக்கப்படாத காரணத்தினால், தேறிய மாணவர்கள்

[illegible]லே படிக்க வசதியற்ற நிலையில் இருக்கிறார்களே ; அதை [illegible] முறையில் திருப்பூரில் இந்த ஆண்டு பட்டப்படிப்பு ஆரம்பிக்[illegible] என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பி.ஏ. படிப்பு [illegible] துவக்கப்படுவதைப்பற்றிப் பல்கலைக்கழகம் முடிவு செய்யவேண்டும். திருப்பூரைப் பொறுத்த வரையில், அவர்கள் வாக்களித்த தொகையை இன்னும் தரவும் இல்லை. அவர்களுக்குத் தருவதற்கு வாய்ப்பு இருந்தும் தரப்படாததன் காரணமாக மேற்கொண்டு வசதி செய்யப்படாமல் இருக்கிறது. அந்த ஊரைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் முயன்று, வாக்களித்த தொகையைத் தர முயற்சி செய்வார்களேயானால், பல்கலைக் கழகத்தைக் கலந்துகொண்டு அரசு அதற்கான முறைப்படி ஏற்பாடு செய்யும்.

திரு. கெ. இரா. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, நாகையில் தொழில் பயிற்சிப் பள்ளியும், பாலிடெக்னிக்கும் இருக்கின்றன. எனவே அங்கு ஒரு ஆர்ட்ஸ் காலேஜ் அல்லது என்ஜினீயரிங் காலேஜ் ஏற்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அது ஆராயப்படவேண்டிய ஒன்று.

திரு. எம். பன்னீர்செல்வம் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூரில் உயர்நிலைப் பள்ளிகள் நான்கும், ஆம்பூருக்கு மூன்று மைல் சுற்றளவில் உயர்நிலைப் பள்ளிகள் நான்கும் இருப்பதால் ஆம்பூரில் ஒரு கல்லூரியை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. கெ. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 8 கல்லூரிகளை ஆரம்பிக்க அரசு உத்தேசித்திருப்பதாகச் சொன்னார்கள். எந்தெந்த ஊரில் ஆரம்பிக்கப்படப் போகிறது. மாயவரத்தில் ஒரு பெண்கள் கல்லூரியை ஆரம்பிக்க, பஞ்சாயத்து யூனியன்களிடமிருந்து 10,000 ரூபாய் வீதம் பெறப்பட்டிருக்கிறது. அது இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கேள்வியே இதைப் பற்றித்தான். இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படுகிறது. பெண்கள் கல்லூரி—அது அரசாங்கத்தின் சார்பாக ஆரம்பிக்கப்படுகிறது.

திரு. கோனத்தூர். கோதண்டம் : தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் அரசினர் கல்லூரி ஆரம்பிக்கப்படுவதாக இருந்தது. அது வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு விட்டது. இனிமேலாவது அங்கே ஒரு கல்லூரியை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : செங்கற்பட்டிலே ஒரு கல்லூரி வைக்கவேண்டுமென்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அது குறித்து அடிப்படை முயற்சிகள் எதுவும் எடுக்கப்படாத காரணத்தினால், அங்கு கல்லூரி அமைப்பதைப் பற்றி இப்போது முயற்சிக்கப்படவில்லை.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Honourable Minister to state whether, in view of the heavy rush for admission to the Science Course, will the Government make some provision for providing additional seats for the Science Course in colleges like St. Mary's College, Tuticorin, St. Xavier's College and St. John's College, Palayamkottah ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : [illegible] விரிவுபடுத்தவேண்டுமென்று, எங்கெங்கு அப்படி விரிவுபடுத்த [illegible] இருக்கிறதோ அங்கெல்லாம் விரிவுபடுத்த முயற்சி எடுக்கவேண்டுமென்று பல்கலைக்கழக துணைவேந்தருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவரும் அதற்கான முயற்சிகளை எடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

திரு. அ. அறுமுகம் : தலைவர் அவர்களே, தொழிற் பயிற்சிக் கல்லூரிகளில் இடம் கிடைக்காத மாணவர்களுக்கு மற்ற கல்லூரிகளில் முக்கியத்துவம் கொடுத்து முக்கியமாக முதலில் சேர்த்துக்கொள்ளும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிகளில் [illegible] மாணவர்கள் சேருவதற்கு விண்ணப்பிக்கிறார்கள். தொழிற் பயிற்சிக் கல்லூரிகளில் சேருவதற்கும் மாணவர்கள விண்ணப்பித்துக்கொள்ளலாம். முறைப்படி அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : சர்க்கார் துறையில் ஆரம்பிக்கப்படும் கல்லூரிகள் 5 லட்சம் ரூபாய் வசூல் செய்யப்படும் [illegible] ஆரம்பிக்கப்படுமா ? இல்லாவிட்டால் சர்க்கார் செலவிலேயே ஆரம்பிக்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 20 லட்சம் ரூபாய் சர்க்கார் செலவு செய்ய முன் வருகிறது. அதற்கு அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் இடமாகவோ, கட்டடமாகவோ, தொகையாகவோ 5 லட்சம் ரூபாய் கொடுத்து, அந்த இடத்தில் கல்லூரியின் தேவையை உத்தேசித்து முதலிலேயே கண்டு, பல்கலைக்கழகம் சிபாரிசு செய்த பிறகு அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முன் வருகிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஏற்காடில் அழகான இடம் இருக்கிறது. வெளிநாட்டினர் கூட வந்து படிக்கும் சூழ்நிலை இருக்கிறது. அங்கு ஒரு கல்லூரி இல்லாத குறையைத் தவிர்க்க இந்த ஆண்டு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் ஏற்காட்டுக்குச் சென்றபோதுகூட, அவர்கள் நிபந்தனையை நிறைவேற்ற முன் வந்தால் அங்கு ஒரு கல்லூரியை வைக்கும் ஆதரவை அரசாங்கம் தரும் என்று கூறிவிட்டு வந்திருக்கிறேன்.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, கல்லூரியில் இடம் கோரி மாணவர்கள் அனேக கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்பதால் மாணவர்களுக்கு செலவு அதிகமாக ஆகிறது. விண்ணப்பங்களின் எண்ணிக்கையும் அதிகமாக ஆகிறது. அதைத் தவிர்த்து, எல்லோரும் அரசாங்கத்திற்கே விண்ணப்பித்து, அரசாங்கம் அந்தந்தப் பகுதி மாணவர்களுக்கு அந்தந்தப் பகுதி கல்லூரிகளில் இடம் அளித்தால் மாணவர்களுக்கு ஆகக் கூடிய செலவும் குறையும், விண்ணப்பங்களின் எண்ணிக்கையும் குறையும். இதை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கருத்தும் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இதுவும் கவனிக்கப்பட வேண்டிய கருத்து. இதைப்பற்றி பல்கலைக்கழக துணை வேந்தரையும் மற்றவர்களையும் கலந்து கொண்டு என்ன செய்வது என்ற முடிவுக்கு வரலாம். சென்ற ஆண்டு சென்னை கலைக் கல்லூரிக்கு 3,200 விண்ணப்பங்கள் வந்தன 630 இடங்களுக்கு, ஒவ்வொரு மாணவரும் 5—6 கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கும் காரணத்தினால், விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. கடைசியாகச் சென்ற ஆண்டு நம் மாநிலத்தில் 3,000 இடங்கள் நிரப்பப்படாமல் இருந்து வந்திருக்கிறது.

THIRU K. VINAYAKAM : I was wanting to put a [illegible] [illegible] to the main question, because I happened to be the author of the main question.

MR. SPEAKER : The hon. Member may put a question.

THIRU K. VINAYAKAM : Is the Honourable Minister aware that the Tiruttani Devasthanam has come forward with a contribution of Rs. 5 lakhs for starting a college and that 29 high schools have been started in that taluk after the Tiruttani area was merged with the Madras State and as there is a demand for the Pre-University Course, will the Government think of starting a college in the Tiruttani area ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் போன்றவர்கள், திருத்தணிப்பகுதியிலிருந்து அப்படிப் பட்ட கோரிக்கையைக் கொடுத்தால், அரசாங்கம் கவனித்து தக்க முடிவு எடுக்கும்.

* 97 வினா.—திரு. மா. பா. சாரதி : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு அரசினரால் எத்தனை புதிய பெண்கள் கல்லூரிகள் துவக்கப்படுகின்றன ?

(ஆ) வேலூரில் புதிய பெண்கள் கல்லூரி, அரசாங்கத்தினரால் எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஒன்று.

(ஆ) வேலூரில் புதிய பெண்கள் கல்லூரி ஒன்று அரசாங்கத்தினரால் ஏற்படுத்த தற்பொழுது யோசனை ஏதும் இல்லை.

திரு. மா. பா. சாரதி : தலைவர் அவர்களே, ஒரு புதிய கல்லூரியை இந்த ஆண்டு துவக்க யோசனை இல்லை என்றாலும், இப்பொழுது உள்ள கல்லூரிகளில் 25 சதவீதம் பெண்களைச் சேர்க்க அரசாங்கம் முற்படுமா ? அது சம்பந்தமாக அமைச்சருக்கு மனுக்கொடுத்திருப்பதை வைத்து, இருக்கும் நெருக்கடியை அரசாங்கம் தீர்க்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வேலூரிலிருக்கும் வூரிஸ் கல்லூரிக்கும், அரசாங்கக் கல்லூரிக்கும் மேலாக ஒரு பெண்கள் கல்லூரியும் இருக்கிறது. ஆகவே, ஆண்கள் கல்லூரிகளில் பெண்களுக்கும் புகுமுக வகுப்பில் இடம் தரவேண்டும் என்றால் அதற்கு பல்கலைக்கழகம் இடம் கொடுக்க வேண்டும். இதுப்பற்றித் துணைவேந்தருக்குத் தெரிவித்தபோது, அவர்கள் ஆண்கள் கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் பெண்களைச் சேர்க்க வசதி ஏற்படுத்துவதில்லை என்கிற முடிவை பல்கலைக்கழகம் எடுத்திருப்பதாகச் சொன்னார்கள், பி.ஏ., பி.எஸ்ஸி., எம்.ஏ., எம்.எஸ்.ஸி., போன்ற வகுப்புகளில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கலாம். ஆனால் புகுமுக வகுப்பில் அப்படிச் சேராமல் இருப்பது நல்லது என்ற கொள்கையை பல்கலைக் கழகம் மேற்கொண்டிருக்கிறது. அப்படி அனுமதி வேண்டும் என்றாலும் பல்கலைக்கழகம்தான் அனுமதி கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட முடிவைத் துணைவேந்தர் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. வெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் குழுவில் அரசாங்கம் ஒரு உறுப்பினரை தங்கள் சார்பில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துமா ? ஏனென்றால்,

இப்பொழுது இருக்கும் நிலையில் வேண்டுமென்றே, கட்சியின் அடிப்படையில், ஜாதியின் அடிப்படையில், வேண்டியவர்களைச் சேர்த்துக் கொள்வதும், வேண்டாதவர்களைச் சேர்க்காமல் இருப்பதும் நடந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்ற அரசாங்கம் தன்னுடைய உறுப்பினர் ஒருவரை மாணவர்கள் தேர்வுக் குழுவில் சேர்க்க முயற்சிக்குமா?

மாணபுமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அது போன்ற உத்தேசம் சர்க்காருக்கு இல்லை. ஆனாலும், அது சம்பந்தமான பிரச்னைகளை ஆராய்ந்து, ஏதேனும் ஒரு முடிவு எடுக்கலாமா என்று யோசிக்கப்படுகிறது.

திரு. சி. கோவிந்தராஜன் : சார், தஞ்சை மாவட்டத்தில் பூம்புகார் ஓரியண்டல் கல்லூரியில் இந்து மாணவர்களை மட்டும் தான் சேர்க்க வேண்டும் என்கிற ஒரு முறை இருக்கிறது. அது உண்மையானால், நம்முடைய அரசின் பிரகடனப்படுத்தப்பட்ட, மத சார்பற்ற கொள்கையின் படி, அதை மாற்றியமைத்து, வேறு மத மாணவர்களுக்கும் இடம் கொடுக்க வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்வி வேலூர் கல்லூரி பற்றியது. அது பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. பூம்புகார் கல்லூரி பற்றி குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. எஸ் ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, வேலூரில் பெண்கள் கல்லூரி வைக்க உத்தேசம் இல்லை என்று அமைச்சர் சொன்னார்கள். அங்கே பெருத்த இட நெருக்கடி இருக்கிறது. அப்படியிருந்தும் பெண்களையும் ஆண்களுடன் சேர்த்துப் படிக்க விடுவதில்லை என்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை வேறு இடங்களில் இருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கு கோ-எஜுகேஷனில் நம்பிக்கை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கோ-எஜுகேஷன் அவசியமான இடங்களில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. பெண்கள் படிக்க பக்கத்தில் வாய்ப்பு இருக்கிறது. இந்தக் கோ-எஜுகேஷனையும் அனுமதிக்க வேண்டியது பல்கலைக் கழகம்.

DR. H. V. HANDE : The Minister in his reply said that at the end of June or the beginning of July there will still be a number of unfilled seats. Will the Minister consider the necessity of giving instructions to the Principals of colleges to notify in the newspapers the names of colleges and the number of unfilled seats, so that students who have not secured admission elsewhere might apply to them instead of having to discontinue their education ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி உறுப்பினர் கூறிய கருத்து இருந்து வருகிறது. பல கல்லூரிகளில் சேர்க்க வேண்டிய நிலை இருக்கிறது. அது எல்லாம் முடிந்த பிறகு எங்கெங்கே இடங்கள் இருக்கின்றன என்பதை இயக்குநர் மூலம், பத்திரிகைகள் மூலம் அறிவிக்க யோசித்து வருகிறது.

திரு. எஸ். முருகையன் : வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரே ஒரு பெண்கள் கல்லூரிதான் இருக்கிறது. அதுவும் தனியார் துறையில் இருப்பதால் வகுப்புவாத அடிப்படையில் தான் மாணவிகள் சேர்க்கப்படுகிறார்கள். இந்த ஆண்டு இல்லையென்றாலும் அடுத்த ஆண்டிலாவது ஒரு புதுக் கல்லூரியை ஆரம்பிக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே குறிப்பிட்டபடி, நிபந்தனைகளை நிறைவேற்றி கோரிக்கைகள் அனுப்பி வைப்பார்களேயானால், அது கவனிக்கப்படும்.

திரு. ந. தீர்த்தகிரி : சார், ஓசூரைச் சேர்ந்த பகுதியில் கல்லூரி கிடையாது. அங்கே ஒரு கல்லூரியை அமைக்க ஏதாவது உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே குறிப்பிட்டபடி நிபந்தனைகளை நிறைவேற்றி கோரிக்கை வந்தால் அது கவனிக்கப்படும்.

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்த வரையில், ஒரே ஒரு கல்லூரி தவிர மற்றவைகளெல்லாம் தென் சென்னையில்தான் இருக்கின்றன. வட சென்னையில் ஒரே ஒரு கல்லூரி தான் இருக்கிறது. ஆகவே, வேறொரு கல்லூரியை, குறிப்பாக, இந்தியா பிஸ்டன்ஸ் தொழிற்சாலை, பி. அண்டு சி. தொழிற்சாலை, ரெயில்வே தொழிற்சாலை இவை இருக்கும் தொழில் பேட்டையாக இருக்கும் புரசைவாக்கம் பகுதியில் ஒரு கல்லூரியை அமைக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், நிர்வாகத்திற்காக, வட சென்னை, தென் சென்னை என்று பிரிக்க வாய்ப்பு உள்ளதானாலும், துவக்கப் பள்ளிகள் பிள்ளைகள் சென்று படிக்கும் அளவில் கிட்டக் கிட்டவும், உயர் நிலைப் பள்ளிகள் நடந்து சென்று படிக்கும் அளவில் அரை மைல் தூரத்திலும், கல்லூரி என்றால் ஐந்து, ஆறு மைல் தூரத்திலும் இருக்கலாம். அது மட்டுமல்ல, வளர்ந்து வரும் நகரங்களில், சில பகுதிகள் தொழிற்சாலைகள் அமைந்த பகுதியாகவும், சில பகுதிகள் கல்லூரிகள் அமைந்தவையாகவும், வேறு சில பகுதிகள் ஸ்டுடியோக்கள் இருக்கும் பகுதியாகவும், வேறு பகுதிகள் மக்கள் வாழும் பகுதிகளாகவும் வளர்ந்து வருவது இயற்கை தான். அதை ஒட்டித் தான் கல்லூரிகளும் தொழிற்சாலைகளும் அமைகின்றன. ஆகவே, தென் சென்னை கல்லூரிகள் உள்ள பகுதி என்றால், வட சென்னை தொழில் வளம் நிறைந்த பகுதியாக இருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : சார், அரியலூர் பகுதியிலேயே மகளிர் கல்லூரி கிடையாது. அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதற்காக கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய கோரிக்கை பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்களுக்குச் சிபார்சு செய்திருக்கிறேன். முடிவு எடுக்கவேண்டியவர்கள் அவர்கள், நான் முதலிலே குறிப்பிட்டபடி நிபந்தனைகளை நிறைவேற்றி,—கோரிக்கைகள் வந்தாலும் சில சங்கடங்கள் இருக்கின்றன. அரசாங்கம் பல்கலைக் கழகத்திற்கு சிபார்சு செய்கிறது. முடிவு அவர்கள் எடுக்கிறார்கள்.

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, நான் முன்பு கேட்டது என்னவென்றால், தியாகராஜா கல்லூரியில் பெரம்பூரில் உள்ளவர்களுக்கு அட்மிஷன் மறுக்கப்பட்டிருக்கிறது. அதை அமைச்சர் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மறுக்கப்பட்டிருந்தால் அது சரியில்லை. கவனத்திற்குக் கொண்டு வந்தால், நடவடிக்கை எடுக்கலாம்.

THIRU T. MARTIN : In his reply to the question regarding complaints made by certain persons that discrimination was shown in the admission of students to private colleges, the Honourable Minister for Education said that there was a proposal to associate a Government member with the admission work. Will it not amount to Government interference in the internal administration of private aided colleges ?

இப்பொழுது இருக்கும் நிலையில் வேண்டுமென்றே, கட்சியின் அடிப்படையில், ஜாதியின் அடிப்படையில், வேண்டியவர்களைச் சேர்த்துக் கொள்வதும், வேண்டாதவர்களைச் சேர்க்காமல் இருப்பதும் நடந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்ற அரசாங்கம் தன்னுடைய உறுப்பினர் ஒருவரை மாணவர்கள் தேர்வுக் குழுவில் சேர்க்க முயற்சிக்குமா?

மாணபுமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அது போன்ற உத்தேசம் சர்க்காருக்கு இல்லை. ஆனாலும், அது சம்பந்தமான பிரச்னைகளை ஆராய்ந்து, ஏதேனும் ஒரு முடிவு எடுக்கலாமா என்று யோசிக்கப்படுகிறது.

திரு. சி. கோவிந்தராஜன் : சார், தஞ்சை மாவட்டத்தில் பூம்புகார் ஓரியண்டல் கல்லூரியில் இந்து மாணவர்களை மட்டும் தான் சேர்க்க வேண்டும் என்கிற ஒரு முறை இருக்கிறது. அது உண்மையானால், நம்முடைய அரசின் பிரகடனப்படுத்தப்பட்ட, மத சார்பற்ற கொள்கையின் படி, அதை மாற்றியமைத்து, வேறு மத மாணவர்களுக்கும் இடம் கொடுக்க வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்வி வேலூர் கல்லூரி பற்றியது. அது பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. பூம்புகார் கல்லூரி பற்றி குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. எஸ் ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, வேலூரில் பெண்கள் கல்லூரி வைக்க உத்தேசம் இல்லை என்று அமைச்சர் சொன்னார்கள். அங்கே பெருத்த இட நெருக்கடி இருக்கிறது. அப்படியிருந்தும் பெண்களையும் ஆண்களுடன் சேர்த்துப் படிக்க விடுவதில்லை என்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை வேறு இடங்களில் இருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கு கோ-எஜுகேஷனில் நம்பிக்கை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கோ-எஜுகேஷன் அவசியமான இடங்களில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. பெண்கள் படிக்க பக்கத்தில் வாய்ப்பு இருக்கிறது. இந்தக் கோ-எஜுகேஷனையும் அனுமதிக்க வேண்டியது பல்கலைக் கழகம்.

Dr. H. V. HANDE : The Minister in his reply said that at the end of June or the beginning of July there will still be a number of unfilled seats. Will the Minister consider the necessity of giving instructions to the Principals of colleges to notify in the newspapers the names of colleges and the number of unfilled seats, so that students who have not secured admission elsewhere might apply to them instead of having to discontinue their education ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி உறுப்பினர் கூறிய கருத்து இருந்து வருகிறது. பல கல்லூரிகளில் சேர்க்க வேண்டிய நிலை இருக்கிறது. அது எல்லாம் முடிந்த பிறகு எங்கெங்கே இடங்கள் இருக்கின்றன என்பதை இயக்குநர் மூலம், பத்திரிகைகள் மூலம் அறிவிக்க யோசித்து வருகிறது.

திரு. எஸ். முருகையன் : வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரே ஒரு பெண்கள் கல்லூரிதான் இருக்கிறது. அதுவும் தனியார் துறையில் இருப்பதால் வகுப்புவாத அடிப்படையில் தான் மாணவிகள் சேர்க்கப்படுகிறார்கள். இந்த ஆண்டு இல்லையென்றாலும் அடுத்த ஆண்டிலாவது ஒரு புதுக் கல்லூரியை ஆரம்பிக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே குறிப்பிட்டபடி, நிபந்தனைகளை நிறைவேற்றி கோரிக்கைகள் அனுப்பி வைப்பார்களேயானால், அது கவனிக்கப்படும்.

திரு. ந. தீர்த்தகிரி : சார், ஹரூரைச் சேர்ந்த பகுதியில் கல்லூரி கிடையாது. அங்கே ஒரு கல்லூரியை அமைக்க ஏதாவது உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே குறிப்பிட்டபடி நிபந்தனைகளை நிறைவேற்றி கோரிக்கை வந்தால் அது கவனிக்கப்படும்.

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்த வரையில், ஒரே ஒரு கல்லூரி தவிர மற்றவைகளெல்லாம் தென் சென்னையில்தான் இருக்கின்றன. வட சென்னையில் ஒரே ஒரு கல்லூரி தான் இருக்கிறது. ஆகவே, வேறொரு கல்லூரியை, குறிப்பாக, இந்தியா பிஸ்டன்ஸ் தொழிற்சாலை, பி. அண்டு சி. தொழிற்சாலை, ரெயில்வே தொழிற்சாலை இவை இருக்கும் தொழில் பேட்டையாக இருக்கும் புரசைவாக்கம் பகுதியில் ஒரு கல்லூரியை அமைக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், நிர்வாகத்திற்காக, வட சென்னை, தென் சென்னை என்று பிரிக்க வாய்ப்பு உள்ளதானாலும், துவக்கப் பள்ளிகள் பிள்ளைகள் சென்று படிக்கும் அளவில் கிட்டக் கிட்டவும், உயர் நிலைப் பள்ளிகள் நடந்து சென்று படிக்கும் அளவில் அரை மைல் தூரத்திலும், கல்லூரி என்றால் ஐந்து, ஆறு மைல் தூரத்திலும் இருக்கலாம். அது மட்டுமல்ல, வளர்ந்து வரும் நகரங்களில், சில பகுதிகள் தொழிற்சாலைகள் அமைந்த பகுதியாகவும், சில பகுதிகள் கல்லூரிகள் அமைந்தவையாகவும், வேறு சில பகுதிகள் ஸ்டுடியோக்கள் இருக்கும் பகுதியாகவும், வேறு பகுதிகள் மக்கள் வாழும் பகுதிகளாகவும் வளர்ந்து வருவது இயற்கை தான். அதை ஒட்டித் தான் கல்லூரிகளும் தொழிற்சாலைகளும் அமைகின்றன. ஆகவே, தென் சென்னை கல்லூரிகள் உள்ள பகுதி என்றால், வட சென்னை தொழில் வளம் நிறைந்த பகுதியாக இருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : சார், அரியலூர் பகுதியிலேயே மகளிர் கல்லூரி கிடையாது. அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதற்காக கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய கோரிக்கை பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்களுக்குச் சிபார்சு செய்திருக்கிறேன். முடிவு எடுக்கவேண்டியவர்கள் அவர்கள், நான் முதலிலே குறிப்பிட்டபடி நிபந்தனைகளை நிறைவேற்றி,—கோரிக்கைகள் வந்தாலும் சில சங்கடங்கள் இருக்கின்றன. அரசாங்கம் பல்கலைக் கழகத்திற்கு சிபார்சு செய்கிறது. முடிவு அவர்கள் எடுக்கிறார்கள்.

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, நான் முன்பு கேட்டது என்னவென்றால், தியாகராஜா கல்லூரியில் பெரம்பூரில் உள்ளவர்களுக்கு அட்மிஷன் மறுக்கப்பட்டிருக்கிறது. அதை அமைச்சர் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மறுக்கப்பட்டிருந்தால் அது சரியில்லை. கவனத்திற்குக் கொண்டு வந்தால், நடவடிக்கை எடுக்கலாம்.

Thiru T. MARTIN : In his reply to the question regarding complaints made by certain persons that discrimination was shown in the admission of students to private colleges, the Honourable Minister for Education said that there was a proposal to associate a Government member with the admission work. Will it not amount to Government interference in the internal administration of private aided colleges ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு உறுப்பினர் போடுவதை ஏற்றுக்கொண்டேன் என்று சொல்லவில்லை. அந்தக் கருத்தும், இன்னும் பல கருத்துக்களும் ஆராயப் படவேண்டும், அதன்பிறகு தக்க முடிவு எடுக்கும் என்று சொன்னேன். அரசாங்கத்திடம் அப்படிப்பட்ட முடிவு இருக்கிறது என்று சொல்லவில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : சார், இந்தக் கல்லூரி ஆரம்பிப்பது பற்றி இவ்வளவு அதிகமாகச் சட்டசபையில் அங்கத்தினர்கள் விவாதிக்கும் இந்தக் காலத்தில் காங்கிரஸ் நண்பர்கள் மாயவரத்தில் சர்க்காரால் ஆரம்பிக்கப்பட விருக்கும் கல்லூரிக்கு நன்கொடை கொடுக்கக்கூடாதென்று சீர்காழி பஞ்சாயத்து யூனியனும் மற்றவர்களும் தடை செய்கிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ? அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த மாதிரி கருத்து எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

THIRU K. VINAYAKAM : MR. Speaker, Sir. on a point of order. I object to this kind of question. Putting such a kind of vague question insinuating against the honourable Members of this House is an insult . . .

MR. SPEAKER : The point of order raised by the honourable Member, Thiru Vinayakam, is upheld because the question contained an imputation which is not allowed under our Rules.

திரு. வ. க. இராமராசன் : தலைவரவர்களே, கோபிச்செட்டிப் பாளையத்தில் கல்லூரி ஏற்படுத்த ஒரு பெரியவர் இரண்டு லட்ச ரூபாய் நன்கொடையாக அளிக்க முன் வந்திருக்கிறார். இது குறித்து ஆவன செய்ய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இது குறித்து முறையாகப் பல்கலைக் கழகத்திற்கு நிபந்தனைகளை நிறைவேற்றி விண்ணப்பிக்கப் பட்டால், பல்கலைக் கழகம் அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்த பிறகு அதைப் பற்றி கவனிக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, is there a proposal to start a new college for women in the Dharmapuri district ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதைப் பற்றி உத்தேசம் எதுவும் இப்பொழுது இல்லை.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : பழனி தேவஸ்தானத்தாரால் பெண்கள் கல்லூரி ஒன்று அமைக்கும் திட்டம் இருந்தது. அது அரசுக்குத் தெரியுமா? அது எப்போது ஏற்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரங்களுக்கு தனிக் கேள்வி போடவும்.

அரசியல் தியாகிகள்.

*98 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய சட்டக் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) வீடில்லாத அரசியல் தியாகிகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) வீடில்லாத அரசியல் தியாகிகளுக்குவீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் எதுவும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : தலைவரவர்களே, தியாகிகள் என்பவர்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்ட நிலங்களிலே சிலவற்றை சில பேர் விற்று விட்டார்கள் என்கிற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அம்மாதிரியிருந்தால் அவர்களுக்கு என்ன நோக்கத்திற்காக அந்த நிலங்கள் கொடுக்கப்படுகிறதோ அந்த நோக்கம் நிறைவேறாமல் போகிறது. ஆகவே, அந்த மாதிரி விற்பனை செய்யக்கூடாதென்று தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தியாகிகளுக்கு நிலங்கள் கொடுக்கும்பொழுது அது சம்பந்தப்பட்ட விதிகளோடு தான், கண்டிஷன்களோடு தான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த விதிகளை மீறியிருந்தால் அது பற்றிக் குறிப்பாகக் கனம் அங்கத்தினர் எழுதினால் அது பற்றி நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, தியாகிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தின் மீது சர்க்கார் கண்டிஷன்கள் போட்டார்கள் என்று சொன்னார்கள். கண்டிஷன்படி 10 வருஷத்திற்கு மேல் விற்றுக் கொள்ளலாம் என்று சர்க்கார் உத்தரவு போட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால் விற்றது பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுப்பதற்கில்லை என்பதை சர்க்கார் உணருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அமைச்சரவர்கள் கூறிய விதிகள் என்பதில் இதுவும் அடங்கும்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, முன்னாள் அரசாங்கம் அரசியல் தியாகிகளுக்கு 5 ஏக்கரா நிலம் கொடுத்ததாகக் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் பல தியாகிகள் வீடுகள் கட்டிக்கொண்டு 100 ஏக்கர்களுக்குச் சொந்தக்காரர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் சட்டமன்றத்தில் உறுப்பினர்களாயிருந்திருக்கிறார்கள். அது எப்படி வந்தது ? புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்தார்களா ? அல்லது அரசாங்கமே தந்ததா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புறம்போக்கு நிலங்களை எப்படியெப்படி, யார்யார் அஸைன்மெண்ட் செய்ய வேண்டுமென்பதைப் பற்றி போர்டு ஸ்டாண்டிங் ஆர்டரில் விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மீறி யாராவது அனுபவித்திருந்தால் அதைப் பற்றி அங்கத்தினர் குறிப்பிட்டு எழுதி அனுப்பினால் அது பரிசீலிக்கப்படும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : சபாநாயகரவர்களே, தியாகிகள் கஷ்டப் பட்டுக்கொண்டிருந்த காலத்தில், ஜெயிலிலாவது நல்லதொரு சுகத்தை அனுபவித்திருக்கிறார்கள். இப்பொழுது அது கூட இல்லாமல், வீடில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது செய்யக் கூடாதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தியாகிகள் தியாகம் செய்யும் பொழுது எதையும் எதிர்பார்த்துத் தியாகம் செய்யவில்லை. அவர்கள் அந்நியர்களை விரட்டுவதற்காகத் தியாகம் செய்தார்கள். அவர்களிலே சிலர் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு இந்த அரசாங்கம், விடுதலை பெற்ற அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே தான் அவர்களுக்கும் நிலம் வழங்க வேண்டுமென்று ஒரு திட்டமும், உதவிப் பணம் கொடுக்கவேண்டுமென்று ஒரு திட்டமும் கொண்டு வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே அது செய்யப்பட்டது. வீடு கட்டும் திட்டம் இன்று பரிசீலனையில் இல்லை என்று சொன்னேன்.

THIRU K. VINAYAKAM ; Sir, while appreciating the sentiments expressed by the Hon. Minister for Law, may I know whether the Hon. Minister is aware of the fact that the services rendered by the political sufferers is a noble and meritorious one in the interest of the entire country including the Party in power.? So, will the Government re-think about setting apart some house-sites or build houses wherever it is a deserving case ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தியாகிகளிலே கஷ்டப்படுகின்றவர்கள், ஏழ்மை நிலையிலே இருக்கின்றவர்கள் ஆகிய இவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுமா என்பது கேள்வி. பொதுவாக ஏழைகளுக்குப் புறம்போக்கு நிலங்களிருந்தால் வீடுகள் கட்டிக்கொடுக்க ஏற்கெனவே நம் சட்ட விதிகளில் இடமிருக்கிறது. அந்த விதிகளுக்கிணங்க அவர்களும் மனுப்போடுவார்களேயானல் அவ்விதிகளுக்கு உட்பட்டு அரசாங்கம் பரிசீலிக்கும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : தலைவரவர்களே, திருமயம் தொகுதியைச் சேர்ந்த மேக்கினிப்பட்டி என்ற ஊரிலிருக்கும் பெரிய ஐயா என்பவர் சிறை சென்று உண்மையான தியாகியாக இருந்தும், கடந்த அரசுக்கு விண்ணப்பித்திருந்தும் அவருக்கு எந்தவித உதவியும் செய்யவில்லை. அவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் இருக்கின்ருர்கள். அவருக்கு நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப்பற்றிய குறிப்புகளை அங்கத்தினர் எழுதிய னுப்பினுல் அது பற்றிப் பரிசீலிக்கப்டுபம்.

திரு. ஆர். நாகசுந்தரம் : தியாகிகள் என்ற வரிசையில் யார் யார் வருகிருர்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் யார் யார் என்பது பற்றி பட்டியல் ஏற்படுத்த முந்தைய அரசு ஒரு ஏற்பாடு செய்தது. அந்தப் பட்டியலிலே இடம் பெற்றவர்கள் எல்லாம் தியாகிகள் என்று எடுத்துக்கொள்ளப்படுகிருர்கள். அந்தப் பட்டியலிலே இடம் பெற வேண்டுமென்ருல் அதற்கென்று சில விதி முறைகள் இருக்கின்றன. யார் எந்தக் கட்சியிலே இப்போது சேர்ந்தாலும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் அந்தப் பட்டியலில் இடம் பெறுவார்கள்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : தலைவரவர்களே, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மாத்திரம் தியாகிகள் என்று வரையறுப்பது தவறு. அதே மாதிரி அதற்குப் பின்னுல் ஏற்பட்ட மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் தியாகிகள்தான். எனவே, அந்தப் பழைய விதிகளை, பழைய சர்க்கார் செய்த முறைகளை மாற்றி இங்கு தியாகிகள் என்பவர்கள் இப்போது பட்டியலில் இடம் பெறுவதற்கேற்ப விதிகளை மாற்றியமைக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : கனம் உறுப்பினர் கேட்டது பொதுப்படையான கேள்வி. ஆகையால் பொதுப்படையான கருத்தையே தான் தெரிவிக்க விரும்புகிறேன். உண்மையான தியாகிகள், இருப்பதை இழந்தவர்கள், வர இருந்ததை வேண்டாமென்று கூற முற்பட்டவர்கள், இந்த இரண்டு பட்டியலில் இருக்கிறவர்கள் உண்மையான தியாகிகள் என்று இதிலே குறிப்பிடப்பட்டிருப்பதற்குக் காரணம், அவர்கள் விடுதலைப் போராட்டத்தில் சேராமல் சொந்த வாழ்க்கையைக் கவனித்துக்கொண்டு இருந்திருப்பார்களேயானுல் பல வசதிகளைப் பெற்றிருக்கக் கூடும். அவர்கள் அதை இழந்து விட்டார்கள் என்ற கருத்தின் அடிப்படையில்தான் தியாகிகள் என்று போடப்பட்டிருக்கின்றது. என்னைப் பொறுத்த வரையில் கேட்டால் இன்னும் பொருத்தமான பெயர் கொடுத்திருக்க வேண்டும். தியாகிகள் என்று போட்டதின் முழுப்பொருள் வேவரண்டு

மென்ருல், கடைசி வரையில் எதையும் எதிர்பார்க்காமல் இருப்பதுதான் உண்மையான தியாகத்திற்கு அடையாளமாகும். பொதுமக்களிடையே தியாகிகள் என்ற வார்த்தைக்கு ஒரு அனுதாப உணர்ச்சியிருப்பதால் தான் தியாகிகள் என்று போடப்படுகிறது. அவர்கள் எல்லாம் "நாட்டு விடுதலை வீரர்கள்" என்ற பட்டியலின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். அந்தப் பட்டியலின் கீழ் வரும் அவர்களில், நல்ல வசதி படைத்தவர்களுக்கு வெறும் பாராட்டுப் பதக்கமும், நலிவு பெற்றவர்களுக்கு வாழ்க்கை வசதிகள் தேடித்தரவும் வேண்டுமென்ற முறையில் அது அமைந்திருக்கவேண்டும். உறுப்பினர்கள் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், மற்றவர்கள் எல்லோருக்கும் இப்படிப்பட்ட தியாக மான்யங்கள் அல்லது நிலங்கள் வழங்கப்படுமா என்று கேட்டார்கள். ஜனநாயகத்தில் ஒவ்வொரு கட்சியும் மாறி மாறி வந்துகொண்டிருக்கும் காரணத்தினுல், ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை ஒரு போராட்டம் நடைபெற்று ஒவ்வொரு போராட்ட வீரருக்கும் நிலத்தைப் பங்கிட்டுக் கொடுப்பது என்று வைத்துக்கொண்டிருப்போமேயானுல் அடுத்த 15 வருஷங்களில் எந்த விதமான நிலமும் எந்த இடத்திலும் மற்றவர்களுக்கு இல்லாமல் போய் விடும். மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், தாங்கள் அப்படிப்பட்ட நிலங்கள் அல்லது பரிசுகள் கிடைக்குமென்ற எண்ணத்தில் நான் அறிந்த வரையில் அந்தப் போராட்டத்தில் ஈடுபடவில்லை என்பது அவர்களோடு இணைந்து பாணியாற்றுகிறவன் என்ற முறையில் எனக்குப் பெருமை தருவதாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 99, 100 ஆகிய இந்த இரு வினக்களும் நாளை வரை தள்ளிவைக்கப்படுகின்றன.

குடி நீர்த் திட்டம்.

*101. வினு—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சிதம்பரம் தாலுகாவில் நேஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீம் அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Will the Honourable Minister be pleased to state what exactly this National Water Supply Scheme is ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : At the beginning of the Second Five-Year Plan the Government of India sponsored the National Water Supply and Sanitation Rural Scheme for the eradication of water-borne diseases such as cholera, typhoid, etc., in the villages with a population of less than five thousand by providing water supply and sanitation facilities.

திரு. எம். சுரேந்திரன் : குடி தண்ணீர் மிகவும் ஜீவாதாரமானது. அதனுல், என்ன என்ன இடங்களில் குடி தண்ணீர் கிடைக்கவில்லையோ அங்கெல்லாம் குடி தண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாட்டை இந்த சர்க்கார் செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி தொடர்ந்து பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

DR. H. V. HANDE: The Minister answered that this scheme was sponsored by the Central Government. Will he tell us whether this scheme is in operation in any part of the Madras State or whether they propose to start the scheme in any part of the State especially in Chidambaram which is a filaria-ridden area ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : This scheme was sponsored with the help of the Government of India and we do not have anything now. Almost all the incomplete works have been completed and the staff have been disbanded in February 1964. After 1964 we do not have this scheme.

திரு. இல. பலராமன் : தேசியக் குடி தண்ணீர்த் திட்டத்தை ஏற்கனவே பஞ்சாயத்து யூனியன் மூலமாக ஜில்லாவாரியாகச் சேர்க்க செய்து நாம் மாநில சர்க்காருக்கு அனுப்பி, அவை மத்திய சர்க்காருக்கும் போயிருக்கும் என்று கருதுகிறேன். அந்தத் திட்டங்களை எந்த ஆண்டி லிருந்து அமுல்படுத்த சர்க்கார் யோசிக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, இந்தத் திட்டம் 1964-ஆம் ஆண்டோடு முடிவுற்றது. இனிமேல் அதுபற்றி இடமில்லை.

திரு. ச. ஆர். கிருஷ்ணன் : ஐயா, சேலம் மாவட்டம், இராசிபுரம், நகராண்மைக் கழகம் இருக்கக்கூடிய பகுதியாக இருக்கும் காரணத் தாலும், அங்கு குடி தண்ணீர் கிடைப்பதில் மிகுந்த கஷ்டம் இருக்கக் கூடிய காரணத்தாலும், நாமக்கல்லிலிருந்து தொடர்ந்து காவிரித் தண் ணீரைக் கொண்டு வருவதற்கான திட்டம் சர்க்காருடைய கவனத்தில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிக் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. கே. பி. எஸ். மணி : சீர்காழி டவுனையும் அதையடுத்திருக்கும் மீனவர் பகுதியையும் திருச்சியிலிருக்கும் நேஷனல் வாட்டர் ஸப்ளை ஸ்கீமில் சேர்த்து, குடி தண்ணீர் வசதிக்கான தனித் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டதே, அதனுடைய நிலைமை எப்படி இருக்கிறது ? அந்தத் திட்டங்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட் டத்தில் நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விவரம் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி கேட்டால் பதில் அளிக்கலாம்.

திரு. ஆர். கருப்பையா : சென்னை நகரில் உள்ள சர்மாநகர், திரு.வி.க. நகர் போன்ற பகுதிகளில் தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகமாக ஏற்பட்டு, அதுபற்றி அமைச்சரிடம் முறையிட்டும் கூட, இதுவரை கவனிக்காமல் இருப்பதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் இக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. எனவே, தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் சொல்லலாம்.

புலவர் க. முருகையன் : தலைவர் அவர்களே, செங்கிப்பட்டி சரகத் திற்கு இரண்டரை லட்ச ரூபாய் செலவில் குடி தண்ணீர்த் திட்டம் போடப் பட்டதே, அதனுடைய நிலை எப்படி இருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. எனவே, தனிக் கேள்வி போட வேண்டும்.

* 102 வினு.—திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மதிப்பிற்குரிய பொது சுகாதார அமைச்சர் தயவுசெய்து மேற்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகர் குடி தண்ணீர் திட்டத்திற்கு வைகை அணையி லிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டத்திற்கென மதுரை நகரவை 2 கோடி ரூபாய் கடன் கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகரத் திற்கு அடுத்தபடியாக பெரிய நகரமாக, ஐந்து லட்சம் ஜனத்தொகையை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் மதுரை மாநகரத்தில் குடி தண்ணீர்த் தேவை எவ்வளவு அதிகம் என்பதை அறிந்திருக்கக் கூடிய இந்த அமைச்சரவை, இதுவரையில் இல்லாவிட்டாலும், இனிமேலாவது இது விஷயத்தில் துரிதமான கவனம் செலுத்துமா ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA ; So far a sum of Rs. 29,30,698 has been sanctioned as loan to the municipality for the execution of the scheme.

இந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இப்பொழுது மதுரை நகரத்திற்கு எந்த இடத்திலிருந்து தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது ? வைகையி லிருந்து இன்னும் தண்ணீர் வரவில்லை, அங்கிருந்து தண்ணீர் வருவதற் கும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, இப்போழுது மதுரை நகரத்திற்கு எங்கிருந்து, எவ்வளவு தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கோவை மிகப் பெரிய தொழில் நகரமாக வளர்ந்திருக்கிற காரணத்தாலும், கோவையை ஒட்டிய சிங்காநல்லூர் இப்பொழுது நகரசபையாக்கப்பட்டிருக்கிற காரணத் தாலும், சிறுவாணியிலிருந்து வரும் தண்ணீரை அங்கே விஸ்தரிப்பதற்கு சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வி மதுரை நகரைப் பற்றியது. ஆகவே, இந்த விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போடலாம்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பாதுகாக்கப் பட்ட குடி தண்ணீர்த் திட்டம், வியாதியைப் பரவாமல் தடுப்பதற்காகவும், வியாதியைக் கட்டுப்படுத்துவதற்காகவும் கொண்டுவரப்பட்டது. ஆனால், அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில், 1964ம் ஆண்டிலேயே அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்று சொன்னார்கள். அப்படியானல், தொத்து வியாதிகளெல்லாம் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டனவா ? இனிமேல் அவை வரவே வராதா ?

(பதில் இல்லை)

திரு ஜி. நடராஜன் : தலைவர் அவர்களே, காட்பாடிக்குக் குடி தண்ணீர்த் திட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கோரிக்கைகள் இருந்தும், அது நடைமுறைக்கு வரவில்லை. அதை இந்த ஆண்டாவது எடுத்துக்கொள்ளும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா ?

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளிவைக்கப்பட்ட வினா எண் 83 இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுகிறது.

போலீஸ் வழக்குகள்.

* 83 வினா.—**திரு. என். வரதராஜன் :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?

போலீஸ் இலாகாவிலுள்ள சிப்பந்திகள் ஒரு மாதத்தில் அல்லது ஆறு மாதங்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை அளவுக்கு வழக்குகள் பதிவு செய்ய வேண்டும் என்ற விதி அமுலில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை : இல்லை.

திரு. கே. விநயகம் : நேரடியாக அப்படிப்பட்ட ஒரு உத்தரவு எல்லாப் போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் கொடுக்கப்படவில்லை என்றாலும், இன்று நடக்கிற பழக்கப்படி, இத்தனை கேஸ்கள் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலிருந்தும் வரவேண்டும் என்ற நியதி இருக்கிறதா ? இதற்கென ஸ்டாடிஸ்டிக்ஸ் தயாரித்து, சென்ற ஆண்டில் இத்தனை கேஸ்கள் வந்தன இந்த ஆண்டு இத்தனை வரவேண்டும் என்ற நியதி ஏதாவது இருக்கிறதா ? அதைக்குறித்து அங்கே இருப்பவர்கள் எப்படியாவது கேஸ்களை உண்டாக்கி, தமக்குக் கெட்ட பெயர் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அங்கேயிருக்கும் உத்தியோகஸ்தர்களும் அதற்குக் தகுந்தமாதிரி நடக்கிறார்கள் என்று முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுவது, உத்தியோகத்திலே உள்ளவர்களுடைய மனப்பான்மையைப் பற்றி, எனக்கு அந்த மனப்பான்மையைப்பற்றித் தெரியாது. ஆனால், காவல் நிலையங்களில், குற்றங்கள் என்ன என்ன ஏற்பட்டன, என்ன என்ன கண்டுபிடிக்கப்பட்டன என்கிற குறிப்புகள் நிச்சயம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மாநிலத்தில் குற்றங்கள் கூடுகின்றனவா குறைகின்றனவா என்ற கணக்கு சர்க்காருக்குத் தெரியும், அதன் மூலமாகப் பொது மக்களுக்கும் தெரிய முடியும். இத்தனை வழக்குகளைப் கட்டாயமாகப் போட்டே தீரவேண்டும் என்று சர்க்கார் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, எழுத்து மூலமாகவோ, வாய்மொழியாகவோ உத்தரவு பிறப்பித்தது இல்லை.

திரு. க. ர. நல்லசிவம் : தலைவர் அவர்களே, இப்படியொரு பழக்கம் நிச்சயமாக இருந்து வருகிறது, போலீஸ் அதிகாரிகள் மத்தியிலே. இந்தப் பழக்கத்தை அடியோடு ஒழித்துக்கட்ட வேண்டும் என்று அரசாங்கம் தீவிரமான நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? இல்லையென்றால், இனியாவது தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை : அப்படியொரு முறை இல்லை என்று நான் மறுத்தேன். அப்படியொரு பழக்கம் இருப்பதாக உறுப்பினர் அவர்கள் நிரூபிப்பார்களானால், பல கெட்ட பழக்கங்களை ஒழிக்கும் இந்த அரசு, அந்தக் கெட்ட பழக்கத்தையும் ஒழிக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சந்தேகத்தின் பேரில் கைது செய்கின்ற கேஸ்களும் இதில் உட்பட்டிருக்கின்றனவா, இல்லையா என்று முதலமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை : இது வழக்குகளை [illegible] பதிவிலே இருக்கும் சந்தேகத்தைப்பற்றிய பிரச்சினை. "சந்தேக வழக்குகள்" என்று சில வழக்குகள் இருப்பதாக நானும் அறிகிறேன். உண்மையிலேயே எனக்குக்கூட அது ரொம்ப விந்தையாகவே இருக்கிறது. அது தேவைதானா என்பதைக் குறித்தும், அதைப் போலீஸ் துறையிலுள்ளவர்கள் ஏன் விடாப்பிடியாக மேற்கொள்ளுகிறார்கள் என்பதைக் குறித்தும் தீவிரமான விசாரணை நடத்துகிறேன்.

DR. H. V. HANDE : I fully agree with the Chief Minister that the police higher-ups do not ask the Sub-Inspectors or Inspectors in the police stations to register the same number of cases as was registered in the previous month or in the corresponding period of the previous year. But there is a clear understanding that if there is a steep fall in a particular month, the Sub-Inspector will be asked to explain why there was a steep fall and will be taken to task. In view of this fear, as a protective measure they go on booking the same number of cases.

THE HON. THIRU C. N. ANNADURAI ; The hon. Member is explaining the psychology behind all these things. As far as my personal opinion is concerned, I would consider that மு.ப. 10-00 police officers carry out their duties in an exemplary manner if they prevent crimes instead of foisting, or framing charges in, cases.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : தலைவர் அவர்களே, இத்தனை வழக்குகளை மாதாமாதம் கொண்டு வரவேண்டுமென்று சப்-இன்ஸ்பெக்டர்கள் சொல்லாவிட்டாலும், போலீஸ்காரர்களை ஊக்குவிப்பதற்காக, வேலை செய்வதற்காக சிலபல சமயங்களில் ஏன் கேஸ்கள் கொண்டுவரவில்லையென்று கேட்கிறார்கள். அதிலே போலீஸ்காரர்கள் நிரபராதிகளைப் பிடித்துக் கொண்டுபோய் கேஸ் போட்டுவிடுகிறார்கள். ஆகையால் போலீஸ்காரர்கள் நிரபராதிகளைச் சம்பந்தப்படுத்தாது, ஆதாரம் உள்ள கேஸ்களை மட்டும் பிடிக்க வேண்டுமென்ற கடுமையான உத்தரவை இந்த அரசாங்கம் பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை : அப்படி உத்தரவு பிறப்பிப்பதே ரொம்ப அநாகரிகமாக இருக்கும். நிரபராதிகளைக்கூட பிடிக்கிறார்கள் என்பது நாகரிக அரசியலுக்கு, பண்பாடுள்ள அரசியலுக்கு ஏற்றதல்ல.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பொறுப்பான காவல் நிலைய அதிகாரிகளே, பொறுப்பான பொதுஜன ஊழியம் செய்கிறவர்களைக்கூட பிடித்துப் போகின்ற விஷயம் அமைச்சர்களுக்குத் தெரியுமா ? இதுபோல் நடக்காமல் செய்வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை : போலீஸ் துறையினர் கடைசி மட்டத்தில் உள்ளவர்கள் இடத்தில் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்ற எண்ணம் பரவலாக இருக்கக்கூடும். அதற்கு மாற்று, நல்ல படித்தவர்கள், பண்பாடு அறிந்தவர்கள் மேலும் மேலும் போலீஸ் துறையில் சேர்க்கப்படுவதுதான். அப்போதுதான் அந்தக் குறைகளைக் களைய மார்க்கம் இருக்கும்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னண்டோ : தலைவர் அவர்களே, ஒவ்வொரு போலீஸ் நிலையத்திலும், போலீஸ் அதிகாரிகள் மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் இத்தனை வழக்குகள் பதிவு செய்ய வேண்டுமென்று இருப்பதால், அதை ருசு செய்கின்ற முறையில் அநேகமாக போலீஸ்காரர்கள் பெரும்பாலான வழக்குகளை மாத முடிவிலே பதிவு செய்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் போட்ட கேள்வியைப் போன்ற மற்றொரு கேள்விக்கு நான் பதில் அளித்தேன். அந்த வழக்குகள் எல்லாம் பதிவு செய்யப்பட்டால்தான் நாட்டினுடைய உண்மை நிலைமை பொதுமக்களுக்குத் தெரியும். ஆகவே, வழக்குகளைப் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, as a practising lawyer especially in the criminal courts, I have experience that under Section 54 of the Criminal Procedure Code, vagrants who have been found wandering about in the premises of somebody with the intention of committing a crime like stealing and who could not explain properly their where abouts, have been taken into custody and such cases are plenty in number. Of course, the judgment also more often is in their favour and they are either reprimanded or let off. Whereas this has been the practice followed in the City courts, will the Hon. Chief Minister who was come forward to eradicate all the ills in the country be pleased to give instructions to the Police not to waste the time of the Police Officers as well the courts and the lawers, whose time is more precious ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I am very glad that my hon. Friend has chosen me for this purpose though he had ample opportunities to choose others previously. Anyhow, I will look into this question. But to prevent crimes, Police have to take certain precautionary measures and under that broad line, they take two or three persons who are wandering about or vagrants into custody. If they had not been taken into custody, they might have committed crimes ; and that is their argument. Because the police are saying it, it appears to be curious. But many State Governments, whenever they launch proceedings against even politicians, think that unless they are kept in custody, something will go wrong. On that ground previous Ministers and the leaders of the Party to which my hon. Friend has got the pleasure and honour to belong, have taken into service even the Criminal Law Amendment Act.

Abolition of Horse Races

*93. *Q.*—THIRU K. VINAYAKAM / THIRU K. CHEEMAICHAMY : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to abolish horse racing completely in the State ;

(*b*) if so, when and how it will be implemented ; and

(*c*) the annual financial loss that would result from this policy ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) and (இ) இல்லை. இம்மாநிலத்தில் குதிரைப் பந்தயங்களை முழுமையும் ஒழிப்பதற்கான செயற்குறிப்பு எதுவுமில்லை. அரசாங்கம் அறிவிக்கக்கூடிய ஒரு தேதி முதல் குதிரைப் பந்தயங்களில் பணம் கட்டுவதைத் தடை செய்வதற்கு, 1949-ம் ஆண்டு சென்னை நகர போலீஸ், சூதாடுதல் (திருத்தச்) சட்டம்

வகை செய்கிறது. மேற்படி சட்டத்தின் செயற்படு பிரிவுகளான 3, 4-வது பிரிவுகளை 1968 ஏப்ரல் 1-ம் தேதி வரையில் செயலுக்குக் கொண்டுவர வேண்டியதில்லையென முன்னாள் அமைச்சரவை முடிவு செய்திருந்தது. அந்தச் சட்டத்தில் கண்ட மேற்சொன்ன விதித்துறைகளை ஏதாவதொரு தேதியிலிருந்து செயலுக்குக் கொண்டுவருவது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

(உ) குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டுவது தடை செய்யப்படுமானால், 1965–66-ல் கிடைத்த வருமானத்தையொட்டி தோராயமாகக் கீழ்க்கண்டவாறு பிரதி வருடமும் வருமான இழப்பு நேரிடும் :—

பந்தய வரி சுமார் ரூ. 64 லட்சம்.

கேளிக்கை வரி சுமார் ரூ. 6 லட்சம்.

வருமானவரி சுமார் ரூ. 3·5 லட்சம்.

THIRU K. VINAYAKAM : Sir, while I am fully aware of the evil effects that have been working havoc upon the poor people who indulged in this betting on horse races, is the Hon. Minister aware of the fact that the horse racing is a "He-man's game" and it provides for breeding of a special species of horses? Also, is he aware that with the eradication of horse breeding which is now contemplated by this Government, they are doing a very great injustice to the breeding of good and sturdy horses ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I do not agree with the hon. Member when he says that this is a "he-man's game" because many 'she-s' are also there. The question is whether any country under the grip of poverty and squalor should allow such a betting, wherein a large number of people who cannot afford it, lose what little they have got. As far as breeding of horses is concerned, this is an orthodox notion because previously horses were in great demand in our military but due to a change in the military manoeuvres and methods I do not think horses are needed except on ceremonial occasions. Breeding can be had by methods other than racing.

திரு. கரு. சீமைச்சாமி : குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதுபற்றி அரசாங்கம் லைசென்ஸ் கொடுப்பதை நிறுத்திவிடப் போகிறதா ? அல்லது வேறு வகையில் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பொதுவாக, அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையை முன்கூட்டி அறிவிப்பது பொருத்தம் அல்ல. 1968-ம் ஆண்டு வரையில் அதற்குக் கால அளவு இருக்கிறது. அதற்குப் பிறகு என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி அப்போது அரசு யோசித்து முடிவு செய்யும்.

திரு மு. க. சிவசாமி : தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயம் என்ற சூதாட்டத்தை ஒழிக்க வேண்டாமென்று மத்திய சர்க்கார், முந்தைய காங்கிரஸ் சர்க்காருக்குக் கடிதம் எழுதியதன் பேரில், குதிரைப் பந்தயத்தை ஒழிக்க சட்டம் கொண்டுவந்தும், ஒழிக்காமல் இருப்பது என்ற முடிவைக் கொண்டது என்பது இப்போதைய அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : வேண்டாமென்று மத்திய சர்க்கார் எழுதவில்லை. ஆனால், கனம் உறுப்பினர் கே. விநாயகம் அவர்கள் சொன்ன கருத்தைப் போன்று ஒரு கடிதத்தை திரு ஜவஹர்லால் நேருஅவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : In view of the heavy loss which would accrue to the exchequer by the abolition of horse races—about Rs. 1 crore according to the answer of the Hon. Chief Minister—what does the Government propose to do to reimburse the loss to the exchequer and will the reimbursement be by levy of a tax which effect the poor people again.

THE HON. THIRU C. N. ANNADURAI : With regard to reimbursement of the loss to the Government by the abolition of horse races, what I propose to do is to take the co-operation of the Members to say ' Aye ' to my measures for augmenting the resources.

DR. H. V. HANDE : Just as there are troubles with regard to Prohibition, there are troubles with regard to horse racing also. Races are conducted in Bangalore, Hyderabad, etc. Persons from Madras are going to Bangalore and there is a huge influx. In view of this fact and the fact that it is not possible to wipe out this evil, will the Government re-examine the question and see whether there is any point in abolishing horse races and whether horse races and betting cannot go on ?

THE HON. THIRU C. N. ANNADURAI : People from this part will go to other parts where races are held—this is the usual argument advanced whenever such measures of far-reaching importance are mooted. But we should remember that only a fractional section of the people who are going to Guindy can go to Bangalore or Ootacamund. People who can afford go to those places. I do not think we should prevent them from going to any place. I am told that even in America there is a particular city wherein all sorts of luxuries are allowed. My Friend Thiru Karuthiruman would have gone there. (Interuption by Thiru P. G. Karuthiruman.) He says he has not gone there. But he knows that there is such a place. If the rich people want to enjoy certain luxuries and they want to go to other places, I do not object to that. But on that account, we should not place that as an argument against the proposal. My friend has said that horse breeding and other things should be maintained. My idea is—I have not yet formed a definite idea—I have a vague feeling that even horse racing can be there in any place without betting, where lakhs and lakhs of people can gather to witness the prowess of the jockeys and the ability and agility of horses. We can visualise an age, which will take us back to 1,000 or 2,000 years when the Roman Gladiators had the chariot races.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : [illegible]

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. 1967–68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு

கோரிக்கை எண் III—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, On the recommendation of the Governor, I move :—

That the Government be granted a sum not exceeding Rs. 1,32,09,200 under Demand No. III—General Sales Tax and Other Taxes and Duties—Administration.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த நிதிக்கோரிக்கைக்கான வெட்டுத் தீர்மானங்களை இப்பொழுது முன்மொழியலாம். அவற்றை வழிமொழியத் தேவையில்லை.

திரு. க. ர. நல்லசிவம் : கொள்கைபற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

'கோரிக்கை எண் III—பொது விற்பனைவரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 1,32,09,200-ல் 100 ரூபாய் குறைக்கவேண்டும் '.

THIRU K. VINAYAKAM: Sir. to discuss about the general policy and the hardships experienced by the mercantile community I move the cut motion standing in my name—

'that the allotment of Rs. 1,32,09,200 under Demand No. III—General Sales Tax and Other Taxes and Duties—Administration, be reduced by Rs. 100 '.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பலமுனை விற்பனை வரியை ஒருமுனை விற்பனை வரியாக மாற்றி அமைப்பதுபற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

' கோரிக்கை எண் III—பொதுவிற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 1,32,09,200-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்'.

திரு. கே. என். குமாரசாமி : எல்லாப் பண்டங்களுக்கும் ஒருமுக விற்பனை வரி விதிப்பதுபற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

'கோரிக்கை எண் III—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 1,32,09,200-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்'.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : சிறு வியாபாரிகளுக்கு விற்பனை வரி விதிப்பதில் சுலபமான நடைமுறை ஏற்படுத்த வேண்டும் என்பது பற்றி விவாதிக்க, என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

' கோரிக்கை எண் III—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 1,32,09,200-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும் '.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மறைமுக வரிகளை அதிகரிப்பதைக் குறைக்க வேண்டும் என்பதைப்பற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்—

' கோரிக்கை எண் III—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 1,32,09,200-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும் '.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : விற்பனை வரியை ஏமாற்றுமல் தடுக்க தக்க வழிவகைகள் செய்ய வேண்டும் என்பதுபற்றி விவாதிக்க என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகின்றேன்—

'கோரிக்கை எண் III—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 1,32,09,200-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்'.

திரு. வி. கே. கோதண்டராமன் : உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி போடாமல் விதி விலக்கு அளிக்க வேண்டுமென்பதைப் பற்றி எடுத்துக்கூற என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்—

'கோரிக்கை எண் III—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 1,32,09,200-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்'.

திரு. வி. கே. கோதண்டராமன் : விவசாயத்திற்குத் தேவையான அத்தியாவசியமான எல்லாப் பொருள்கள்மீதும் விற்பனை வரி போடாமல் விதி விலக்கு அளிக்க வேண்டுமென்பதைப் பற்றி எடுத்துக்கூற என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

'கோரிக்கை எண் III—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 1,32,09,200-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்'.

திரு. வி. கே. கோதண்டராமன் : மணிலா பயிர், மற்ற ஏனைய எண்ணை வித்துக்கள் மீது விற்பனை வரி போடாமல் விதி விலக்கு அளிக்க வேண்டுமென்பதைப் பற்றி எடுத்துச் சொல்ல என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்—

'கோரிக்கை எண் III—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 1,32,09,200-ல் 100 ரூபாய் குறைக்க வேண்டும்'.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The Demand that I have just now moved before this House relates to the administration of the major revenue yielding department in the Government. This Department has contributed a revenue of Rs. 55·96 lakhs upto the end of March 1967 out of a total of Rs. 95·63 lakhs of revenue from the State taxes in 1966–67. The major enactment that yields the bulk of the revenue in the State is the Madras General Sales Tax Act, 1959. The yield of revenue from this Act has risen from Rs. 25·66 lakhs in 1964–65 to Rs. 29·95 lakhs in 1965–66. In the year 1966–67, the tax yield was expected to be Rs. 3000 lakhs. The trend of collection was so good that the budget estimate was revised and fixed at Rs. 35·50 lakhs. The actual receipts up to March 1967 come to Rs. 35·73 lakhs. The budget estimate for 1967–68 has been fixed at Rs. 38·90 lakhs.

Another important enactment that comes under this Demand is the Central Sales Tax Act, 1956. Under this Act, the yield of revenue in 1966–67 is Rs. 860 lakhs and the Budget Estimate for 1967–68 is Rs. 10·21 lakhs. The increased estimate is due to the fact that the Central Government had increased the general rate of tax under this Act from 2 per cent to 3 per cent with effect from

1st July 1966. But the benefit of such increase was not taken advantage of fully by this Government in the previous year because of the prevailing general rate of tax of 2½ per cent. This House has just passed a legislation under the Madras General Sales Tax Act to rectify this position. These are in brief :—

(1) increase of the general rate of multi-point tax from 2 per cent to 3 per cent ;

(2) increase of the rate of single-point tax on luxury goods covered by items 1 to 14 of the First Schedule to the Act from 11 per cent to 12 per cent ;

(3) increase of the rate of tax on other single-point goods coming under the First Schedule (other than chicory, coffee, tea, soap, kerosene, chemical fertilisers and bullion and specie) by half-a-per cent over the existing rates ;

(4) increase of the rate of tax on declared goods specified in the Second Schedule to the Act (other than cotton and cotton yarn) from 2 per cent to 3 per cent in the case of coal including coke in all its forms, iron and steel, jute, oil seeds (other than groundnut) and raw hides and skins, and from 1 to 1½ per cent for dressed hides and skins.

The increases in the rates of tax have been made after taking into consideration the impact on the common man and the agricultural production, as may be seen from the exception made in the case of articles like chicory, coffee, soap, tea, kerosene, cotton, cotton yarn and chemical fertilisers and groundnut while increasing the rates in respect of other articles.

The result of this enactment as far as the Central Sales Tax Act is concerned would be that in most of the cases where the general rate of tax under the Madras General Sales Tax Act would apply, this Government would get tax at 3 per cent under the Central Sales Tax also.

The revenue under the Madras Sales of Motor Spirit Tax Act has increased from Rs. 204 lakhs in 1959–60 to Rs. 385·15 lakhs in 1965–66. With effect from 1st December 1965 the rate of tax on petrol and diesel oil have been enhanced from 9 paise to 10 paise per litre and from 8 paise to 10 paise per litre respectively. Consequently, the receipts under this head in 1966–67 was Rs. 460 lakhs and the Budget Estimate for 1967–68 is Rs. 520 lakhs.

Under the Madras Entertainment Tax the Revised Estimate for 1966–67 has been fixed at Rs. 512 lakhs and the Budget Estimate for 1967–68 at Rs. 566 lakhs. The levy of surcharge on Entertainment Tax and on show tax by the local authorities under the Madras Local Authorities Finance Act, 1961, has contributed to the increase of revenue under this head. Nine y per cent of the collections under the Madras Entertainment Tax Act i distributed to the Municipalities and Panchayats while the surcharge is credited in full to he funds of the Municipalities and Panchayat Unions concerned.

[hiru K. A. Mathialagan] [1967 ஜூலை 28

The revenue derived under the Madras Betting Tax Act, 1935 was Rs. 63·66 lakhs during 1965–66. The revised estimate for 1966–67 is Rs. 69·88 lakhs and the Budget Estimate for 1967–68 is Rs. 67·69 lakhs. The rate of tax on book-makers and for electric totalisators for Madras races is 12½ per cent and in respect of others, it is 15 per cent.

I had already mentioned the changes in the structure of the Sales Tax Act that have been passed by this House a few days ago. One of the serious handicaps in the effective administration of this enactment is lack of power of inspection, search and seizure by the officers in a case of suspected evasion. This was occasioned by a decision of the High Court of Madras which held that the provisions of search and seizure under the Madras General Sales Tax Act, 1959 were invalid. Consequently, the Government obtained a partial stay of the operation of the decision of the High Court from the Supreme Court. The appeal filed before the Supreme Court is expected to come up shortly. The Government are anxiously awaiting the decision of the Supreme Court in this case. I should also refer to the fact that the Government formerly proposed to bring a Bill to amend the Act to provide for search under adequate safeguards but had to drop it subsequently. This Government would take further action in this matter after receipt of the decision of the Supreme Court.

This Government is also interested in the smooth administration of the tax laws. It has therefore convened a meeting of the State Sales Tax Advisory Committee wherein many of the difficulties experienced by the trade in the enforcement of the Act were examined and remedial measures were undertaken. It was, for instance, decided at the last meeting that Tamil language should be used by the assessing officers right up to the stage of issue of preliminary notice in the case of dealers who maintain accounts in Tamil. The Government had also accepted to a large extent the recommendations of the sub-committee set up by it on 17th April 1965 on the question of simplification of procedures under the Sales Tax Acts and Rules. Amendments to the Act and the Rules to implement all the accepted recommendations would be made wherever they are necessary. The Bill passed by this House also provides for raising the limit of turnover for exemption under Section 3 (1) of the Act from Rs. 10,000 to Rs. 15,000. Correspondingly, the turnover limit for exemption from registration has been raised from Rs. 7,500 to Rs. 10,000. Even though these proposals would result in a loss of revenue of about Rs. 21 lakhs to the State exchequer, this bold step was taken by this Government as a first step to offer relief to the poorer sections of the mercantile community. Another step taken up by the Government as a measure of relief to the poorer sections of the trade is increasing the limit of turnover of composition under Section 7 of the Act from the present limit of Rs. 50,000 to Rs. 75,000. The Government have not also effected any change in the position for the dealers with turnover up to Rs. 20,000. In the case of other

1967 ஜூலை 28] [Thiru K. A. Mathialagan]

dealers falling under this group, marginal adjustments have been made raising the compounded levy to a range of 1·3 per cent to 1·7 per cent. This is justifiable because the composition rates were fixed when the multi-point rate of tax was 2 per cent whereas the general rate has been raised to 2½ per cent and now again to 3 per cent. As mentioned by me before this House while piloting the Bill for amending the Madras General Sales Tax Act, 1959, these measures are expected to give considerable relief to about 20,000 dealers.

The Act provides for an appeal from the orders of the assessment officers to the Appellate Assistant Commissioners. An appeal against the orders of the Appellate Assistant Commissioner lies to the Sales Tax Appellate Tribunal. There are at present two Benches, one at Madras and another at Madurai. With a view to reduce the arrears on the file of the Madras Bench the Government have sanctioned the constitution of an additional Bench at Madras with a judicial officer and a departmental officer. As a consequence of the raising of the limit of compounding of tax to Rs. 75,000 and for quicker disposal of appeals by the Madras Sales Tax Appellate Tribunal, the Government have decided to enhance the monetary limit of turnover involved in appeals to be dealt with by a single member of the Tribunal from Rs. 50,000 to Rs. 1 lakh.

In regard to the administration of the Madras Entertainment Tax Act also, the Government are actively considering special steps to be taken to ensure that evasion is put down considerably and every pie of revenue that is due to the State is collected fully and fairly. With these words, I commend the Motion to the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று காலை 10-30 மணிக்கு நடைமுறை விதிக்குழுவின் கூட்டம் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்று மாலை 3-30 மணிக்கு மோட்டார் வண்டிகள் திருத்த மசோதா விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் அறிவிக்கிறேன்.

*** திரு. கே. விநாயகம் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நமது வருவாய்த் துறை அமைச்சர் கொண்டுவந்திருக்கிற இந்தப் பிரேரணையைப் பற்றிப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த சேல்ஸ் டாக்ஸ் ஆரம்பத்தில் அதிகமாக மக்களுக்குத் துன்பம் தர மாட்டாது என்ற கருத்திலேதான் போடப்பட்டது. அன்று நம்முடைய அரசாங்கத்திற்கு ஏற்பட்ட குறைபாடு, நிதி நிலைமையிலே ஏற்பட்ட குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு இது ஒன்றும் மக்களுக்குப் பெருத்த பாதகத்தைத் தராது என்று நினைத்துத்தான் போடப்பட்டது. ஆனால் இது மேலும், மேலும் அதிகமாக வருவாயை நமக்குத் தந்து, காமதேனு என்று வருணிக்கக் கூடிய அளவுக்கு, நமக்கு இந்தத் துறையிலேயிருந்து வருவாய் கிடைக்கிறது. அரசாங்கம் செம்மையாக நடத்தப்பட வேண்டுமென்றால், வருவாயை வைத்துத்தான் நடத்த முடியும். பெரும்பாலும் அதிகமாக அரசாங்கத்திற்கு வருவாய் வருவது இந்தத் துறையில்தான். இந்தத் துறையை வைத்துத்தான் அரசாங்கத்தை நடத்திச் செல்ல வேண்டுமென்ற உணர்வு எனக்கு இருக்கிறது. ஆனால் இது காமதேனு போன்று இருப்பதால், இதையே வைத்து ஒவ்வொரு ஆண்டும் அமைச்சர் பேசும்பொழுது எல்லாம் இதன் மூலம் ஒரு புதிய வரியைக் கொண்டு வருகிறார்கள்.

மு.ப. 10-34 இந்த வரி எப்படி இருக்கிறது ? முதலில் ½ பர்சண்ட், பிறகு 1 பர்சண்ட், 1½, 2, 2½—இப்போது 3 பர்சண்ட் அளவுக்கு வந்திருக்கிறது. இப்படி வருவாயை உயர்த்துவதற்காக யார் மீது வரி போடுகிறோம் என்று அமைச்சர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

(திரு. ஏ.வி.பி. ஆசைத்தம்பி தலைமை.)

இந்த வரியை வியாபாரிகள் தருகிறார்கள் என்ற எண்ணம் போக வேண்டும். இது வியாபாரிகள் தரும் வரி அல்ல. இதற்குப் பெயர்கூட பர்சேஸ் டாக்ஸ் என்று வைக்கலாம். இதிலே எவ்வளவு சிக்கல் இருக்கிறது என்று எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. ஆண்டுதோறும் மானியக் கோரிக்கையின் பேரில் விவாதிக்கும்போது ஒரே விதமாகத்தான் சட்டசபையில் உள்ள அங்கத்தினர்கள் இதிலுள்ள துன்பங்களையும், கஷ்டங்களையும் எடுத்துச் சொல்கிறார்கள். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. இன்று அமைச்சராக இருப்பவர்கள் முன்பு எதிர்க் கட்சியில் இருக்கும்போது இதே மானியத்திற்கு வெட்டுப் பிரேரணை கொடுத்து அதை ஏற்றுக் கொள்ள வில்லை என்பதற்காக வெளியேறிய பெருமையும் உங்களுக்கு இருக்கிறது. அவ்வாறு வெளியேறியது ஓராண்டு, இரண்டு ஆண்டு முன் பின் இருக்கலாம். வெளியேறுகின்ற அளவுக்குக் கூட அன்று இருந்த மனப்பான்மை மாறி இன்று எதிர்க் கட்சிக்காரர்கள் இதைத் தகராறு இல்லாமல் ஏற்றுக்கொள்ள மாட்டார்களா என்று எதிர்பார்க்கக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. இந்த மன மாற்றம் வரவேண்டுமென்பது தான் எங்களுடைய எண்ணம். அப்படி இதைக் கொண்டுவரும்போது யார் மீது வரி போடவேண்டும், எவர் மீது வரி போட வேண்டும், வியாபாரிகள் தங்களுடைய கையிலிருந்து அதனைத் தருகிறார்களா அல்லது மற்றவர்களிடம் வசூலித்துத் தருகிறார்களா என்பதுதான் பேச்சு. இந்த வரியைப் பொருளை வாங்குகின்றவனிடமிருந்துதான் வசூலித்துத் தருகிறார்களே தவிர, எவருமே கையை விட்டுத் தருவதில்லை. ஹோட்டல் நடத்துபவர்களை எடுத்துக்கொண்டால், சாதாரண ஹோட்டல் நடத்துபவர்களும் இருக்கிறார்கள், பெரிய ஹோட்டல்கள் நடத்துபவர்களும் இருக்கிறார்கள். பெரிய ஹோட்டல் நடத்துபவர்கள் பில் கொடுக்கும்போது அதிலேயே சேல்ஸ் டாக்ஸையும் போட்டுத் தருகிறார்கள். அங்கு போகின்றவர்கள் வசதியுள்ளவர்களாகையால் அவர்கள் கவலைப்படாமல் அதைத் தருகிறார்கள். ஆனால் சிறு சிறு ஹோட்டல்களில் சேல்ஸ் டாக்ஸைப் பொதுமக்களிடம் இருந்து வசூல் செய்வதில்லை. இந்தச் சிறு ஹோட்டல் வியாபாரிகளைத் தவிர மற்றவர்கள் எல்லாம் கன்ஸ்யூமரிடமிருந்து வசூல் செய்துதான் தருகிறார்கள். அந்த வியாபாரிகள் ஒரு கலெக்டிங் ஏஜென்சியாகப் பணியாற்றுகிறார்கள். **Conduit pipes between the Government and the consumers.** அவர்களதான் மத்தியில் இருந்து வரியை வசூலித்துத் தருபவர்கள். நம்முடைய ஏஜெண்டுகளாக இருக்கிற அவர்களுக்குக் குறைந்த பட்சம் தொல்லை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதுதான் என்னுடைய எண்ணம். நானே ஒரு வியாபாரி என்று சொல்ல விரும்புகிறேன். வியாபாரிகள் எவ்வளவு தூரம் பயப்படுகிறார்கள், தொல்லைக்கு ஆளாகிறார்கள் என்பது எவ்வளவுதான் சொன்னாலும் புரியாது ; அனுபவித்துப் பார்த்தால்தான் தெரியும். இங்கே பெரும்பாலும் அரசியல்வாதிகள்தான் வருகிறார்கள். வியாபாரிகளுடைய துன்பம் இவர்களுக்குத் தெரியாது. சேல்ஸ் டாக்ஸ் ஆபீசர் என்றால் எப்பேர்ப்பட்ட வியாபாரியும் நடுங்குவான் ; அதிகாரி வர வேண்டியதில்லை ; அவருடைய டவாலி போட்ட பியூன் வந்துவிட்டாலே போதும், வியாபாரிகள் மெள்ள மெள்ள பின்னால் போவது வழக்கம். வரி வாங்க வருகிறார்களோ, ஏதாவது கன்ட்ரிபியூஷனுக்கு வருகிறார்களோ என்று பயப்படக்கூடிய நிலை இருக்கிறது. வியாபாரிகள் மறுப்பதற்கு உரிமை இருக்கிறது என்று அமைச்சர் சொல்லலாம். கொடுக்க மாட்டேன் என்று சொன்னவுடனேயே **"I want to check your accounts"** என்பான். பிறகு ஆண்டவன்தான் அவனைக் காப்பற்ற வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு வேறு வழி இல்லை. எத்தனை குறுக்கிட்டாலும் அதற்குத் தகுந்த பதில் சொல்லத் தேர்ச்சி பெற்றவன்.

தலைவர் அவர்களே, போலீஸ் உத்தியோகஸ்தர்கள் கூட அந்த அளவுக்கு அதிகாரத்தைச் செலுத்தியதைப் பார்த்ததில்லை ; அந்த அளவுக்கு கமர்ஷியல் டாக்ஸ ஆபீசர்கள் செய்கிற ஜபர்தஸ்து வியாபாரிகளுக்குத் தொல்லை தரக்கூடிய வகையில் இருக்கிறது. போன மாதம் ஒரு மாநாடு கூட்டி அமைச்சர் அவர்களையும் அழைத்திருந்தோம். நானும் அந்த மாநாட்டில் கலந்துகொண்டு 10 மணி வரை அமைச்சர் வராததால் சென்று விட்டேன். அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் வந்து போனதாகச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் ஏதோ ஆறுதல் சொன்னார்களே தவிர, இதிலே இருக்கும் துன்பங்களைத் துடைக்கும் வழிவகை ஒன்றும் சொல்லவில்லை.

கலெக்டிங் ஏஜெண்டுகளாக இருக்கின்ற அந்த வியாபாரிகளிடம் உத்தியோகஸ்தர்கள் காட்டுகின்ற ஜபர்தஸ்தைப்போக்க அண்ணா அவர்கள் வழி செய்வார்கள் என்று தெரியும். அவர் மனத்தில் அது பதிந்தால் அதற்கான வழிகள் அவர்களுக்குத் தோன்றும். அவர் ஆட்சி நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இவ்வளவும் சொல்லுகிறேன். இருக்கிற வியாபாரிகள் அவர்களை வாழ்த்த வேண்டும். வியாபாரிகளுக்கு இருக்கின்ற தொல்லைகளைப் போக்க வேண்டும். வெறும் பிரசாரம் செய்தால் போதாது. உதார குணத்தோடு உங்களுடைய அதிகாரிகள் மொர்கண்டைல் கம்யூனிடியை நடத்த வேண்டும்.

கணக்கு விஷயமாக எடுத்துக்கொண்டால் அந்த அதிகாரி சொல்லுகிற முடிவுதான் **"The last word in their Bible"**—கடைசி முடிவு. வியாபாரிகள் என்னதான் சொன்னாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். போன ஆண்டு 50,000 டர்ன் ஓவர், இந்த ஆண்டு எப்படி 45,000 ஆக இருக்கும் ? ஐயாயிரம் ரூபாய் குறைந்ததற்கு என்ன காரணம்? **"In my best of Judgment"** 75,000 என்று போடுகிறேன் என்று போட்டுவிடுவார்கள். வியாபாரிகளுக்கு விமோசனமே இல்லை. **It is always on the high side. That is the last word in his judgement.** அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன்படி கொடுக்க வேண்டும். அவ்வாறு வாங்குவதில் கறாராக இருக்கிறார்கள் உங்களுடைய உத்தியோகஸ்தர்கள். அவர்கள் திறமைசாலிகள். கசக்கிப் பிழிந்து அரசாங்கத்திற்கு வருவாயை வசூலித்துக் கொடுத்துவிடுகிறார்கள். "நீங்கள்தானே அதைக் கற்றுக் கொடுத்திருக்கிறீர்கள் ; இப்போது என்னிடம் அவர்கள் இருக்கிறார்கள்" என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். கண்டிப்பாக வாங்க வேண்டியதுதான். வாங்குகின்ற விதம் இருக்கிறதே, முறை இருக்கிறதே, அது சரியானதுதானா? அதிகாரி கணக்குத் தவறு என்று சொல்லி அதன்பேரில் வியாபாரி அப்பீல் செய்தால் என்ன ஜட்ஜ்மெண்ட் வருகிறதோ அதைப் பார்த்துத்தான் எவ்வளவு கட்ட வேண்டுமென்று முடிவு செய்ய வேண்டும். **Once having been assessed, it is your duty to shell out the money to the last pie. Like Shylock they demand it.**

அப்படித் தருகிற அளவுக்கு நாங்களும் இருக்கிறோம். கொடுத்துத்தான் வருகிறோம். இந்தச் சட்டத்திலே இந்த விதியைத் திருத்த வேண்டும். நான் அப்பீல் செய்து அதிலே முடிவாவதற்கு எத்தனை நாள் ஆகிறதோ அது வரை நான் அந்த வரித் தொகையைக் கொடுக்காமல் இருக்க வாய்ப்பு இருக்க வேண்டும். அதுதான் சிவில் கோர்ட்டில் நடக்கிறது. கிரிமினல் கோர்ட்டில் நடக்கிறது. ஆனால், சேல்ஸ் டாக்சுக்கு மட்டும் என்ன விதி விலக்கு ? 'ஆட்சி நடக்க வேண்டாமா ? வருவாய் வேண்டுமே! எல்லோருமே கோர்ட்டுக்கு அப்பீலுக்குப் போய்விட்டால் என்ன செய்வது ?' என்று சொல்லலாம். அண்ணா அவர்களுக்கு ஆர்குமெண்ட் செய்யவதற்கா தெரியாது. **He is an adept in argument and counter-argument.** அப்படிச் சொல்லித் தப்பித்துக் கொள்வதில் பொருள் இல்லை. வியாபாரிகள் நம்மை வாழ்த்த வேண்டும். வரியை வாங்கித் தருபவர்களுக்கு, கலெக்டிங் ஏஜெண்டுகளாக இருக்கின்ற அவர்களுக்குத் தொல்லை இல்லாத அளவுக்குத் திருத்தி அமைக்க வேண்டியது நியாயமானது. (குறுக்கீடு) அண்ணா அவர்கள் சொல்கிறார்கள்

[திரு. கே. விநாயகம்] [1967 ஜூன் 28

வியாபாரிகள் இங்கு வந்திருக்கிறார்களா ? வக்காலத்து வாங்குகின்றீயே என்று. இந்தச் சபை அங்கத்தினர் என்ற உரிமையில் பேசுகிறேன். அவர்களிடம் ஊதியம் வாங்கிக்கொள்ள வேண்டுமென்பதற்காகப் பேசவில்லை.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் தானும் ஒரு வியாபாரி என்று சொன்னதால் 'உங்கள் நண்பர்கள் வந்திருக்கிறார்களா' என்று கேட்டேன்.

திரு. கே விநாயகம் : வியாபாரிகள் வைத்திருக்கிற கணக்குகளைத் தணிக்கை செய்ய அதிகாரிகளுக்கு நாம் உரிமை தந்தோம். அன்று நானும் இருந்தேன் சட்டசபையில். இந்த அளவிற்குப் போகும் என்று தெரியாது; அப்படித் தெரிந்திருந்தால் அன்றே அதை மறுத்திருப்பேன். **Right to search the accounts even in their private apartment**—அது ஒன்று இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு போன வருடம் நடந்த நிகழ்ச்சிகளை ஒரு ராணுவ தர்பார் என்று சொல்ல வேண்டும். அதற்காக நான் எவ்வளவோ வழக்குகள் கூட போட்டு போர்ட் ஆஃப் ரெவின்யூவில் அல்லது ஹைகோர்ட்டில் வெற்றி பெற்றிருக்கிறேன். தணிக்கை செய்வதற்கு உள்ளே போகிறார்களே இதில் ப்ரைவேட் அப்பார்ட்மெண்டுகளைக் கூட விடுவதில்லை. கணக்குகளை மாற்றுகிறார்கள் வியாபாரிகள் என்பது தெரியும். **Because they are a very intelligent community when compared to Government officials** அதில் தவறு செய்கிறார்கள், ஏமாற்றுகிறார்கள்; அதுதான் மனித இயல்பு. **Unless the national character of the average Indian improves, there is no salvation** அதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். அவர்கள் ஏமாற்றுகிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக பூஜை அறையில் அல்லது படுக்கை அறையில் அல்லது ப்ரைவேட் அப்பார்ட்மெண்ட்களில் எல்லாம் பூட்ஸ்களைப் போட்டுக் கொண்டு, பெண்களும், ஆண்களும் உறங்கும் சமயத்தில், காலை நான்கு மணிக்கு அங்கு **Red Hills** போய்—**with revolvers in their hands and a posse of constables in jeeps**—இப்படி ஜபர்தஸ்துடன் உள்ளே சென்று கணக்குகளைப் பார்க்கிறோம் என்று சொல்லி நுழைகிறார்கள்.

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : எப்போது நடந்தது?

திரு. கே. விநாயகம் : இதைச் சொல்லக் காரணம், நல்ல ஆட்சி வந்திருக்கிறபோது நீங்கள் தவறு செய்யக் கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். இந்த நிகழ்ச்சிக்கும் அமைச்சர்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அமைச்சர்கள் சட்டம் போடுகிறார்களே தவிர, நிறைவேற்றும் பொறுப்பு அதிகாரிகளுக்குத்தான்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நான் கேட்டது, உண்மையிலேயே தெரியாமல் கேட்டதுதான். இவ்வளவு பயங்கரமான நிகழ்ச்சி எந்த ராஜ்யத்தில் நடந்தது என்று வருத்தப்பட்டு என்றைய தினம் என்று கேட்டேன்.

திரு. கே. விநாயகம் : முதல் அமைச்சர் அவர்களுக்கு இந்த நாட்டில் நடக்கிற விஷயம் தெரியாது என்று சொன்னால் அதை நம்பப் போவது நானல்ல. **I am the last man to believe all this story.** எக்ஸ்போஸ் செய்ய வேண்டும்; அவர்களின் ட்யூட்டி அது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அங்கத்தினர் அவர்கள் ஸெனித் எலக்ட்ரிகல் கம்பெனியை அதிகாரிகள் சோதனை போட்டது பற்றி, மாதவரம் அருகில் செய்தது பற்றி, குறிப்பிட்டார்கள். நேர்மாறாக, அங்கு அதிகாரிகள் சென்று சட்டப் படிச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய முடியாமல் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு மிரட்டப்பட்டு அதற்குப் பிறகு அதிகாரிகள் போலீஸ் உதவியோடு கணக்கு வழக்குகளை எடுக்க வேண்டுமென்கிற நிலை ஏற்பட்டது. அது கோர்ட் வரை போன விவகாரம்.

1967 ஜூன் 28]

Thiru T. MARTIN: The matter relating to the Zenith Electric Company is pending for decision by the Court. Therefore it is not advisable to speak about that in this Honourable House.

The Hon. Thiru C. N. ANNADURAI : Any matter before the Court can be referred to, but not commented upon.

Thiru T. MARTIN : The remarks made by the Hon. Minister for Revenue amounted to remarks about the merits of the case.

மாண்புமிகு தலைவர் (திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி) : வழக்குகளின் மெரிட் பற்றி அமைச்சர் அவர்கள் எதுவும் சொல்லவில்லை. குற்றச்சாட்டுகள்பற்றித்தான் சொன்னாரே தவிர, சாதகம், பாதகம் பற்றி விமர்சிக்கவில்லை.

திரு. கே. விநாயகம் : அந்த வழக்குகள் பற்றி நான் பேசவில்லை. அமைச்சர் அவர்களும் அதைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று நான் கருதவில்லை. நான் சொல்வது, நான் சொல்கிற நிகழ்ச்சி, ஒரு பெரிய ரைஸ் மில் முதலாளி பற்றியது, அங்கு நடந்த நிகழ்ச்சிக்குப் பிறகு நான் ஒரு வழக்குப் போட்டேன். **Officers in excess of their duty entering into the private apartments of an individual is highly derogatory to prestige** என்று வழக்குப் போட்டேன். காம்ப்ரமைஸ் ஆகி விட்டது. அதன் டீட்டைல்ஸ்க்கு நான் போகவில்லை. அன்று முதல் சிறிது தணிந்திருந்தது. பிறகு எக்காரணத்தினாலோ அதிகப்பட்டுக் கடைசியில் ஒருவேளை அதிகாரிகளுக்குப் போன தகவல்களை வைத்துக் கொண்டோ என்னவோ அது தணிந்தது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கக் கூடாது. அதற்காக ஒரு அமெண்ட்மெண்ட் கூட கொண்டுவர வேண்டும் என்று நினைத்தார்கள் முந்திய சர்க்கார். இப்போது நம் சர்க்கார் யோசித்துப் பார்த்து அதிகாரிகள் பக்குவமான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கணக்குகளை ஒளித்து வைக்காமல் இருக்கும்படி வியாபாரிகள் சார்பில் நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

திரு. கே. விநாயகம் : அப்படிப் பொறுப்பேற்றுக்கொள்வது அவ்வளவு எளிதல்ல. குளிக்கிற அறைகளில் சினிமா நடிகைகள் எல்லாம் அவர்கள் சொத்துக்களை மறைத்து வைத்துக்கொள்ளுகிற சாமர்த்தியம் படைத்த நாடு நம் நாடு. எல்லா மக்களுக்கும் நான் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அங்கத்தினர் அவர்களை நடிகைகளின் குளிக்கும் அறை வரை போகச் சொல்லவில்லை. வியாபாரிகளின் அப்பார்ட்மெண்ட்ஸ் பற்றிச் சொல்கிறேன்.

திரு. கே. விநாயகம் : சிறிது மனிதாபிமானத்தோடு அதிகாரிகள் நடந்துகொண்டால் போதும். வியாபாரிகளும் மனிதர்கள்தான். அவர்களிடம் இருந்து நமக்கு வருவாய் கிடைக்கிறது. அவர்களும் இந்நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் என்ற எண்ணத்தோடு நம் அதிகாரிகள் அவர்களை அணுகினால் மட்டும் போதும். வரி வசூல் செய்ய வேண்டிய அளவிற்கு நாம் சரியாக வசூல் செய்தால் நமக்கு வேறு வரிகளே வேண்டியதில்லை. இதைவிட மூன்று பங்கு அதிகம் வரும். இது, நான் யாருக்காகப் பேசுகிறேனோ அவர்களுக்குத் தெரியும். ஆயினும் இதைச் சரியாகக் கவனித்து கடைசிப் பைசா வரையில் வசூல் செய்வது ஆட்சி நடத்துகிறவர்களின் பொறுப்பு. தமிழில் கணக்கு வைக்கலாம் என்று

உரிமை தந்திருக்கிறார்கள். மெத்த நன்றி. [illegible] போன்ற விவகாரங்கள் எல்லாம் தமிழில்தான் நடைபெறுகிறது. [illegible] தமிழை யார் புரிந்துகொள்வார்கள்? யாருக்குத்தான் தெரியும்? [illegible] வருகிறது, அதை வியாபாரிகள் புரிந்துகொள்ள முடியாத [illegible] இருக்கிறார்கள். என்டர்டெயின்மெண்ட்ஸ் டாக்ஸைப் பற்றி ஒருவார்த்தை. இந்த என்டர்டெயின்மெண்ட்ஸ் டாக்ஸ் ஓரளவு சென்னையில் முறையாக நடக்கிறது, முறையாக வசூலிக்கப்படுகிறது. என்பதும், ஏமாற்ற வழியில்லை என்பதும் எனக்குத் தெரியும். அந்தக் குறைபாடு பெரும்பாலும் இல்லை, கிராமங்களில் என்ன நடக்கிறது? கிராமங்களில் உள்ள டூரிங் டாக்கீஸ்களில் நல்ல வருமானம் வருகிறது. இரவு 12 மணி வரையில் சாரி சாரியாக பெண்கள் * * * போய்க்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கணக்கை வைத்துப் பார்த்தால் நமக்கு ஏராளமான வருமானம் அத்துறையிலிருந்து வர வேண்டும். ஆனால் வருவது என்ன? ரொம்பக் குறைவாகத்தான் வருகிறது. உள்ளே போய்ப் பார்த்தால் 20 பேர்களிடம் டிக்கட்டுகள் இருக்கும், 80 பேர்களிடம் இருக்காது. அதிகாரிகள் இதைக் கண்காணிக்கக் கூடாதா? அப்படிச் செய்தால் ஒரு காமதேனு அல்ல, ஆறு காமதேனு அளவிற்கு வருமானம் வரும். ஆனால் இது சம்பந்தப்பட்ட என்டர்டெயின்மெண்ட்ஸ் டாக்ஸ் ஆபீசர்கள் ஓசி டிக்கட்டுகளுக்கு சீட்டுக் கொடுத்து அனுப்புகிறார்கள் கொட்டகைக்காரர்களுக்கு. Complimentary tickets with the retinue of his officers and what not—everybody that is attached to him get the privilege of entering into the tent. இதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். இதில் அக்கறை செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வெட்டுப் பிரேரணையை பலமாக அழுத்தந் திருத்தமாக வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அங்கத்தினர் அவர்களுக்கு என் வேண்டுகோள் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். சினிமாக் கொட்டகைகளுக்குச் செல்லும் பெண்களைப் பற்றிக் கூறிய சில சொற்றொடர்களைப் பேரவை நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும்.

மாண்புமிகு தலைவர் திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : அவற்றை நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

***திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரி மசோதாமீது பங்கு பெற வாய்ப்புக் கொடுத்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன். இந்த விற்பனை வரி மசோதாவை முன் மொழிந்த அமைச்சர் அவர்கள் வியாபாரிகளுக்கு நீண்ட நாட்களாக இருந்துவரும் குறைபாடுகளை, இருபது ஆண்டுகளாக வியாபார சமுதாயத்தில் உள்ள சிறிய வியாபாரிகளுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய குறைகளை, நிவர்த்தி செய்ய வேண்டுமென்று மாநாடுகள் சார்பிலும், அந்தந்த வியாபார சங்கங்கள் சார்பிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சர்க்காருக்கு அனுப்பிவைத்த வண்ணமிருந்தது. அந்தப் பெரும் குறையை இப்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற விற்பனை வரித் துறை அமைச்சர் அவர்கள் நீக்கும் வகையில், சிறு வியாபாரிகளுக்கு 10,000 ரூபாய் அளவுக்கு விதி விலக்கு இருப்பதை 15,000 ரூபாய் அளவுக்கு உயர்த்தியிருப்பதைக் கண்டு கிட்டத்தட்ட 16,000 சிறு வியாபாரிகள் மகிழ்ச்சியோடு பாராட்டுத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். சிறு வியாபாரிகள் மட்டுமல்லாமல், வியாபாரிகள் கழகம் என்று சொல்லுகிற, தமிழ்நாடு வர்த்தகக் கழகம் தன்னுடைய ஆழ்ந்த மகிழ்ச்சியை மிக்கப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறது.

அது மட்டுமல்லாமல், கம்பவுண்ட் செய்கிற முறையில் 50,000 ரூபாய் வரம்பு இருந்ததை 75,000 ரூபாயாக உயர்த்தியிருப்பது குறித்து வியாபாரிகள் சமுதாயம் சர்க்காருக்கு என்றென்றும் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறது.

** பேரவைத் தலைவரின் ஆணைப்படி அகற்றப்பட்டது.

விலக்குகள் மூலம் கிட்டத்தட்ட 21 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டாலும், 18 சத விகிதம் விற்பனை வரி செலுத்தக் கூடியவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலும், 16,000 வியாபாரிகள் விலக்குப் பெறுகிறார்கள் என்பதைக் குறித்து வியாபாரிகள் சமுதாயம் மிக்க மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சர்க்கார் யார் யார் தாங்கக்கூடிய நிலையில் இருக்கிறார்களோ அவர்களுக்கு வரி விதிக்க வேண்டும் என்ற அடிப்படை எண்ணத்தின்கீழ் இந்த விற்பனை வரி முறையிலே ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டிருப்பது பெரும்பாலும் வரவேற்கத் தக்கதாகும். இன்னும்கூட வெளிப்படையாகச் சொல்லப்போனால், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் விநயகம் அவர்கள் சில துறைகளில் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அந்தத் துறைகளின் மீது அதிகமாகக் கவனத்தைச் செலுத்துவோமானால், இப்போது வருகிற வருவாயை விட 25 சத விகிதம் வருவாய் கூடுதலாகக் கிடைக்கும் என்று அனைவரும் உணர்ந்திருக்கிறோம்.

இங்கு ஒரு சில பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு, விலக்கு அளிக்கப்பட்டிருக்கிற பொருள்களில் வியாபாரம் செய்யக்கூடிய வியாபாரிகளுக்கு, அந்தப் பொருள்களுக்கு வரியில்லை என்றாலும், அதற்கு லைசென்சுக் கட்டணம் என்ற முறையிலே வசூலிக்கப்படுமேயானால் பல கோடி ரூபாய்கள் சர்க்காருக்கு வருமானம் வரும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல துறைகளில் வியாபாரம் செய்கிறவர்களுக்கு, விற்பனை வரியே இல்லாமல் இருக்கக்கூடியவர்களுக்கு, லைசென்சுக் கட்டணம் வைத்து, லைசென்சுக் கட்டணத்தின் மூலம் வரியைப் பெறுவது என்ற நிலை ஏற்படுத்தப்படுமானால், அதிலே பல கோடி ரூபாய்கள் வருமானம் கிடைக்க வழி ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே மிகப் பணிவன்போடு அரசுக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த வரியை வசூலிக்கக்கூடிய அதிகாரிகளினுடைய தொல்லைகளைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய நண்பர் அவர்கள் விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். அந்த நிலைமை இனி தொடர்ந்து குறைக்கப்படும் என்று நான் நம்புகிறேன். மக்களாட்சி ஏற்பட்டிருக்கக்கூடிய காரணத்தினாலும் இந்த ஆட்சியில் வியாபாரிகளுக்கும், பொது மக்களுக்கும், தமிழக மக்களுக்கெல்லாம் நல்ல உரிமை அளிக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலும், முன்பைப் போல விற்பனை வரி அதிகாரிகள் வியாபாரிகளையும், பொது மக்களையும் தொல்லை செய்யும் நிலை ஏற்படாது என்பது எனது கருத்து.

இந்த நிலையைப் பார்க்கும் நேரத்தில், கமிஷன் கடை வைத்திருக்கிறவர்களிடத்தில், தரகு மண்டி வைத்திருக்கிற வியாபாரிகளிடத்தில், தரகு வியாபாரம் செய்கிறவர்களிடத்தில், சுற்றி இருக்கிற கிராமங்களில் இருக்கிற விவசாயிகள் பொருள்களைக் கொண்டுவருகிற நேரத்தில், சரக்குகளை வழியிலேயே அதிகாரிகள் நிறுத்தி, "இந்தச் சரக்கு உன்னுடையது என்று உன்னிடத்திலே தகுந்த ஆதாரம் இருக்கிறதா? உன்னிடத்திலே தகுந்த ரசீதுகள் இருக்கின்றனவா"? என்று கேட்டு, "இல்லை" என்றால் உடனே அவர்களிடமிருந்து வரியை வசூலிக்கிறார்கள். கிராமத்திலே இருக்கக்கூடிய சிறு விவசாயி, தனக்கு 5 மூட்டை, 10 மூட்டை தானியம் விளைந்தால், அதை நகரத்திற்குக் கொண்டுவந்து, கமிஷன் கடையில் விற்று, அதைக்கொண்டு குடும்பத்தை நடத்தலாம் என்று கருதுகிற எழுதப் படிக்கத் தெரியாத விவசாயிகள் லாரியில் போட்டு ஏற்றிக்கொண்டு வருகிற நேரத்தில் இடையிலே செக்போஸ்டில் நிறுத்தி மூட்டைகளுக்கு வரி வசூல் செய்கிறார்கள். அந்த நிலை மாற்றப்பட வேண்டும். பெரும்பாலும் சேலம் மாவட்டத்தில், தர்மபுரி மாவட்டத்தில் அரூர் வட்டத்திலிருந்து சேலத்திற்கு வரும் விற்பனைச் சரக்குகளை 20—30 விவசாயிகள் சேர்ந்து ஒரு லாரியைப் பேசி, மூட்டைகளைப் போட்டுக் கொண்டுவருகிறார்கள். லாரியிலே பல மூட்டைகள் இருக்கும். அவரை, கொள்ளு, கொட்டைமுத்து, தனியா—இப்படி பல மூட்டைகளைப் போட்டுக் கொண்டு வியாபார ஸ்தலங்களுக்கு வரும் நேரத்தில், வழியில் இருக்கிற தொப்பூர் செக்போஸ்டிலும், மஞ்சவாடி செக்போஸ்டிலும் மூட்டைகளு

[திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்] [1967 ஜூன், 28

2 ரூபாய், 3 ரூபாய் வரியை வசூலிக்கிறார்கள். அந்த வரியை வசூலிப்பது தவிர்க்கப்பட வேண்டும். ஏற்கனவே இருந்த சர்க்கார் அதற்கு ஒரு முறை வைத்திருந்தார்கள். அந்த முறையிலே என்ன வைத்திருந்தார்கள் என்றால், விவசாயிகள் தனக்கு விளைந்த சரக்குகளை விற்பனைக்குக் கொண்டு வருகிற நேரத்தில் கிராம முன்சீப்பிடத்திலிருந்தோ அல்லது ஊராட்சி மன்றத் தலைவரிடத்திலிருந்தோ அது விவசாயியின் சரக்கு என்று அத்தாட்சிப் பத்திரம் வைத்திருந்தால் அதை விட்டுவிட வேண்டும் என்ற ஒரு முறையை வைத்திருந்தார்கள். அந்த முறையை இன்னும் கொஞ்சம் அதிகமாக விஸ்தரிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அந்த முறையில் கிராம அதிகாரி, கிராம கணக்கப்பிள்ளை, ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியப்புத் தலைவர், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகியவர்கள், "இந்த கிராமத்திலிருந்து ராமசாமி கவுண்டர் நான்கு மூட்டை தானியம் சேலத்திற்குக் கொண்டு போகிறார் என்று நற்சான்று கொடுத்தால் விற்பனை வரி வசூலிக்காமல் இருக்க வேண்டும். ஏற்கனவே இருந்த ஊராட்சி மன்றத் தலைவர், கிராம அதிகாரியோடு இந்த நிலையில் நான் சொன்னவர்களையும் சேர்த்து, அவர்கள் ரசீது கொடுத்தாலே போதும் என்ற நிலையை வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், விற்பனை வரியைப் பொறுத்த வரையில், சில பொருள்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும். ஏற்கனவே இருக்கக்கூடிய முறையில் பல பொருள்களுக்கு விதி விலக்கு அளித்திருப்பது போல மேலும் சில பொருள்களுக்கு விலக்குக் கொடுக்க வேண்டும். இங்கே தயார் செய்கிற தேங்காய் நார்க் கயிறு போன்ற பொருள்களுக்கு நம் மாநிலத்தில் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. அதே கயிறுக்கு அண்டை மாநிலமான கேரள மாநிலத்தில் மாநில சர்க்கார் வரியும் இல்லை, மத்திய சர்க்கார் வரியும் இல்லை. நம் தமிழ் நாட்டில் இந்தத் தேங்காய் நார்க் கயிறுக்கு மாநில சர்க்கார் வரியும் இருக்கிறது, மத்திய சர்க்கார் வரியும் இருக்கிறது. இந்த இரண்டு வரிகளும் சேர்ந்து, 5 சத வீதம், 6 சத வீதம் வரி ஆகிறது. கேரளத்தில் உற்பத்தியாகிற கயிறு வட மாநிலத்தில், வங்காளத்தில், பம்பாயில் விற்கப்படுகிற நிலை இருக்கிறது. அதே மாதிரி தமிழ்நாட்டில் உர்பத்தியாகும் கயிறு வங்காளத்திலேயும், பம்பாயிலேயும் விற்கப்படுகிற நிலைமை வருகிறது. இந்த நிலைமை ஏற்படும்போது, கேரளத்தில் உற்பத்தியாகிற கயிறை விட, தமிழ் நாட்டில் உற்பத்தியாகிற கயிறு, தமிழ்நாட்டில் இரண்டு வரிகள் போடப்பட்டிருக்கிற காரணத்தினால், விலையில் 5—6 சத வீதம் அதிகமாக ஏறுகிறது. அப்படி விலை ஏறுகிற காரணத்தினால் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கயிறின் விற்பனை குறைகிறது. கேரளத்தில் உற்பத்தியாகிற கயிறின் விற்பனை அதிகமாக நடைபெறுகிறது. இந்தக்கயிறுகள் வெளி நாடுகளுக்குக் கூட ஏற்றுமதி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கயிறின் விலை 5—6 சத வீதம் அதிகமாக இருப்பதால் தமிழ்நாட்டு வியாபாரிகள் பெரிதும் பாதிப்பு அடைகிறார்கள். கயிறு உற்பத்தி செய்வது காட்டேஜ் இண்டஸ்ட்ரி என்று சொல்லப்படுகிற குடிசைத் தொழிலுக்கு ஒப்பானது. கயிறு உற்பத்தி செய்யக்கூடிய ஒரு இடத்தில் பார்த்தால் கிட்டத்தட்ட 30 குடும்பங்கள், 120 பேர்கள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பதைப் பார்க்கலாம். காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்லப்படுகிற குடிசைத் தொழிலில் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களுக்கு சர்க்காரினால் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் கயிறு உற்பத்திக்கும் விற்பனை வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அப்படி விலக்கு அளிப்பதாலே சர்க்காருக்கு ஏற்படக்கூடிய நஷ்டம் ஒரு சில லட்சம்தான் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் வரி விதிக்கக்கூடிய முறையில் இன்னும் பல பொருள்களுக்குக் கூட வரி விதிப்பதில் எந்தவித ஆட்சேபணையும் இருக்காது. வரி ஏய்ப்பைத் தடுத்தோமானால் இப்போது வரக்கூடிய வரியை விட,

1967 ஜூன், 28] [திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்]

இரண்டு மடங்கு அதிகமாக வரும் என்று மாண்புமிகு உறுப்பினர் விநாயகம் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். இரண்டு மடங்கு இல்லையென்றால், 50 சதவிகிதம் விற்பனைவரி அதிகமாக வரக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த வகையில் மாவட்டம்தோறும் மாவட்டத்தின் எல்லைக்குள்ளே, நிரந்தரமான செக் போஸ்டுகளை ஏற்படுத்தி, 11-0
அதிகாரிகளையும் அமர்த்தி, லாரிகள் மூலம் போகும் சரக்குகளுக்கு வவுச்சர் இருக்கிறதா என்பதைக் கண்காணித்து அனுப்பினால், பெரும்பாலும் வருவாய் கிடைக்க வழிவகை இருக்கிறது என்பதைப் பணிவன்போடு சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதே போல ரெயில் மூலம் வட மாநிலங்களிலிருந்து வரகன்கள் மூலம் சரக்குகள் அனுப்பப்படும்போதும், பல வரி ஏய்ப்புகளுக்கு வாய்ப்பு வந்து சேருகின்றன. ஆகவே ரெயில்வே குட்ஸ் ஷெட்டுக்குப் பக்கத்திலேயே நிரந்தரமான செக்போஸ்டுகள் அமைத்து, ஒவ்வொரு ரெயில்வே பாஸுக்கும் பில் இருக்கிறதா என்று பரிசீலனை செய்து, அதற்கான ரசீதுகளைச் சோதனை செய்தால், பெருவாரியான வரி கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. இந்த முறைகளைக் கையாண்டால், இன்னும் மேற்கொண்டு 50 சதவீதம் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதோடு இந்த விற்பனை வரித்துறையில் பெரிய மாறுதல்களைச் செய்ய வேண்டும் என்று கருதிக்கொண்டிருக்கும் சர்க்காருடைய கவனத்திற்கு என்னுடைய சிறிய யோசனைகளைக் கூற விரும்புகிறேன். பல இலாக்காக்களைச் சீர்திருத்தி, ஆட்குறைப்புச் செய்துவரும் நம்முடைய சர்க்கார், விற்பனை வரித் துறையில் இரண்டு இலாக்காக்களில் ஆட்குறைப்புச் செய்வதன்மூலம் பல லட்சக்கணக்கான ரூபாய்களை மீதம் காணமுடியும். ஏற்கனவே வெள்ளைக்காரன் காலத்தில், ஆந்திரமும், கர்னாடகமும், கேரளமும், தமிழகமும் ஒன்றாக இருந்த காலத்தில் 25 ஜில்லாக்கள் சென்னை ராச்சியத்தில் இருந்தன. அப்பொழுது ஒரு டெபுடி கமிஷனர் இருந்தார். இப்பொழுது, பல மாவட்டங்கள் பிரிந்து, மாநிலங்கள் பிரிந்த பிறகு தமிழகத்தில், அது தனியாகப் பிரிந்த பிறகு நான்கு டெபுடி கமிஷனர்கள் இருக்கிறார்கள். இந்த நான்கு டெபுடி கமிஷனர்களும், சென்னையிலும், கோவையிலும், திருச்சியிலும், மதுரையிலும் இருக்கிறார்கள். சென்னையில் இருக்கும் டெபுடி கமிஷனர் அலுவலகம் சென்னை, தென் ஆர்காடு, செங்கல்பட்டு முதலிய மாவட்டங்களை உள்ளடக்கியிருக்கிறது. கோவையில் இருக்கும் டெபுடி கமிஷனர் அலுவலகம் கோவை, நீலகிரி, சேலம், தர்மபுரி மாவட்டங்களைக் கொண்டதாக இருக்கிறது; திருச்சியில் இருக்கும் டெபுடி கமிஷனர் அலுவலகம் திருச்சி, தஞ்சை, வட ஆர்காடு முதலிய மாவட்டங்களையும், மதுரையில் இருக்கும் டெபுடி கமிஷனர் அலுவலகம் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி குமரி முதலிய மாவட்டங்களையும் உள்ளடக்கியிருக்கின்றன. இந்த நான்கு டெபுடி கமிஷனர்களுக்கும் இருக்கக்கூடிய பெரும்பாலான வேலை என்னவென்றால்—அவர்களுக்கு அதிகமான வேலை இல்லை—ப்ரமோஷன்கள் செய்வது, ஏ.சி.டி.ஓ.வை, டி.சி.டி.ஓ வாக ஆக்குவது, டி.சி.டி.ஓ.வை, சி.டி.ஓ. வாக ஆக்குவது போன்ற ப்ரமோஷன்கள் தான். அதோடு, இடமாற்றம் செய்வது. அதாவது, இங்கே இருக்கும் ஆபீசரை, இன்னொரு ஊருக்கு மாற்றுவதான நிலைமை இருக்கிறது. இந்த இரண்டு வேலைகள்தான் அவர் செய்வது. இந்த வேலைக்காக ஏறத்தாழ ஏராளமான சர்க்கார் பணம் செலவழிக்கப் படுகிறது. இந்த டெபுடி கமிஷனருக்குச் சம்பளம் ரூ. 900 ஆபீஸ் மானேஜர் ரூ. 350-ல் இருக்கிறார்; அங்கேயிருக்கும் ஹெட் கிளார்க்குக்கு சம்பளம் ரூ. 250, நான்கு யூ.டி.சி.கள் அவர்களுக்கு ரூ. 840 சம்பளம். எல்.டி.சி. களுக்கு ரூ. 450 சம்பளம். அதன் மேல் ஒரு ஸ்டெனோ என்பவருக்கு ரூ. 180 டைப்பிஸ்ட் என்பவருக்கு ரூ. 140 அட்டெண்டருக்கு ரூ. 90 ப்யூன்களுக்கு ரூ. 225 கார் அலவன்ஸ் கிட்டத்தட்ட ரூ. 1,000 கட்டட வாடகை ரூ. 300 ஆக இந்த வகையில் ஒரு டெபுடி கமிஷனர் ஆபீசுக்கு மாதம் கிட்டத்தட்ட ரூ. 5,000 செலவழிக்கப்படுகிறது. அந்த முறையில் செலவாகும் அலுவலகத்தின்

[திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்] [1967 ஜூன், 28

பணி என்ன என்றால், அதிகாரிகளை மாற்றுவதும், உயர் பதவிகளுக்குப் போடுவதுமான வேலைகள்தான். இந்த நான்கு டி.சி. அலுவலகங்களையும் ஒன்றாக ஆக்கி, சென்னையிலேயே வைத்துவிட்டால், இன்றைக்கு ஏற்படும் செலவு, லட்சக்கணக்கான ரூபாய்கள் சர்க்காருக்கு மீதம் ஆகும். அதைச் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, விற்பனை வரித் துறையில் ஒரு சிக்கல் இருக்கிறது. சிக்கல் மட்டுமல்ல, செலவினங்களைக் குறைக்கும் மார்க்கத்தையும் கவனிக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன். முன்பு, டி.சி.டி.ஓ. வியாபாரிகளுடைய கணக்குகளை பார்த்து அசெஸ்மெண்ட் செய்து கொண்டு இருந்தார்கள். இப்பொழுது ஜே.சி.டி.ஒ. என்கிற அதிகாரியைப் புதிதாகப் போட்டு, அசெஸ்மெண்ட் செய்யப்படுகிறது. இந்த ஜே.சி.டி.ஓ. என்கிற அதிகாரி சமீபத்திலே, இரண்டு—மூன்று ஆண்டு காலத்திலே ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த இலாகாவிற்குப் பதிலாக, நேராக டி.சி.டி.ஓ.வே வியாபாரிகளுடைய கணக்குகளைப் பார்த்து, அசெஸ்மெண்ட் செய்தால், அப்பீல் செய்ய எதுவாக இருக்கும். இன்றைக்கு சி.டி.ஓ.-க்கு அப்பீலுக்குப் பிறகு மேலும் இருக்கும் அதிகாரிகளுக்கும் போகலாம். இப்பொழுது, ஜே.சி.டி.ஓ. என்கிற நிலையை மத்தியில் உற்பத்தி செய்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதனால் சிக்கலான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதோடு சர்க்காருக்கும் செலவு அதிகம். இதை எடுத்து விட்டால், மீதம் காண வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னொன்று, இப்பொழுது இருக்கக்கூடிய நிலையில் அப்பீல் செய்வதில் சங்கடம் இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. விநயகம் சொன்னார்கள். விற்பனை வரி அதிகாரிகள் விதிக்கக் கூடிய அஸெஸ்மெண்ட் நான் இறுதியாக இருக்கிறது என்று தெரிவித்தார்கள். அவர்கள் அப்படி விதித்தாலும், படிப்படியாக அப்பீலுக்குப் போகும் உரிமை வியாபாரிகளுக்கு இருக்கிறது. இங்கே ஜே. சி. டி. ஓ. பார்க்கும் கணக்குகளை, அவர்கள் விதிக்கும் அஸெஸ்மெண்டுகளை அதற்குமேல் இருக்கக்கூடிய அதிகாரிக்கு விண்ணப்பிக்கிறோம். அவர்கள் பார்த்த பிறகு, அவர்களுடைய தீர்ப்பிற்குப் பிறகு, எஸ்.டி.ஏ.டி.க்கும் அதற்கு மேல் இருக்கும் அதிகாரிக்கும் அப்பீல் செய்கிறோம். இப்பொழுது சமீபத்திலே, சில ஆண்டுகளுக்குள்ளாக வந்திருக்கும் முறை என்னவென்று சொல்ல வேண்டும். இதற்கு முன்னால், ஜே.சி.டி.ஓ. பதவி இல்லாமல் இருந்தபோது, கணக்குகளைப் பார்த்த பிறகு அப்பீல் சி.டி.ஓ. க்கும், அதற்கு மேல் நேராக எஸ்.டி.ஏ.டி.க்கும் இருந்தது. இப்பொழுது புதிதாக மத்தியில் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. அதனால், வியாபாரிகளுக்கு பெரும்பாலும் கஷ்டம் தான் ஏற்பட்டிருக்கிறது. அதோடு அரசாங்கத்திற்கும் நிர்வாகச் செலவு அதிகமாகிறது. ஆகவே, ஏற்கனவே டி.சி.டி.ஓ. அஸெஸ்மெண்ட் செய்தது போலவே செய்து, சி.டி.ஒ-க்கு அப்பீலும், அதற்குமேல் நேராக எஸ்.டி.ஏ.டி.-க்கும் அப்பீலுக்குப் போகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால், வியாபாரிகளுக்கு நன்மையும் அரசாங்கத்திற்கு நிர்வாகச் செலவில் மீதமும் ஏற்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே, இந்த இரு இலாகாக்களையும் எடுத்துவிட்டு முன்போலவே செயல் படவேண்டும் என்று அரசைப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொன்றையும் இந்த அவையின் முன்னால் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். டாக்டர் லோகநாதன் அவர்களுடைய கமிட்டியின் சிபாரிசுகள் பெரும்பாலும், நன்கு கவனித்துப்பார்த்தால் சர்க்காருக்கு அதிக வருமானம் வரும் வகையில் அமைந்திருக்ின்றன. வரி ஏய்ப்புகளைத் தவிர்க்கக்கூடிய பலனிதமான திட்டங்கள், முறைகள் டாக்டர் லோகநாதன் கமிட்டியின் சிபாரிசுகளில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையும் இந்த சர்க்கார் சற்று பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

1967 ஜூன் 28] [திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்]

அதோடு, வியாபாரிகளுக்கு இருக்கும் சிக்கல்களையும் தீர்க்கவும், வரி விதிப்பைத் தாங்கக்கூடியவர்கள் பேரில் போடும் வகை உருவாகவும், அதே நேரத்தில் கூடுமான வரையில், நான் ஏற்கனவே சொன்னதுபோல வரிவிதிவிலக்குக் கொடுக்கப்படும் பொருள்களை வியாபாரம் செய்பவர்களுக்கு லைசென்சு என்ற முறையில் ஏற்படுத்தி, கட்டணம் விதித்தால் இன்றைக்கு உயர்த்தியிருக்கும் அரை சதவீதம் கூட உயர்த்தவேண்டிய நிலை இருக்காது, கிடைக்கக் கூடிய வருமானத்தைவிட அதிகமாக லைசென்சுக் கட்டணம் மூலம் அடையும் வாய்ப்பு இருக்கிறது, என்பதை எடுத்துக் கூறி, இந்த விற்பனை வரி மானியத்தை மகிழ்ச்சியோடு வரவேற்று—நான் வரவேற்பது மட்டுமல்ல—தமிழகத்தில் இருக்கும் மூன்று கோடி மக்களும் மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள், வாழ்த்துவார்கள், பாராட்டுவார்கள் என்று கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. டி. மார்ட்டின் : அவைத்தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை நான் இந்த அவையில் வைக்க விரும்புகிறேன். தமிழக அரசு விற்பனை வரியின் மூலமாகத்தான் நிதி வருவாயில் பெருமளவு ஏற்படுத்த எண்ணியிருக்கிறது. ஏற்கனவே வரி விதிப்பின் காரணமாகப் பொதுமக்களும் வியாபாரிகளும் அல்லல் பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் காமதேனு என்று சொல்லக்கூடிய விற்பனை வரியின் மூலமாக அதிகம் வரியிட இந்த அரசு இன்று நினைத்திருக்கிறது. காமதேனு என்று சொல்லக் கூடிய விற்பனை வரியை மட்டும்தான் நம்பி அதிகமாக வரவு-செலவு செய்ய எண்ணியிருக்கின்ற அரசு, தனியாக ஹோசூர் பசுவாக ஒன்றை வருவாய்த்துறையில் கொண்டிருக்கின்றார்களா என்று பார்த்தால், அந்த ஹோசூர் பசு இல்லாத முறையில் பழைய காமதேனுவையேதான் துணைக்கு இழுத்திருப்பது தெரிய வருகிறது. ஏற்கனவே இருக்கக்கூடிய வரிப்பளுவைத்தாங்க முடியாமல் ஏழைகள் அல்லலுற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஏழைகள் உபயோகிக்கக்கூடிய பொருள்களின் விலையை இன்று தமிழக அரசு உயரச்செய்திருக்கிறது. குறிப்பாக நாம் பார்த்தால் ஏழை குமாஸ்தாக்களும், கடைநிலை ஊழியர்களும் உபயோகிக்கக்கூடிய சைக்கிள், சைக்கிள் டியூப், இன்னும் பார்க்கப்போனால், அந்த வால் டியூப் எல்லாம் விலையேறிவிட்டது. அதோடு, வெயிலிலும், மழையிலும் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு வேறு வழியில்லாத சாதாரண மக்கள் உபயோகிக்கக்கூடிய குடை—அம்ப்ரல்லா—இதற்கும் இந்த அரசில் வரி அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல. சாதாரண டைப்ரைட்டர் வைத்துப் பிழைக்கக்கூடியவர்கள்—ஒரு பக்கத்திற்கு 4 அணு, காப்பிக்கு 2 அணு என்று இந்த முறையில் அவர்கள் வாங்கி பிழைக்கக்கூடியவர்கள்—உபயோகிக்கும் அந்த டைப்ரைட்டருக்கும் தமிழக அரசு அதிகமாக விற்பனை வரி போட்டிருக்கிறது. எண்ணெய் வித்துக்களுக்கு இன்று இவர்கள் அதிகமாக வரி விதிப்பு செய்வதால் எண்ணெய் அதிக விலைக்கு வந்து விடும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எண்ணெயை ஏழை மக்களும் உபயோகிக்கிறார்கள் ; பணக்காரர்கள் மட்டும் உபயோகிக்கிறார்கள் என்பது அர்த்தம் அல்ல. ஆக, இந்த வரிவிதிப்பின் காரணமாய் ஏழை மக்கள் மிகவும் அல்லலுறுவார்கள் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடு எனக்கு முன் பேசிய கனம் உறுப்பினர் ஆளும் கட்சியிலிருந்து ஒரு யோசனையைக் கூறினார். ஆந்திரம், தமிழகம் சேர்ந்திருக்கின்ற பொழுது அதிகாரிகள் இவ்வளவு இல்லை. ஆனால் இன்று, தமிழகம் தனியாக இருக்கின்றபொழுது இங்கு இவ்வளவு டெபுடி கமிஷனர்கள் தேவையா என்று கூறினார்கள். ஆனால் ஒன்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆந்திரம், தமிழகம் ஒன்றாக இருந்த நேரத்தில் 17 கோடி ரூபாய்தான் பட்ஜெட். ஆனால் இன்று தமிழகம், தனித்து நின்று 217 கோடி ரூபாய் பட்ஜெட் போடுகின்ற அளவுக்கு வந்திருக்கிறது. எனவே இந்த டெபுடி கமிஷனர்களின் போஸ்டுகளை அபாலி செய்ய வேண்டிய அவசியமில்லை. வரி விதிப்பு

செய்கின்ற முறையில், அதை வசூல் செய்யும் முறையில் டெபுடி கமிஷனர்களுக்கு அதிகப்பங்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேலும் அமைப்பு முறையில் ஒரு அதிகாரியின் வரி விதிப்பு ஏற்றுக் கொள்ளப்பட வில்லையென்றால் அதை அப்பல்லெட் அசிஸ்டெண்டு கமிஷனருக்கு அப்பீல் செய்கிறார்கள். அதற்குச் சட்டத்தில் வழியிருக்கிறது. அதற்குமேலாக ட்ரிப்யூனல், ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் என்று இருக்கிறது. ஆக இந்த வழி முறைகளில் அப்பல்லெட் அசிஸ்டெண்டு கமிஷனர் என்ற அந்த போஸ்டு தேவையில்லாதது என்று நினைத்து அதை சேல்ஸ் டாக்ஸ் அட்வைசரி கமிட்டி ரெகமெண்டேஷன் கொடுத்திருப்பதாக அறிகிறேன். அந்த முறையில் அப்பல்லெட் அசிஸ் டெண்டு கமிஷனர் போஸ்டுகளை நீக்கி விட்டு, அதற்குப்பதிலாக மூன்று ட்ரிப்யூனல் சென்னை மாகாணத்தில் இருப்பதை 6 ஆக மாற்றி இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு ட்ரிப்யூனல் வைக்குமாறு ஒரு யோசனையை அரசு கவனித்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். குறிப்பாக கன்னியாகுமரி, நெல்லை ஆகிய இரண்டுக்கும் நெல்லையில் ஒரு ட்ரிப் யூனலும், பக்கத்தில் இராமனாதபுரம், மதுரை இரண்டுக்கும் மதுரையில் ஒரு ட்ரிப்யூனலும் வைத்தால் அப்பீல் செய்கின்றவர்களுக்கு அதிகமாக இன்னல் இருக்காது, செலவும் அதிகமாக இருக்காது.

மேலும் இன்று செக் போஸ்டுகள் இருக்கின்றன. செக் போஸ்டு களினால் சாதாரண வியாபாரிகள் தொல்லைக்கு ஆளாகிறார்கள் என்பதைப் பலமுறை இந்த அவையில் இன்று ஆளும் கட்சியாக உள்ளவர்கள் எதிர்கட்சியாக இருந்தபொழுது கூறியிருக்கிறார்கள். ஆகவே அதற்குப் பதிலாக விஜிலன்ஸ் கமிட்டி ஏற்படுத்தி செக் போஸ்டு வேலைகளை கண் காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும் இங்கு விதிக்கப்படும் வரியைப்பற்றி எண்ணுகின்ற பொழுது விற்பனை வரியாக இல்லாமல் அது வாங்குவோர் வரியாகத்தான் இருக்கிறது. இதே கருத்தை இந்த அவையில் 1963—ல இன்று ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய உறுப்பினர்களில் பலர் கூறியிருக்கிறார்கள். வாங்குகிறவர்கள் அந்த வரியைச் செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த வரிகளினால் விலைவாசி அதிகமாகி வாழ்க்கைத் தரம் உயரும் என்று கூறிக்கொள்ளுகின்றேன்.

மேலும் நமது மாநிலத்தைப் பொறுத்தமட்டில் எலெக்டிரிக்கல் குட்ஸ், என்ஜினியரிங் குட்ஸ் ஆகிய இந்தப் பொருள்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தப் பொருள்களை மற்ற மாநிலங்களிலிருந்து வந்து வாங்குகிறார்கள். காரணம் என்னவென்றால் இங்கு 2½ சதவீதம் விற்பனை வரி இருப்பதால். மற்ற மாநிலங்களில் 3 சதவீதம் இருப்பதால் நம்முடைய மாநிலத்திலேயே வாங்கிச் செல்லுகிறார்கள். ஆனால் நாமும் 2½ சதவிதத்தை 3 சதவிகிதம் என்று ஆக்குவோமேயானால் இந்த எலெக்டிரிகல் குட்ஸ் இண்டஸ்டிரியல் குட்ஸ், எஞ்சினியரிங் குட்ஸ் ஆகிய இந்தப் பொருள்களை மற்ற மாநிலத்தார் வேறு மாநிலங்களிலேயே வாங்கிக் கொள்ளுவார்கள். நம் மாநிலத்தில் வாங்குவதற்கு வர மாட்டார்கள். இவ்வாறு வெளி மாநிலங்களிலிருந்து வரவில்லையென்றால் இங்குள்ள எலெக்ட்ரிகல் குட்ஸ், என்ஜினியரிங் குட்ஸ் தொழில்கள் ஸ்தம்பித்து விடும். இவ்வாறு ஸ்தம்பித்து விட்டால் ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பில்லாமல் போய்விடக்கூடும்.

மேலும் பதனிடாத தோல், இதற்கும் வரி அதிகமாகக் கூட்டி இருக்கின்றனர். இதுவரை அண்டை மாநிலங்களிலிருந்து இங்கு பதனிடாத தோல் வந்து கொண்டிருக்கின்றன. இங்கு வரி கூடுதலின் காரணமாக அண்டை மாநிலங்களிலிருந்து இங்கு பதனிடாத தோல் வருவது குறையும். அதன் காரணமாக தோல் பதனிடும் தொழிற் சாலையிலுள்ள ஏழைத்தொழிலாளர்கள் வேலையிழக்க நேரிடும் என்பதை யும் அரசுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் மத்திய

சர்க்காருடைய வரி 3 சதவீதம் இருக்கிறது. நம்முடைய வரி 2½ சத விகிதமாக இருக்கிறது என்ற ஒரு வாதத்தை வருவாய்த்துறை அமைச்சர் கூறினார்கள். இவ்வாறு 2½ சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாக ஆக்கினால் மத்திய விற்பனை வரியிலிருந்து நமக்குக் கிடைக்கும் தொகையும் குறையும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காரணம் பல மாநிலங்களில் இருந்து நம்முடைய மாநிலங்களுக்கு இந்தச் சிறப்புப் பொருட்களை வாங்க வரமாட்டார்கள். குறிப்பாக இன்ஜினியரிங் குட்ஸ், எலெக்ட்ரிகல் குட்ஸ் ஆகியவைகளை அவர்கள் வாங்குவதற்கு வர மாட்டார்கள். எனவே, அந்த வருமானம் ஒரு கணசமான அளவில் குறையும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் கிராமங்களில் வியாபாரிகள் திடீர் என்று கடைகளிலிருந்து ஓடுவார்கள். அந்தவிதமாக அவர்கள் ஏன் ஓடுகிறார்கள் என்று பார்த்தால், விற்பனை வரி அதிகாரிகளைப் பார்த்து விட்டார்கள் என்று காரணம் சொல்லப்படும். இதை நான் கூறவில்லை. முன்பு, 28-3-1963—ல், இதே கருத்தை, இன்று இங்கு சட்ட அமைச்சராக இருக்கக் கூடிய மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

"சாதாரணமாக கிராமங்களில் பார்க்கும்போது, திடீரென்று ஒவ்வொரு வியாபாரியும் எழுந்து ஓட ஆரம்பித்து விடுவார்கள். ஏன் இப்படி ஓடுகிறார்கள் என்று பார்ததால் தெருக் கடைசியில் விற்பனை வரி அதிகாரி வருவதைப் பார்க்கலாம். அந்த விதமாக வியாபாரிகள் அதிகாரிகளைக் கண்டு ஓடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இது வியாபாரி களுக்கும் அவமானமாக இருக்கிறது. அங்கே போகிறார்களே, அந்த அதிகாரிகளுக்கும் அவமானமாக இருக்கிறது. அதிகாரிகள், இந்த விதமான சூழ்நிலை ஏற்படுகிறதே என்று வருத்தப்படும்படியான நிலை மையும் ஏற்படுகிறது. இதைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

எனவே, இந்த மானியக் கோரிக்கைமீது கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசுகின்றபோது, வரியை மட்டும் வைத்து வருவாயை இந்த அரசு பெருக்க நினைத்திருக்கிறது. அது கடந்த கால நிதி அமைச்சர்கள் செய்த வேலை, அதிலிருந்து மாறுபட்ட ஒரு புதுமையான கருத்தைக் கொண்டுவந்து, வரியை உயர்த்தாமல் வசதியைப் பெருக்க ஒரு வசதி செய்யப்படவில்லையே என்ற குறையைக் கூறிக்கொண்டு, வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*திரு. ஏ. சி. நரசிம்மன் : கௌரவமிக்க தலைவர் அவர்களே, நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள இந்த மானி யக் கோரிக்கையை வரவேற்று நான் என்னுடைய சிறிய உரையை ஆற்ற முன்வந்திருக்கிறேன். எனக்கு முன் பேசிய மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர்கள், எந்த முறையில் வியாபாரிகள் பாதிக்கப் படுகிறார்கள், அவர்களுக்கு எப்படி எப்படி நிவாரணம் அளிக்க வேண்டும், என்ன என்ன வழிவகை காண வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். குறிப்பாக, காங்கிரஸ் தரப்பிலிருந்து பேசிய நண்பர் அவர்கள், வியாபாரிகளை அதிகாரிகள் மிகவும் துன்புறுத்துகிறார்கள், "பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட்" என்பதை வைத்துக் கொண்டு, அவர்கள் வரி விதிப்பதிலே தவறான முறைகளைக் கையாளுகிறார்கள் என்றெல்லாம் எடுத்துக் காட்டினார்கள்.

வியாபாரி என்ற முறையில் நான் உள்ளபடியே என்னுடைய கருத்துக்களையும் இங்கே எடுத்துரைக்க விரும்புகிறேன். அந்த அதி காரிகள் அந்த அளவில் ஏன் வரி விதிக்கிறார்கள் என்பதை மட்டும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். வியாபாரிகள் அத்தனை பேரும் அவ்வளவு மோசமானவர்கள் என்று யாரும் சொல்லிவிட முடியாது. ஏதோ ஒரு சில வியாபாரிகள் தவறு செய்யலாம். ஒரு சிலர் செய்கிற தவறுகளுக்காக அத்தனை பேர்களும் பாதிக்கப்பட வேண்டுமா என்கிற

பிரச்சினை இருக்கிறது. அதே நேரத்தில் சில வியாபாரிகள், பல முறைகளில், அரசினருக்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்தாமல் போய்விடுகிறார்கள். அந்த வரி ஏய்ப்பைத் தவிர்ப்பதற்கு என்ன வழிவகை காணவேண்டும் என்று எதிர்க் கட்சி நண்பர்கள் எடுத்துக் காட்டியிருந்தால் நலமாக இருக்கும். ஆனால், அதை எடுத்துக் காட்டாமல், வியாபாரிகளை அதிகாரிகள் துன்புறுத்துகிறார்கள் என்று மட்டும் சொன்னார்களே தவிர, ஏன் வியாபாரிகள் துன்புறுத்தப் படுகிறார்கள் என்பதற்கான உண்மையான காரணத்தைக் கூறவில்லை. உள்ளபடியே வியாபாரிகள் தங்களுடைய கணக்குகளை நேர்மையான முறையில் எழுதி வைத்திருப்பார்களானால் அந்தத் தொல்லை வருமா என்றால், கண்டிப்பாக வர முடியாது. அதிகாரிகளைக் கண்டு வியாபாரிகள் எழுந்து ஓடுகிறார்கள் என்று சொன்னார்கள். ஏன் ஓட வேண்டும் ? உள்ளபடியே நல்ல முறையில் கணக்கு வைத்துக் கொண்டிருப்பவர்கள் எழுந்து ஓட வேண்டிய நிலை ஏற்படாது. ஆனால், நல்ல முறையில் எழுதி வைத்திருந்தாலும்கூட, அவர்களுக்கும் அந்தத் தொல்லைகள் வருகின்றன என்று சிலர் கூறலாம். சிலர் செய்கிற அந்தத் தவறை, நல்ல முறையில் கணக்கு எழுதி வைத்துக் கொண்டிருப்பவர்கள் எடுத்துக் காட்டினால், அந்த முறையில் அவர்கள் எடுத்துக்காட்டுகிற காரணத்தால், தவறு செய்கிற வியாபாரிகள் கண்டுபிடிக்கப்படுவார்களானால், அந்த முறையில் அந்த வரி ஏய்ப்புகள் தவிர்க்கப்படும். தவறு செய்கிறவர்களைக் கண்டு பிடிக்க மற்ற வியாபாரிகள் உடந்தையாக இருக்க வேண்டும். அப்படியில்லாமல், ஏதோ சிலர் செய்கிற தவறுகளுக்காக அத்தனை பேர்களுமே பாதிக்கப்படுகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் அரசாங்கம் மட்டுமல்ல, அதிகாரிகள் மட்டுமல்ல, வியாபாரிகளும் அதற்குக் காரணம் என்பதை அவர்களும் உணர வேண்டும். எனவே தான், வியாபாரிகள் சங்கங்களை அமைத்து, அந்தச் சங்கங்கள் மூலமாகச் சர்க்காருக்கு அவ்வப்போது எடுத்துக்காட்டி வருகிறார்கள். அப்படி எடுத்துக் காட்டி வருகிறபோது, அவர்கள் குறிப்பிடுவதெல்லாம், அதிகாரிகள் கையாளுகிற வரி விதிப்பு முறையைச் சற்று மாற்றியமைக்க வேண்டும் என்பதுதான். அதிலே தவறு ஏற்பட்டால் அப்பீல் முறை இருக்கிறது. அப்பீலில் ட்ரிப்யூனலுக்குப் போகும்போது, வியாபாரிகளின் பிரதிநிதி ஒருவர், அதிகாரி ஒருவர், நீதிபதி ஒருவர் இப்படி மூன்று பேர்களைக் கொண்ட ட்ரிப்யூனலாக இருந்தால், அவர்களுக்கு அப்பீலில் நியாயம் கிடைக்கும் என்று வியாபாரிகள் கருதுகிறார்கள். ட்ரிப்யூனலிலும் ஸேல்ஸ் டாக்ஸ் அதிகாரி ஒருவரே இருக்கிற காரணத்தால், அப்பீலில் சரியான முறையில் நீதி கிடைப்பதில் சிறிது தவறுகள் ஏற்பட்டுவிடலாம். எனவே தான், வியாபாரிகளுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்றால், அப்பீல் செய்து கொள்ளுவதற்கு இருக்கக்கூடிய ட்ரிப்யூனலைப் பொறுத்தவரையில், வியாபாரிகளில் ஒருவரும், அதிகாரிகளில் ஒருவரும், நீதிபதி ஒருவருமாக அமர்ந்திருக்கக்கூடிய வகையில் ட்ரிப்யூனல் அமைய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நமது சர்க்கார், விற்பனை வரியை 2½ சத வீதத்திலிருந்து 3 சத வீதமாக ஆக்கிய காரணத்தால் வியாபாரம் கெட்டுவிடும் என்று எனக்கு முன்னால் பேசிய நண்பர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், 2½ சத வீதமாக இருந்த வரியை 3 சத வீதமாக ஆக்குவதனால் "டர்ன்-ஓவர்" எந்த விதத்திலும் குறைந்துவிடாது. காரணம், நம்மைப் பொறுத்த வரையில், யார் இந்த மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களில் உள்ளவர்களோடு வியாபாரம் செய்திருந்தாலும், அவர்கள் மூன்று சத வீத வரியைத்தான் கட்ட வேண்டும். ஏனெனில், சென்ட்ரல் ஸேல்ஸ் டாக்ஸைப் பொறுத்த வரையில், நாம் மூன்று சத வீத வரியைக் கட்டுகிறோம். அப்படி மூன்று சத வீத வரி கட்டும்போது, எந்த வகையிலும், சென்ட்ரல் ஸேல்ஸ் டாக்ஸ் சட்டத்தின்படி, வியாபாரிகள் மூன்று சத வீத வரி கட்டித்தான் ஆகவேண்டும். அதனால், எந்தவிதமான லாபமும் கிடைக்காது. அந்த முறையில் மற்ற மாநிலங்களோடு நாம் எந்த வியாபாரம் செய்தாலும், அதனால் நமது வியாபாரம் எந்த விதத்திலும் பாதிக்கப்படாது. அதே நேரத்தில், அவர்கள்

இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். மற்ற பொருள்களினுடைய [illegible] உயர்ந்துவிடும் என்று குறிப்பிட்டார்கள். இரண்டரை [illegible] மூன்று சத வீதமாக்குவதனால் அதிகமான பாதிப்பு [illegible] ஏற்பட்டு விடாது. அதிலும், மத்திய சர்க்கார் மூன்று [illegible] வரி போட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் மூன்று சத வீத [illegible] போட்டிருப்பதால் நாம் அதற்குச் சமமாக வரி போடுகிறோமே தவிர [illegible] வேறல்ல. இது நிர்வாகச் சீர்திருத்தம் தானே தவிர, வரி என்று [illegible] சொல்லக் கூடாது. இரண்டரை சத வீதத்திலிருந்து மூன்று சத வீதத்திற்கு உயர்த்துவதனால் பொருள்களினுடைய விலை அதி[illegible] உயர்ந்துவிடாது. ஏனென்றால், அந்தப் பொருட்களெல்லாம் ஒரு மு[illegible] விற்பனை வரியைச் சார்ந்திருக்கின்றன. ஒரு முனை விற்பனை வரியா[illegible] இருப்பதைப் பல முனை விற்பனை வரியாக உயர்த்தினால்தான் பொருட்[illegible] விலை உய[illegible] கூடும். அந்த அளவிலே இல்லாமல், ஒரு முனை [illegible] வரியைச் சார்ந்த பொருட்களுக்கு வரியைச் சற்று உயர்த்தியிருப்பத[illegible] விலை உ[illegible]ராது என்ற எண்ணத்தையும் நான் இங்கே தெரிவித்துக் [illegible]கின்றேன்.

வியாபாரிகளைப் பொறுத்தவரையில், அவர்களுடைய வீட்டைச் சோதனை செய்வது, தனிப்பட்ட இடங்களைச் சோதனை செய்வதுபற்றிப் பலரும் குறிப்பிட்டார்கள். இதிலே சங்கடம் என்னவென்றால், நல்லவர்களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள். நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் ஒரே நிலையா என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். எந்த அதிகாரியாவது ஒருவருடைய இடத்திற்குச் சென்று சோதனையிடும்போது, யாராயிருந்தாலும்—நல்லவர்களாக இருந்தாலும், கெட்டவர்களாக இருந்தாலும்—எப்படியும் அவர்கள்மீது மாசு கற்பிக்க வேண்டும் என்ற குறிக்கோளோடு அவர்கள் சொல்லுவார்களானால், அது வியாபாரிகளுக்கும் அரசாங்கத்திற்கும் நன்மை தராது. அதே நேரத்தில், தவறு செய்கிறவர்கள் இல்லையா ? என்றால், தவறு செய்கிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். தவறு செய்கிறார்கள் என்றால், உறுதியாக இருந்து, நாம் நடவடிக்கை எடுத்தால் நலமாக இருக்கும். அதே நேரத்தில், நல்ல முறையில் தங்களுடைய தொழிலை நடத்திக்கொண்டு வந்து, அரசாங்கத்திற்கும் நல்ல முறையில் தாங்கள் செலுத்தவேண்டிய வரிகளைக் கட்டிக்கொண்டு வருகிறவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு எந்தத் தொல்லைகளும் ஏற்படாத வண்ணம் ஒரு பாதுகாப்பும் இருக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, ஆதரித்து, இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரி பல வருடங்களாக இங்கு புகுத்தப்பட்டு, படிப்படியாக மு.ப. 11-30
உயர்ந்து இன்றைக்கு நமது ராஜ்ய வருவாயிலே மிக அதிக வருவாயைத் தரக்கூடிய ஒரு இனமாக இருக்கிறது. ஆகவே இந்த விற்பனை வரியைப் பொறுத்தவரையில் கைவிடுவதோ, மாற்றுவதோ இயலாத நிலையில் நாம் இருக்கிறோம். இந்தச் சர்க்கார் அல்ல எந்தச் சர்க்கார் வந்தாலும் இதை நம்பித்தான் ஆட்சியை நடத்தக்கூடிய நிலை இருந்து வருகிறது. வரி விதிக்கக்கூடிய அதிகாரங்கள் எல்லாம் மத்திய சர்க்காரிடத்திலே இருக்கிறபோது மாநில சர்க்கார் தம்முடைய ஜீவாதாரமாக இதைத்தான் நம்பியிருக்கிறது. மாநில சர்க்கார் படிப்படியாக அவ்வப்பொழுது தேவைப்படக்கூடிய நிதிவசதிக்காக விற்பனை வரியை உயர்த்திக்கொண்டே வந்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே நாமும் விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறோம். இந்தச் விற்பனை வரியை ஓரளவு வரையில்தான் உயர்த்த வேண்டும். அப்படியில்லாமல் காலத்திற்கு காலம் உயர்த்திக் கொண்டே போனால் அதனால் மக்களுடைய வாழ்க்கைச் செலவு அதிகரிக்கக்கூடிய நிலைமை தேசத்தில் ஏற்படும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். வரி விதிப்பதற்கு மாற்று முறைகளைக் கையாள பரிசீலனை செய்ய வேண்டும். விற்பனை வரியை மேலும் மேலும்

உயர்த்துவது என்ற எண்ணத்தைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். விற்பனை வரி வசூல் பற்றி நிபுணர்கள் குழு ஆராய்ந்து
பார்த்தபோது, விற்பனை வரி ஏமாற்று தேசத்தில் அதிகப்படியாக
இருக்கிறது என்பதைக் கண்டறிந்தது. வரி ஏமாற்றுகள் இல்லாமல்,
வரிகள் எல்லாம் ஒழுங்காக வசூலிக்கப்பட்டால் இன்றைக்கு அதிகப்படியான
ரூபாய் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்து உள்ளது.
வரி ஏமாற்று கொஞ்சம்கூடக் குறையவே இல்லை. வரி ஏமாற்றுவதைத்
தடுத்து நிறுத்த முடியாதா என்பதை அரசாங்கம் யோசிக்க வேண்டும்.
வரி ஏமாற்றுவதைத் தடுப்பதற்கு,' ஒரு நிபுணர் குழுவைப் போட்டு,
கண்டிப்பாக வரிகளை வசூலிக்க என்னென்ன ஆலோசனைகளைப் பெறலாம்
என்பதை ஆராய அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். பொதுவாக வியாபாரிகள் எல்லாம் ஆயிரம்
தவறுகளைச் செய்பவர்கள் என்ற மனப்பான்மை அதிகாரிகளிடத்தில்
இருக்கிறது. உண்மையில் வியாபாரிகளுக்கு இருக்கிற சூழ்நிலைகளே
தவறு செய்யத் தூண்டலாம். யாரோ ஒருவர் தவறு செய்யலாம்.
என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு சிறு வியாபாரம் செய்ய
ஆரம்பித்தேன். வியாபாரம் செய்யும்போது, ஒரு ரூபாய்க்கு வியாபாரம்
செய்தால்கூட பில் போட வேண்டும். நான் உண்மையான பில்
போட்டு, கணக்குகளைக் கொண்டுபோய் விற்பனை வரி அதிகாரிகளிடத்தில்
கொடுத்தபோது அவர்கள் அதை ஏற்க மறுத்துவிட்டார்கள். "என்னை என்ன
பொய்க் கணக்கா எழுதச் சொல்கிறீர்கள் ? உங்களுடைய முறை,
உங்களுடைய பேச்சு எல்லாம் பொய்க்கணக்கு—கள்ளக் கணக்கு எழுதும்
படியாக அல்லவோ இருக்கிறது" என்றேன். "நாங்கள் யாரிடமும் உள்ள
கணக்கை ஏற்பது இல்லை. எல்லாவற்றுக்கும் சேர்த்துத்தான் உங்களுக்கு
20 ஆயிரம் அதிகமாகப் போட்டோம்" என்று கூறினார்கள். வியாபாரிகள்
நியாயமான கணக்குக் கொடுத்தாலும், தவறான கணக்காகக் கருதப்
படுகிறது. இந்த நிலைமை இருக்க வேண்டுமா என்பதை யோசித்துப்
பார்க்க வேண்டும். இந்த நிலைமையில் யாராவது யோக்கியப் பொறுப்பாக
கணக்குப் போடுபவர்கள் இருப்பார்களானால், மேலும் மேலும் தவறான
கணக்குகளை எழுத வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கும் ஏற்படும்.
பல சூழ்நிலைகளை, சாத்தியக்கூறுகளை நாம் சரிப்படுத்திக் கொள்வோமானால்
வரி ஏய்ப்பு இருக்காது. சிறு வியாபாரிகளுக்கு வேண்டிய சலுகைகள்
கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், சிறு வியாபாரிகள் எல்லாம் மோச
மானவர்கள் என்ற கருத்தில் கொண்டு பார்க்காமல், அவர்களிலும்
யோக்கியமானவர்கள் இருப்பார்கள் என்று கொள்ள வேண்டும்.
ஒருவர் யோக்கியமான நிலையில் வியாபாரம் செய்கிறார் என்றால், அவரை
விட மற்றொரு வரி ஏய்ப்பவர் குறைந்த விலையில் சாமான் கொடுக்க
முடியும். மேலும் வரி ஏய்ப்பவர்களைக் கண்டுபிடித்து அவர்களின் பேரில்
கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகவே, இதை
யெல்லாம் கவனித்து தவறுகளை யெல்லாம் தடுத்து, வரியை அதிகப்
படுத்தாமலேயே வரி உயர்வைப் பெற முடியும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன். வியாபாரிகளுக்கு இருக்கிற சங்கடங்களை அவ்வப்பொழுது
கவனித்து நீக்க வேண்டும். தவிர வியாபாரிகள் அப்பீல் செய்தால்
அதற்கு விமோசனமே இல்லை. வியாபாரிகளைக் கேட்டால், "நாங்கள்
ஒரு அப்பீல் செய்தால் ஒரு வருஷம், இரண்டு வருஷம் ஆகிறது, என்ன
ஆனது என்று ஒன்றும் தெரியவில்லை" என்கிறார்கள். ஆடிட்டரைக்
கேட்டால் ஐந்து வருஷம், பத்து வருஷம் ஆகும் என்று சொல்கிறார்கள்.
குறிப்பிட்டுச் சொல்லப் போனால், வியாபாரிகளின் சங்கடங்களை உடனடியாக
நீக்க வேண்டும், தடுத்து நிறுத்த வேண்டும் என்று கூறிக் கொண்டு என்
உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எ. பாலசுப்பிரமணியன்** : சபாநாயகர் அவர்களே நான் விற்பனை
வரி குறித்து மட்டும் சில கருத்துக்களை இங்கே சொல்லலாம் என்றிருக்
கிறேன். ஒரு முனை விற்பனைவரி கட்டாயமாக அவசியம் என்ற கருத்து
நாட்டிலே பரவலாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. இதைப்பற்றிப் பரிசீ
லிக்கும் போது, பொதுவாக இரண்டு மூன்று கணக்குகள் இன்று நாட்டில்
[illegible]கிறேன். இதைத் தடுப்பதற்கு அதிகாரிகளின் கெடுபிடி இல்லையா

என்றால் இருக்கிறது. ஒருமுனை வரி வந்ததினால்தான் கள்ளக் கணக்கு
வந்தது. கள்ளக் கணக்கினால்தான் ஒருமுனை விற்பனைவரி வந்தது என்று
சொல்வது கல்யாணமானால்தான் பயித்தியம் தெளியும் ; பைத்தியம்
தெளிந்தால்தான் கல்யாணம் என்று சொல்வதைப்போல் இருக்
கிறது. எதனால் எது வந்தது என்று சொல்ல முடியாத நிலைதான்
இருந்து வருகிறது. முக்கிய வரி இனத்தில் அதிகமான தொகை சர்க்
காருக்கு வந்து சேர வேண்டுமென்பதுதான் நியாயம். இன்னும்
ஏராளமானவை வராமல் போகிறது. அவைகளைப் பெறுவதற்கான வழி
என்ற முறையில்தான் ஒரு முனை வரி என்றிருப்பது பொருத்த
மாக இருக்கும். அந்த வரியிலேயே பெரும்பாலும் மொத்த வியாபாரிகள்
தப்பித்துக்கொள்வது என்பது அதிகமாக இருக்கிறது. அவர்களிட
மிருந்து வரி இனத்தில் பாதி அளவுகூட வரவில்லை யென்பதைக கேள்விப்
படுகிறேன்.

குறிப்பாக பருப்பு வகைகள் ஆயில், தனியா போன்ற பொருள்
களும், உளுந்து போன்றவைகளிலும் பில் இல்லாமல் வியாபாரம் அதிக
மாக நடைபெறுகிறது. உளுந்து மூட்டை 5 ரூபாய். பில் இல்லாமல்
இன்றும் சென்னையிலே கிடைக்கும். பல்வேறு பொருள்களை மொத்த
வியாபாரிகள் பில் இல்லாமல் நடத்துகிறார்கள். மற்ற வியாபாரிகளுக்கும்
இந்தப் பழக்கம் இருக்கிறது. அதிகமாக தப்பித்துக் கொள்பவர்கள் மொத்த
வியாபாரிகள்தான். இவ்வாறு வரி வராமல் போகிறது என்பதுமட்டு
மல்ல. இந்த வரிகள் எல்லாம் வந்தால் சர்க்காருக்குக் கூடுதலான
வருமானம் கிடைக்கும். பில் இல்லாமல் விற்பதனால் கள்ளப் பணம்
சேருகிறது. இதனால் விற்பனை வரியும் போகிறது ; வருமான வரியும்
போகிறது. இதை உத்தேசித்து, சில்லறை வியாபாரிகள், நடுத்தர
வியாபாரிகள் போன்றோருக்கும் அதிகாரிகளுக்கும் ஏற்படுகின்ற கசப்பு
உணர்ச்சிகளைத் தவிர்ப்பதற்காகவும், மொத்த வியாபாரிகள் சுலபமாகக்
கொடுக்கக்கூடிய வகையில், ஒருமுனை வரி என்று விதித்து, வசூலிப்பது
நல்ல ஏற்பாடு. இதனால் அரசாங்கத்திற்கும் சிரமம் குறையும்.
வியாபாரிகளும் தப்பித்துக்கொள்ளாமல் இருக்க முடியும். இதை வாங்கிக்
கொள்வதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே இதை நான் வற்புறுத்த
விரும்புகிறேன். ஒரு முனை வரி என்று குறிப்பிடும்போது, உதாரணத்
திற்காகப் பிண்ணாக்கை எடுத்துக்கொண்டால், சில நகரங்களில்தான்
ஆயில் மில் இருக்கிறது. விவசாயி கிராமத்திலே இருக்கிறான். அவனுக்கு
பிண்ணாக்கு உரம் வேண்டும். இதற்கிடையில் பல கைகள் மாறுவதால்
படிப்படியாக விலையும் ஏறுகிறது. பிண்ணாக்கு விலை ஏறுவதால் விவசாயி
கஷ்டப்படுகிறான். பிண்ணாக்கிற்கு பல இடங்களில் வரி இருப்பதால்
விவசாயி கஷ்டப்படுகிறான். டாக்டர் லோகநாதன் கமிட்டி, பிண்ணாக்கிற்கு
ரசாயன உரத்தைப் போலவே ஒருமுனை வரி இருக்கலாம் என்று சிபாரிசு
செய்திருக்கிறது. இது கிராம மக்களுக்குப் போக வேண்டியதால் பல
முறை விற்பனை வரியிலிருந்து நீக்கப்பட்டது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.
இந்த யோசனையை ஆட்சியாளர்களின் முன்னால் வைக்க விரும்புகிறேன்.
இது தவிர முக்கியமான விஷயத்தை சபையின் கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புகிறேன். கமிஷன் மண்டி என்று செல்லக்கூடிய
தாருக் கடைகளில் பலர் சாமான்களைக் கொண்டுவந்து வைத்துவிட்டுப்
போய்விடுவார்கள். நல்ல விலை வரும்போது சரக்கை விற்கலாம் என்று
வைத்துவிடுவார்கள். அதிகாரிகள் வந்து பார்க்கும்போது இதை
யெல்லாம் ஸ்டாக் என்று கணக்கு எடுத்துக் கொண்டு அதன் மேலும்
வரி போட்டுவிடுகிறார்கள். இந்தப் புகார்களில் ஓரளவு உண்மை இருக்கலாம்.
அல்லது மிகைப்படுத்தப்பட்டு பேசுகின்றவைகளாகவும் இருக்கலாம். இது
குறித்து கவனம் செலுத்த வேண்டிய கட்டாய அவசியம் இருக்கிறதென்
பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்த இன்னொரு முக்கியமான விஷயம் நான் குறிப்பிட விரும்புவது;
1966—ஆம் வருஷம் சென்னை உயர் நீதி மன்றத்திலே ரிட்டின் விளைவாகக்
கொடுக்கப்பட்ட தீர்ப்பு அரசாங்கத்திற்கு ஒரு சங்கடத்தை ஏற்படுத்திற்று.
இந்தத் திருத்தச் சட்டத்திற்கு முன்னால் இருந்த சட்டத்தின் 16-வது

விதியின்கீழ் பெஸ்ட் ஆப் ஜெட்ஜ்மெண்டு—உசிதப்படி வரி விதிக்கக் கூடிய உரிமை இருக்கிறது. அப்படி இருக்கிற விதிப்படி வரி விதித்திருக்கிறார்கள். ஆகையால் இது செல்லாது என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின்படி அரசாங்கத்திற்கு ஓர் நெருக்கடி ஏற்பட்டது. அதைத் தவிர்ப்பதற்காக 1966 ஆம் ஆண்டு 18 ஆவது ஆக்டை திருத்தச் சட்டமாக இங்கே கொண்டு வந்தார்கள். விதிக்கப்பட்ட வரி சில தீர்ப்புக்களின்படி பாதிக்கப்படுகிறபோது ரீவாலிடேஷன் ஆக்ட் அவசியமாகின்றது. மறுக்கவில்லை. ஆனால் அதன் விளைவாக நியாயமற்ற சில நிலைகள் தோன்றாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். இந்த ஒரு வேலிடேஷன் ஆக்டிங் பிரகாரம் 16-வது பிரிவிலே பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்டு செய்யக்கூடிய உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அப்படி செய்யப்பட்டிருந்தாலும் அது சட்டபூர்வமானது. அதைக் கேட்க உரிமை இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பார்க்கிறபோது சில சங்கடங்களை நாம் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும்.

(*a*) all acts, proceedings or things done or takan by the State Government or by any officer of the State Government or by any other authority in connection with the levy or collection of such, tax shall for all purposes, be deemed to be and to have always been, done or taken in accordance with law.

(*b*) No suit or other proceeding shall be maintained or continued in any court against the State Government or any person or authority whatsoever for the refund of any tax so paid, and

(c) no court shall enforce any decree or order directing the refund of any tax so paid.

என்று இருக்கிறது. இது வரி விதிக்கப்படாமல் தப்பிவிட்டதைக் கண்டு பிடித்து அஸஸ்மெண்ட் செய்து வரி போடக்கூடிய விஷயம். தப்பியதற்கு எது வேண்டுமானாலும் காரணமாக இருக்கலாம். (for any reason) அதிகாரியின் சுணக்கத்தால் இருந்தாலும் வியாபாரிகளின் சாமர்த்தியத்தால் இருந்தாலும் தப்பியது என்பதைப்பற்றி அதிகாரிகள் என்ன முடிவு சொன்னாலும் அதுவே தான் முடிவு என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதன்மீது எந்தவிதமான நீதி விசாரணைக்கும் இடம் இல்லாதபடி செய்யப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு அதிகாரி ஆர்பிடரியாக ஒரு முடிவை எடுத்துக் கொள்கிறபோது சங்கடமான நிலை தோன்றுகிறது. அதில் அதிகாரி கொஞ்சம் தவறிவிட்டாலும் வெறுப்பினால், அதிருப்தியினால், பழைய குரோதத்தினால் ஒருவரை வேண்டுமென்றே தொலைத்துக்கட்ட வேண்டுமென்றாலும் கட்டிவிடலாம். வியாபாரத்தில் இருந்து அடித்து மிரட்டி அவன் வாழ்வையே பாழபண்ணக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, அவர் போடக்கூடிய உத்திரவை செக் செய்தவற்கு வழி இருக்க வேண்டாமா என்பதை ஆட்சியாளர்கள் பரிசீலிக்க வேண்டும். இப்போதே பல இடங்களில் இருந்து புகார்கள் வந்து இருக்கின்றன. தனிப்பட்ட ஒரு விஷயத்தைக்கூட நான் அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டி இருந்தது. அவரும் அனுதாபத்துடன் கவனிப்பதாகக் கூறினார்கள். இது கட்டாயமாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம்.

சுருக்கமாகச் சொல்லும்போது அதிகமான வரி வரவேண்டியிருக்கிறது. பல்வேறு கட்டங்களில் வரிவிதிக்கப் படுவதனால் பொருள்களின் விலைகள் ஏறிப் போகின்றன. ஆனால் ஹோல்சேல் டீலர்கள் தப்பிக்கொள்ள வழிகள் இருக்கின்றன. இயல்பாக பெரிய வியாபாரிகளை விட்டுவிடுகின்ற போக்கும், நடத்தை, சிறிய வியாபாரிகளை மிரட்டுகின்ற பழக்கம், 'அமைப்பு

எல்லாம் இருக்கிறது. இதைத் தவிர்க்க, பெரிய வியாபாரிகள் தப்பிக் கொள்ளாதிருக்க ஒருமுனை வரி அமைப்பைக் கொண்டு வருவது சிறந்ததாக இருக்கும் என்று நம்புகிறேன். எந்த இடத்திலும் அதிகாரிகள் தன்னிச்சையாகப் போக இடமில்லாதிருக்க ஜுடீஷியல் செக் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆர். கண்ணன் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை முழுமனதுடன் ஆதரித்து எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். விற்பனை வரியில் செய்யப்பட்டுள்ள மாறுதல்களை வரவேற்கிறேன். பத்தாயிரத்துக்கு மேல் என்பதை 15 ஆயிரத்திற்கு மேல் என்று உயர்த்தியிருப்பதை வரவேற்கிறேன். இதை மனமுவந்து பாராட்ட வேண்டும். இதுவே முற்றிலும் நியாய மாகிவிடுமா என்றால் நியாயமில்லை. இந்த விற்பனைவரி எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது ? அன்றுள்ள நிலைக்கும் இன்றுள்ள நிலைக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று பார்த்தால் தெரியும். இருபது ஆண்டு காலமாக இந்த நாட்டை ஆண்டுவந்த காங்கிரஸ் கட்சி தவறான போக்கைக் கையாண்டு வந்திருக்கிறது. நாட்டில் உள்ள ஒரு வியாபாரியைக் கூட யோக்கியமான நிலைமையில் விட்டு வைக்கவில்லை. இன்றைக்கு எந்த வியாபாரியும் நியாயமாகக் கணக்கைக் காட்டி சேல்ஸ் டாக்ஸ் கட்டுவது இல்லை. இதில் ஒளிவு மறைவு கிடையாது. அதற்குக் காரணம் சென்ற ஆட்சிதான். இன்றுள்ள ஆட்சி இருக்கக்கூடிய நிலைமையை நன்கு உணர்ந்து வியாபாரிகளுடைய குறைகளைக் கேட்டு அவர்களுக்கு நன்மை தேடித்தர முன்வந்திருப்பதை வரவேற்கிறேன். மேலும் மேலும் அவர்களுடைய குறைகளைக் கண்டு அறிந்து அவற்றைப் போக்க முன் வருவார்கள் என்று நம்புகிறேன். திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு ஒரு சிறிய வியாபாரிக்குக் கூட 100 ரூபாய் விற்பனை ஆகலாம். 100 ரூபாய் விற்பனைக்கு அவன் இரண்டு ஆளை வேலைக்கு அமர்த்த வேண்டியிருக்கிறது. பத்து ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவனுக்கு லாபம் என்று என்ன கிடைக்கும்? ஆகவே தான் அவன் வரி கட்ட சிரமப்படுகிறான். இப்படி இருந்தால் அவன் எப்படிக் கட்டுவது ? ஆகவே, அவன் அயோக்கியத்தனம் பண்ண ஆரம்பிக்கிறான். பொதுவாக எனக்கொரு சந்தேகம் இருக்கிறது. வரி கட்டவேண்டிய அவசியம் எப்படி ஏற்படுகிறது என்றால் சாதாரணமாக ஒருவன் வியாபாரம் மூலம் வருமானமில்லாமல் இருக்கிறான் என்றால் வேலை செய்து வருமானம் தேடக்கூடியவன் இருக்கிறான் என்றால் அவனுக்கு ஒன்றுமில்லை, ஆனால், வியாபாரம் செய்யவேண்டுமென்று கடனை வாங்கி வியாபாரம் செய்ய வேண்டுமென்று நினைத்து ஏதாவது ஒரு தொழில் செய்யவேண்டுமென்று போனால் லைசென்ஸ் கேட்கிறது சர்க்கார். லைசென்ஸ் வாங்கிக் கொள்கிறோம், அடுத்ததாக விற்பனைவரி கேட்கிறார்கள், அதையும் கொடுக்கிறோம், பிறகு வருமான வரியைக் கேட்கிறார்கள், அதையும் கொடுக்கிறோம், ஆனால் சாதாரணமாக இருக்கின்ற மனிதனுக்கு இவையெல்லாம் இல்லை. வியாபாரம் என்று ஒருவன் செய்தால்தான் அவனுக்கு இவற்றையெல்லாம் சர்க்கார் விதிக்கிறது. அவனுக்கு வேறு ஒரு மனிதனுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறதோ அதுதான் இருக்கிறதே தவிர தனியாக எந்தவிதமான பாதுகாப்பும் அவனுக்குக் கிடைப்பதில்லை. விற்பனைவரி, வருமானவரி எல்லாம் கட்டினால்கூட சரியான பாதுகாப்பு வியாபாரிகளுக்குக் கிடையாது. பாதுகாப்பு இல்லாதவர்களிடம்தான் சர்க்கார் வரி வாங்குகிறதே தவிர, பாதுகாப்பதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்வதில்லை. வரி கொடுக்கின்ற வியாபாரிக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். வியாபாரி ஒருவன் கடைசியில் வியாபாரத்தில் கெட்டுவிட்டானென்றால் அவனுக்குப் பாதுகாப்பு கிடையாது. வியாபாரிகளுடைய விற்பனை வரி வருமான வரி, இவற்றைப் பற்றியெல்லாம் பொது மக்களிடையே பரப்புவதற்காக இதைப்பற்றி பிரசுரம் செய்தால் கூட நல்லது என்று நினைக்கிறேன். ஏனென்றால் சில வியாபாரிகள் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து வரியைக் குறைத்துக் கட்டுகிறார்கள். சில வியாபாரிகள்

நியாயமாகவே கட்டிக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றத்திலே இருக்கின்ற நாம் சட்டத்தைப் பாதுகாக்க வந்திருக்கிறவர்கள். சட்டம் நல்ல முறையில் இயங்க வேண்டும். மக்கள் அதன் பிரகாரம் நடக்க வேண்டும் என்ற விருப்பமுள்ளவர்கள். ஆகவே எல்லாவற்றைப் பற்றியும் சட்டமன்றத்திலே பேசுவதிலே தவறில்லை என்று நினைக்கிறேன். அப்படிப் பிரசுரம் செய்தால்தான் அதை அடுத்த வியாபாரியும் பார்ப்பான். அவன் என்ன நமக்கு மேலே வியாபாரம் செய்கிறான். ஆனால் வரியைக் குறைத்துக் கட்டுகிறானே என்று யோசித்துப் பார்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். சில வியாபாரிகள் அன்றாடம் செலவு செய்து விடுகிறார்கள், சிலர் அப்படிச் சிலவு செய்யாமல் ஒன்று இரண்டு ரூபாய்களை, பிற்காலத்தில் தன்னுடைய குழந்தைகள் கல்யாணத்திற்கு வேண்டுமென்று சேர்த்து வைத்தால்கூட சில அதிகாரிகள் வருகிறார்கள், கறுப்புப் பணம் என்று சொல்கிறார்கள். எப்படி கறுப்புப் பணமாகும் இது? அவனும் உழைத்துத் தானே சம்பாதிக்கிறான். இப்படிச் சேர்ப்பதைத் தவிர வேறு வகையில் சேர்ப்பதற்கு இடம் கொடுத்தால் அதில் நிர்வாகத்திலே இருக்கின்ற கோளாறைத் தவிர தனிப்பட்ட மனிதனுடைய குறை அல்ல, அவனைக் குறை சொல்வதில் பயனில்லை. காலணா கூட கையில் வைத்துக் கொள்ளாமல் முழுவதையும் சர்க்காருக்குக் கட்ட வேண்டுமென்றால் பிற்காலத்தில் அவன் என்ன பண்ண முடியும்? வியாபாரத்திலே இருக்கிறவர்களுக்குச் சர்க்கார் பாதுகாப்புக் கிடையாது. வியாபாரம் செய்தால் வரி கொடு என்று மட்டும் கேட்கிறது சர்க்கார். சமூகத்திலே வியாபாரிகளுக்கு நல்ல மரியாதை இல்லை, அந்த நிலை நீக்கப்பட்ட வேண்டும். அதற்கு சென்ற காலத்திலே இருந்த சர்க்கார் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவே இல்லை. இப்பொழுதாவது இந்த அரசாங்கம் நல்ல முறைகளில் வழிவகைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நியாயமாக விற்பனை வரி விதிக்கின்ற அளவு எப்படி இருக்க வேண்டுமென்றால் அளவு ஒரு லட்ச ரூபாயாக இருக்க வேண்டும். ஒரு பொருளின் விலை ஒரு ரூபாயாக இருந்தது முன்பு. இப்பொழுது அதே பொருளின் விலை 8, 9 ரூபாய் 10 ரூபாய் என்ற அளவுக்கு இருக்கிறது. முன்பு பத்தாயிரமாகஇருந்தது. இப்பொழுது குறைந்தது ஒரு லட்ச ரூபாயாகவாவது இருக்க வேண்டும். வருமான வரியைக் கணக்கிடும்பொழுது செலவிற்காக மூவாயிரத்திச் சில்லறை, நாலாயிரத்திச் சில்லறையைக் கழித்து மிச்சம் உள்ளதற்க்கு வரி கேட்டுவிடுகிறார்கள். ஆனால், விற்பனை வரியைப் பொறுத்த அளவிலே 15,000 என்று வைத்திருக்கிறார்கள், அதற்கு மேலே 5 ரூபாய் அதிகமாக அதாவது 15 ஆயிரத்துஐந்து என்றிருந்தாலும் கூட வரிகட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதனால் தான் கணக்கை 15 ஆயிரத்துக்குள்ளே காட்ட வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். வருமான வரிக்கு தரக்கூடிய சலுகையைபோல் விற்பனை வரிக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விற்பனை வரியை பொறுத்தவரையில் அதிகாரிகளுக்கு அதிகமான பவர்ஸ் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் சொல்கின்ற கணக்கை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொல்கின்றார்கள். அவர்களுக்கு இருக்கின்ற உரிமையை பயன்படுத்தி எவ்வளவு சத விகிதம் அவர்கள் வரி அதிகமாகப் போடலாம் என்று இருக்கிறதோ அந்த அளவிற்கு போட்டு விடுகிறார்கள். இதை எதிர்த்து உண்மையை நிருபிக்க வேண்டுமென்றால் அப்பலேட் கோர்ட் டிரிபியூனல் இவற்றிக்குச் சென்றால் 6, 7 ஆண்டுகளாகிறது. அப்பொழுது என்ன ஏற்பாடுகள் செய்கிறார்களோ அதையே தொடர்ந்து கொடுக்கக் கூடிய நிலைமை இருந்து வருகிறது. விதி முறைகளிலே சிக்கல்கள் இருக்கின்றன, அவற்றை கவனித்து வியாபாரிகள் எல்லாம் நியாயமாக நல்ல முறையில் வரி கட்டுவதற்கு வழிவகை செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் 100க்கு 99 பேர்கள் அயோக்கியத்தனம் செய்துக் கொண்டு இருக்கக் கூடிய நிலைமைதான் இருக்கும். யுத்த நேரத்திலே கூட வியாபாரிகளைப்பற்றி தவறாக இந்திய அரசினர் விளம்பரம் கொடுத்தார்கள். யுத்த நேரத்தின் போது வியாபாரிகளே உங்கள் பிள்ளைகள், சகோதரர்கள், யுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள், பதுக்கலிலே ஈடுபடாதீர்கள் என்று சொன்னார்கள் இப்படித்தான் சர்க்கார் வியாபாரிகளைக் கூட

மக்களிடத்திலே அறிமுகப்படுத்தக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, வியாபாரிகள் உண்மையாக நடந்துக் கொள்ள கூடிய வகையில் சர்க்கார் நல்ல முறையில் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உண்மையிலேயே இதற்கு முன்னால் இருந்தவர்களுக்கு நடைமுறைகள் தெரியாது. இதற்கு முன்னாலே அரசியலிலே வந்தவர்களும், ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்களும் பெரும் பெரும் கோடீசுவரர்களாக இருந்ததால் அவர்களுக்கு இந்தக் கஷ்டங்கள் தெரியாது. கல்வியை முடித்துவிட்டு நேரடியாக ஆட்சியில் வந்து விடுகிறார்கள், அல்லது அவர்களுடைய முன்னோர்கள் சம்பாதித்து வைத்ததை வைத்து அந்த மூலதனத்தின் மூலம் இங்கே வந்து உட்கார்ந்து விடுகிறார்கள். அவர்களுக்கு சிறிய வியாபாரிகளைப் பற்றியும் மத்திய தர வியாபாரிகளைப் பற்றியும் ஒன்றும் தெரியாது. இப்பொழுதுள்ள சர்க்கார் ஏழைகளிடத்திலும் சிறிய வியாபாரிகளிடத்திலும் மத்திய வியாபாரிகளிடத்திலும் அனுதாபம் உள்ளவர்கள். அவர்கள் இந்த நடைமுறை சிக்கல்களைப் போக்கி நியாயமாகவும், நேர்மையாகவும் வியாபாரம் நடத்த வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மானியக் கோரிக்கையை நான் மனப்பூர்வமாக ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ரா. கிருஷ்ணசாமிகவுண்டர்** : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மேல் எனக்குப் பேசக் கிடைத்த வாய்ப்புக்கு நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சாதாரணமாக ஆட்சியாளர் விதிக்கின்ற எந்த வரியுமே அடி மட்டத்திலே இருக்கின்றவர்கள் கொடுக்கின்ற நிலைதான் உண்டு என்ற அடிப்படையை நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். பெரிய வியாபாரிகளுக்குப் போடுகின்ற வரியோ அல்லது சிறிய வியாபாரிகளுக்குப் போடுகின்ற வரியோ எதுவாக இருந்தாலும் அடிமட்டத்தில் இருக்கின்றவர்கள்தான் கொடுக்கிறார்கள். வரி உயர உயர ஏய்ப்பும், அக்கிரமும் வளர்ந்து கொண்டே வரும் என்பதை எல்லோரும் எடுத்துப் பேசினார்கள். இந்த வரி ஏய்ப்புத் தடுக்கப்படுமானால் வருமானம் பல மடங்கு வரும் என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். இப்பொழுது நியாயமாக வியாபாரம் செய்ய முடியாத நிலைமைதான் இருக்கிறது. சிலர் அக்கிரமம் செய்வதால் வியாபாரிகள் எல்லோருமே அக்கிரமம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அக்கிரமம் செய்யாதவர்கள் போட்டி, போட முடியாத நிலைமைதான் இருக்கிறது. இந்த நிலைமையைக் கவனித்து ஆவனச் செய்ய வேண்டுமென்று பலரும் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதிலே விவசாயிகளுக்கு என்ன என்ன செய்ய வேண்டுமென்பதைச் சொல்லிக் கொண்டு நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளலாம் என நினைக்கிறேன். டிராக்டர் விவசாயத்திற்குத் தேவைப்படும்பொழுது அதற்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அதேபோல் மின்சாரக் கருவிகளும் விவசாயத்திற்குத் தேவையாக இருக்கின்ற காரணத்தால அவற்றிற்கும் விலக்கு விற்பனை வரியிலிருந்து கொடுக்க வேண்டும் என்பதன் அவசியத்தை விவசாயிகளிடமிருந்து நாம் தானியங்களை அசலுக்கும் குறைந்த விலையில்தான் வாங்கி வருகிறோம் என்பதை நினைவில் வைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாதாரணமாக, மின்சார மோட்டார்களை எடுத்துக் கொண்டால் மோட்டார் நண்
களுக்குப் போடுகின்ற பெரிய வரி மாத்திரமல்ல, அதோடு தொடர்பு பகல்
கொண்ட பலவிதமான கருவிகளுக்கும் வரி போடுகின்ற முறையால் 12-00
கடைசியாக அதன் விலையைப் பார்க்கும்போது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 700 ரூபாயாக இருந்த மோட்டார் இன்று 1,500 ரூபாய் அளவுக்கு ஏறிவிட்டிருக்கிறது. இந்த நிலையில் மோட்டார்களின் விலை உயர்ந்து கொண்டே போவதைத் தடுத்து, விவசாயிகளுக்கு டிராக்டர்கள் சப்ளை செய்வதைப் போல இந்த எலக்ட்ரிக் மோட்டார்களையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செக் போஸ்டுகள்—தடுப்புக் காவல் நிலையங்களைப் பொருத்தவரை நிச்சயமாக நல்ல மாறுதல் செய்யவேண்டும். இதிலே குடியானவர்கள் படுகின்ற அவஸ்தைக்கு உதாரணமாக என்னுடைய சொந்த

அனுபவம் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு நான் மஞ்சள் வேளாண்மை செய்திருந்தேன். மதுரைக்கு அனுப்பினேன். மதுரைக்கு அனுப்பும் போது கிராம அதிகாரியிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் பெற்று—எந்த வியாபாரிக்கு அனுப்புகிறேனோ அந்த வியாபாரியின் விற்பனை வரி நம்பர் இவற்றை யெல்லாம் குறிப்பிட்டு எழுதி முறைப்படி அனுப்பினேன். போஸ்ட் அதிகாரிகள் அதை நம்ப முடியாது என்று சொல்லி மறுபடியும் செக் விற்பனை வரி வாங்கிக் கொண்டுதான் லாரியை அனுப்பினார்கள். இடை வெளியில் லாரிக்காரர் பணம் கிடைக்காமல் தவித்திருக்கிறார். அதை அறிந்து நான் கோவைக்கும் மதுரைக்கும் இடையில் உள்ள இணைத்துக்கடவில் உள்ள செக் போஸ்ட்டு அதிகாரியைப் பார்த்து "எந்த முறையில் நாங்கள் நடந்து கொள்ளவேண்டும்?" என்று கேட்டேன். அவர், "எந்த வியாபாரிக்கு நீங்கள் அனுப்புகிறீர்களோ அவரிடமிருந்து லெட்டர் வேண்டும்" என்றார்கள். நான் இன்னொரு முறை அனுப்புகிறபோது அந்த வியாபாரி சொன்னது போல் யாருக்கு அனுப்புகின்றேனோ அவரிடமிருந்து லெட்டரும் வாங்கி, அதோடு கிராம அதிகாரியின் அத்தாட்சியையும் பெற்று அனுப்பினேன். அந்தத் தடவை அங்கே வேறு ஒரு அதிகாரி இருநதார். அவர் அதைத் தடுத்து நிறுத்தி விட்டார். வரியைக் கட்டினால்தான போக முடியும் என்று சொல்லிவிட்டார். இந்தத் முறையில் குடியானவர்கள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். திரும்பத் திரும்ப வரியைக் கட்டி அதிகமாகக் கட்டிய பணத்தை உடனடியாகத் திரும்பப் பெற முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இந்த தடுப்புக் காவல் நிலையங்கள் குடியிருக்கும் இடத்திற்கும் விவசாயம் செய்யும் இடத் திற்கும் மத்தியில் மாட்டிக் கொண்டால் அந்த விவசாயிகள் படும் அல்லல்கள் கொஞ்சநஞ்சமல்ல. அவர்கள் விளைவித்த பொருள்களை வீட்டுக்கு எடுத்துச் செல்ல முடியாமல் தவிக்கிறார்கள். இப்படி பல துறையிலே உள்ள அல்லல்களைப் போக்க நிச்சயமாக இந்த அரசு வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

அம்மோனியம் சல்பேட் போன்ற உரவகைகளை அரசாங்கம் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக வியாபாரம் செய்கிறது. அரசாங்கக் கணக்குப்படியே சென்ற தடவை 45 கோடி ரூபாய் லாபம் பெற்றிருக்கி றார்கள். விவசாயிகளுக்கு விற்றதிலிருந்து அந்த லாபத்தை அடைந்திருக்கிறார்கள். விவசாயிகள் உபயோகிக்கின்ற ஒவ்வொரு பொருளுக்கும் விற்பனை வரியைக் குறைக்க வேண்டும். உற்பத்தி செய்கின்ற மகசூலை குறைந்த விலையில் கொள்முதல் செய்வதால் வரி விலக்குக் கொடுக்க வேண்டும். இவ்வாறெல்லாம் காரியங்கள் செய்து விவசாயிகளுக்கு விமோசனம் பெற வழி வகுத்துக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த விற்பனை வரி மசோதாவின் மீதான வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த விற்பனை வரி மசோதா 1959-ம் ஆண்டிலே எங்களு டைய கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர் களால் கொண்டு வரப்பட்டபோது "இந்த விற்பனை வரிச் சட்டத்திலே மேற்கொண்டு அதிகமான வரிகளை விதிப்பதற்கு எந்தக் காலத்திலும் சர்க்கார் முன் வராது ; கூடுமான வரையில் போடப்பட்டிருக்கும் வரிகளைக் குறைக்க முயலுவோம்" என்ற உறுதிமொழியைக் கொடுத்தார் கள். இன்று சர்க்கார் மாறினாலும் முந்தைய சர்க்கார் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவது கடமை என்ற முறையிலே இன்றைய தினம் உள்ள திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் விற்பனை வரி திருத்த மசோதாவைத் திரும்பப் பெற வேண்டுமென்று இரண்டாவது முறையாக வலியுறுத்துகிறேன்.

65010

இதன்மீது பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் [illegible] கட்சியிலே இருக்கின்ற முறையிலே ஆதரிக்கின்ற அளவிலே பேசினாலும்கூட ஏறக் குறைய எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் பேசிய அந்த கருத்துக்களைத் தான் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். குறிப்பாக, கடந்த 20 ஆண்டுகளாக இருந்த காங்கிரஸ் சர்க்கார் வர்த்தகர்களை அயோக்கியர்களாக மாற்றிவிட்டது என்று ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் குறிப்பிட்டார்கள். அவ்வாறு அவர்கள் பேசியபோது இந்தச் சட்டத்திலே அவர்களை யோக்கியர்களாக மாற்றுவதற்கு வழிவகை என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி கூறுவார் என்று பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் அவர் பேச்சை முடிக்கின்றபோது அப்படி வழிவகைகள் செய்யப்படவில்லை என்பதை ஒப்புக் கொண்டு இனியாவது செய்ய வேண்டுமென்று அரசாங்கத்திற்கு அறிவுரை கூறியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

D
V211_31
N67

இதைப் பொறுத்தவரையிலே சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் 3 சதவீதம் ஆக இருக்கிறது; நம்முடைய மாநிலத்திலே $2\frac{1}{2}$ சதவீதமாக இருக்கிறது. ஆகவே தான் $\frac{1}{2}$ சதவீதம் கூட்டி 3 சதவீதமாக மாற்றி யிருக்கிறோம் என்று அரசாங்கத் தரப்பிலே இருந்து வாதிக்கப்படுகிறது. இதைப்பற்றி ஒரே ஒரு விளக்கத்தை மட்டும் கூற விரும்புகிறேன். சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் 3 சதவீதம் என்று இருந்தாலும்கூட அந்தச் சட்டபடி நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை இங்கு வரி $2\frac{1}{2}$ சதவீதமாக இருக்குமானால் அந்தக் குறைந்த விகிதத்தில்தான் வசூல் செய்யமுடியும். அந்த நிலை இருப்பதை மறந்து விட்டு சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் 3 சதவீதமாக இருக்கிறது என்று சொல்லி அந்த அளவுக்கு இருப்பதால் நாமும் 3 சதவீதமாக உயர்த்தியாக வேண்டுமென்று சொல்லுவது ஏற்றுக் கொண்டிருக்கிற பொறுப்புக்கும் கடமைக்கும் மாறாகச் சொல்லுவதாகத்தான் ஆகும் என்பதைத் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

இந்த விற்பனை வரிச் சட்டத்தைப் பொருத்தவரையிலே பலதரப் பட்ட அதிகாரிகளிடையே அப்பீல் செய்வதிலே உள்ள இடர்பாடுகளை நீக்குவ தற்கு வழிவகைகள், முறைகள் இந்தச் சட்டத்திலே காணோம். அத்தகைய வழிவகைகளைக் கொண்டு வர இன்றைய தினம் உள்ள சர்க்கார் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. அதிகாரிகளால் வியாபாரிகள் துன்புறுத்தப்படுகிறார்கள். முன்பு அவர்கள் எதிர்க் கட்சியாக இருந்த நேரத்திலே இதைப் பற்றிக் கேலியும், கிண்டலுமாகப் பேசியவர்கள் பரிதாபத்திற்குரிய முறையிலே காங்கிரஸ்காரர்கள் வேறு என்ன வழி முறைகளைக் கூறுகிறார்கள் என்று கேட்கிறார்கள். அன்றையதினம் எதிர்க் கட்சியில் இருந்து எதிர்த்துக் கொண்டிருந்தவர்கள் தாங்கள் ஆளும் பொறுப்பிற்கு வந்த பிறகு தங்களுடைய மனத்திலே உள்ள திருத்தங்களைப் பகிரங்கமாகக் கொண்டு வராமல் எங்களையே எதிர்பார்த்துக் கேட்டுக்கொண்டிருக்கிற நிலையைக் காண்கிறோம்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தைப் பொருத்தவரையிலே கம்பவுண்டிங் சிஸ்டம் என்பது வியாபாரிகளுக்கு ஒரு சலுகையாகக் கொடுத்திருப்பது போல் காணப்பட்டாலும் கூட அதனால் வியாபாரிகளுக்கோ அல்லது பொது மக்களுக்கோ எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை. அந்த கம்பவுண்டிங் சிஸ்டம் மூலமாக ரூ. 120-ல் இருந்து ரூ. 180 ஆக உயர்த்தப் பட்டிருக்கிறது. கடந்த காலத்தில் காங்கிரஸ் சர்க்கார் ரூ. 120 ரேட்டை உயர்த்தாமலேயே பத்தாயிரத்திலிருந்து பதினைந்தாயிரத்திற்குக் கம்பவுண்டிங் தொகையை உயர்த்தியது. கம்பவுண்டிங் அமௌண்டை எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்தலாம். அதே சமயத்தில் கம்பவுண்டிங் ரேட்டை தகுந்த அளவு உயர்த்தினால் பொதுமக்களும், மத்தியதர வகுப்பினரும் பெரும் சங்கடத்திற்கு ஆளாகிறார்கள். வரிச் சுமை அதிகரிக்கிறது.

[திரு. க. இராமமூர்த்தி] [1967 ஜூன் 28

இருந்தாலும், இன்றுள்ள நிலையில் கட்டாயத்தின்பேரில்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள் என்று நம்புகிறேன். இந்தச் சட்டம் மூலம் கிடைக்கும் வருவாய்ப் பற்றி குறிப்பிடும்போது அரசுக்கு இந்தச் சட்டம் மூலம், அதிகப்படுத்தப்பட்ட விற்பனை வரி மூலம் ஏறத்தாழ 3½ கோடி ரூபாய் வருமானம் வரும் என்று சொன்னார்கள். இந்த 3½ கோடி ரூபாய் என்று சொல்லும்போது இது பொதுமக்கள், நடுத்தர மக்கள் மீது சுமத்தப்படுகிற பெரும் பளு என்று நினைத்துப் பார்க்கும்போது இந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் நடுங்குகிறார்கள். இன்றைய தினம் மக்களை எதிர்நோக்கி 3½ கோடி ரூபாய் விற்பனை வரி மூலம் பளு சுமத்தப்பட இருக்கிறது என்று நினைத்தால் பயமாக இருக்கிறது. ஆகவே, அந்த நிலையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து பலமுனை வரிவிதிப்புத் திட்டத்தின் கீழ் ½ சதவீதம் தான் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று அரசாங்கத் தரப்பில் இருந்து சொன்னாலும் மொத்தத்தில் கிட்டத்தட்ட 2 சதவீதம் அளவிற்கு உயர்த்தப்படும் நிலைதான் வரும். பண்டங்களை உற்பத்தி செய்கிறவர்கள் என்ற அளவில் அவர்கள் ½ சதவீதம், அவர்களிடம் இருந்து வாங்கி மொத்த வியாபாரம் செய்கிறவர்களுக்கு ½ சதவீதம், அவர்களிடம் இருந்து வாங்கி விற்கும் சில்லறை வியாபாரிகளுக்கு ½ சதவீதம், அவர்களிடமிருந்து வாங்கி சாப்பிடுகிறவர்களுக்கு ½ சதவீதமும் ஆக 2 சதவீதம் உயர்த்தப்படும் நிலை இந்தச் சட்டம் மூலம் ஏற்படுகிறது. ½ சதவீதம் என்ற வெல்வெட் கவரினால் போர்த்தப்பட்டு கொண்டுவரப்பட்டாலும் அந்த வெல்வெட் உரையை நீக்கிவிட்டுப் பார்த்தால் உள்ளேயிருப்பது 2 சதவீதமே தவிர ½ சதவீதமல்ல என்பது தெரியவரும். சில பொருள்களின் மீதுள்ள வரிவிதிப்புப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என் முதல் பேச்சில்கூட நமக்குத் தோல் வியாபாரத்தில் இருக்கிற சிறப்பான இடததை இந்தச் சட்டம் அழித்து விடும் என்று தெளிவாக வற்புறுத்திக் கூறினேன். அதற்கு அன்றையதினம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருந்தாலும்கூட மறுபடியும் அதைப்பற்றி வற்புறுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். பிற மாநிலங்களுக்கு ரா ஹைட்ஸ் அண்ட் ஸ்கின்ஸ், பதனிடப்படாத தோலை வாங்கி ஃபினிஷ்ட் கூட்ஸாக மாற்றி பிற மாநிலங்களுக்கும், மற்ற வெளி நாடுகளுக்கும்கூட ஏற்றுமதி செய்கிற 25 கோடி ரூபாய் அளவில் உள்ள வியாபாரம் நம் மாநிலத்தில் நடந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் தயவு செய்து இந்தத் தொழிலை நசுக்கி விடவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்த வரிவிதிப்பு மூலம் நம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகிற மற்றப் பொருள்களின் மீதான வரி கூடுமானால் மற்ற மாநிலங்களோடு நாம் நடத்தக்கூடிய வியாபாரம் நசித்துவிடும். அதன் காரணமாக இம் மாநிலத்தில் பொருளாதாரத் தேக்க நிலை ஏற்படுவதோடு, தேக்கமும் ஏற்படுமென்று நான் அரசை எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று நம் அரசாங்கத்தின் வரி விதிப்பு முறை, அமைப்பு இவை வியாபாரிகளுக்கும் சரி அல்லது நடுத்தர மக்களுக்கும் சரி நன்மை செய்வதாகயில்லை என்று கூறிக் கொள்வதோடு இந்தச் சட்டம் மீது எங்களுக்கு மட்டுமல்ல எதிர்ப்பு, ஆளும் கட்சியில் உள்ளவர்கள் கூட எதிர்க்கிறார்கள். இந்த நிலையை உத்தேசித்து அமைச்சர் அவர்கள் மனமுவந்து இநத மசோதாவை நிறைவேற்றமல் இந்த மசோதாவைக் கைவிடும்படி மிகத் தாழ்மையோடு பொது மக்கள் சார்பிலும் எங்கள் கட்சி சார்பிலும் கேட்டுக்கொணடு இந்த வெட்டுப் பிரேரணையை வற்புறுத்த விரும்புகிறேன். வணக்கம்.

திரு வி. கே. கோதண்டராமன் : சார், இந்த வருவாய்த் துறையைப் பற்றி பல அங்கத்தினர்கள் பலவிதத்தில் வர்ணித்திருக்கிறார்கள். குறிப்பாக, " காமதேவதை " என்று இதைக் கருதமுடியாது. இன்றைய நிலையில் இது " காமதேவதை " அல்ல " யம தேவதை " என்று நினைக்கக் கூடிய நிலையில்தான் நாம் இருக்கிறோம். இது ஆரம்பிக்கப்பட்ட நிலை, என்ன ? இன்றுள்ள நிலை என்ன ? இன்று இது பாமர மக்களை வாட்டி வதைக்கக் கூடிய நிலைதான் இருக்கிறது அந்தளவிற்கு கடந்த இருபது ஆண்டுகளாக அது உருவெடுத்திருக்கிறது. ஆகவே, என் பெயரால் மூன்று வெட்டுப்பிரேரணைகள் கொடுத்திருக்கிறேன். அதில் குறிப்பிட்டிருப்பதெல்லாம் குறிப்பாக உணவுப்பொருள் மீது எந்தவிதமான வரியும் இருக்கக் கூடாது என்பதுதான். இதில் அரிசி, ராகி, மற்ற நன்செய், புன்செய் சம்பந்தப்பட்ட உணவுப்பொருள்களுக்கு வரியில்லை என்பது தெரிந்த விஷயம். ஆனால் இன்று பாமர மக்களால் அத்தியாவசியமாக உபயோகிக்கப்படுத்தக் கூடிய எண்ணெயின் விலையைக் குறைக்கப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். இப்போது எண்ணெய் வித்துக்களின் மீது 1½ சதவீதம் வரி போடப்பட்டிருக்கிறது. அது இருக்கக் கூடாது என்பதுதான் என் நோக்கம்.

1967 ஜூன் 28] [திரு. வி. கே. கோதண்டராமன்]

அதுமட்டுமல்ல. வீட் ப்ராடக்ட்ஸ், கோதுமையினால் உற்பத்தி செய்யக் கூடிய பிஸ்கட்ஸ், ரொட்டி, சொஜ்ஜி, மைதா இவைகளும் உணவுப் பொருள்கள்தான். அவைகளும் அத்தியாவசியப் பொருள்கள்தான். அவற்றின்மீதும் கட்டுபபாடு இருக்கக் கூடாது. ஆகவே உணவுப் பொருள்களின்மீது கண்டிப்பாக எந்தவிதமான வரியும் இருக்கக்கூடாது. அப்போதுதான் அவற்றைக் கட்டுப்படுத்த முடியும். நாம் நினைப்பது போல் முழுக்க முழுக்க அதைக் கட்டுப்படுத்தி விட முடியும் என்று சொல்லவில்லை. இன்று வெல்லத்தின் மீது வரி இல்லாத ஒரு நிலை இருக்கிறது. அது எப்படி அத்தியாவசியப் பொருள் என்று கருதப் படுகிறதோ அதேபோன்று இந்தப் பொருள்களின் மீது வரிவிதிப்பு இருக்கக் கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன.

அழுகும் பொருள்களுககு விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. வரவேற்கிறோம். அதிலும் குறிப்பாக மீன் அழுகும் பொருளில் ஒன்று. நம் நாட்டில் உபயோகிப்படுத்தக்கூடிய மீனுக்கு வரி விலக்கு இருக்கிறது. ஆனால் இரா மீன் இங்கிருந்து கொச்சிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அங்கிருந்து அமெரிக்கா போகிறது. 100 இரா ரூ. 150 வரை விற்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே, அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு வெளிநாடுகளுக்குச் செல்கிற மீனாக இருந்தாலும் எதுவாகயிருந்தாலும், ஐஸில் போட்டு பக்குவப்படுத்தப்பட்டு மாதக்கணக்கில் கெட்டுப் போகாமல் கொள்ளை லாபம் கிடைக்கும் அளவிற்கு அவை இருக்கிறது. அதன் மீது என்ன வரி போடுவது என்பது சிந்திக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

இன்று கடைகளுக்குப் போய் ஒரு பொருள் வாங்கவேண்டுமென்று சொன்னால் ரசீது வேண்டுமா, வேண்டாமா என்று கேட்கிறார்கள். வேண்டாமென்றால் டாக்ஸ் போடுவதில்லை, வேண்டுமென்றால் போடக் கூடிய அளவிற்கு நிலை இருக்கிறது. நான் இதைக் குறிப்பிட காரணம் சர்க்காருக்கு வரக்கூடிய வருவாய் எல்லாம் பாதிக்கப்படக் கூடிய அளவில் இருக்கிறது. இதில் சரியான முறையிலே செக்-அப் இருக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன. தமாஷா வரி சம்பந்தமாக எனக்கு முன் பேசிய விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். 100 பேர்களில் 20 பேர்கள் டிக்கட் வைத்திருக்கிறார்கள். 80 பேர் டிக்கட்கள் வைத்திருப்பதில்லை என்றார்கள். இது சர்வசாதாரண விஷயம். டிக்கட்டுகளில் முத்திரை குத்தியிருப்பதைப் பார்த்தால் மை இருக்கிறதா, கோபுரம் இருக்கிறதா, ஸீல் இருக்கிறதா என்று தெரியாமல் இருக்கிறது. பலர் ஸீல் செய்து வைத்துக் கொள்வதாகக் கேள்விப்படுகிறோம். ஆகவே இதில் அமைச்சர் அவர்கள் முழு கவனத்தையும் செலுத்தவேண்டும். வெள்ளைக்காரன் இருந்த காலத்தில் டிக்கட்டுகளில் ஸ்டாம்பு ஒட்டுவார்கள். அந்த முறை மைசூர் ராஜ்யத்தில் இருக்கிறது என்று நினைக்கிறேன். 20 ஆண்டுகளாக அந்த முறை இங்கில்லை என்று தெரிகிறது.

ஸ்டாம்பை சர்க்காரிடமிருந்து வாங்கி ஒட்ட வேண்டும். ரசீது பிரிண்ட் செய்வதில், சர்க்கார் பிரிண்ட் செய்து அவர்களுக்கு விநியோகம் செய்வது அல்லது அவர்கள் பிரிண்ட் செய்வதாக இருந்தால் சம்பந்தப்பட்ட சர்க்கார் அலுவலகத்தில் வைத்து அப்போதைக்கப்போது தேவையான அளவிற்குக் கொடுக்க வேண்டும். அது மாத்திரமல்ல. மாலை நேரங்களில் சினிமா நடத்துவார்கள். அதெல்லாம் கணக்கிலேயே வருவதில்லை பல இடங்களில். இதையெல்லாம் செக் செய்யவேண்டும். அந்தந்தப் பிரதேசத்தில் இருக்கிற அதிகாரிகளே செக் செய்ய வேண்டும் என்று அதிகாரம் கொடுத்திருப்பதால், வருஷத்தில் 365 நாட்களில் குறைந்தது 100 நாட்கள் அந்த அதிகாரிகள் அந்த நிதி, இந்த நிதி என்று ஏதாவது வசூல் செய்யும் நிலைமை இருப்பதால், அவர்களின் தயவு தேவையாக இருக்கிறது. அதோடு அந்த அதிகாரிகள் சினிமாவுக்கும் போக வேண்டும் குடும்பத்தோடு. இப்படி தயவு தாட்சணிய அடிப்படையில் இதெல்லாம் சரிவர நடப்பதில்லை. இதற்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு ஸ்பெஷல் ஸ்க்வாட் போட்டு, திடீர்-திடீரென்று செக் செய்யும்படியான முறை இருப்பதுதான் மிகவும் நல்லது என்பதை இந்த நேரத்தில் கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு சர்க்கரை மீது, ஜவுளிகள் மீது, தீப்பெட்டி மீது, புகையிலை மீது, புகையிலையிலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய பீடி சிகரெட் மீது, மத்திய சர்க்கார் எக்ஸைஸ் ட்யூட்டி போட்டு விட்டார்கள். மாகாண சர்க்காருக்கு ஏதாவது பங்கு உண்டா என்றால், எனக்கு தெரிந்த வரையில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையினால் கண்டிப்பாக, மத்திய சர்க்கார் குறிப்பிட்ட பொருள்கள் மீது போட்டிருக்கக் கூடிய அந்த வரிகளிலிருந்து நமது மாநில சர்க்காருக்குப் பங்கு கொடுத்தாக வேண்டும். அதற்காக மத்திய சர்க்காரை வலியுறுத்தி உரிய பங்கை வாங்குவதற்கான முயற்சியிலே ஈடுபட்டாக வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

தீப்பெட்டியைப் பொறுத்த வரையிலும், ஏ, பி, ஸி, டி என்று நான்கு விதமாகத் தரம் பிரித்திருக்கிறார்கள். குறிப்பிட்ட குடிசைத் தொழில் சம்பந்தப்பட்ட தொழில் "டி"—யும், "ஸி"—யும். அதற்கு ஏற்கனவே சில ரிபேட்டுகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு உள்ள நிலைமை என்ன என்றால், சாத்தூர், சிவகாசி பகுதியில் கூட்டுறவுத் தீப்பெட்டித் தொழில் என்று பெயர் வைத்து, முழுக்க முழுக்க சலுகை காட்டும் அளவுக்குத் தள்ளுபடிச் செய்து மற்ற இடங்களில் இருக்கிறவர்களுக்கு அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு, அவர்களைப் பாதிக்கும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். குடிசைத் தொழில் என்று சொல்லக்கூடிய பெயரில் இருக்கக்கூடிய "டி" "ஸி" போன்ற பிரிவுகள் ஒரே விதமாக இருக்கக்கூடிய தன்மையில் இருக்க வேண்டும். அதற்குத் தகுந்தாற்போல ரிபேட் கொடுப்பதோ, சர்க்கார் எந்தெந்த சலுகைகளைக் காட்ட வேண்டுமோ, அப்படிக் காட்டுகிற முறையில் இருந்தால்தான் அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களைப் பாதிக்காத தன்மையில், அந்தத் தொழில் பாதிக்காத தன்மையில் இருக்க முடியும் என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று இன்றைக்கு உப்புக்கு முழுக்க முழுக்க வரி கிடையாது—வரவேற்க வேண்டியதுதான்—எல்லா மக்களும் உபயோகிக்கக்கூடிய அத்தியாவசியப் பொருள் உப்பு. ஆனால், மத்திய சர்க்கார் இன்றைக்கு ஸினியரேஜ் வரி என்ற பெயரால் ஒரு வரி போட்டு வசூல் செய்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் தாங்கத்ரா கெமிக்கல் தொழிற்சாலையில் சாதாரண உப்பை உபயோகப்படுத்திப் பல ரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்து அவைகள் கொள்ளை லாபத்திற்கு விற்பனை செய்யப்படுகிறது.

விலை உயர்ந்த ரசாயனப் பொருள்கள் தயாரிப்பதற்கு உபயோகப்படுத்தும் உப்புக்குத் தாராளமாக வரி போடலாம் என்பது என்னுடைய கருத்து. எல்லா மக்களும் சாப்பிடுவதற்கு உபயோகப்படுத்தும் உப்புக்குக் கண்டிப்பாக வரி போடக்கூடாது. ரசாயனப் பொருள்கள் உற்பத்தி செய்யக்கூடிய முறையில் உபயோகப்படுத்தும் உப்புக்கு வரி போடுவதில் கண்டிப்பாக கவனம் செலுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

சர்க்கரை விலைகளை எடுத்துக்கொண்டால், இன்றைக்குச் சர்க்கரை எங்கே கிடைக்கிறது? கண்ட்ரோல் ரேட் ரூ. 1·52. இன்றைக்கு உள்ள நிலைமை என்ன என்றால் ரூ. 3·75, ரூ. 4·00, ரூ. 4·50 வரையில் விற்கப்படுகிறது. அதற்குக் காரணம் உண்டு. நாம் எவ்வளவோ நிதி திரட்டுகிறோம். 100 ரூபாய் நிதி கொடுத்தால் ஒரு மூட்டை சர்க்கரைக்குப் பர்மிட். கண்ட்ரோல் ரேட்டில் 150 ரூபாய்க்கு வாங்கி பளாக்கிலே 300 ரூபாய்க்கு விற்கிறார்கள். 100 ரூபாய் கொடுத்ததிற்கு 50 ரூபாய் வெகுமானம். 150 ரூபாய்க்கு வாங்கி நிதியாகக்கொடுத்த தொகையையும் எடுத்துக்கொண்டு அதற்கும் மேலே 50 ரூபாய் ஆதாயம். அந்த அளவுக்குச் சுலபமாக அதிகாரிகள் நிதியை வசூல் செய்யும் முறையை வைத்திருப்பதால், பொது மக்களுக்குக் குறிப்பிட்ட ரேட்டிலே கூடக் கிடைக்காமல், கள்ள மார்க்கெட்டில் கூடக்கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அப்பேர்ப்பட்ட தொழிலில் இன்றைக்கு எந்த அளவுக்கு ஆதாயம் இருக்கிறது? விவசாயிகளிடத்திலிருந்து கரும்பை குறைந்த விலைக்கு வாங்குகிறார்கள். விவசாயிகள் உபயோகிக்கக்கூடிய உரங்களோ, கலப்பைகளோ மற்ற பொருள்களோ அதிகப்படியான விலையாக இருந்தாலும், விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்குகிறார்கள். அதனால் சர்க்கரை ஆலைகளுக்கு ஆதாயம் இருக்கிறது. ஆகையால் என்ன சொல்கிறேன் என்றால், பர்ச்சேஸ் டாக்ஸ் என்று கரும்பின் பேரில் போட்டிருக்கிறார்கள். ஆலை உரிமையாளர்கள் கொடுக்க வேண்டிய வரி அது. கரும்புக்கான பர்ச்சேஸ் டாக்ஸை ஓரளவுக்கு உயர்த்திக் கொள்ளுங்கள். அந்த முறையில் அதிகமான வருமானத்தைப் பார்க்கலாமே தவிர, உணவுப் பொருள்கள், மக்களுக்குத் தேவையாக இருக்கக் கூடிய அத்தனையையும் கண்டிப்பாக அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி அதையெல்லாம் தள்ளுபடி செய்யும் அளவுக்குச் செய்வதன் மூலமாக அமைச்சர் அவர்களுக்கு நல்ல பெயர் கிடைக்கும். அவர்கள் சொன்னதுபோல எண்ணெய் மாத்திரமல்லாமல் எந்த உணவுப் பொருளாக இருந்தாலும் விலையைக் குறைந்த அளவுக்குக் கொண்டு வந்து விற்பனை செய்யும் அளவுக்கு ஏற்படுத்த முடியும் என்று அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, உணவுப் பொருள்கள் மீது, குறிப்பாக ஆயில் ஸீட்ஸ் மீதும், வீட் ப்ராடக்ஸ் மீதும் அத்தியாவசியப் பொருள்கள் எதுவாக இருந்தாலும் அவைகளின் மீதும் வரி இருக்கக் கூடாது என்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. மு. க. சிவசாமி: தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரி மானியத்தின் மீது பேசுவதற்கு முன்னால், இந்த மானியத்தின் மீது பேசிய பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. ராமமூர்த்தி அவர்கள் இந்த மசோதாவை வாபஸ் வாங்கவேண்டுமென்று கூறினார்கள். அவர் இந்தச் சபையினுடைய நடவடிக்கையைச் சரியாக கவனித்தாரோ என்னவோ தெரியவில்லை. இந்த விற்பனை வரித் திருத்த மசோதா நிறைவேறி நாட்கள் நான்கு ஆகியதற்குப் பின்னால்—வாக்கெடுப்புக் கூட நடந்தது—திருத்த மசோதாவை வாபஸ் வாங்க வேண்டுமென்று பேசியதில் பொருத்தம் இல்லை. அர்த்தமும் இல்லை என்று சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மசோதா என்று கூறிய நேரத்தில், நான் சட்ட மன்ற வார்த்தையைத்தான் உபயோகப்படுத்தினேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ச. சிவசாமி : அடுத்தபடியாக இந்த மானியத்தின் மீது ஒருசில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பிரதான எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசும்போது சில பொருள்கள் மீது ½ சதவிகிதம் வரியை உயர்த்தியதற்காக அகவிலையே உயர்ந்துவிட்டது என்று சபையிலே பேசினார்கள். அதே நேரத்தில் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மத்திய சர்க்கார் பட்ஜெட்டில் தினசரி உபயோகிக்கின்ற பொருள் மீது சென்ட்ரல் எக்ஸைஸ் ட்யூட்டி பல சதவீதம் கூட்டியிருப்பதை அவர்கள் மறந்து ½ சதவிகிதம் கூட்டியதன் மூலம் நாட்டிலுள்ள அகவிலைகள் கூடிவிடும் என்பதில் பொருள் இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(திரு. வி. கே. கோதண்டராமன் தலைமை).

சிறு வியாபாரிகளுக்கு 15,000 ரூபாய் வரையில் வரி விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. இதன் மூலம் ஏறக்குறைய 10,000 வியாபாரிகளுக்கு நன்மை கிடைத்தாலுங்கூட 15,000 ஆக இருப்பதை 20,000-ஆக ஆக்கினால் இன்றுள்ள விலைவாசி உயர்வில் வியாபாரப் பெருங்குடி மக்களை இந்த அரசு முழுக்க முழுக்கத் திருப்திப்படுத்தியதாக ஆகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். 15,000 லிமிட்டை 20,000 ஆக்கும்போது சர்க்கார் வருமானம் குறையுமே என்று இந்த அரசு எண்ணுமேயானால் அதற்கும்
30 பி. ப. ஒருசில யோசனைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வியாபாரிகளாக விற்பனை வரி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளாத வியாபாரிகள் வெளி மாநிலங்களிலிருந்து உணவுப் பொருள்கள், நவ தானியங்களை வாகன் வாகனாக வரவழைக்கிறார்கள். வாகன் வாகனாக வரவழைக்கப்படு கிற அந்தப் பொருள்கள் வாங்குகின்றவர்களுக்குப் பில் கொடுக்காமல், மூன்று கை மாறுகின்றன. இது சம்பந்தமாக மத்திய சர்க்காரோடு தமிழக அரசு தொடர்பு வைத்துக்கொண்டு ரயில்வே வாகன்களில் வருகிற பொருள்களை டெலிவரி எடுத்துக்கொள்கிற காலத்தில் ஒரு டெப்யூடி கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸரோ அல்லது அஸிஸ்டெண்டு கமர்ஷி யல் டாக்ஸ் ஆபீஸரோ அந்த ரயில்வே பாஸில் கையெழுத்திட்டு முத்திரையிட்டதற்குப் பின்னால்தான் கூட்ஸ் ஸ்டேஷனில் டெலிவரி கொடுக்க வேண்டும் என்ற ஒரு ஏற்பாட்டைக் கொண்டு வந்தால், அதன் மூலம் வரியே கட்டாமல் உணவுப்பொருள்கள் 3, 4 கை மாறக்கூடியதைத் தடுக்க முடியும். இப்படி வரி செலுத்தாமல் தப்பித்துக்கொண்டிருக்கிற ஒரு பெரிய நவதானிய வியாபாரிகள் கூட்டம் அரசாங்கத்தை ஏமாற்ற முடியாத அளவுக்குச் செய்ய முடியும். அதன் மூலம் ஏறக்குறைய ரூ. 3, 4 கோடி நம்முடைய சர்க்காருக்கு அதிகமாக வருமானம் கிடைக்கும் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

அதேபோல், சர்க்காருடைய சலுகைகளை இன்றையதினம் தங்களுக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக்கொண்டு கற்கண்டு தயாரிப்பவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிற வியாபாரிகள்தான் இன்றைக்கு அதிக கொள்ளை லாபம் அடிப்பவர்கள். கற்கண்டு தயாரிப்பவர்கள் என்று சொல்லிக்கொண்டு, குடிசைத் தொழில் என்ற பெயரைக் காட்டி, அவர் கள் வரிவிலக்கு வாங்குகிறார்கள். ஆனால் அவர்கள் கற்கண்டே தயாரிப் பதில்லை. சர்க்கார் கொடுக்கிற ஜீனிக் கோட்டாவை அப்படியே கள்ள மார்க் கெட்டில் ரூ. 325க்கு விற்றுவிட்டு அத்தனைக்கும் காஷ் பில் போடுகிறார்கள். காஷ் பில் போட்டாலும் சரி, அல்லது கிரடிட் பில் போட்டாலும் சரி, அதில் தங்களுடைய ரிஜிஸ்டர் நம்பரைக் குறித்துத்தான் பில் கொடுக்க வேண்டும் என்ற ஒரு உத்தரவை சர்க்கார் போடவேண்டும். அப்படிச் செய்தால் கற்கண்டு வியாபாரிகள் அரசாங்கத்தை ஏமாற்ற முடியாது. அதன் மூலம் பல லட்ச ரூபாய் கிடைக்கும்.

அதேபோலத் தான் இப்பொழுது நம்முடைய சென்னை மாநிலத்தில் மிட்டாய் தயாரிக்கும் வியாபாரிகளுக்கு பல சலுகைகள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. 100 கிலோ கிராம் மிட்டாய் தயாரிக்கக்கூடிய சில வியாபாரி

களுக்கு என்னுடைய மாவட்டத்தில் அரசியல் செல்வாக்கின் காரணமாக
400 மூட்டை, 500 மூட்டை ஜீனி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால்,
அவர்கள் மிட்டாய் தயாரிக்கிறார்களா என்றால், இல்லை. ரூ. 250-க்கு ஒரு
கன்பெக்ஷனரி மெஷினைக் காட்டி, நமக்கு படத்தைக் காட்டிவிட்டு, ஜீனி
மூட்டைகள் பிளாக் மார்கெட்டில் போய்விடுகின்றன. அவர்களுடைய
கணக்கை எடுத்துப் பார்த்தால் யாருக்கு எவ்வளவு விற்றார்கள் என்ற
விவரம் இல்லாமல், ஏதோ காஷ் பில் போட்டு சரிபடுத்தி விடுகிறார்கள்.
அவர்கள் தயாரிக்கின்ற மிட்டாய்களை யாருக்கு விற்றாலும், கடனுக்குக்
கொடுத்தாலும், ரொக்கத்திற்குக் கொடுத்தாலும், அந்த பில்களில் விற்பனை
வரி ரிஜிஸ்டர் நம்பரை பதிவு செய்துதான் கொடுக்கவேண்டும் என்று
ஒரு அரசாங்க உத்தரவைப் போட்டால், இந்த மிட்டாய் தயாரிப்பவர்கள்
பிளாக் மார்க்கெட்டில் ஜீனி விற்க முடியாது. அதே நேரத்தில் வரியை
யும் ஏமாற்ற முடியாது. 400 மூட்டை ஜீனி கொடுத்தால், எவ்வளவு
மிட்டாய் தாயரிக்கிறார்கள், அது என்ன விலை அதற்கான விற்பனை வரி
யைக்கட்டியிருக்கிறார்களா என்று விற்பனைவரி டிப்பார்ட்மெண்டார் அந்தக்
கணக்கைப் பார்ப்பதில்லை. அவர்களுக்கு வேண்டியது ஏதோ பில், பேரேடு.
பில் பிரகாரம் பேரேடில் இருக்கிறதா என்று டிக்மார்க் செய்துவிட்டுபோய்
விடுகிறார்கள். 100 மூட்டை ஜீனி கோட்டா வாங்கினால் அதற்கு எவ்வளவு
குளுகோஸ் வாங்க வேண்டும் என்பதையும் பார்க்கவேண்டும். 10 மூட்டை
ஜீனிக்கு ஒரு பாரெல் குளுகோஸ் இருந்தால்தான் மிட்டாய் தயாரிக்க
முடியும். ஆக, 100-க்கு 10 சதமானம் குளுகோஸ் வேண்டும். அவர்கள்
எவ்வளவு ஜீனி வாங்கியிருக்கிறார்கள், எவ்வளவு மிட்டாய் தயாரித்திருக்
கிறார்கள், எவ்வளவு குளுகோஸ் வாங்கியிருக்கிறார்கள், மிட்டாய் தயாரிப்
பதற்கு அத்தியாவசியமான குளுகோஸ் வாங்கியிருக்கிறார்களா, பில்
இருக்கிறதா என்று கூடப் பார்க்காமல் ஜீனிக்குக கோட்டா கொடுத்து விடு
கிறார்கள். இதில் நமது அரசாங்கம் மிக எச்சரிக்கையாக இருந்து, போதிய
கவனம் செலுத்தினால், ஒருபக்கம் மிட்டாய் கம்பெனிகள் ஜீனியை
வாங்கி பிளாக் மார்கெட்டில் விற்கின்ற தன்மையை ஒழிப்பதோடு, சர்க்கா
ருக்கு மிட்டாய் கம்பெனிகளிலிருந்து அதிகமான விற்பனை வரி
வருமானம் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை நான் அரசாங்கத்
திற்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அது போல உப்பு. இன்றையதினம் நம்முடைய தமிழகத்தில் மிக
மலிவாக விற்கப்படுகிற பொருள் ஒன்று உண்டு என்றால், அது உப்புதான்.
என்னுடைய தொகுதியில் 100 கிலோகிராம் எடையுள்ள ஒரு மூட்டை
உப்பு 8 அணாவுக்கு விற்கிறது. அதற்கு ரூ. 4, 5 லாரி வாடகை கொடுத்து
கோயம்பத்தூருக்குக் கொண்டு வந்து, ரூ. 6-க்கு விற்கிறார்கள். இதற்கு
எதற்காக வரிவிலக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை.
உப்புக்கு விற்பனை வரி போட்டால் இந்த அரசாங்கத்துக்கு பல லட்ச ரூபாய்
வருமானம் கிடைக்கும். இதனால் அகவிலை உயர்ந்துவிடும் என்று கூற
முடியாது. 8 அணா விற்கும் ஒரு உப்பு மூட்டை மீது 2 சதமானம்
3 சதமானம் விற்பனை வரி போடுவதன் மூலம் அகவிலை நிச்சயம் உயராது.
தூத்துக்குடியிலிருந்து கோவைக்கு உப்பு கொண்டு வரப்படுகிறது. லாரி
வாடகை மூட்டை ஒன்றுக்கு ரூ. 1, 1½ கொடுக்கிறார்கள். அதன் பேரில்
2 சதமானம், 3 சதமானம் வரி போடுவதினால் மக்களுக்கு எந்தவிதமான
பாதகமும் ஏற்படாது. அதே நேரத்தில் கோடிக்கணக்கில் உப்பு மூட்டை
கள் தயாரிக்கிறோம். நம்முடைய மாநிலத்திலிருந்து மைசூர், வங்காளம்
ஆகிய இடங்களுக்கு உப்பு ஏற்றுமதி செய்யப்படுகிறது. குறைந்த விலையி
லுள்ள உப்புக்கு வரி போடுவதினால் பல லட்சக்கணக்கான ரூபாய்,
கிடைக்கும். உப்புக்கு வரி போடுவதன் மூலமும் கற்கண்டு பாக்டரி,
மிட்டாய் பாக்டரி ஆகியவைகளை சரிவரக் கண்காணிப்பதன் மூலமும் விற்பனை
வரி வருமானத்தை அதிகரிக்க முடியும். பில்லில் ரிஜிஸ்டர் நம்பர்
போட்டுத்தான் கொடுக்க வேண்டும் என்றால், உண்மையான கணக்கு வெளிப்ப
கிடைக்கும். அதன் மூலம் விற்பனை வரி வருமானம் அதிகரிக்கும்.
வியாபாரி என்று ரிஜிஸ்டர் செய்துகொள்ளாமலே, வரியும் செலுத்தாமலே
எந்தவிதமான பில்லும் போடாமல் பொருள்கள் கை மாறுகின்றன.
அதைத் தடுத்து நிறுத்துவதற்கு விற்பனைவரி அலுவலகத்தில் முத்திரை

போட்டு விற்பனைவரி அதிகாரி கையெழுத்துப் போடப்பட்ட பாஸாக இருந்தால்தான் கூட்ஸ் ஷெட்டில் டெலிவரி கொடுக்கப்படவேண்டும் என்ற ஒரு நியதியை ஏற்படுத்தினால், அதிலிருந்து அரசாங்கத்திற்குப் பல லட்சக் கணக்கான ரூபாய் வருமானம் வரும். இந்த வருமானத்தைப் பெற்றுக் கொண்டு, ரூ. 15,000 என்று விற்பனைவரி விலக்குக்கு விதித்துள்ள வரம்பை ரூ. 20,000 என்று உயர்த்தினால் உண்மையான வியாபாரிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நான் ஒரு வியாபாரி என்ற முறையில் கூறுகிறேன். தோலுக்கு வரி போடுவதினால், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற தோல் வியாபாரம் நசித்துவிடும் என்று கூறினார்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வியாபாரிகள் 20 சதவிகிதத்திற்குக் குறைந்து லாபம் வைத்து விற்பதில்லை. தோல் வியாபாரத்தை எடுத்துக் கொண்டால், 30, 35 சதவிகிதம் லாபம் வருகிறது. 35 சதவிகிதம் லாபம் வரக்கூடிய ஒரு வியாபாரிக்கு 2, 3 சதமானம் வரி போடுவதினால் மாத்திரம் ஏற்றுமதி வியாபாரமே நசித்துவிடும் என்பது பிரத்தியட்ச நிலைக்கு உகந்தது அல்ல. அதனால் ஏற்றுமதி வியாபாரம் பாதிக்கப்படமாட்டாது. அதே நேரத்தில் சர்க்காருக்கு அதிக வருமானம் கிடைக்கும்.

இறுதியாக ஒரு நிமிஷத்தில் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஒரு அரசாங்கம் இயங்குவது வியாபாரிகளால் தான் என்பதை மறந்து விடக்கூடாது. வியாபாரிகளாக இருக்கிற நாங்கள் ரூ. 5,000, 10,000, 15,000 என்று வரி கொடுக்கிறோம். ஆனால் வியாபாரிகள் விற்பனைவரி அலுவலகங்களுக்குப் போனால் அவர்கள், அதிகாரிகளால் சிறிதுகூட மரியாதையாக நடத்தப்படுவதில்லை. வியாபாரிகளை உட்காரு என்றுகூடச் சொல்வதில்லை. நின்றுகொண்டே கணக்குகளைப் புரட்டிக் காண்பிக்க வேண்டிய நிலை இருக்கிறது. அந்த நிலைமையை இந்த அரசாங்கத்திலாவது மாற்றி, வியாபாரிகள் கணக்கு காட்டுகின்ற நேரத்தில், அவர்களுடன் மரியாதையாகப் பேசி, மரியாதையான வார்த்தைகளைக் கூறி, அவர்களுக்கு இருக்கை கொடுத்து, அவர்களை அதிகாரிகள் கண்யமாக நடத்த வேண்டும் என்று அரசாங்கம் தகவல் கொடுக்கவேண்டுமென்று கூறிக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : கனம் தறகாலிக சபாநாயகர் அவர்களே, நான் சார்ந்திருக்கும் சுதந்திரா கட்சியின் சார்பாக இந்த மான்யக் கோரிக்கையின் மீது ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முதன் முதலாக, இந்த மான்யக் கோரிக்கையிலே அர்பன் லாண்டு டாக்ஸ் கலெக்ஷன் சார்ஜஸ் என்று ரூ. 3,28,800 கோரப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒன்றிரண்டு ஆண்டுகளாக அந்த வரிவிதிப்பின் முறைப்படி பட்டணத்தில் இருக்கிற எல்லா. வீடுகளுக்கும் வரியை போட்டுக் கொண்டு வருகிறார்கள் என்பதை பட்டணத்தில் இருக்கிற நண்பர்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அர்பன் லாண்ட் டாக்ஸ் கலெக்ஷன் எவ்வளவு இருந்தது, இப்பொழுது எவ்வளவு இருக்கிறது என்பதைப் பார்த்தால், கிட்டதட்ட பத்து மடங்கு உயர்ந்திருக்கிறது என்பது தெரியவரும். சென்ற ஆண்டு, கலெக்ஷன் கிட்டதட்ட ரூ. 30 லட்சமாகவோ அல்லது 35 லட்சமாகவோ வாங்கியிருக்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டு ஒன்றே முக்கால் கோடி வரிமூலம் பெறுவதற்கு நிமித்தம் இருக்கிறது. சாதாரணமாக 25 பைசா கொடுத்துக் கொண்டிருக்கிறவர்கள், இன்று கிட்டதட்ட 25 ரூபாய் கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட பயங்கரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அர்பன் லாண்ட் டாக்ஸ் மசோதா மேல் அவைக்கு வந்த போதே நாங்கள் அனைவரும் எடுத்துச் சொன்னோம். அதற்கு முன்பே 1963-ல் முதலில், இந்தச் சட்டத்தில் ஒரு செக்ஷன் சரியாக இல்லை என்று ஹை கோர்ட்டில், வாதாடப்பட்டு, திருத்திக் கொண்டு வரவேண்டும் என்று ஹை கோர்ட்டு அளித்த தீர்ப்பு சபாநாயகர் அவர்களுக்கு நினைவிருக்கும். பிறகு இரண்டாவது முறையாக திருத்த மசோதா கொண்டு வந்த போது, எந்தப் பிரிவில் குற்றம்

இருக்கிறது என்று ஹைகோர்ட்டு சுட்டிக்காட்டினார்களோ, அந்தப் பிரிவை மட்டும் மாற்றிவிட்டு, திருத்தம் செய்தார்கள். அன்று கூட மேல் அவையில், எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர். ஏ. லட்சுமண சுவாமி முதலியார் அவர்கள் என்னென்ன பயங்கரமான சூழ்நிலைகள் உருவாகும் என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். ஒன்றே ஒன்றுதான் என்னுடைய கோரிக்கை எல்லாம். இந்த டாக்ஸைப் பார்த்து விட்டு, அரசாங்கத்திற்கு, போகப் போக, அர்பன் லாண்ட் டாக்ஸ் மூலமாகவோ, அரசாங்கத்தின் வருவாயை உயர்த்திக் கொள்ளலாம் என்கின்ற திசையில் எண்ணம் போய்விட்டால், ஒரு பயங்கரமான சூழ்நிலை ஏற்படும். இந்த அர்பன் லாண்ட் டாக்ஸ் பற்றி ஹைக்கோர்ட்டில் வாதாடினாலும், பூரணமாக யோசனை செய்து பார்த்தால், இந்த அர்பன் லாண்ட் டாக்ஸ் போடுவதற்கு உரிமை நகராட்சி மன்றத்திற்கு இருக்க வேண்டுமே தவிர, மாநில அரசாங்கம் எடுத்துக் கொள்வது தவறு என்று அப்போதே சொன்னோம். இன்றைக்கும், புதிதாக அரசு அமைந்திருக்கும் வேளையில் இதையே திரும்பவும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், இது மாநகராட்சித் திட்டம் என்றால், அதற்கு ஒரு வரம்பு இருக்கும். அவர்கள் இவ்வளவு தான் போடலாம், போடமுடியும் என்கிற வரம்பு இருக்க முடியும். மாநில அரசு போடக்கூடும் என்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகும்போது, எவ்வளவு வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம் என்கிற யோசனை வரக்கூடும். இதையே உயர்த்திக் கொண்டு போய்க் கொண்டிருந்தால், இன்னும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு பார்த்தால், இந்த வரியே 15 கோடி அல்லது 20, 30 கோடி என்று கூட ஆகலாம். அப்படிப்பட்ட பயங்கரநிலை உருவாகலாம் என்பதற்குச் சான்று இப்பொழுதே பார்க்கலாம். இந்த அர்பன் லாண்ட் டாக்ஸ் கொண்டு வந்த நேரத்திலேயே குறிப்பிட்டோம். அதே போல சென்னையிலேயே டெனண்டுகளுக்கு பிட் நோட்டீசுகள் தரப்படுகின்றன. முதலாளிகள், அதாவது வீட்டு ஓனர்கள், நோட்டீசு கொடுத்துவிட்டு, தானே வசிக்க வேண்டும் என்கின்ற காரணத்தைக் காட்டிவிட்டு, டெனண்டுகளை வெளிப்படுத்தி விட்டு, அவர்கள் போன பிறகு, ரிபேர் செய்த மாதிரிக் காட்டிவிட்டு, வீட்டை அதிகப்படியான குடக்கூலிக்கு விட்டுவிடுகிறார்கள். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், சிறு தொகைதான போட்டிருக்கிறது என்று காரணம் சொன்னாலும், மக்கள் அவதிப்படுகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டத்தான். இதை இன்னும் விரிவாகச் சொல்ல வேண்டும் என்றால், இன்றைக்கு சென்னையின் பல பகுதிகளிலும் வசித்து வரும் தொழிலாளிகள், பாட்டாளி மக்கள், ரூ. 8, 10 என்று குடக்கூலி கொடுத்துக் கொண்டு, நிம்மதியாக வாழ்க்கை நடத்த முடியாத பயங்கரமான நிலைமை வந்திருக்கிறது. வீட்டுக்காரர்களை, நீங்கள் குடக்கூலிக்காரர்களை எதற்காக அப்புறப்படுத்துகிறீர்கள், என்று என் போன்றவர்கள் கேட்டால் உடனடியாக நீங்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும், நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், கோர்ட்டிலே வாதாடினால் போதாது, சட்டமன்றத்திலேயே எடுத்துக் கூற வேண்டும் என்கிறார்கள். இதைச் சான்றாக வைத்துக் கொண்டு பாட்டாளி மக்களை அவர்கள் அப்புறப்படுத்துகிறார்கள். அவர்கள் வசிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்த வரி 35 லட்சத்திலிருந்து, ஒன்றே முக்கால் கோடியாக உயர்ந்திருக்கிறது. நாளைக்கு இதையே இன்னும் அதிகமாக்கிக் கொள்ளலாம். அரசாங்கத்திற்கு சேல்ஸ் டாக்ஸ், எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸ், இன்னும் இரண்டொரு டாக்ஸ்களை விட்டால் வேறு வரியே கிடையாது. சேல்ஸ் டாக்ஸ்கூட அன்றைக்கு அது போடப் பட்டபோது, அது சிறு டாக்ஸாகத்தான் இருந்தது. இன்றைக்கு பயங்கரப் மாக 52 அல்லது 55 கோடி ரூபாய் வரும் அளவில் இருக்கிறது. அதே வகையில், இந்த வரியும், இன்னும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு பார்த் தால் தெரியும் எவ்வளவு பயங்கரமாக உயர்ந்துவிடும் என்பது. அப்படிப் பட்ட பயங்கரமான பிரச்சினை இது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஒரே ஆண்டில் 35 லட்சமாக இருந்தது, இன்று ஒன்றே முக்கால் கோடியாக உயர்ந்திருக்கிறது என்றால், எவ்வளவு பயங்கரமாக இருக்கும் பிரச்சினை இது என்பதை நன்றாக உணர்ந்து கொள்ள முடியும். ஆகவே, இன்னமும் இந்த அர்பன் லாண்ட் டாக்ஸ் விகிதத்தை உயர்த்து

வது வேண்டாம்; அந்த வகையில் ரூலேயோ அல்லது விதியையோ அமுலுக்குக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என்கிற என்னுடைய யோசனையைச் சட்டமன்றத்திலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்

அடுத்து, சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட் டார்கள். சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் 3 சதவீதம் ஆனதினால், 2½ சத வீதம் பலமுனை வரியை 3 சத வீதமாக உயர்த்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்த விஷயத்தில் பணிவோடு என்னுடைய கருத்து வேற்றுமையைத் தெரிவிக்க விரும்புகிறேன். அது 3 சத வீதமாக இருந்தால், நாமும் 3 சத வீதம் செய்ய வேண்டிய சூழ் நிலை உருவாகவில்லை. சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் 3 சத வீதம் என்றாலும் அதிலிருந்தும் மாநில சர்க்காருக்கும் வருகிறது என்பதும் தெரியும். இன்றைக்கு நிலைமை என்னவாகும்? சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் கட்டி விட்டால் போதும் என்கிற நிலைமை ஏற்படும். பம்பாயில் கட்டிவிட்டால், இங்கே கட்டவேண்டாம் என்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. இன்று சர்க்கார் 2½ சத வீதம் வைத்துக் கொள்வதற்குப் பதிலாக, ½ சத வீதம் குறைத்துக் கொண்டிருந்தால், பம்பாயில் ரெஜிஸ்டர் செய்வதற்குப் பதிலாக சென்னை யிலேயே செய்யக்கூடிய நல்ல அளவிற்கு நிலைமைகளை உருவாக்கியிருக்க லாம். **We can attract more business, more sales to Madras City instead of leaving it to Bombay City** என்பது தான் என்னுடைய கருத்து. இன்றைக்குச் செய்திருக்கும் முறையினால், கோடிக்கணக்கான ரூபாய்கள், அங்கே வெளி மாநிலத்தில் ரெஜிஸ்டர் செய்துகொண்டு விடுவதால் போய்வி டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சில பெரிய இயந் திரங்கள் சம்பந்தப்பட்டவரை அப்படி ஆகும். இன்றைக்கு டி. வி. எஸ். போன்ற பெரிய கம்பெனிகள் இயந்திரங்களை இங்கே ½ சத வீதம் ஜாஸ்தியா கிறது என்ற காரணத்தினால், பம்பாயிலேயே ரெஜிஸ்டர் செய்து கொண்டு, சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸை கட்டிவிட்டு கொண்டு வருவார்கள். அதனால் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் நம் மாநிலத்திற்கு வரவேண்டியது மற்ற மாநிலத்திற்குப் போய் விடுகிறது. அந்த வகையில் பம்பாய், கல்கத்தா போன்ற மாநிலங்களுக்கு போய்க் கொண்டு இருக்கிறது என்கிற விஷய த்தை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்த ½ சத விகிதம் உயர்த்தியதால் அது ஒரு **anti-infl tionary measure, and not an inflationary measure** என்று அமைச்சர் சொன்னார் கள். ஆனால், ½ சத விகிதம் ஆக மட்டும் இருந்தால் இன்ப்ளேஷனரியாக இருக்காது. ஆனால், ½ சத வீதம் என்று பல முனைகளில், ½ சத விகிதம், ½ சத விகிதம், ½ சத விகிதம் என்று கணக்கே பார்க்க முடியாத அள வுக்குப் போய்க் கொண்டிருந்தால், அது முழுக்க முழுக்க 3 சத விகிதம் அல்லது 4 சத விகிதம் ஆகிவிடலாம். ஆகவே, இதுவும் நிச்சயமாக ஒரு அளவிற்கு "இன்ப்ளேஷனரி மெஷர்தான்" என்பது என்னுடைய கருத்து மட்டுமல்ல, நாட்டில் இருக்கும் பொருளாதாரா நிபுணர்களுடைய கருத்தும் ஆகும்.

கடைசியாக, சிறு சிறு வியாபாரிகள் புண்படுத்தப்படும் அந்த வகையில் இந்த சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகள் நடந்துகொண்டு, வியாபாரிகளைப் புண் படுத்துகிறார்கள். இதுபற்றி மகஜர்களும், மனுக்களும்கூட அமைச்ச ருக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதிலிருந்தே இதெல்லாம் நன்றாகத் தெரிகிறது. அப்பீல் இருக்கிறது என்று சொல்லலாம். இருந்தாலும் பல கனம் உறுப்பினர்கள் குறிப்பிட்டது போலும், மாண்புமிகு நண்பர் பேசின் பிரிட்ஜ் தொகுதி நண்பர் குறிப்பிட்டது போலும், சாதாரண ஆபீசர் போய் விரட்டுவது, மிரட்டுவது என்கிறதெல்லாம் மிகத் தவறு. இன்றைக்கு இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்ட் இருக்கிறது நம்முடைய சேல்ஸ் டாக்ஸ் டிபார்ட்மெண்டும் இருக்கிறது. இன்கம்டாக்ஸ் டிபார்ட் மெண்டில் இருக்கும் பண்பும், நல்ல முறையும் என் இந்த சேல்ஸ் டாக்ஸ் டிபார்ட்மெண்டில் இருப்பதில்லை? அதன் காரணம், சாதாரண மான சிறு அதிகாரிகளுக்கு, நல்ல பவர்களை, உரிமைகளைக் கொடுத்திருப் பது தான். "டிஸ்க்ரிஷனரி பவர்" ஏராளமாகக் கொடுத்து விட்டு இருப்பது

தான் இதற்குக் காரணம். அவர்கள் டிஸ்க்ரீஷனரி பவர்களைக் வைத்துக் கொண்டு தங்களுக்கு வேண்டிய சலுகைகளை அடையாவிட்டால், மிரட்டுவது என்பது நடக்கிறது. அது பற்றி இன்று நான் ஆபீசர்கள் மீது புதிதாகச் சுமத்தும் குற்றச்சாட்டு அல்ல. இதே அவையில் காங்கிரஸ் நண்பர்கள், ஆளும் கட்சியாக இருந்தபோதும் இந்தக் குற்றச்சாட்டை எடுத்துக் காட்டி யிருக்கிறேன். ஆகவே, இது பற்றி அமைச்சர் பரிசீலனை செய்து விட்டு, நல்லதொரு சீர்திருத்தம் கண்டுபிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, இந்த விற்பனை வரி மான்யக் கோரிக்கையின் மீது என்னுடைய ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகின்றேன். இன்றுள்ள வரிவிதிக்கும் முறையால் சாதாரண சிறு வியாபாரிகள்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். பெரிய வியாபாரிகள் தாங்கள் செலுத்தவேண்டிய வரியைச் சரியாகத் செலுத்தாத முறைதான் ஏற்பட்டிருக்கிறது. பெரிய வியாபாரிகள் பொருள் வாங்கக்கூடியவர்களிடம் வரியை வாங்கிக் கொண்டு ஒரு பகுதியைத்தான் சர்க்காருக்குச் செலுத்துகிறார்கள். மீதியைக் கணக்கு காட்டாமல் வைத்துக் கொள்கிறார்கள். இன்றுள்ள இந்த வரி விதிப்பு முறையில் ஒரு சாதாரண வியாபாரி நாள் ஒன்றுக்கு 50 ரூபாய் வரை விற்கக்கூடிய சிறு கடை வைத்திருந்தாலும் ஏறக்குறைய ஒரு வருஷத்தில் 18,000 ரூபாய் வரை கணக்கு வந்து விடும். அவர் கூட இந்த வரியைக் கட்டாயம் செலுத்த வேண்டியிருக்கிறது. அது மட்டும் அல்ல. இன்றுள்ள வரி விதிப்பு முறையிலே பெரிய வியாபாரிகள் வரி செலுத்தாமல் வாங்குகிறவர்களிட மும், வரி பெற்றுக்கொண்டு அரசாங்கத்திற்கு அதைச் செலுத்தாமல் தப்பித்துக்கொள்ளும் முறையால் சிறு வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் அந்தத் தொழிலையே கைவிடக்கூடிய ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே இன்றுள்ள அந்த முறையில் பெரிய வியாபாரி கள் தப்பித்துக்கொள்ள முடியாத வகையில், மிகக் கண்டிப்போடு, பொருள்கள் வாங்குபவர்களிடம் வரியை வாங்கி அதை ஏமாற்றுகிறார் களே, அதைத் தடுக்க கண்டிப்பான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கருதுகிறேன். அந்த முறையிலே நாம் செய்தால் இந்த அரசு இன்றுள்ளதை விட மிக அதிகமான வருமானத்தை அடையும். அதே நேரத்தில் சிறு வியாபாரிகளை பாதுகாக்கக்கூடிய நிலையும் ஏற்படும். இப்போது நியாயமாக வரி செலுத்தக்கூடிய சிறு வியாபாரிகளின் வியாபாரம் நடக்காமல் இருக்கக்கூடிய ஆபத்தும் நீங்கும். மதிப்பிற்குரிய அங்கத்தினர் கூறியது போல் வரி விலக்கு 20,000-க்குக் குறையாமல் என்று இருக்க வேண்டும். ஏனென்றால் நாள் ஒன்றுக்கு ரூ. 100-க்கு விற்பனை செய்யக்கூடிய நிலையிலேயே வருஷத்திற்கு 30,000-க்குப் போய் விடுகிறது. அவரும் இன்று வரி செலுத்தக்கூடிய தொகை சாதாரண மாகக் கிடைக்கக்கூடிய வருமானத்திலிருந்து மாதம் 100 ரூபாய் வரை வரியை செலுத்த வேண்டியுள்ளது.

ஆகவே அந்த முறையிலே சிறு வியாபாரிகளுக்காவது விதிவிலக்கு கொடுக்கக்கூடிய முறைகளும் ஏமாற்றுகிறவர்கள் ஏமாற்றமுடியாமல் தடுக்கக்கூடிய முறையிலும் சில ஏற்பாடுகளைச் செய்தால் இன்றுள்ளதை விட அதிகமான வருமானம் கிடைக்கும் என்ற கருத்தைக் கூறி முடித் துக்கொள்கிறேன்

* **திரு. ஆர். நாகசுந்தரம்:** இந்த 1967–68 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் இன்று முதல் மான்யமாக மெட்ராஸ் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமான மான்யக் கோரிக்கையின்மீது முதன் முதலிலே திரு. விநாயகம் விவாதத்தைத் தொடங்கி வைத்திருக்கின்றார். எனவே எந்த வித விக்கினமும் இன்றி நிச்சயமாக இது நிறைவேறும் என்று நாம் நம்பலாம். இதற்கு முன்னாலும், இந்த சட்டமன்றத்திலும் திரு. வை. சங்கரன் போன்ற காங்கிரஸ் மெம்பர்கள் கூறிக்கொண்டு வந்த விற்பனை வரி சம்பந்தமாக உடன்பட்டு வரி செலுத்தும் வரம்பை 50,000-இலிருந்து 75,000 வரை உயர்த்தவேண்டுமென்பதை, அப்பொழுதிருந்த சர்க்கார் செய்யாததை, இந்த அரசாங்கம் வந்தவுடனே துணிவாகச் செயல்

படுத்தியது. அதனை அந்த பக்கத்திலேயுள்ள ஒரு நண்பர் கூட பாராட்டவில்லையென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கு பல நகரங்களில் சென்ற ஆண்டு ஒரு உயர்தர அதிகாரி தலைமையில் ஒரு ஸ்குவாட் வேலை செய்தது. பல நகரங்களில் பல பெரிய புள்ளிகளைப் கண்டு பிடித்தது. ஆனால் அந்த ஸ்குவாட் ஒரு குறிப்பிட்ட வியாபார நகரத்திற்குச் செல்லவேயில்லை என்பதை நாம் கண்டோம். அது மட்டும் அல்ல, அகப்பட்ட பல பெரிய வியாபாரிகள் செல்வாக்குள்ள காங்கிரஸார் என்ற காரணத்தினாலே பல கேஸ்கள் பிடிபட்டும்கூட அவைகள் மேற்கொண்டு நடத்தப்படவில்லை. மாறாக அந்த அதிகாரிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுவிட்டார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தமிழ் நாட்டிலே வட நாட்டார் வணிகம் செய்கிறார்கள். அவர்கள் குஜராத்தி, மார்வாரி, ஹிந்தி, சிந்தி ஆகிய நான்கு மொழிகளில் கணக்கை வைத்துக்கொள்கிறார்கள். இதற்குச் சட்டம் அனுமதிக்கின்றது. ஆனால் இந்த நாட்டிலே முதன் முதலில் மார்வாடிகள் வெறும் அகதிகளாக வந்தாலும் ரொம்ப சீக்கிரம் 7, 8 வீடுகள், கார்களுக்கு உரிமையாளர்களாகி விடுகிறார்கள். அவர்களுக்குக் கொடுத்திருக்கும் பர்மிட் காரணமாக, அவர்கள் நமக்குத் தெரியாத குஜராத்தி, ஹிந்தி, மராத்தி மொழிகளிலே கணக்கு வைத்திருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதி அதிகாரிகள் கணக்குகளைப் பார்ப்பதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்த அதிகாரிகளுக்கு அந்த மொழிப் பயிற்சியைத் தருவதற்காக சலுகை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டும் அல்ல, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே விற்பனை வரி சம்பந்தமாக ஆலோசகர் ஒருவர் இங்கே நியமிக்கப்பட்டிருக்கின்றார். சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட் ஒருவரை காண்டிராக்ட் பேஸிஸில் சென்ற அரசாங்கம் நியமித்திருந்தார்கள். சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட் என்பதைத் தவிர வேறு எந்தவிதமான தகுதியும் அவருக்குக் கிடையாது. அனுபவமும் கிடையாது. அவரது வேலை பெரிய கம்பெனிகளைப் பரிசீலித்து இங்கே இருக்கும் அஸெஸ்மெண்ட் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு தர வேண்டுமென்பது. ஆனால் இது வரையிலே அவர் எந்த விதமான ஒத்துழைப்பும் தந்ததாகத் தெரியவில்லை. அல்லது புதிதாக எந்த வித கணக்குகளையும் பரிசீலித்துக் கண்டு பிடித்ததாகவும் தெரியவில்லை. காரணம் அவர் ஒரு சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. அதற்குப் பதிலாக விற்பனை வரித் துறையிலேயுள்ள ஒரு சீனியர் எக்ஸ்பர்ட்டை நியமித்திருந்தால் வருமானமும் அதிகரித்திருக்கும். அவருக்கும் உற்சாகமிருந்திருக்கும். நல்லபடியாகவும் பணியாற்றுவார். இனி வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கு சட்டத்தையெல்லாம் சரியானபடி திருத்தி வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டும்.

எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் பற்றி ஒரு வார்த்தை. கிராமங்களிலுள்ள டூரிங் டாக்கீஸ்களால் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் ஆதாயம் வந்திருக்கிறது. ஆனால் இதற்கு முன்பு பல நிரந்தர சினிமாக் கொட்டகைகளை நடத்தி வந்தவர்கள் பிரபல காங்கிரஸ்காரர்களாயிருந்தமையின் காரணத்தினால் டூரிங் டாக்கீஸ்கள் இருக்கும் இடம் ஒரு கொட்டகைக்கும் மற்றொரு கொட்டகைக்கும் இடையிலுள்ள தூரம் அரை மைல் தூரம் இருக்க வேண்டுமென்று சட்டத்தை திருத்தி வைத்துவிட்டார்கள். இதன் காரணமாக நூற்றுக்கணக்கான டூரிங் சினிமாக் கொட்டகைகள் மூடப்பட்டன. அவைகள் ஒழிந்தமையால் அரசாங்கத்திற்கு லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டமாக ஆகிவிட்டது. அன்பு கூர்ந்து அரசாங்கம் கட்டாயமாக இந்தச் சட்டத்தை மாற்றி டூரிங் டாக்கீஸ்கள் ஆரம்பிக்க இருக்கும் தடையை நீக்கவேண்டும். இதனால் அரசாங்கம் வருமானத்தைப் பெருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையைமுடித்துக்கொள்ளுகின்றேன்

பிற்பகல் 1-30 *திரு. எம். பூபதி : அன்புமிக்க தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், விற்பனைவரி, ஏனைய வரிகளைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லும்போது, 1966-67-ம் ஆண்டில் எஸ்டி

மேட் அமௌண்ட் 35 கோடியே 50 லட்சம் ரூபாய் என்றும், அது அந்த ஆண்டிலே 55 கோடியே 96 லட்சம் ரூபாய் அளவிற்கு வரவினைத் தந்துள்ளது என்றும் புள்ளி விவரங்கள் தந்துள்ளார்கள்.

இந்த விற்பனை வரிச் சட்டமானது 1939-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது என்று எல்லோருக்கும் தெரியும். அன்று பொருள்களின் விலை எந்த அளவிற்கு இருந்தது, இப்பொழுது எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது, எத்தனை மடங்கு உயர்ந்திருக்கிறது என்று கணக்கிட்டுப் பார்க்கும்போது, 10 மடங்கு, 11 மடங்கு உயர்ந்திருக்கிறது. உணவுத் தானியங்களின் விலையைப் பொறுத்த வரையில், மிக அதிகமாக உயர்ந்திருக்கிறது. பத்து மடங்குகளிலிருந்து இருபது மடங்கு வரை உயர்ந்திருக்கிறது. எண்ணெய் வகைகளெல்லாம் மிக அதிகமாக உயர்ந்திருக்கிற நிலையையும் நாம் காண முடிகிறது. ஆகவே, இன்றைக்கு விதி விலக்கு பத்தாயிரம் ரூபாயிலிருந்து பதினையாயிரம் ரூபாய் அளவிற்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று அரசினர் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. இருப்பினும், அது போதாது. உண்மையிலேயே, பத்து மடங்கு, பதினொரு மடங்கு விலை உயர்ந்திருக்கும்போது, அவர்களுக்குக் கிடைக்கின்ற வருவாயும் மிகக் குறைந்திருக்கும். ஆகவே, அதைப் பரிசீலனை செய்து, குறைந்த பட்சம் 25,000 ரூபாய் அளவிற்காவது விதி விலக்கு அளிக்க இந்த அமைச்சு அவசியம் யோசிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில் பொது மக்கள் உபயோகப்படுத்துகிற கெரஸின் எண்ணெய்க்கும் சற்று அதிகமாக வரி விதித்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. அதையும் ரத்து செய்வதன் மூலமாகப் பொது மக்களுடைய நலனைப் பாதுகாக்க முடியும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகள் உபயோகப்படுத்துகிற பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை போன்ற இவைகளுக்கெல்லாம் ஒரு முனை வரி விதிப்பதன் மூலமாக நமது அரசுக்கு வருகிற வருவாய் குறைந்து விடாது. ஆனால், இந்த அரசுக்குப் பெரிய அளவில் நஷ்டம் ஏற்பட்டுவிட முடியாது. ஆனால், உண்மையிலேயே விவசாயிகளுக்கு உற்பத்தியைக் பெருக்க ஒரு உற்சாகத்தை இதன் மூலம் உண்டாக்க முடியும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

இந்த விற்பனை வரியானது வியாபாரிகள் விற்கின்ற அந்தச் சாமான்கள் மேல் விற்பனை வரி என்ற அடிப்படையில்தான் 1939-ம் ஆண்டில் நியமிக்கப்பட்டது. ஆனால், அது உண்மையிலேயே பொருட்களை வாங்குகிற மக்களிடத்திலிருந்து வசூலிக்கிற வரியாக மாறியிருக்கிறது. இந்தப் புதிய அமைச்சு அவசியம் இதனை மாற்றியமைக்கவேண்டும். அப்படி மாற்றியமைக்கின்றபோது அது அவசியம். வியாபாரிகள் விற்கின்ற அந்த அளவை அடிப்படையாகக்கொண்டு, அதன் மேல் விற்பனை வரி விதிக்கப்படவேண்டும். இன்றையதினம் வியாபாரிகள் அங்கு வாங்குகிற மக்களிடத்திலேயிருந்து "விற்பனை வரி" என்று தனியாக எழுதி வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை அவசியம் ரத்து செய்ய நமது அமைச்சு அவசியம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நமக்கு அதிகமாக வருவாய் உருவாக வேண்டியதும் அவசியம். அதற்காகப் பல்வேறு மாநிலங்களில் இன்றையதினம் ஒரு முயற்சி நடந்துகொண்டு இருக்கிறது. அதை நாம் பரிசீலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். குறிப்பாக, ப்ரைஸ் ஷீட் பல இடங்களில் இருப்பது நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். கோவா ப்ரைஸ் ஷீட்டில் பல லட்ச ரூபாய்களை நமது தமிழ் நாட்டிலே இருக்கும் பல அன்பர்கள் பெற்றிருக்கிறார்கள். அம்மாதிரி ப்ரைஸ் ஷீட் நடத்தும் முயற்சியில் கேரள அரசில் இருக்கிறவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். வேறு மாநிலங்களிலே கூட, அந்த முயற்சி இருக்கிறது. ஆகவே, இம்மாதிரி முயற்சி

களில் நாம் அதிகம் கவனம் செலுத்துவதன் மூலமாக ஓரளவிற்கு இந்த அமைச்சு அதிக வருவாயை உருவாக்கிக்கொள்ள முடியும். ஆகவே, அதை அவசியம் பரிசீலிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எனக்கு முன்னால் பேசிய நண்பர் திரு. எம். எஸ். சிவசாமி அவர்கள் உப்புக்குக் கொஞ்சம் வரி போட்டால் என்ன என்று யோசனை கூறி யுள்ளார்கள். அதை இந்த அமைச்சு ஏற்றுக்கொள்ளாது என்று நான் கருதுகிறேன். காரணம் அது பொது மக்கள் பெருவாரியாக உபயோகப் படுத்தக்கூடிய ஒரு அத்தியாவசியமான பொருளாகும். இந்த உப்பைப் பற்றிக் குறிப்பிடவேண்டுமானால், அதற்கு ஒரு நீண்ட சரித்திரம் இருக் கிறது. உப்புக்கு அதிக வரி விதிக்கின்ற நிலைக்கு இந்த அமைச்சு வரவே வராது என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன். ஆகவே, இவைகளைப் பற்றியெல்லாம் அவசியம் யோசனை செய்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, தலைவர் அவர்கள் எனக்கு மிகக் குறுகிய அவகாசம் மட்டுமே கொடுத்திருப்பதால், இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது நண்பர் திரு. விநாயகம் அவர்கள் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணையை நான் ஆதரிக்க வேண்டியவனாக இருக்கிறேன். வரி போட வேண்டாம் என்று சொல்லவில்லை. இப்பொழுது ஆளும் கட்சியில் இருக்கும்படியான திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் இதற்கு முன்னால் இந்தச் சபையிலே எதிர்க் கட்சியினராக இருந்தபோது எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் என் கட்சியைச் சார்ந்தவர்களில் பலரும் குறிப்பிட்டார்கள். நான் ஏற் கெனவே, இந்த விற்பனை வரி குறித்த மசோதா இந்தச் சபையில் வந்த சமயத்தில் சொன்ன கருத்துக்களை விட இப்பொழுது அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

அரை சத வீதம் தானே வரியை உயர்த்தியிருக்கிறோம் என்று ஆளுங் கட்சியில் உள்ளவர்கள் சொல்லுகிறார்கள். இது எப்படியிருக்கிறது என்றால், தேவகோட்டை பக்கத்தில் வட்டிக்குப் பணம் கொடுக்கும்போது, "வட்டி அதிகம் இல்லை, தம்படிக்குத் தம்பிடி தான்" என்று சொல்லுவது வழக்கம். அது தான் எனக்கு நினைவிற்கு வருகிறது. (மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கேட்கிறவர்களுக்கு இனிமையாக இருக்கக் கூடும்) கேட்கிறவர்களுக்கு இனிமையாக இருக்கும் என்று சொல்லுகிறார் கள். அது போல், தேவகோட்டை சமாசாரம் மாதிரி தான் "அரை சத வீதம் தான் வரி உயர்வு" என்று இப்பொழுது சொல்லுவதும் இருக்கிறது. இப்படி வரியை உயர்த்திக்கொண்டே போனால், இது எங்கே கொண்டுபோய்விடும் என்பதை மக்களே உணர்வார்கள்.

விலைவாசி ஏறுமா, ஏறாதா என்பது பிரச்சினை அல்ல, பத்தாயிரத் திலிருந்து பதினையாயிரம் ரூபாய்க்கு அடிப்படை எக்ஸெம்ஷன் லிமிட்டை ஏற்றிவிட்டோம் என்று ஆளுங் கட்சியினர் சொல்லுகிறார்கள். இது எப்படி யிருக்கிறதென்றால் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிற மாதிரி இருக்கிறது. முன்னால் பத்தாயிரம் ரூபாய் எக்ஸெம்ப்ஷன் லிமிட்டாக இருந்தாலுங்கூட, கம்பவுண்டிங் ரேட் 2 சத விதம் தான் இருந்தது. 15,000 ரூபாக்கு ஏற்று வதன் மூலம் மூன்று சத வீதம் அளவிற்கு வரியை அதிகப்படுத்துகிற சமயத்தில், முன்னை விட அதிகமாகத்தான் அந்த வரி இருக்கிறதே தவிர, எந்த விதத்திலும் குறைவாக இல்லை என்பது தான் எனனுடைய தாழ்மையான அபிப்பிராயம் ஆகும்.

சாதாரண மக்கள் வாங்கும்படியான பொருள்களுக்கு இப்படி வரியைப் போட்டுக்கொண்டே போய், அதனால் அதிகமான அளவிற்கு விலைவாசி உயர்ந்துவிடாது என்று நாட்டை ஆளுகிற பொறுப்பில் இருக்கக்கூடியவர் கள் சொல்லுவதை நான் ஏற்றுக்கொள்ளுவதற்குத் தயாராயில்லை. நம் முடைய தேசத்திலே பொதுவாக உள்ள மனப்பான்மை என்னவென்றால்,

சட்டசபையிலோ பாராளுமன்றத்திலோ ஏதாவது வரி விதித்துச் சட்டம் செய்கிறார்கள் என்றால், உடனே வெளியிலே இருக்கிற கடைக்காரன் பொருள்களினுடைய விலையை உயர்த்துவது என்பது சகஜமாக நடை முறையில் இருக்கும்படியான ஒரு நிலை. விலைவாசி ஏறிவிடவில்லை என்பதைக் குறித்து எத்தனையோ புள்ளி விவரங்களை முன்னாள் இருந்த அமைச்சர்களும் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது ஆளும் கட்சியில் இருக்கிறவர்களும் அத்தகைய புள்ளி விவரங்களைக் கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். இங்கே கொடுக்கும் புள்ளி விவரங்களுக்கும், பத்திரிகைகளில் விலைவாசியைக் குறித்து தரப்படுகிற விவரங்களுக்கும் மக்கள் பணம் கொடுத்து பொருள்களை உண்மையிலேயே வாங்குவதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. உதாரணமாகச் சொல்லவேண்டு மென்றால், திருவொற்றியூரில் சந்தை இருக்கிறது. விவசாயி என்ற முறையில் நான் அங்கு அடிக்கடி போகிற பழக்கம் உண்டு. இரண்டு பல் உள்ள மாட்டின் விலை ரூ. 200-இலிருந்து ரூ. 250 வரை என்றோ, ரூ. 300-இலிருந்து ரூபாய் 350 வரையில் என்றோ பத்திரிகையில் புள்ளி விவரம் இருக்கும். ஆனால், அங்கே போய்ப் பார்த்தால், நான்கு கால்கள் கூட ரூ. 250-க்குக் கிடைக்காது. மாடு ஒன்று ரூ. 1,000 முதல் ரூ. 1,500 வரையில் விலை சொல்லுவார்கள். பத்திரிகையிலே வரும் புள்ளி விவரங்களை வைத்து, வெளியிலே போய் அந்த விலைக்குப் பொருள்கள் வாங்க வேண்டும் என்று போனால், நடை முறையில் எவ்வளவு வித்தியாசம் இருக்கும் என்பது சர்க்காருக்குத் தெரியாததல்ல. அவர்களுக்குத் தெரியும். அவர்கள் ஆளுகின்ற நிலையிலேயே இருப்பவர்கள், வரி போடும்படியான நிலையில் இருப்பவர்கள், அதிலே கிடையாது. இதிலே கிடையாது என்று சொல்லுவார்கள். ஆனால், அவர்கள் எதிர்பார்ப்பதற்கும் மேலாக அதிகமாக வருவாய் கிடைக்கும் என்று நான் சொன்னால், அது மிகை யாகாது. இதைத்தான் அந்தக் காலத்திலும் நான் சொன்னேன், அவர் களுக்கு அன்பும் ஆதரவும் கொடுத்துக் கொண்டிருக்கும்படியான ராஜாஜி அவர்களிடம் கூட அப்பொழுது சட்டசபை செனட் ஹவுஸில் நடந் தது. (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்பொழுது உங்களுக்குக் குருவாக இருந்தார்.) ஆம். அவர்கள் அடிக்கடி மாறி மாறி அவ்வாறு இருக்கிறார்கள். என்றாலும், நான் அப்பொழுதும் பேசினேன். ராஜாஜி அவர்கள் "எம்ப்டி பெஞ்சஸ்ஸை" வைத்துக்கொண்டு ஒன்றரை மணி நேரம் பேசினார்கள். எனனுடைய கோரிக்கை என்னவென்றால், வரி விதித்ததை அதிகப்படுத்தி சட்டமாகி விட்டது என்றாலும், மீண்டும் அதிகப் படுத்தக்கூடாது என்று சொல்ல முடியாது. சட்டத்தின் சந்தர்ப்பம் இருக் கிறது. அப்பொழுதும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று வித்தியாசம் இல்லாமல் ஆளும் கட்சியினரும் குறை சொன்னார்கள் ; எதிர்க்கட்சியின ரும் இருக்கும்படியான குறைகளைச் சொன்னார்கள். நிர்வாகத்திலே இருக் கும்படியான அதிகாரிகள் கொஞ்சம் நேர்மையாகவும், நாணயமாகவும் வரி கொடுப்போரை நடத்தவேண்டும். அது தான் என்னுடைய வேண்டு கோள். கண்ணியம் என்பது விற்பனை வரித் துறையில் இருக்கும்படியான அதிகாரிகளுக்கு இருக்கிறது என்பதை நான் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள ளவே முடியவில்லை. காங்கிரஸ் ஆட்சியிலும்கூட, அப்பொழுது இருந்த அதிகாரிகள் நடந்துகொண்ட முறையினால்தான் சர்க்காரின் பேரில் வெறுப்பு ஏற்பட்டது என்றால், அது சரியான வாதம் என்பது என்னுடைய கருத்து. ஆற்று ஓரத்தில் இரண்டு பேர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் ஆற்றைக் கடக்கவேண்டும். அதற் காக என்ன செய்தார்கள் என்றால், ஆற்றின் ஆழத்தைக் கணக்கெடுக்க முயற்சி செய்தார்கள். ஓரிடத்தில் பத்தடி ஆழம் இருந்தது. இன்னொரி டத்தில் ஏழு அடி ஆழம் இருந்தது. இப்படியாக சராசரிக் கணக்கு எடுத்து, அவர்கள் ஆற்றில் இறங்கினார்கள் என்று ஒரு கதை உண்டு. அதைப் போல், ஆளுங்கட்சியில் இருக்கிறவர்கள் ஏதோ வருமானம் வரும் என்று சொல்லி, எதையோ பெறுவதற்கான முயற்சியைச் செய்துகொண் டிருக்கிறார்கள். சர்க்கார் எந்தக் கடன் எழுப்பினாலும் கூட, அதற்கெல் லாம் இந்த விற்பனை வரி அதிகாரிகளைப் பயன்படுத்துகிறார்கள். ரெவின்யூ அதிகாரிகளைக் கூட அவ்வளவாக எதிர்பார்க்காமல், விற்பனை வரி அதி காரிகளைத் தான் மிக மிக அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். விற்பனைவரி அதிகாரிக்கு ஒரு குறிப்புக் கொடுத்தால் போதும், அவர்கள் சர்க்காருக்கு

வேண்டிய கடன் தொகையை வசூலித்துக் கொடுத்து விடுகிறார்கள். அது நிறுத்தப்படவேண்டும். பல இடங்களில் செக் போஸ்ட் போடப் பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே நான் ரொம்ப கஷ்டப்பட்டவன். ஒரு பொருளுக்கு சென்ட்ரல் ஸேல்ஸ் டாக்ஸ், மாகாண ஸேல்ஸ் டாக்ஸ் போடுகிறார்கள். நண்பர் ஒருவர் பதினைந்து மெத்தைகளை எடுத்துக் கொண்டு திருமணத்திற்காக தாளவாடிக்கு எடுத்துப்போகும்போது, அவர் வியாபாரம் செய்ய எடுத்துக்கொண்டு போகிறார் என்று கருதி அதற்கும் டாக்ஸ் போட்டார்கள். விருந்தாளிகள் தங்குவதற்காக எடுத்துக்கொண்டு போன நண்பரை அதிக கஷ்டத்திற்கு உள்ளாக்கினார்கள். ஆகவே வரி வசூலிக்கும் அதிகாரிகள்.

"வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு"

என்பதுபோல் அல்லாமல், நியாயமான முறையில், மரியாதையான முறையில், கண்ணியமான முறையில் நடந்துகொண்டால், தமிழ்நாட்டின் பண்பாடும், இந்த அரசின் மதிப்புக் கவுரவமும் உயரும் என்று கருதுகிறேன். ஏதோ கட்சிக்காரர்கள் பேசினார்கள் என்று நினைக்காமல், இந்த அமைச்சர் அவர்கள் அதிகாரிகளையெல்லாம் வரி கொடுப்பவர்களிடம் மரியாதையான முறையில், கண்ணியமான முறையில் நடந்து கொள்ளும்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவேதான், மதிப்பு மிக்க நண்பர் விநயகம் கொண்டுவந்த வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கும் படியான வகையில் வியாபாரம் செய்பவர்களுக்கு மரியாதை கொடுத்து, அதிக ஆசையில்லாமல், குறைந்த அளவில் மக்களுக்குக் கஷ்டம் இல்லாத வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விநயகம் கொண்டுவந்த வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் நடைபெறுகின்ற பொது விற்பனை வரித் துறை, மற்றத் துறைகளுடைய மானியங்கள்மீது இங்கு நடைபெற்ற விவாதத்தினுடைய இறுதிக்கட்டமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நான் ரொம்பவும் அதிகமாகப் பேசாமல் சுருக்கமாகவே சில வார்த்தைகள் கூறுகின்றேன். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் நல்ல முறையில் விவாதத்திலே பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தனிப்பட்ட முறையிலே பெரிய மகிழ்ச்சி என்னவென்றால், ரொம்ப வருஷத்திற்கு முன்பு, இதே விற்பனை வரி மசோதா இந்த மன்றத்திலே வந்து அதற்காக, நானே ஒற்றைக்காலில் நின்று 10½ மணிக்கு ஆரம்பித்தவன், 2 மணி, 2½ மணி நேரம் எதிர்க்கட்சியிலே இருந்து இந்த மன்றத்திலே பேச வேண்டிய அனுபவம் ஏற்பட்டது. அப்படிப்பட்ட கட்டத்திலேயிருந்து மாறி, இந்தப் பொது விற்பனை வரி மானியத்தின்கீழ் இவ்வளவு ஈடுபாடுகளும் கொண்டு உறுப்பினர்கள் பேசியதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறை, நமக்குத் தேவைப்பட வேண்டிய துறை என்று எண்ணிக் கொண்டிருந்தேன். எந்த அளவுக்கு நம்முடைய வருமானத்தில் அக்கறையும், ஆதரவும் காட்டி, இரண்டுவிதமான கருத்துக்கள் இல்லாமல் மொத்தமாக ஒத்த கருத்தை இரண்டு சாராரும் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது இந்தத் துறையில் முன்னேற்றகரமான மாறுதலைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை எனக்குக் கொடுக்கிறது. அதற்குக் காரணம் என்னுடைய முன்னுரையில் குறிப்பிட்டிருப்பதுபோல், இது, 100 கோடி ரூபாய்க்கு மேலே வருமானத்தைக் கொடுக்கக்கூடிய துறையாகும். அதோடு மட்டுமல்ல, நம்முடைய நண்பர் விநயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள், 'Government of the People, for the People and by the People' என்று ஆபிரகாம் லிங்கன் அவர்கள் கூறியதைப்போல், இது ஜனநாயக வரி என்றுதான் நான் சொல்வேன். இது மக்களால், மக்களிடமிருந்து, மக்களுக்காகவே

கூறவில்லை. முற்போக்கான நாடுகளில் எல்லாம் இது இருந்து வருகிறது. இது ஒரு சோஷலிச வரி. ஜனநாயக வரி மட்டுமல்ல; சோஷலிச வரி. சோஷலிசம் என்பது என்ன? யார் கொடுக்கக்கூடியவர்களோ, யார் தாங்கக்கூடியவர்களோ அவர்கள்மீது போடப்படுவது. "கெபாசிட்டி டு பே" என்பதுபோல யாரால் கொடுக்க முடியுமோ அவர்களுக்கு வரி போடுவது. எந்த அளவுக்குக் கேட்கிறோம் என்றால், மக்களுடையநன்மைக்காகக் கேட்கிறோம். ஜனநாயக சோஷலிச வரி என்ற காரணத்தினால் இந்த நிர்வாகத்தின் துறை சீராக அமைக்கப்பட, செம்மையாக அமைக்கப்பட இதைப் போடுகிறோம். நண்பர் கோதண்டராமன் அவர்கள் விலைகள் எல்லாம் ஏறிவிட்டன என்று கூறினார்கள். விலைவாசிகளைக் குறைக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. படி அரிசித் திட்டம் இருக்கிறது, கல்விக்காக பள்ளிக்கூடம் கட்ட வேண்டியிருக்கிறது; குடிநீர் கொடுக்க வேண்டியிருக்கிறது; ஆஸ்பத்திரிகள் கட்ட வேண்டியிருக்கிறது. இவ்வளவையும் செய்வதற்கான வரியை யாரிடமிருந்து பெறுவது? இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய நண்பர்கள் சிரமம், சிரமம் என்று சொன்னார்கள். நம்முடைய நியாயமான சிரமங்களை இந்த அரசாங்கம் ஒத்துக்கொள்ளும். அதிகாரிகள் சரியாக நடக்கவில்லையென்ற காரணத்தால் அரசாங்கம் செய்ய வேண்டிய பொறுப்புக்களைத் தட்டிக் கழித்துவிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கெங்கு அத்துமீறிய காரியங்கள், துஷ்பிரயோகக் காரியங்கள் நடந்தாலும், இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் குணநலன்கள் எல்லோருக்கும் தெரியும். வியாபாரிகளுக்குக் கெடுதல் வருகிறது. வியாபார சமூகத்திற்கு இந்த வரியினால் கெடுதல் வரும் என்ற போக்கை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். நான் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக வியாபார வர்க்கத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறேன். வியாபார வரம்பை உயர்த்தி, கம்பவுன்டிங் ரேட்டை உயர்த்துவது 20 ஆயிரம் வியாபாரிகளுக்கு நன்மையைச் செய்ய முடியாது. அதே தருணத்தில் அதிகாரிகள் பூஜை அறையில் நுழைந்தார்கள் என்று சொல்கிறார்கள். பூஜை அறையை நான் மதிக்கிறேன். பூஜை அறையிலும், சமையல் அறையிலும் ஏன் கணக்குகளை மறைத்து வைக்கிறார்கள்? பூஜை அறையின் புனிதத் தன்மை கெடுகிறது என்று சொல்கின்ற நேரத்தில், கள்ளக் கணக்கு அங்கு போகலாமா? ஏமாற்றுக் காரியங்கள் அங்கே நடக்கலாமா என்று கேட்கிறேன். அடுத்து, வரி விகிதத்தை உயர்த்தாமலேயே இன்னும் சிலபல கோடிகள் வரலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அப்படி வருவதற்கு இப்போதே வாய்ப்பு இருக்கிறது. அதற்கு வியாபாரிகள், பொது மக்களுடைய ஒத்துழைப்புத் தேவைப்படுகிறது. இந்த அரசும் வரி போட்டுவிட்டார்கள் என்பதாக சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். எங்கே வரி போட்டோம்? எந்தச் சரக்கின் மீதாவது புது வரி போட்டிருக்கிறதா இந்த அரசு என்று அறைகூவிக் கேட்கிறேன். இன்று 2½ சத விகிதம் ஆக இருந்ததை 3 சத விகிதம் ஆக, 11 சத விகிதம் ஆக இருந்ததை 12 சத விகிதம் ஆக இப்படி வரி விகிதத்தில் மாறுதல் செய்திருக்கிறார்களே தவிர புதிதாக எந்தச் சரக்கின் மீதும் வரி போடவில்லை. திரு. மொரார்ஜி தேசாய் கெரசின்மீது, சிகரெட்மீது என்பதாகக் கொண்டு வந்தார்களே, இந்தச் சர்க்கார் அவற்றுக்குக்கூட, காப்பி, தேயிலை போன்றவற்றுக்குக்கூட விலக்கு அளித்திருக்கிறது.

வர்த்தக சமூகத்தினரிடத்தில் எனக்கு ரொம்ப மரியாதை உண்டு. அவர்களிடமே சொல்லுகிறேன். அவர்கள் அரசாங்கத்தினிடத்தில் சம்பளம் வாங்காத, ஏ. ஸி. டி. ஓக்கள். ஏ.ஸி.டி.ஓக்கள் வியாபாரிகளிடத்தில் இருந்து வசூலிக்கிறார்கள். வியாபாரிகள் சரக்குகளை வாங்குகிறவர்களிடத்தில் இருந்து வசூல் செய்கிறார்கள். அது குடிமகன் கொடுக்கிற வரி. அதை வசூல் செய்து அரசாங்கத்தினிடம் செலுத்துவதற்கு நடுவில் இருக்கிற ஏஜெண்டுகள் வியாபாரிகள். ரெவின்யூ இன்ஸ்பெக்டரோ, தாசில்தாரோ வசூல் செய்த வரியை அரசாங்கத்தினிடம் கட்டாவிட்டால் மிஸ் அப்ரோப்ரியேஷன் என்பதாகப் பல நடவடிக்கைகள் எடுக்

கப்படும். அதுபோலத்தான் வியாபாரிகள் மக்களிடமிருந்து வாங்கக்கூடிய பணத்தை சர்க்கார் கஜானாவுக்குச் செலுத்தாவிட்டால் பணக்கையாடல் குற்றத்திற்குத்தான் உள்ளாகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு என்ன தண்டனை அளிப்பது என்றுதான் கேட்கிறேன்.

கனம் உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் சொன்னார்கள். நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாமன்றத்திலும் பல முறை சொல்லப்பட்டிருக்கிறது. பவானியில் ஒரு சினிமாக் கொட்டகையில் 500 பேர்கள் இருந்தார்கள். 100 டிக்கட்தான் கொடுக்கப்பட்டிருந்தது. பரமக்குடியிலும் அப்படி நடந்தது. எதிர்க்கட்சித் தலைவர் தொகுதியாகிய மேட்டுப்பாளையத்தில்—கள்ள நோட்டுக்களைப்போல கள்ள டிக்கட்டுகளை அச்சடித்த விவகாரம் பரிசீலனையில் இருக்கிறது என்று நினைக்கிறேன். திரு. கோதண்டராமன் அவர்கள்கூடச் சொன்னார்கள். இப்படி பலவகையில் வரி ஏய்ப்பு நடைபெறுகிறது.

இந்த மாமன்றத்தின் மூலமாக நகராட்சி மன்றங்களில் உள்ளவர்களையும், பஞ்சாயத்துக்களில் உள்ளவர்களையும் கேட்கிறேன். கேளிக்கை வரி மூலமாக வரக்கூடிய பணம் இன்றைக்கு 90 சத விகிதம் அவர்களுக்கே கொடுக்கப்படுகிறது. கேளிக்கை வரி இந்த அரசாங்கத்திற்கு வரக்கூடியது அல்ல. ஊரில் உள்ள ஒரு சினிமாக் கொட்டகை முதலாளி வரியை ஏய்க்கிறார் என்றால் என்ன பொருள்? அங்கே குடிதண்ணீர் வரவில்லை. நான்கைந்து ரோடுகள் போடப்படவில்லை. சேரிப் பகுதிகளுக்கு மின்சார வசதி அளிக்கப்படவில்லை என்கிற நிலைதான் பணம் இல்லாத காரணமாக ஏற்படும். இத்தகைய ஒரு நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா என்று கேட்கிறேன். ஆகவே, ஊரில் உள்ளவர்களும் கொஞ்சம் கண்காணிப்பாக, வரி ஏய்ப்புக்கு இடம் கொடாதபடி நடந்து கொண்டாக வேண்டும். இப்படிப்பட்ட தவறான காரியங்கள் தடுத்து நிறுத்தப்பட்டாக வேண்டும்.

கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் சொன்னார்கள். அவருடைய கருத்து அரசாங்கத்திற்கும் ஏற்புடையது தான். ஹோல்சேல் வியாபாரிகள் தப்பிவிடுகிறார்கள், பில் இல்லாமல் வியாபாரம் செய்கிறார்கள் என்றார்கள். உண்மையிலேயே நான் இன்றைக்குச் சொல்லிக் கொள்வேன். ஹோல்சேல் வியாபாரிகள் ஒரு கோட் ஆப் காண்டெக்ட் வைத்துக்கொண்டு—பில் இல்லாமல் எந்த வியாபாரமும் செய்வதில்லை என்பதாக ஒரு நல்ல மரபை ஏற்படுத்த முன் வந்தால் பல இடங்களில் வரி ஏய்ப்புக்கே இடமில்லாது போய்விடும். அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல இன்னும் பல சலுகைகளை வர்த்தக சமூகத்தினருக்கு வழங்க அரசாங்கம் முன்வரக்கூடிய நிலைமை ஏற்படும். இன்றைக்கு சிறிய வியாபாரிகளின் நன்மைக்காக அரசாங்கம் அளித்துள்ள சலுகைகளை பலர் பாராட்டினார்கள். அவர்களுக்கு எல்லாம் இந்த அரசாங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிரஜா உரிமை, குடி உரிமை என்பதில் வெளியில் உள்ளவர்களுக்கு நாங்கள் ஒன்றும் அக்கறை குறைந்தவர்கள் அல்ல. அதற்காகவே சிறைச்சாலைக்குப் போய் வந்தவர்கள். அடிப்படைக் குறைபாடுகளைக் களைவதற்காகத்தான் நிர்வாக இயந்திரம் செம்மை படுத்தப்பட்டு வருகிறது. வேலையில்லாத பதவிகள் என்ன என்ன என்பது கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஒருமுனை வரியைப்பற்றிச் சொன்னார்கள். டாக்டர் லோகநாதன் செய்த சிபார்சின் அடிப்படையில் தான் பல பொருள்களுக்கு ஒருமுனை வரி விதிக்கப்பட்டது. 63 பொருள்கள் என்று நினைக்கிறேன். அதில் உள்ள குறைபாடுகளைக் கண்ட பின்னர் தான் அது 49 பொருள்கள் மீது என்று குறைக்கப்பட்டது. ஒருமுனை விற்பனை வரியை வியாபாரிகளே எதிர்க்கிறார்கள் என்பதாக டாக்டர் லோகநாதனே 1964-இல் குறிப்பிட்டிருக்கிறார். அட்வைசரிக் கமிட்டியும்

சிபார்சு செய்தது. ஒருமுனை வரி என்கிறபோது சில இடைஞ்சல்கள் நடைமுறையில் வருகின்றன. ஒரு முனை வரி விதிக்கப்படுவதாக இருந்தால் அந்தப் பொருள்களுக்கு சில இலக்கணம் இருக்கின்றன. 'easily identifiable by description' என்பதாக அடையாளம் தெரிகிற தன்மை அதற்கு இருக்க வேண்டும். 'Source of production of such goods should be identifiable' என்கிற தன்மையும் இருக்கவேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். பெட்ரோலுக்கு வரி போடுகிறோம். கால்டெக்ஸ், பர்மாஷெல், எஸ்ஸோ, நமது சுதேசிக் கம்பெனி ஆகியவைகள் தான் அந்த வியாபாரத்தில் ஈடுபடுகின்றன. ஆக, இந்த நான்கு இடங்களில் வரி போட்டுவிட்டால் போதும்.

மோட்டார் கார் இருக்கிறது. அம்பாஸிடர் இருக்கிறது, பியட் கார்கள் இருக்கின்றன, இவைதான் இருக்கும். இவை எங்கே உற்பத்தியாகிறதோ அங்கே வரி போட்டுவிட முடியும். ஆனால் சில பொருட்கள் இருக்கின்றன. அவை எங்கே கைமாறுகின்றன என்று சொல்லமுடியாத நிலைமை ஏற்படுகிறது. சிங்கிள் பாயிண்ட் என்று சிறு வியாபாரிகளுக்குப் போட்டால் கம்பவுண்டிங் மூலமாக அவர்களுக்குக் கிடைக்கின்ற அனுகூலம் பிரதிகூலமாகப் போய்விடும். ஆகவே, எல்லா வியாபாரிகளுக்கும் சிங்கிள் பாயிண்ட் போட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மார்ட்டின் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். தோலைப்பற்றிச் சொல்லும்பொழுது உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் இவர்களுடைய வியாபாரம் எல்லாம் வரியின் மூலம் கெட்டுவிடும், அன்னியச் செலாவணி கிடைப்பதெல்லாம் கெட்டுவிடும் என்று சொன்னார்கள். அவர் ஒரு வழக்கறிஞர். இன்னும் சட்டங்களை எல்லாம் நல்ல முறையிலே எல்லாவற்றையும் பார்த்திருக்கலாம், இன்னும் கொஞ்சம் அவர்கள் இதில் அக்கறை செலுத்தியிருக்க வேண்டும். வெளியிலேயிருந்து வருகின்ற பொருட்களுக்கு முன்னைவிட இப்போது வரி அதிகம் இல்லை. ஏனென்றால், ஏற்கெனவே இண்டர்ஸ்டேட் ஆக்ட் படி இப்போதே அங்கெல்லாம் 3 சத விகிதம் தான் விதிக்கப்படுகிறது. ஆகவே, நாம் ஏதோ புதிதாகப் போட்டோம் என்று கனம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல. ஆந்திராவிலே 3 சத வீதம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை எண்ணிப்பார்க்காமல் அவர்கள் சொன்னார்கள், விலை ஏறிவிடும், கப்பல் கிடைக்காது, ஷூ உற்பத்தியாகாது, கால் சுருங்கிவிடும் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் சொன்னது வாதத்திற்குச் சரியானதே தவிர, வேறு ஒன்றுமில்லை. இண்டர்ஸ்டேட் ஆக்ட் படி ஏற்கெனவே அந்த விகிதம்தான் மற்ற இடங்களில் இருக்கிறது, அது தாங்கக் கூடியதுதான். இதிலே கொஞ்சம் அனுபவம் இருக்கிற காரணத்தாலேதான் நான் இதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, திண்டிவனம் உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இதே மாதிரி ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் வாதம் திறமையாக இருந்தது. வாதங்கள் இப்படித்தான் திறமையாக இந்த மன்றத்திலே இருக்க வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். காரணம் என்னவென்றால், இப்படித் திறமையாக வாதங்கள் செய்வதால்தான் பல நன்மைகள் கிடைக்குமென்பதால்தான் நான் அப்படி ஆசைப்படுகிறேன். ஆனால், வாதம் செய்யவேண்டுமென்பதற்காகச் செய்யப்படுகிற வாதம், பொருந்தாத வாதமாகத்தான் இருக்கமுடியும், அப்படிப்பட்ட வாதங்கள் தடுக்கப்படவேண்டும். இப்பொழுதே 3 சத விகிதம் விதிக்கப்பட்டிருக்கிறதே, என் இப்பொழுது அவசியம் வந்தது என்று கேட்டார்கள். நாம் 2½ சத விகிதம் தான் விதித்திருக்கிறோம், 3 சத விகிதம் என்று இருந்தால், which is lesser என்று இருக்கிறதோ அதன்படிதான் வரி போடவேண்டுமென்ற நிலைதான் இருக்கிறது. இதனால் 2½ சத விகிதத்திற்குத்தான் வருமானம் வரும். இப்போதுள்ள நிலைமையை அதிகப்படுத்திவிட்டதாகச் சொன்னார்கள். 1·3 சத விகிதமாக இருந்ததை 1·78 சத விகிதமாக மாற்றியிருப்பதுதான் நாம் இப்பொழுது செய்திருப்பது,

பல சிலாப்களாகச் செய்து இருக்கிறோம். 20,000 ரூபாயிலிருந்து ரூபாய் 75,000 வரை என்று வைத்திருக்கிறோம். இந்த காம்பவுண்டிங்கை எடுத்து விட்டால் இப்பொழுது கனம் உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் யாருக்கு நல்லதாக இருப்பதற்கு வாதாடுகிறார்களோ அதற்கு நேர் எதிர்மாறான விளைவைத்தான் ஏற்படுத்தும், அவர்கள் யாருக்கு நன்மைகள் செய்ய வேண்டுமென்று கருதுகிறார்களோ அவர்களுக்கே அது பிரதிகூலமாக முடியக்கூடிய நிலைமைதான் ஏற்படும்.

அடுத்ததாக, பில் கொடுப்பதைப்பற்றிச் சொன்னார்கள். 50 ஆயிரம் ரூபாய் வரை டர்ன்ஓவர் இருந்து அதற்கு பில் கொடுக்கப்படவில்லையென்று சொன்னால் அது குற்றத்தின் அடிப்படையில்தான் வரும். 75 ஆயிரம் ரூபாய் வரை வியாபாரம் செய்கிறவர்கள் பில் கொடுக்காவிட்டால் 26/10 விதிப்படி குற்றமாகத்தான் கருதப்படும்.

இந்த அர்பன் லாண்ட் டாக்ஸைப்பற்றி யாரும் எதிர்க்கவில்லை. எல்லோரும் ஆதரிக்கத்தான் செய்தார்களே தவிர யாரும் எதிர்க்கவில்லை என்பது இந்த மன்றத்தினுடைய ஏகோபித்த ஆதரவு சர்க்காருடைய நகர்புற வரி விதிப்பு முறைக்கு கிடைத்திருக்கிறது என்றுதான் காட்டுகிறது. இதிலே ரொம்ப வருகிறது, 1 கோடியே 75 லட்சம் ரூபாய் வந்திருக்கிறதே என்று சொன்னார்கள். இது நான்கு வருஷத்திற்குமாகச் சேர்த்து வசூல் செய்யப்பட்ட தொகைதான். ஏனென்றால் வழக்கு தாவா எடுத்துச் செல்லப்பட்டு, அங்கே வியாஜ்யம் முடியாமல் இருந்துவிட்டதால் நான்கு ஆண்டுகளுக்கும் மொத்தமாக இப்பொழுது வசூலிக்கப்பட்டிருக்கிறதே தவிர சாதாரணமாக ஒரே வருஷத்தில் வந்ததல்ல. எந்த வருஷத்திலும் ஒரு கோடி ரூபாய்க்குக் குறைவாகத்தான் வந்திருக்கிறது. ஒரே வருஷத்திலே இப்படிப் போட்டுவிட்டார்களே என்று சொன்னார்கள் அது தவறு. நான் குடியிருக்கின்ற இடத்திலே கூட கிரவுண்ட் 50 ஆயிரத்திற்கு மேல் விற்கிறது. அந்த அளவுக்கு இன்றைக்கு நகர்ப்புற நிலத்தினுடைய விலை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அன்எர்ண்டு இன்கம் ஆக இது இருக்கிறது. பெரிய அதிகாரிகள், சீப் செகரட்டரி, செகரட்டரி இவர்கள் எல்லாம் அரசாங்கத்தில் 20 வருஷங்கள் வேலை செய்தாலும் கூட அவர்கள் இவ்வளவு சம்பாதிக்க முடியாது. முன்பு 1,000 ரூபாய் 2,000 ரூபாய்க்கு வாங்கின நிலம் எல்லாம் 5 செண்ட் நிலமாக இருந்தால் இப்பொழுது 50,000 ஆயிரம் என்று ஆகிவிட்டது. நிலத்தின் விலையேற்றம் வெட்டாத தடாகம் போல் ஆகிவிட்டது. இதற்குக் காரணம் சென்னை நகரத்தின் கேந்திரத் தன்மைகளும், பலவிதமான சௌகரியங்களும் தான். ஆகவே, அந்த முறையிலேதான் நான்கு வருஷங்களுக்குமாகச் சேர்த்து வசூலிக்கப்பட்டது. 1 கோடியே 75 லட்ச ரூபாய் ஆகும். எனவே இந்த மன்றத்திலே உள்ள எல்லோரும் இதை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அன்றைக்கு லேண்ட் அர்பன் டாக்ஸைக் கொண்டுவந்தார்கள், அன்றைக்கு நான் இதைப்பற்றி ஆதரித்துப் பேசியிருப்பதைப் பார்த்தால் தெரியும், நான் சென்னை நகரத்தில் மட்டும் அல்ல கோவை நகரத்திற்கும் கூட வேண்டுமென்று பேசியிருக்கிறேன். வரி 8 அணா என்ற வகையிலேதான் இருக்கிறது. ஒண்ணேமுக்கால் கோடி என்பது நான்கு வருஷங்களுக்கும் சேர்ந்த வருமானம். இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை மக்களுக்கு பல நன்மைகள் செய்தாக வேண்டுமென்று கருதுகிறது.

கடைசியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி வரிகள் ஏற்றப்படுவதின் காரணமாகத்தான் உணவு தானியங்களின் விலை ஏறிவிட்டது என்றெல்லாம் சொல்வது தவறான விவாதம். கோதுமை விலை ஓரளவு ஏறிவிட்டது என்று சொல்லலாம். பொதுவாக விலைவாசிகள் ஏறிக்கொண்டிருப்பதற்கு இது காரணமல்ல. விலைவாசிகள் ஏற்றத்தைத் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதற்காகத் தீவிரத் திட்டங்கள் இருக்கின்றன. இதனாலே ஏறிவிட்டது என்பது வாதம் அல்ல. அரிசி மீது நாம் இப்பொழுது வரிப் போடவில்லை. எவ்வளவு மலிவாக மக்களுக்கு அரிசி கொடுக்க வேண்டுமோ அதற்கான வகையிலே முயற்சி

செய்துகொண்டு வருகிறோம். நான் இந்த வியாபாரிகள் சமூகத்தினரையும், பொது மக்களையும், அரசியல் கட்சிகளையும் ஒன்று கேட்டுக் கொள்வேன்.

இந்த விஷயத்திலே எல்லோரும் முழு ஒத்துழைப்புக் கொடுத்தால் அரசாங்கத்திற்கு மேலும் 10 கோடி ரூபாய் வருவதற்கு வாய்ப்புகள் நிச்சயமாக உண்டு. இந்த அரசாங்கத்தின் கொள்கையை நான் தெளிவாக, திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன். நியாயப்படி அரசாங்கத்திற்குச் சேரவேண்டியதாக இருந்தால் ஒரு பைசாக்கூட விடாமல் வசூல் செய்தே தீருவோம். அதற்குக் குந்தகமாக யாராவது ஏமாற்றிவிடலாம். தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணுவார்களே யானால், அதனால் சமூகத்திற்குக் கேடு விளைவிக்க முன் வருவார்களே யானால் நிச்சயமாக அவர்கள் மீது சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுக்கும். சட்டப்படி சேராத ஒரு பைசாக் கூட சர்க்காருக்கு வேண்டியதில்லை. காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்கள் சொன்ன சில விமர்சனங்களை எல்லாம் நான் ஓரளவு ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால், இது நாங்கள் வாரிசாகப் பெற்றதுதான், பிதுரார்ஜிதமாகப் பெற்றதுதான். நாங்கள் பெற்ற குழந்தை அல்ல இது. இதிலே, ஏதேனும் இடைஞ்சல்கள் இருக்குமானால் அதைக் களைவதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்கும். தமிழ் நாட்டில் உள்ள 3½ கோடி மக்களின் வறுமையை ஒழிக்கவேண்டியதன் பேரில், இந்தக் கடமையை நிறைவேற்றியே தீருவோம் என்று கூறி, இந்த மானியக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை வாபஸ் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை எல்லோரும் ஏகோபித்து நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், மற்றக் கட்சித் தலைவர்களையும் கனம் உறுப்பினர்களையும் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வெட்டுத் தீர்மானங்களும், நிதிக் கோரிக்கையும் பேரவையின் முடிவுக்கு விடப்படும்.

திரு. க. ர. நல்லசிவம் அவர்களும், திரு. செ. பாலசுப்பிரமணியன் அவர்களும் அவையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப்பெற்றுக் கொள்ளப் பட்டவையாகக் கருதப்பட்டன.

திரு. விநாயகம் அவர்கள் அவருடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறார்களா ?

திரு. கே. விநாயகம்: On a point of information, Sir. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—எல்லாக் கஷ்டங்களையும் மனதிலே வைத்திருக்கிறேன், நிவாரணம் தேடுவதற்குக் குறிப்புகள் வைத்திருக்கிறேன் என்று நான் சொன்ன ஒரு முக்கியமான விஷயத்தை மறந்து விட்டார். அதற்கு மாத்திரம் விடை கொடுத்து அது ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருந்தால் நான் என்னுடைய வெட்டுப் பிரேரணையை வாபஸ் பெற்றுக்கொள்ள யோசிக்கிறேன்.

There is no tax levied on food and food products உணவுப்பொருள்கள் மீது வரி இல்லை என்றார்கள். ஆனால், அதே உணவுப் பொருளைப் பண்டமாக மாற்றினால் வரி இருக்கிறது. அரிசிக்கு வரி இல்லை; அதையே தோசையாகவோ, இட்லியாகவோ விற்றால் வரி இருக்கிறது. இது அமைச்சர் அவர்களுக்கு தெரியும். (குறுக்கீடு.)

The Hon. Member must have the views and then come to a conclusion. உணவுப் பொருள் பொதுமக்கள் புசிக்கின்ற பொருள். It is consumed by the public. அதற்கு வரியை நீக்க யோசனை இருக்கிறதா? உடனடியாகச் சொல்லவில்லை என்றாலும் இதைப்பற்றி யோசிப்பதற்கு அவகாசம் எடுத்துக்கொள்ளட்டும். இதைப்பற்றி விளக்குவார்களே யானால் எங்கள் கட்சியைக் கலந்துகொண்டு நான் வெட்டுப்பிரேரணையை ... பெற்றுக்கொள்வது பற்றி யோசிக்கிறேன்.

[திரு. கே. விநயகம்] [1967 ஜூன் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறத் தேவையில்லை. தீர்மானம் வாக்களிப்புக்கு விடப்படுகிறது என்று சொன்ன பிறகு தாங்கள் வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்து கிறீர்களா இல்லையா என்றுதான் சொல்லமுடியும். புதிதாகச் சில கருத்துக்களைச் சொல்ல இடம் இல்லை. தங்களுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறீர்களா ?

THIRU K. VINAYAKAM : In view of the trend that is prevailing in this House, I am pressing the cut motior..

திரு. கே. விநயகம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தள்ளுபடி செய்யப்பட்டது.

திரு. க. ர. நல்லசிவம் அவர்களும், திரு. செ. பாலசுப்பிரமணியன் அவர்களும் இருப்பிடத்தில் இல்லையாதலால் அவர்களுடைய தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டன.

திரு. கே. என். குமாரசாமி அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் இருப்பிடத்தில் இல்லையாதலால் அவருடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டன.

திரு. வி. கே. கோதண்டராமன் : உணவுப் பொருளுக்கு வரி விலக்கு சம்பந்தமாக யோசிப்பதாக அமைச்சர் அவர்கள் கூறிய காரணத்தால் நான் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லை.

அவருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி :—
"கோரிக்கை எண் III—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,32,09,200—க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

பிற பகல் 1-49 **மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. மாலை 3–30 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். அப்போது தமிழ்நாடு 1967-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 7/1967) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

இடைவேளைக்குப் பிறகு பிற்பகல் 3–30 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

3. அரசினர் மசோதா.

1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதா (எண் 7/1967).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாலை அலுவல் தொடங்குகிறது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் 1967-ம் ஆண்டு 7-வது மசோதாவாகிய மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கோருவார்கள்.

1967 ஜூன் 28]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, "1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் " என்று கோருகிறேன்.

வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளவாறு நான்காவது திட்டத்தில் தேசீய வளர்ச்சித் திட்ட வேலைகளைச் செயல்படுத்துவதற்கான கூடுதல் நிதி வசதிகளைத் திரட்டும்பொருட்டு சென்னை மாநகருக்குள்ளும் நகராட்சிகளுக்குள்ளும் மட்டும் ஓடுகிற பஸ்கள் தவிர்த்து ஏனைய பஸ்களுக்கும் கார்களுக்கும் கூடுதல் வரி விதிக்க வகை செய்வதற்காக இச்சட்ட வரைவு கொண்டுவரப்பட்டுள்ளது.

பஸ்கள் செல்லும் அன்றாட வழித்தட நீளத்தையொட்டி வரி வீதங்கள் நிச்சயிக்கப்படுகின்றன. தற்போது இருக்கை ஒன்றுக்கு காலாண்டுக்கு விதிக்கப்படும் வரி வீதங்கள் வருமாறு :—

210 கிலோ மீட்டருக்கு மேற்படாதிருப்பின் ரூ. 35, 210 கிலோ மீட்டருக்கு மேல் 270 கிலோ மீட்டருக்கு மேற்படாதிருப்பின் ரூ. 40, 270 கிலோ மீட்டருக்கு மேல் ரூ. 45. 210 கிலோ மீட்டருக்கு குறைவாக ஓடும் பஸ்களின் எண்ணிக்கை அதிலும் குறிப்பாக நகருக்கு வெளியேயுள்ள பகுதிகளில் இவ்வாறு ஓடும் பஸ்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. பஸ்களில் பெரும்பாலானவை ஏற்கனவே ஒரு நாளுக்கு 270 கிலோ மீட்டருக்கு மேல் ஓடிக்கொண்டிருக்கின்றன.

இதனைக் கருத்தில்கொண்டு கூடுதல் நிதி வசதி திரட்ட வேண்டியதின் பொருட்டு, பின்வருமாறு இவ்வீதங்களை மாற்றியமைக்க நாம் முடிவுசெய்துள்ளோம். பஸ்கள் செல்லும் அன்றாட வழித்தட நீளம் நாளொன்றுக்கு 270 கிலோ மீட்டரோ அதற்குக் குறைவாகவோ இருப்பின் ரூ. 50, நாளொன்றுக்கு 270 கிலோ மீட்டருக்கு மேற்படி ரூ. 55, நகருக்குள் மட்டும் ஓடும் பஸ் போக்குவரத்து, அவ்வளவாக ஆதாயம் தரக்கூடியதில்லையாதலால், அவற்றிற்கான வரி வீதங்களில் மாறுதல் ஏதும் இராது. தனியார் துறை பஸ் உரிமையாளர்கள் செய்து கொண்ட முறையீட்டைக் கருத்தில் கொண்டு, அவர்கள் செய்துள்ள முதலீட்டிற்கு பயன் பெறத்தக்கவாறு, நாளொன்றுக்கு ஓடக்கூடிய உயர்மட்ட அளவை 320 கிலோ மீட்டரிலிருந்து 400 கிலோ மீட்டர்களாக நாம் உயர்த்தியுள்ளோம். இதனால் எல்லாப் போக்குவரத்து நிறுவனங்களின் ஆதாய வாய்ப்பினைப் பெருமளவில் உயர்த்தி கூடுதல் வரி விதிப்பு பொறுப்பினை ஏற்பதில் இடர் அதிகமிராதிருக்க வழி கோலப்படுகிறது. மேலும் 700 கிலோகிராமும் அதற்குக் குறைவாகவும் தன் எடை (அன் லேடன் வெயிட்) கொண்ட மோட்டார் கார்களுக்கான காலாண்டு வரியை ரூ. 21-லிருந்து ரூ. 30 ஆகவும் 700 கிலோகிராமுக்கு மேற்பட்டு 1,500 கிலோகிராமுக்கு மேற்படாத தன் எடை கொண்ட கார்களுக்குக் காலாண்டு வரியை ரூ. 30-லிருந்து ரூ. 40 ஆகவும் 1,500 கிலோகிராமுக்கு மேற்பட்ட தன் எடையுள்ள கார்களுக்கான வரி வீதங்களை இதையொத்த முறையில் உயர்த்துவது எனவும் முடிவு செய்துள்ளோம். மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், முச்சக்கர வண்டிகள் மீதான வரி வீதங்களில் உயர்வு ஏதும் இராது.

குறுகிய கால உரிமங்கள் (ஷார்ட் டேர்ம் லைசென்ஸ்) குறித்தும் மேற்சொன்ன அடிப்படையில் வரி வீதங்கள் உயர்த்தப்படும்.

இவ்வரி உயர்வுகள் 1967-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ம் நாள் முதல் செயலுக்கு வரும். எந்த வண்டிகள் குறித்து 1967 ஜூன் 30-ம் தேதிக்குப் பிறகும் வரி வீத உயர்வு குறித்த அறிவிப்பு அரசிதழில் வெளியிடப்படு முன்னரும் செலுத்தப்படுகின்றதோ அந்த வண்டிகள் குறித்து கூடுதல் வரியை வசூலிப்பதற்காகவும் வகைசெய்யப்பட்டுள்ளது.

a 1967, ஜூன் 23-ந் தேதியன்று மாநில அரசிதழ் தனி வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

[திரு. மு. கருணாநிதி] [1967 ஜூன் 28

இச்சட்ட வரைவினை ஏற்று நிறைவேற்றுமாறு நான் இம்மன்றத்தினரை வேண்டிக்கொள்கிறேன்.

***திரு. கே. விநாயகம் :** மாண்புமிக்க சபாநாயகர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற பில்லின் நோக்கம் **to facilitate implementation of the schemes of national development** என்று பொதுவாகவே போட்டிருக்கிறார்கள். அதன் பொருள், பொருள் வேண்டும். நாட்டிலே நல்ல காரியங்களை செய்ய, நாட்டின் அபிவிருத்தி பொறுத்து செய்ய வேண்டிய காரியங்களுக்கு அமைச்சரவைக்கு இன்று பொருள் வேண்டும். இவ்வளவு வேண்டுமென்று சொல்லி அவர்கள் கொண்டுவருகிற சட்டத்தை நடைமுறையில் நாங்கள் வாதத்திற்குத் தடுக்கலாமே தவிர அவர்கள் கையில் வைத்திருக்கிற பலத்தைக் கொண்டு அதை வெற்றிகரமாக நடத்துவார்கள் என்று எங்களுக்குத் தெரியும். ஆயினும் இதைப் பரிசீலித்துப் பார்த்து ஒருவேளை நாங்கள் சொல்கிற வாதம் ஐயா அவர்களுக்கு (குறுக்கீடு), அமைச்சர் அவர்களுக்கு பொருத்தமானது என்று தோன்றினால் பிறகு இதைப் பரிசீலிக்க அவர்கள் அவகாசம் எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் திட்டம் போட்டிருக்கிறோம். நம் அரசின் கொள்கை இந்தப் போக்குவரத்துக்களை எல்லாம் தேசியமயமாக்குவது என்பது. அதுவே ஒரு பெரிய மாறுதல். அதனால் அத்துறையில் ஏற்பட்டிருக்கிற அதிர்ச்சியும், அதிலுள்ள விளைவும், இவற்றிலிருந்து அவர்கள் இன்னும் விடுபடாமல் முதலாளிகள் தத்தளித்துக் கொண்டிருக்கிற நிலையில் அவர்களை மெல்ல மெல்ல கொல்லவேண்டும், கொல்லுவதை மெதுவாகக் கொல்லவேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்த அவையில் தகாத வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது என்று விதியிருக்கிறது. தகாத வார்த்தைகளின் பட்டியலில் கொல்லுவது, அவர்களைக் கொல்லுவது என்பதும் சேரும். ஆகவே அந்த வார்த்தையை உபயோகிக்கக்கூடாது என்று நாங்கள் உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொல்லுவது என்ற சொல்லைத் தடை செய்வதற்கு மேற்கோள் இல்லை.

திரு. கே. விநாயகம் : ஆகவே, அவர்களை முடித்துக் கட்டிவிட வேண்டும்—இது நாசூக்காக இருக்கிறதல்லவா ?—என்ற முடிவிற்கு வந்த பிறகு அவர்களை இன்னும் இம்சிக்கவேண்டுமா என்பதுதான் என் கேள்வி. ஒரு பெர்மிட் முடிந்த பிறகு திரும்பவும் அவர்கள் பெர்மிட்டை ரெனியூ செய்வதில்லை என்ற அடிப்படைக் கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை அதைக்கூட யோசித்துப்பார்த்து மாற்றிக் கொள்வார்கள். அந்நிலையில் பெர்மிட் காலம் முடிகிறவரையிலாவது கொஞ்சம் பொறுத்திருக்கக் கூடாதா ? அதைவிட்டு விட்டு இப்போது அவர்களுக்கு வரி போடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஒரு ஸீட்டுக்கு பத்து ரூபாய் வரி போட்டால் போதும், ஒரு பஸ்ஸில் ஐம்பது ஸீட்டுகள் இருந்தால் 500 ரூபாய்க்கு மேல் ஒரு க்வார்ட்டருக்கு கட்டவேண்டியிருக்கிறது, முதலாளிக்கு. இது அதிகம் என்று நாங்கள் கருதுகிறோம். அவர்களை விலக்கிவிடவேண்டுமென்று முடிவிற்கு வந்த பிறகு அவர்களுக்கு ஒரு அவகாசமும் தராமல் இருக்கும்போது இப்படிச் செய்தால் அவர்கள் போட்டிருக்கிற முதல் என்னவாகும் ? அமைச்சரவை என்ன நினைக்கிறதென்றால் பஸ் முதலாளிகள் என்றால் 50 அல்லது 100 பஸ்கள் வைத்துக்கொண்டிருக்கிற ஃப்ளீட் ஓனர்கள்தான் அவர்கள் கண்களுக்கு படுகிறார்களே தவிர நாலைந்து, அல்லது பத்து பஸ்களுக்குள் உள்ள சிறிய சிறிய முதலாளிகளைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை என்று நான் கருதுகிறேன். நாலைந்து பஸ்கள் வைத்திருப்பவர்களை எடுத்துக் கொண்டால் முதலீடு அவர்களுடையதல்ல. அவர்கள் மார்கட்டில் கடன் வாங்கி, பெரும்பாலும் வடக்கத்திய முதலாளிகளிடம் ஹூண்டி ஸிஸ்டம்

1967 ஜூன் 28] [திரு. கே. விநாயகம்]

மூலம் கடன் வாங்கி கலக்ஷன் வர வர, குறிப்பிட்ட நாட்களுக்குள் அந்தப் பணத்தைச் செலுத்துகிறார்கள். இத்தொழிலில் எல்லோருக்கும் பெரிய அளவில் லாபம் வருகிறது என்று நினைப்பது அவ்வளவு சரியல்ல. அகவே, என் வேதனை எல்லாம் இந்த ஸ்மால் ஆப்பரேட்டர்ஸ், ஐந்து பஸ்களுக்குள் வைத்திருப்பவர்கள் கடன் வாங்கித்தான் முதலீடு செய்திருக்கிறார்கள். அவர்கள் ஆடம்பரமாக வாழ்க்கையை நடத்துவதுபோல் தோன்றலாம். ஆகவே அவர்களை பெரும் முதலாளிகள் என்று நினைக்கிறார்கள் எனத் தோன்றுகிறது. அவர்களுக்கு தருணம் தர வேண்டும். குறைந்தது, பெர்மிட் எக்ஸ்பயர் ஆகும்போது இன்னொரு முறையாவது ஒரு வருடம் என்று செய்ய யோசிக்கமுடியுமா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே நேரத்திலே இதைப்பற்றித் தீவிரமாக நாம் ஆலோசிக்க ஒரு அசெம்ப்ளி கமிட்டி போட்டு, அதிலே இந்த துறையில் அனுபவம் பெற்றவர்களைப் போட்டு, அவர்களுடைய கட்சியில் இருக்கிறவர்களையும், எங்களுடைய கட்சியில் இருக்கிறவர்களையும் விஷயம் தெரிந்தவர்களைப் போட்டு, பிறகு தேசியமயமாக்குவதைப் பற்றி யோசிக்கவேண்டும்.

இந்த மசோதாவைப் பொறுத்த வரையில், அடிஷனல் டாக்ஸேஷன் ஸீட்டுகளுக்கு அதிகமாகப் போடுவது, கட்டணத்தைக் கட்டுவது, இது அதிகம் என்று நான் கருதுகிறேன். அப்படிக் கருதுகிற நேரத்தில், இவைகளை நாஷனலைஸ் செய்துவிட்டால், இந்தத் துறையிலே ஈடுபட்டு உத்தியோகம் செய்கிறவர்கள்—கண்டக்டர்கள், டிரைவர்கள், மற்றவர்கள்—இவர்களைத் திரும்பவும் உத்தியோகத்தில் எடுத்துக்கொள்ளுகிறோம் என்ற உத்திரவாதம் இருக்கிறதா ? 'Provided they have enough qualifications'. அவர்களுடைய திறமை இருந்தால், அவர்களுக்குத் தகுதிகள் இருக்கின்றன என்று தெரிந்தால், திரும்பவும் அவர்களுக்கு உத்தியோகம் தருவதற்கு உத்திரவாதம் கொடுக்க முடியுமா என்று அமைச்சரவை யோசிக்கவேண்டும்.

இரண்டாவதாக, அவர்களுக்காகப் பரிந்து பேசுவதைப் போல 250 மைல்களுக்குப் போகலாம் என்று சொல்லுவதானது, 200 மைல்கள் போகிறவர்கள் இடைக்காலத்தில் லாபம் சம்பாதித்துக்கொண்டு வெளியே போகலாம் என்று சொல்லுவது போல இருக்கிறது. 250 மைல்கள் போகவேண்டுமென்றால், அதிகப்படியான ஓர்க்லோட், வேலை பளு, யார் மீது விழும் ? அந்தத் தொழிலாளர்கள்தான் வேலை செய்ய வேண்டும். தனிப்பட்ட முதலாளிகள் எந்த அளவுக்கு வேலை வாங்க முடியுமோ அந்த அளவுக்கு வாங்கி லாபம் சம்பாதிப்பது என்பதுதான் இருக்கக் கூடிய கொள்கை—அதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்—எல்லோருக்கும் அது தெரிந்தது தான். அவர்களுக்கு ஓர்க்லோட் அதிகமாக ஏற்படுமே, அவர்களுக்கு ஊதியம் தர வேண்டிய அவகாசமோ, உத்தரவோ போட முடியுமா என்று யோசிக்க வேண்டும்.

இன்னும் இவைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்ட பிறகு, இதைச சார்ந்துள்ள உத்தியோகஸ்தர்களுக்கு என்ன உத்திரவாதம் என்றும் யோசிக்க வேண்டும். இவைகளையெல்லாம் பேசுவதை விட, கொஞ்சம் தாமதமாகவாவது போகக்கூடாதா ?

'Why do the Government want to kill the goose that lays the golden egg ?' நாம் எடுத்துக்கொண்டால் எவ்வளவு கஷ்டமென்று தெரிந்தாலும், இப்போது வெளிப்படையாகவும் சொல்லமாட்டார். அனுபவத்துடன் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சொல்லுவார்,

'That the nationalisation scheme is an utter failure; என்று அவரே வந்து சொல்லுவார். அனுபவம் வந்தால்தானே தெரியும். இப்போது கானல்கள்—விறுவிறுப்பான யோசனைகளெல்லாம் இருக்கின்றன. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு என்ன அனுபவம் என்று சொல்லுவார். நாங்களும் உங்களைச் சேர்ந்தவர்கள்தானே 'We are all

people in this country striving to work for the welfare of the people.' ஆதலாலே பஸ் முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பரிந்து பேசுவதாக . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அடிக்கடி நான் பஸ் முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்கவில்லை என்று சொல்லுவது "அப்பா குதிருக்குள் இல்லை" என்று சொல்லுவது போல் இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : அப்பாவும் இல்லை, குதிரும் இல்லை. எந்த அப்பா எந்தக் குதிரில் புகுந்திருக்கிறார் என்று பின்னாலே தெரியும். எங்கள் கண்ணோட்டமெல்லாம், இது நாங்கள் போட்ட திட்டம் தான். 'Nationalisation is a scheme of the Congress Party.' நாங்கள் ஒரு முறை வைத்திருந்தோம்—120 மைல்கள் என்று வைத்திருந்தோம். இப்போது குறைந்து வந்திருக்கிறது 75 மைல் என்று. எத்தனை பேர்களை பாதிக்கும் என்று கணக்கிட்டு எடுத்துப் பார்த்தால் தெரியும். மெல்ல மெல்லப் போகவேண்டும். திரும்பத் திரும்ப அதைத்தான் சொல்லுவேன். இந்த அமைச்சரவையின் குறிக்கோளே 'To move very cautiously' அண்ணா அவர்களே சொன்னார்கள் 'My steps are measured' என்று. கலைஞர் அடி மாத்திரம் கொஞ்சம் வேகமாகப் போகிறதோ என்பதுதான் எங்கள் கவலை. தலைவர் அடி எடுத்து வைப்பது ஜாக்கிரதையாக இருக்கிறது. கலைஞர் போவது தாவுகின்றது போல இருக்கிறது. சிங்கம், வேங்கை போல தாவுகிறார். மெல்லப் போனால் கால் உடையாமல் இருக்கும் என்று சொல்லிக்கொண்டு இந்த மசோதாவைப் பூராவும் எதிர்க்கிறேன்.

***திரு இராம. அரங்கண்ணல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவினை எந்த நோக்கத்தோடு நாம் கொண்டுவருகிறோம் என்பது தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த மசோதாவை அப்படியே பூரணமாக எதிர்க்கிறேன் என்று சொன்ன கனம் உறுப்பினர் விநாயகம் அவர்கள், எப்படி அவர்கள் பேச்சிலே தமிழும் ஆங்கிலமும் கலந்து மணிப்பிரவாள நடை பெருக்கெடுத்து ஓடுகிறதோ அதே போலத் தன்னுடைய கொள்கையிலும் ஒரு பக்கத்தில் சோஷலிஸத்தை—அதாவது தேசிய மயமாக்கும் கொள்கையை— ஆதரிப்பது போலவும், நமக்கு ஆதரவு தந்தவர்களை விட்டுவிட்டு என்ன செய்வது என்று அவர்களை ஆதரிப்பது போலவும், கொள்கையிலும் மணிப்பிரவாளத்தைக் கலந்து உருக்கமாக வாதாடுவதைப் போல எடுத்து உரைத்திருக்கிறார்கள்.

இதனுடைய நோக்கம், இந்த அரசைப் பொறுத்த வரையில், வேண்டுமென்றே வரி போட்டு வாட்ட வேண்டுமென்ற கொள்கை கிடையாது. அதே நேரத்தில் வரி போட வேண்டிய சூழ்நிலை இங்கு இருக்கிறது. திட்டத்திற்காக முன்பு இருந்ததை விட அதிகமான தொகையை செலவழிப்பதாக இந்த நிதி நிலை அறிக்கையில் வரையறுத்திருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் அதிகமான பணத்தைப் பெறவேண்டிய சூழ்நிலையில், அதற்கு உரிய இடமாகக் கருதி, போக்குவரத்துத் துறையிலே ஓரளவுக்கு வீதத்தைக் கூட்டலாம் என்ற முடிவுக்கு நாம் வந்திருக்கிறோம். அப்படி வந்திருக்கிற நேரத்தில், நண்பர் விநாயகம் அவர்கள் சொன்ன வாதத்தை ஒப்புக்கொண்டு பார்த்தால், வீதத்தை மாத்திரம் உயர்த்தினால் அது ஓரளவுக்கு இன்னும் பளுவை அதிகமாகச் சுமத்துகிறோமே, தாங்க முடியுமா என்ற அவர்கள் வாதம் சரியாகத் தோன்றக் கூடும். நாம் அதை மட்டும் செய்யாமல், அதே நேரத்தில் 320 கிலோ ஓட்டலாம் என்று இருப்பதை 400 கிலோவாக ஆக்கி—200 மைல்கள் என்று இருப்பதை 250 மைல்கள் என்று ஆக்கலாம் என்று தெரிவித்திருக்கிறோம்.

நீண்ட பல காலமாகவே, எதிர்க்கட்சி உறுப்பினர் குறிப்பிட்ட, தனிப்பட்ட சிறு முதலாளிகள்—3–4 பஸ்களை வைத்திருக்கிற முதலாளிகள்—இந்த ஒரு மனக் குறையோடு இருந்து வந்தார்கள். அதாவது அவர்கள் ஓட்டுகிற பஸ்ஸின தூரத்தை, ட்ரிப்புகளின் அளவினை அதிகமாக ஆக்காமல் இருக்கிற காரணத்தினால் போதிய வருமானத்தைப் பெற முடியவில்லை என்று—பெரிய முதலாளிகள் அல்ல—இவர்கள் பரிவோடு சொன்னார்களே அந்த சிறு சிறு முதலாளிகள் மத்தியில் மனக்குறை இருந்தது. வரியின் பெயரால் அவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற எண்ணத்தில்தான அவர்கள் அதிகமான மைல்கள் வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதே நேரத்தில் அதன் மூலமாக நாம் ஓரளவு வருவாய் தேட வேண்டுமென்ற கொள்கையோடு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அவர்கள் பேசிய நேரத்தில், ஏதோ இப்படிச் செய்கிற காரணத்தினால் கண்டக்டர்களுக்கு வேலை பளு அதிகமாக ஆகிவிடுமே, டிரைவர்களுக்கு வேலை பளு அதிகமாக ஆகிவிடுமே என்று—எப்படித்தான் இவ்வளவு இரக்கம் வருகிறதோ தெரியவில்லை—இதை இரக்கம் என்று எடுத்துக் கொள்வதா ? அல்லது இங்கே இருந்துகொண்டு இதையெல்லாம் செய், செய் என்று தூண்டிவிடுவதா என்று தெரியவில்லை—அவர்களுக்கு சில சமயங்களில் இரக்கம் அதிகமாக வருகிறது. இந்தக் கருத்தைக் கூட தனியாக எடுத்துச் சொல்லி விளக்கம் பெற்றிருக்கலாம். எப்படியாவது தூண்டிவிட வேண்டும், எப்படியாவது கவிழ்க்க வேண்டும்— என்று— எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தீயை மூட்டுகிறார். அது அவருடைய பண்பாக இருக்கலாம்—உறுப்பினர் விநாயகம் ஒரே இடத்தில் இருந்தவர் அல்ல ; அவரைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். இப்படித் தூண்டிவிடும் முறையில் எடுத்து உரைத்தால், சர்க்காரைப் பொறுத்த வரையில், தொழிலாளர்களுக்கு எந்த விதமான பாதகமும் வரக் கூடாது என்று எந்த அளவுக்கு அக்கறை காட்டி வருகிறோம் என்று நாடு புரிந்து கொண்டிருக்கிறது. முதலாளிகள்—தொழிலாளிகள் பிரச்னை பெரிய பெரிய மோட்டார் பஸ் போக்கு வரத்து நிறுவனங்களில் ஏற்படுகிறதே தவிர, சிறு சிறு முதலாளிகள் மத்தியில் இப்படிப்பட்ட பிரச்னைகள் வருவதில்லை. ஏனென்றால் இந்த பஸ்களை வைத்துக்கொண்டிருக்கிற முதலாளிகளும், தொழிலாளர்களும் சுமுகமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். வேறு இடத்தில் இருக்குமானால், கண்காணித்து நீதி வழங்க இன்றையதினம் சர்க்கார் தயாராக இருக்கும். அந்தத் துறையிலே அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட வேண்டாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லோரையும் ஒழித்துவிடப்போகிறோம், எல்லோரையும் தொலைத்துவிடப்போகிறோம் என்ற வார்த்தைகளை உபயோகப்படுத்திப் பேசினார்கள். அடுத்தபடியாக நானும் உங்களைச் சேர்ந்தவன்தானே என்று பேசத் தவறவில்லை. ஆளும் கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையிலும், எந்தக் கட்சியானாலும், எவ்வளவு எரிச்சலோடு பேசுகிறவர்களானாலும், எங்களை அழிக்க வேண்டும், ஒழிக்கவேண்டும் என்று கருதுகிற அத்தனை பேர்களையும் அண்ணன் தம்பி போல் கருதுகிற நிலையில் கழகம் தோன்றிய நாளிலிருந்து நடந்து வருகிறோம். அதே வகையில் சொல்ல வேண்டுமென்றால், நண்பர் திரு. விநாயகம் அவர்கள் திருப்பிக் கேட்கக் கூடும். அப்படியானால் இந்த நாட்டில் இருக்கிற முதலாளிகள் மற்றவர்கள் எல்லோருமே உங்களுடைய அண்ணன் தம்பிகளா ? என்று கேட்கக் கூடும். உண்மைதான். அவர்களும் நம்முடைய அண்ணன் தம்பிகள் என்றுதான் ஏற்றுக்கொள்ள வேண்டும். காந்தியடிகளைப் பொறுத்த வரையில் அவர் தன்னுடைய வாழ்நாளில் கடைப்பிடித்த பெரிய கொள்கை தர்மகர்த்தா சித்தாந்தம். தர்மகர்த்தா சித்தாந்தம் என்றால், அடித்து அல்லது வெளிநாடுகளில் கண்டிருப்பது போல் சிரம் அறுத்த புரட்சி. அப்படிப்பட்ட புரட்சிகள் மூலம் செய்யாமல், நல்லவிதமாக மனதைத் திருத்தி, பக்குவப்படுத்தி, அதன் மூலம் பெரிய சீமான்கள் பெரிய பிரபுக்கள் இவர்கள் உள்ளத்திலும் ஒரு மாறுதலைக் கொண்டுவர வேண்டும். காந்தியடிகளின் தர்மகர்த்தா சித்தாந்தத்தை நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், கடைப்பிடிக்கின்ற வகையிலேதான் நிலைமை இருக்கிறது. அவர்கள் எவ்வளவு பெரிய நிலப்பிரபுக்களாக இருந்தாலும் சரி, ஜமீன்தார்களாக இருந்தாலும் சரி,

அவர்களை ஒழித்துவிட வேண்டும், அவர்களையெல்லாம் அந்தமான் தீவில் இறக்கிவைத்துவிட்டு அவர்களுடைய சொத்துக்களைக் கைப்பற்றியே காரியங் களைச் செய்ய வேண்டும் என்ற நிலையிலே நம்முடைய அரசாங்கம் இல்லை. அவர்களுடைய மனதிலே மாறுதலை ஏற்படுத்த வேண்டும், உள்ளம் பக்குவப்பட வேண்டும். மெல்ல, மெல்ல அவர்களுடைய உள்ளத்தையும், பழைய தன்மையையும் மாற்றி, அவர்களிடமிருந்து எந்த அளவுக்கு நாட்டுக்குத் தேவையானவைகளைப் பெற முடியுமோ அவைகளையெல்லாம் பெற வேண்டும் என்று கொஞ்சம் கூடத் தளராத மன உறுதியோடு இருந்துகொண்டிருக்கிறோம். அந்த வகையில் பார்த்தால், கொண்டுவரப் பட்டிருக்கிற இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலே, நமக்குப் பணம் தேவைப்படுகிறது. அதே நேரத்தில் பொதுமக்களைப் பாதிக்காத வகையி லும், அதே நேரத்தில் அதிகமாக லாபம் பெறக்கூடியவர்களிடமிருந்து அந்தத் தொகையைப் பெறும் வகையிலும், மிகவும் சாமர்த்தியமாக உருவாக்கப்பட்டிருக்கிற மசோதா என்று சொன்னால், அது மிகையாகாது. ஆகவே, இந்த மசோதாவை ஆதரிக்கிறேன் என்று சொல்லி, என் னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காசிராமன் அவர்கள் இந்த மசோதாவின் மீது மட்டுமல்லாமல் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தி லுள்ள கருத்துக்களைப் பற்றியும் உரையாற்றுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

***திரு. நா. காசிராமன் :** அதாவது, திருத்தத்திலுடைய நோக்கத்தைப் பற்றி. தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் பஸ்களை தேசியமயமாக்க வேண்டும்என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டுவிட்டது. இந்தப் போக்குவரத்துத் தொழில், 30, 40 வருஷங்களுக்கு முன்பிருந்த நிலையை அரசாங்கத்திலுள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தப் போக்கு வரத்துத் தொழிலானது 30, 40 வருஷங்களுக்கு முன்பு என்ன நிலையில் இருந்தது, அப்பொழுது அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் என்ன நிலையில் இருந்தார்கள், பிறகு அந்தத் தொழிலை மேற்கொண்டவர்கள் எவ்வளவு கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் அரசாங் கத்திலுள்ளவர்கள் நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். பொதுவாக எந்தத் தொழிலையும் ஆரம்ப காலத்திலிருந்தே, அடிமட்டத்திலிருந்தே, அரசாங்கம் எடுத்து நடத்துவது என்பதில்லை. இன்ஷூரன்ஸ் தொழில் எடுத்துக்கொண்டால், பல பேர் இந்த ஆயுள் இன்ஷூரன்ஸ் தொழிலைச் செய்து, அந்தத் தொழில் நல்ல முழு வளர்ச்சி அடைந்த பிறகு தான், அதை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. அதைத் தப்பு என்று சொல்லவில்லை. அதே போல போக்குவரத்துத் தொழில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் அதை அரசாங்கம் எடுத்து நடத்த வேண்டும் என்ற எண்ணம் அப்பொழுதிருந்த அரசாங்கத்திற்கு இல்லை. காரணம், வெளி நாட்டினர் அரசாங்கம் என்று சொல்லிவிடலாம். இருந்தாலும் கூட ஒரு தொழிலை எடுத்துக்கொண்டால், அதற்கு ஆரம்ப காலத்தில் பல கஷ்டங்கள் ஏற்படும். பாலாரிஷ்டம் என்று சொல்வார்கள். அதா வது குழந்தை பெரியவனாக வளர்வதற்கு முன்பு என்னென்ன உடம்புக்கு வருமோ, அதுபோல் ஆரம்ப காலத்தில் ஏற்படுகின்ற அத்தனை கஷ்டங்களை யும், ரிஸ்குகளையும் அனுபவித்துக்கொண்டிருக்கின்ற பஸ் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு தக்க ஒரு நஷ்ட ஈடு கொடுக்கத்தான் வேண்டும். நஷ்ட ஈடு கொடுக்காமல் இருந்தால், அதனால் பின்னால் பல விளைவுகள் ஏற்பட ஏதுவாகும். அதே நேரத்தில் நமது நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்று சொல்லுகிறோம். சிறு தொழில்கள் வளர வேண்டும் என்று சொல்லுகிறோம் பொதுவாக எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டால் ஆரம்ப காலத்தில் கச்சாப் பொருள் பற்றாக்குறை உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் விற்காமல் இருக்கக்கூடிய நிலை இந்தக் கஷ்டங்களை எல்லாம் அந்தத் தொழிலிலே ஈடுபட்டவர்கள் அனு பவித்து, பிறகு அந்தத் தொழில் மேம்பாடு அடைந்து, அதிலிருந்து லாபம் வரக்கூடிய நல்ல நிலைமையில் அந்தத் தொழிலை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்று சொல்லக்கூடிய நிலைமை வந்துகொண்டிருக் கிறது. இந்தப் 'போக்குவரத்துத் தொழில் ஒரு நல்ல நிலைமையில் இருக்

கும்பொழுது அதை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமானால், அந்தத் தொழி லில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்துவிட்டுத்தான் அந்தத் தொழிலை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், தமிழ்நாட்டில், குறிப்பாகத் தொழில் வளம் அதிகமாகப் பெருகவேண்டும் என்று விருப்பமுள்ள நிலையில், தமிழ்நாட்டில் பொதுவாகத் தொழிலில் ஈடுபடு பவர்கள் மிக உற்சாகம் குறைந்தவர்களாக ஆகிவிடுவார்கள். காரணம் அவர்களுக்கு எப்பொழுதும் ஒரு பயம் இருந்துகொண்டே இருக்கும். ஒரு தொழிலை நல்ல விதத்தில் நடத்தி முன்னுக்குக் கொண்டுவந்தால், அதை அரசாங்கம் எடுத்துக்கொண்டுவிடுமோ, நஷ்ட ஈடு கொடுக்காமல் போக்குவரத்துத் தொழிலை எடுத்துக்கொண்டது போல் எடுத்துக்கொண்டு விடுமோ என்ற பயமும், தயக்கமும் ஏற்படும். அதன் காரணமாக நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படாது, அந்த நிலை ஏற்படுவதற்கு ஏதுவாகும். அது நாட்டிற்கு நல்லதல்ல என்பதை அரசாங்கத்திலுள்ளவர்கள் நன்றாக உணர்ந்துகொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

அதோடுகூட, பஸ் தொழிலை நடத்துபவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கா விட்டால், மேல் சபையிலே முன்னாள் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் சொன்னதுபோல, பல கோர்ட்டு நடவடிக்கைகள், அதாவது லிடிகேஷன் என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள், ஏற்படுவதற்கு வழி வகைகள் உண்டாகும். பஸ் தொழிலில் ஈடுபட்டவர்கள் பஸ்களை வாங்கி வைத்துக்கொண்டோ அல்லது டிரைவர், கண்டக்டர் ஆகியவர்களை வைத்துக் கொண்டோ பெர்மிட் கேட்பதில்லை. பெர்மிட் கொடுத்த பிறகுதான் பஸ் கள் வாங்க வேண்டும். பெர்மிட்டைப் பார்த்தாலே தெரியும். '**Buses should be produced within four months from the date of the receipt of the order**' என்று பெர்மிட்டில் போட் டிருக்கும். பெர்மிட் கொடுத்த பிறகுதான் அவர்கள் பஸ்களை வாங்குகிறார்கள். தேசிய மயமாக்குவதுபற்றி முன்பு இரண் டொருவர் சொன்னதினாலே நானும் அதைப் பற்றிய சில கருத்துக்களைச் சொன்னேன்.

இந்த மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு திருத்த மசோதா மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வரு மானத்தைப் பெருக்க வேண்டும் என்ற ஒரு காரணத்திற்காக வரியை அதிகப்படுத்துகிறார்கள். வரியை உயர்த்தும்பொழுது அதிகப்படியான அளவிலே உயர்த்துகிறார்கள். இது மிகவும் அதிகமாக உயர்த்தப்படுகிறது. அதோடுகூட, இந்த வரி உயர்வு பற்றி நமது முதல் அமைச்சர் அவர்கள் பட்ஜெட் உரையில் படிக்கும்பொழுது டவுன் சர்வீசுக்கு இந்த வரி விதிப்பினால் அதிகமான வரி உயர்வு இராது என்று சொன்னார்கள். டவுன் சர்வீஸ் இரண்டு வகையாக இருக்கிறது. நகருக்குள்ளே ஓடுகின்ற டவுன் சர்வீஸ் இருக்கிறது. நகரத்திற்குப் புறம்பாக ஓடுகிற டவுன் சர்வீஸ் இருக்கிறது. உதா ரணமாக சொல்ல வேண்டுமானால், மைலாப்பூரிலிருந்து பாரிஸ்கார்னருக்குப் போகிற பஸ், நகரத்திற்குள்ளே ஓடுகிற டவுன் சர்வீஸ். பிராட்வேயிலிருந்து ஆலந்தூருக்கு போகிற பஸ் நகரத்திற்கு வெளியே ஓடுகிற டவுன் சர்வீஸ். பிராட்வேயிலிருந்து மேப்பூருக்குப் போகிற 53-ம் நெம்பர் பஸ் நகரத் திற்கு வெளியே ஓடுகிற டவுன் சர்வீஸ். மைலாப்பூரிலிருந்து பாரிஸ் கார்னருக்குப் போகிறதுபோல் உள்ள நகரத்திற்குள்ளே ஓடுகிற டவுன் சர்வீசுக்கு ஒரு ஸ்டேஜ் காரியேஜுக்கு ஒரு குவார்டருக்கு ரூ. 28, 33, 38 என்று ஒரு நாளைக்குச் செல்லுகின்ற தூரத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு வரி போடுகிறார்கள். அதே சமயத்தில் நகரத்திற்கு வெளியே பாதியும், நகரத்திற்குள்ளே பாதியும் ஓடுகிற பிராட்வே-ஆலந்தூர், பிராட்வே-மேப்பூர், திருச்சியில் சொல்ல வேண்டுமானால், மெயின்கார்ட் கேட்டிலிருந்து பாய்லர் பிளாண்டுக்கு ஓடுகிற பஸ்கள், இவைகளுக்கு வேறு விதத்தில் டாக்ஸ் போடப்படுகிறது. 210 கிலோ மீட்டருக்கு ரூ. 35, 210-லிருந்து 270 கிலோ மீட்டர் ஓடுகிற பஸ்களுக்கு, ஒரு ஸ்டேஜ் காரியே ஜுக்கு ஒரு குவார்டருக்கு ரூ. 40, 270 கிலோ மீட்டருக்கு மேலே ஓடுகிற பஸ்களுக்கு ரூ. 45 என்று தற்பொழுது போடப்பட்டு வருகிறது. டவுனுக்கு உள்ளே பாதி, டவுனுக்கு வெளியே பாதி ஓடுகிற பஸ்களுக்கு, அதாவது

முனிசிபல் நகரத்திற்கு உள்ளேயும், வெளியேயும் ஓடுகிற பஸ்களும், டவுன் சர்வீஸ் என்ற கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. முதல் அமைச்சர் அவர்கள் சொல்லும்பொழுது டவுன் சர்வீசுக்கு வரி உயர்வு இல்லை என்று சொன்னார்கள். டவுன் சர்வீசுக்கு வரி உயர்வு இல்லை என்ற விளக்கம் இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதாவில் காணக் கிடைக்கவில்லை. ஆதலால்தான் நான் கூட ஒரு திருத்தம் கொடுத் திருக்கிறேன். டவுன் சர்வீஸ் என்று சொன்னால், ஒரு பஸ் ஒரு நாளைக்கு 200 மைல் ஓடுவதே மிகவும் கஷ்டம். நகரத்திற்குள்ளே ஓடும்பொழுது குறுகிய தெருக்கள் வழியாகச் செல்ல வேண்டும். அதோடுகூட, அடிக் கடி நிறுத்திப் போக வேண்டிய காரணத்தினால், ஒரு நாளைக்குக் காலையில் 5 மணியிலிருந்து இரவு 11 மணி வரையிலும் ஓடினால்கூட 180, 190 மைல் தாக்குப் பிடிப்பதே மிகவும் கஷ்டமான காரியம். காரணம், நடுவிலே நகர்ப் பகுதியிலே வேகமாகச் செல்ல முடியாது. அதே நேரத்திலே மெட் ராஸ்—திண்டிவனம், கோவையிலிருந்து-பழனி போன்ற ரூட்டுகளிலே நகர்ப் பகுதியைத் தாண்டியவுடன் வேகத்தில் ஓட முடியும். தன்னுடைய
4-00 p.m. பிரயாணத்தை குறுகிய காலத்தில் முடித்துக்கொள்ள முடியும். 200-க்கு மேல் 250 மைல் வரைக்கும் கூட ஓட முடியும். ஆனால் டவுன் பஸ் சர்வீஸிலே அப்படி ஓட முடியாது. இருந்தாலும் கூட, ஒரு நகர் பஸ் ஸுக்கு இரண்டு டிரைவர், இரண்டு கண்டக்டர்கள் போட்டுத்தான் ஆக வேண்டும். ஏனென்றால் அவர்களிடம் ஒரு நாளைக்கு எட்டு மணிக்குமேல் சட்டப் பிரகாரம் வேலை வாங்க முடியாது. ஆனால், பஸ்களை நிறுத்தி நிறுத்தி ஓட்டுவதால் அதிகச் செலவு ஆகும். இதையெல்லாம் மனத்தில் கொண்டுதான், டவுன் பஸ் சர்வீசுக்கு என்ஹான்ஸ்மெண்ட் ஆப் டாக்ஸ் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அதே நேரத்திலே நான் மெட்ராஸ் சிட்டி சர்வீஸை, கமர்ஷியல் அண்டர்டேகிங்ஸ் என்று கொடுக்கப்பட்டுள்ள பட்ஜெட் டாகுமெண்டை, அதன் 8-வது பக்கத்தில் பார்த்தேன். அவர்கள் கூட மோட்டார் வெஹிகிள்ஸ் லைசென்ஸ் பீஸ் என்கிற இனத்தில் தங்களுடைய பஸ்களுக்கு ஒதுக்கியிருக்கும் தொகை ரூ. 50 லட்சம். மோட்டார் வாகன வரிக்காக அரசாங்கத்தில், அவர்களும் நகரின் உள்ளேயும், வெளியிலேயும் பஸ்கள் ஓட்டுகிறார்கள். ஒதுக்கியிருக்கும் தொகை 1966-67-லும் சரி, 1967-68-லும் சரி ரூ. 50 லட்சம்தான். ஆகையினால், தெரிவது என்ன வென்றால், அரசாங்கத்தார் கூட தங்களுடைய பஸ் சர்வீசில் இந்த அதிகப்படி யான வரி விகிதத்தைக் கணக்கில் எடுக்கவில்லை என்பதுதான். அந்த அடிப்படையில் கமர்ஷியல் அண்டர்டேகிங்ஸ் உள்ள வண்டிகளுக்கு வரிக்காக ஒதுக்கியிருப்பதாக உணருகிறேன். ஆகையினால், சர்க்கார் கொண்டுவந் திருக்கும் வரி திருத்த மசோதாவில், நான் கொடுத்திருக்கும் திருத்தத தையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இல்லையென்றால், 210 மைலுக்கு உள்ளே, மெட்ராஸ் சிட்டிக்குள்ளே, திருச்சி-ஸ்ரீரங்கம், திருநெல்வேலி-மேலப்பாளையம், பாளையங்கோட்டை போகும் பஸ்களுக்கு வரி உயர்த்துவார்கள். நான் கொடுத்திருக்கும் திருத்தம் இல்லாமல் அவர்கள் சட்டத் திருத்தம் செய்தால், டவுன் பஸ் சர்வீசுக்கு வரி உயர்ந்து, பட்ஜெட் ஸ்பீச்சில் கொடுத்த உறுதிமொழிக்கு முரணாக முடியும். ஆகவே, அது அவசியம் என்பதால் தான், நான் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். திருத்தம் ஏற்றுக் கொள்ளப்படா விட்டால், மெட்ராஸ்- ஆலந்தூர் பஸ்ஸுக்கு ஒரு க்வார்டருக்கு, 54 சீட்டர் பஸ்ஸுக்கு, இப்பொழுது உள்ள விகிதப்படி ரூ. 9,720 ஆகும். ஆனால் திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், திருத்தப்பட்ட வரி ரூ. 11,880 ஆக இருக்கும். ஆக ஒரு வருஷத்திற்கு 54 சீட்டர் பஸ்ஸுக்கு ரூ. 2,160 அதிகமாகும். 210 கிலோ மீட்டருக்கு மேல் ஓடும் பஸ் ஒன்றுக்கு திருத்தப் பட்ட வரி விகிதத்தின் படி 10,800 ரூபாய் ஆகும். அதே நேரத்தில் திருத்தப்படாத வரி விகிதத்தின்படி ரூ. 7,560 ஆக இருக்கும். அந்த வகையில் ரூ. 3,240 அதிகமாக இருக்கும். நகர் பஸ்கள் லாபகரமாக இல்லை என்று முதல் அமைச்சரவர்கள் ஒத்துக் கொண்டு இருக்கிறார்கள். இம்மாதிரி 2,000, 3,000 ரூபாய் அதிகமாக ஏற்பட்டால், டௌன் பஸ் சர்வீசை நடத்துகிறவர்கள், பெரிய முதலாளிகளாக இருந்தாலும் சரி, சிறிய முதலாளியாக இருந்தாலும் சரி, அவர்களுக்குச் சங்கடம் ஏற்படும். தேசியமயம் என்கிற பிரச்சினை இருக்கும்போது பஸ்காரர்களுக்கு கடன் வாங்குவதும் சிரமமாக இருக்கிறது. வரி உயர்வைக் கொடுக்கவும் அவர்

களுக்குக் கடன் கிடைக்காது. உண்மையிலேயே முதல் அமைச்சர் கொடுத்த உறுதி மொழி செயல் படுத்தப்பட வேண்டும் என்கின்ற ஒரே காரணத் திற்காகவே நான் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அதே நேரத் திலே 250 மைலாக உயர்த்திருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும். நான் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு என் நன்றியை யும் வணக்கத்தையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

*திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: தலைவர் அவர்களே, நமது ஆட்சியின் கொள்கையெல்லாம், அடிமட்டத்தில் இருக்கும் ஏழை எளிய வர்கள் வாழவேண்டும் என்பதுதான். அந்த முறையில் பஸ் முதலாளி களுக்கு வரிகளைப் போட்டால் யார் கொடுக்கப் போகிறார்கள்? உலகத்தி லேயே அதிகமான வரி விகிதம் உள்ள நாடு நம் இந்திய நாடுதான். பல்லாண்டு காலமாகவே, ஒவ்வொரு ஆண்டும் வரிகள் கூடிக்கொண்டே போகின்றன, எல்லையில்லாமல் கூடிக்கொண்டு போகிறது. அது யார் தலைமேல் போய் விழுகிறது? அடிமட்டத்தில் உள்ள ஏழைகள் பேரில் தான். ஏனென்றால், பஸ் கட்டணம் அதிகம்; ரயிலில் போக முடி யாது, அவர்களும் கட்டணத்தை உயர்த்தி விட்டார்கள். எல்லாத் துறை யிலும் இப்படி அதிகரித்துக் கொண்டே போனால் யார் வாழ்வது? இப்படிக் கூட்டிக் கொண்டு போவதை விட செலவைக் குறைத்துக் கொண்டு, வருவாயையும் பெருக்க பிரயத்தனம் செய்யாமல் இருப்பது தான் நன்றாக இருக்கும்.

எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் பஸ்ஸில் உள்ள கஷ்டங் கள் பற்றித் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதேமாதிரி லாரி போக்குவரத்தை எடுத்துக் கொண்டால், நிலைமை சகிக்க முடியாமல் இருக்கிறது. நம் நாட்டில் ஒரு லாரிக்கு ரூ. 3,700 வரி என்றால், மிக உன்னதமான செல்வ நிலையில் உள்ள அமெரிக்கா போன்ற நாடுகளில் ரூ. 500 தான் வரி. 3,700 எங்கே, 500 எங்கே? நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவ்வளவு அதிக வரி போடவேண்டியது அவசியம் தானா?

காங்கிரஸ் ஆட்சியினால், அவர்கள் போட்ட திட்டங்களால் நாட்டின் முன்னேற்றம் எவ்வளவு இருக்கிறது என்றால், சில புள்ளி விவரங்கள் கணக்கர்கள் கொடுத்திருப்பதைப் பார்க்க வேண்டும். மேற்கு ஜர்மனியில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 150 மைல் நன்கு திருத்தப்பட்ட ரோடுகள் இருக்கின்றன; இந்திய நாட்டில் 12 மைல்கூட இல்லை. 3,700 வரி வாங்கும் நாட்டிலே 12 சதுர மைல் கூட இல்லை; ஆனால் 500 ரூபாய் வாங்கும் நாட்டில் 150 மைல். இந்த நிலையில் இன்னும் வரியை அதிகரிப்பது வேதனையாக இருக்கிறது. தேசியமயம் என்பதை முழுக்க முழுக்க எதிர்ப்பவர்கள் நாங்கள் எல்லாம். காங்கிரஸ்காரர்கள் ஓரளவிற்கு குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். 125 மைலிலிருந்து 75-க்கு வந்திருக் கிறது. இனி இப்படியே படிப்படியாக கட்டெறும்புக்கு கீழே வந்தாலும் ஆச்சரியம் இல்லை. ஏற்கனவே காங்கிரஸ்காரர் காலத்தில் பஸ் சர்வீசிலே நஷ்டம் ஏற்பட்டிருப்பது ஆடிட் ரிபோர்ட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அமைச்சர் திறமையாக, சிக்கனமாக, நஷ்டத்தைச் சரிக்கட்ட வேண்டும். உண்மையிலேயே திறமை இருக்கிறது என்றால் ஒரு ஆண்டு காலம் கணக்குகளைக் காட்டி, அடுத்த ஆடிட் ரிபோர்ட்டில் லாபமாக நடத்தியிருக்கிறோம் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கலாம். டௌன் பஸ் சர்வீஸ் லாபமாக இருக்கவில்லை என்று தனியாருக்கு விடுவ தாகவு, மற்றதை தாங்கள் வைத்துக் கொள்வதாகவும் இருந்தால், தனியார் நஷ்டப்பட்டு, நாசமாகட்டும் என்பதுதான் கொள்கையா என்பதை நன்றாகச் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

பஸ் சர்வீஸ்களினால் நஷ்டம் என்று அமைச்சரவர்களே கூறியிருக் கின்றார்கள். 75 மைல்களுக்கு மேலே எடுத்துக்கொண்டால், ஆபத்திருக் கிறது. 75 மைல்களுக்கு மேலுள்ளவற்றை எடுத்தால் 75 மைல் களுக்கு உட்பட்ட தனியார் துறையினர் தானே விட்டுவிட்டு ஓடிப்போக

வேண்டிய நிலையேற்படலாம். அந்த நிலை உருவாக எந்த மாறுதலும் தேவையில்லை. ஆகவே, ஆட்சியாளர்கள் வாழ வேண்டுமானால், மந்திரிகள் வாழ வேண்டுமென்று சொல்வதாக நினைக்க வேண்டாம், நாட்டு மக்களைக் காப்பதற்குத்தான் என்று சொன்னாலும், நாட்டில் சொந்தமாகத் தொழில் செய்பவர்களே இருக்கக்கூடாது என்ற நிலை பல துறைகளிலும் உருவாக்கப்படும் நிலை இன்று இருக்கிறது. தனியார் மூலதனம் போட்டு அக்கறையோடு பாடுபட்டு சம்பாதிக்கிறார்கள். அதிலே 100-க்கு 80, 85 சதவிகிதம் வரியாகப் பெறும் உரிமை இருக்கும்பொழுது, அதைப் பெற்று அரசாங்கம் ஆட்சி செய்வதை விட்டு, என் மூலதனத்தைப் போட்டு, சிரமப்பட்டு, கஷ்டப்பட்டு இந்த மூலதனத்தினுடைய முதலும், வட்டியும் நஷ்டமாவதற்கு வழி செய்யவேண்டும். அந்த நஷ்டத்தை ஈடுகட்ட மக்கள் மீது வரிகளைச் சுமத்தி சுமத்தி சோஷலிஸம் என்ற பெயரிலே மக்களை வாழவிடாமல் செய்த நிலையேற்பட்டது. இதுவரை, எந்த ஆட்சியாளரும், நமது நாட்டிலே, வெளிநாடுகளில் மட்டும் அல்ல, ஆட்சியாளர்கள் செய்யும் தொழில்கள் எல்லாம் நஷ்டத்திலேயே ஓடிக் கொண்டிருக்கிறது. தனியார் நஷ்டப்பட்டால் அது அவர்களோடு போய் விடும். ஆனால், ஆட்சியாளர்கள் நஷ்டப்பட்டால், அப்பொழுது வரி போட வேண்டியிருக்கிறது. நாம் ஏழைகளை வாழ வைப்போம் என்று சொல்லுகிறோம். ஆனால் உண்மையிலே ஏழைகளை மேலும் மேலும் கஷ்டத்தில் ஆழ்த்தி, பணக்காரர்களை பணக்காரர்களாக்க வழி செய்திருக்கிறோம்.

இரண்டாவது பணமுள்ளவர்கள் மூலதனம் போட்டு நாட்டுக்கு வேண்டிய நல்ல காரியங்களைச் செய்தால் அல்லாமல் நாட்டிலே செல்வம் வளராது. விதைத் தானியத்தை வைத்துத்தான், தானியத்தை விளைவிக்கவேண்டும். அதேபோல செல்வத்தை வைத்துக்கொண்டுதான் செல்வத்தைப் பெருக்க முடியும். செல்வம் வளருவதற்கு வாய்ப்பு கொடுக்கவேண்டும். இதுதான் நாட்டினுடைய செல்வத்தையும், முன்னேற்றத்தையும் வளர்க்கக்கூடிய ஊற்றுக் கருவிகளாகும். அந்த ஊற்றுக்களை அடியோடு அழித்துவிடக்கூடாது. ஏற்கெனவே, இப்பொழுதிருக்கிற தேசீய மயம் லாபகரமாயில்லை. குறிப்பாக விவசாயத்தை இது வரை கூட்டுறவு முறையிலே செய்ய அரசாங்கம் கை வைத்த முறைகள் முழுக்க முழுக்க தோல்வியடைந்தது என்பது நான் சொல்லவேண்டியதில்லை; இந்த ஆண்டு தணிக்கை அறிக்கையிலே மிகத் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், இது வரையிலே உருப்படியானது எதையும் செய்யவில்லை. இதை ஒரு வேளை இப்பொழுதிருக்கும் அமைச்சர் புதிய கருத்தோடு பார்க்கலாம். ஆனால், இவர் ஒருவரே எல்லா பஸ்களையும், எல்லா மானேஜ்மெண்டுகளையும் நேரில் பார்த்துவிட முடியாது. இந்தக் காலத்திலே எந்தத் தொழில் நடத்தினாலும், அதற்குத் தேர்ச்சியுள்ள, அக்கறையுள்ள நபரைப் பார்ப்பது கடினம். நான் நீண்ட நாளாக விவசாயத்தில் திறமையுடனும், தேர்ச்சியுடனும் இருந்திருக்கின்றேன்; இதை நான் பெருமையாகப் பேசிக்கொள்ளவில்லை. பலரும் சொல்வார்கள். ஆனால் என்னால்கூட . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மசோதா விவசாயத்தைப் பற்றியது அல்ல. மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு பற்றியது. மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு பற்றிப் பேசுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: நான் உபமானத்திற்காகச் சொல்லுகிறேன். அப்படியிருந்தும் திறமைமிக்க, நல்ல முறையில் வேலை பார்க்கக்கூடிய ஆளைக் கண்டுபிடிக்க என்னால் முடியவில்லை. இந்த நாட்டிலுள்ள பஸ்களை எடுத்து அவைகளை நடத்தி லாபகரமாக நடத்துவது என்பது சிந்தனைக்கு எட்டாத ஒரு புதுமையாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 4-ம் தேதி மானியக் கோரிக்கை விவாதத்தில் பஸ்களைத் தேசிய மயமாக்கும் கொள்கைபற்றி விவாதத்திற்கு வரவிருக்கிறது. ஆனால் இன்றைய விவாதத்திற்குள்ள பிரச்சினை மோட்டார் வண்டிகள் வரியைப் பற்றியது. இதைப்பற்றிப் பேசினால் பதில் சொல்ல எதுவாக இருக்கும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: நான் ஏற்கெனவே சொல்லி விட்டேன். ஒரு வார்த்தையில் முடித்துக்கொள்ளுகிறேன். இந்த வரி உயர்வு எல்லாம் எந்த முதலாளிக்கும் போட்டாலும், அது ஏழைகளைத் தான் பாதிக்கும். ஏழைகளை வாழ வைக்கும் கொள்கையுடைய இந்த முன்னேற்றக் கழக அரசாங்கம் இந்த வரி விதிப்பைக் கூட்டுவது முறையல்ல என்று பணிவன்புடன் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. எ. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, இப்போது பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் சொன்னதை முதலிலேயே சொல்லியிருந்தால், இவ்வளவு நேரம் வீணாகியிருக்காது. நாட்டு உடைமை ஆக்க எதுவுமில்லை. இந்த விவாதத்தை அந்த விவாதமாக மாற்றுவது பொருத்தமாயிராது. இது குறித்துத் தான் . . . .
(திரு. கே. விநாயகம் அவர்களின் குறுக்கீடு) தலைவரவர்களே, இந்த இண்டரப்ஷனிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொடர்ந்து பேசுங்கள்.

திரு. எ. பாலசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய திரு. விநாயகம் அவர்கள் மெள்ள, மெள்ளக் கொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். "மொர்சிபுல் கில்லிங்" என்று. இது சித்திரவதை ஆகாதா? அஹிம்சையைக் குத்தகைக்கு எடுத்திருப்பவர்கள் இப்படிப் பேசலாமா? அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் சித்திரவதை என்று பேசுவதைக் கேட்பதற்கு வருத்தமாயிருக்கிறது. அப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகச் செய்யாமல் ஒரேயடியாகச் செய்து விட்டால் நல்லது என்று படுகிறது. இங்கு பேசும்பொழுது சொல்லப்படுகிறது '**Killing the Goose that lays the golden eggs**" என்று முட்டைக்காக வாத்தைக் கொல்லாமல், அந்த வாத்தையே அரசாங்கம் எடுத்துக்கொள்வது போலத்தான் இது. நகரிலே ஓடக் கூடிய பஸ்கள், இது வரையில் என்று தெளிவாக்கியிருக்கிறார்கள். 250 மைல்களுக்கு அப்பால் போவதற்கும் இடமளித்திருக்கிறார்கள். சிறு உடமையாளர்களுக்கும் சேர்த்துத்தான் இந்த மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மசோதா நிறைவேற்றத்தக்கது. ஆனால், விவாதத்தின் பொழுது தர்மகர்த்தர் என்பது பற்றி குறிப்பிடப் பெற்றது. முதலாளிகள் தொழிலாளர்களுக்குத் தர்மகர்த்தர்களாக யிருப்பதில்லை. நடைமுறையில் உழைப்பாளியின் உழைப்பைச் சுரண்டி, மக்களையும் ஏமாற்றி வரக்கூடிய நிலை, கொள்கை நடை முறை விதியாக இருக்கக்கூடிய நிலையிலிருந்தது. அப்படிச் சம்பாதித்ததை சம்பளமாகக் கொடுக்கக்கூடிய நிலையில் தான் இந்த மசோதா அமைந்துள்ளது. ஆக இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

• **திரு. து. ப. அழகமுத்து:** தலைவர் அவர்களே, இந்த மோட்டார் வரி உயர்வு மசோதாவில் வரி உயர்வு மூன்று இனங்களுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பஸ்களுக்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. அதேபோல், கார்களுக்கும் வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. லைசன்ஸ் கட்டணமும் உயர்த்தப்பட்டிருக்கிறது. இம்மாதிரி மூன்று வகையாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இப்படி உயர்த்தப்பட்டிருக்கிற வரி இனங்கள் தேவையற்றவை என்று எதிர்க்கட்சியின் சார்பிலிருந்து வாதிக்கப்பட்டது. வரியை மட்டும் எதிர்க்கவில்லை. கொள்கையையே கூட கனம் உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் எதிர்த்தார்கள்.

முதலில், வரியைப்பற்றி மட்டும் கூறிவிடலாம் என்று நான் நினைக்கிறேன். இப்போது உயர்த்தப்பட்டிருக்கிற இந்த வரியைப் போலவே, இதற்கு முன்னால் முன்னாள் அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் வரி உயர்வைக் கொண்டுவந்தார்கள். அப்படி வரி

உயர்வைக் கொண்டு வருகிற போது, என்ன கூறினார்கள் என்றால், "பஸ்காரர்கள் அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள் என்று நீங்கள் கூறினீர்களே, அவர்களுக்கு நாங்கள் வரி போடுகிறோம்" என்று பெருமிதத்தோடு கூறினார்கள். நான் அப்பொழுது, "நீங்கள் வரி போடுவது சரி, ஆனால், அதே நேரத்தில் பிரயாணிகள் கட்டணத்தை உயர்த்தாமல் பார்த்துக்கொள்வோம் என்று உறுதி கொடுக்க முடியுமா?" என்ற கருத்தில் ஒரு வெட்டுப் பிரேரணையைக் கொண்டு வந்தேன். அதை அப்பொழுது தள்ளிவிட்டார்கள். வரியை உயர்த்தினார்கள். அதே நேரத்தில், பஸ் கட்டணத்தை அதிகமாக்கிக் கொள்வதற்கு முதலாளிகளுக்குச் சந்தர்ப்பத்தையும் அளித்தார்கள்; இரண்டரை பைசாவிலிருந்து மூன்று பைசாவாக உயர்த்திக் கொள்வதற்குச் சந்தர்ப்பத்தைச் அளித்தார்கள். ஆனால், இப்பொழுது வரி ஏன் உயர்த்தப்படுகிறது? அம்மாதிரி அதிகமாகக் கட்டணத்தை உயர்த்திக் கொள்வதற்குப் பழைய சர்க்கார் அனுமதித்ததன் மூலமாக பஸ் முதலாளிகள் மிகுந்த லாபத்தை அடைவதற்குள்ள வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திவிட்டார்கள். அந்த வாய்ப்பு வசதிகளைப் பெற்றவர்களிடத்திலிருந்து பொது மக்களுக்குக் கொஞ்சம் பணத்தைப் பெறுவதற்காகத்தான் இப்பொழுது வரி உயர்வு செய்யப்பட்டிருக்கிறதே தவிர, வேறொன்றும் அல்ல.

கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் கூறியதைப் போல, இந்தச் சுமை பொது மக்களுடைய தலையிலே ஏற்றப்படமாட்டாது. எப்படியென்றால், கட்டண உயர்வுக்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாது. பஸ்காரர்களையும் இது பாதிக்கிறது என்று கூறுவதற்கும் வழியில்லை. ஏனென்றால், இப்பொழுது எந்த பஸ்காரர்களும் நஷ்டத்தில் ஓட்டுகிறார்கள் என்று கூறி தங்களுடைய ரூட்டை ஸரண்டர் செய்துவிட்டு "நாங்கள் ஓட்ட முடியாது" என்று யாரும் கூறிவிடவில்லை. அதுவும், நெடுந்தூர பஸ்களை வைத்துக்கொண்டிருப்பவர்கள் மிக அதிகமான லாபத்தைச் சம்பாதிக்கிறார்கள். ஒரு நாளைக்கு 200 மைல் ஓடக்கூடிய ஒரு பஸ்ஸை வைத்திருப்பவர் ஒரு நாளைக்கு அந்த பஸ் ஓடினால் 200 ரூபாய் செலவாகும் என்றால், மேற்கொண்டு 200 ரூபாய் லாபத்தைச் சம்பாதிக்கக் கூடிய வாய்ப்பு இன்றைய தினம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. மொத்தத்தில் ஒரு ஐந்து சத வீதம் பேர்கள் வரவிற்கும் செலவிற்கும் சரிக்கட்டக் கூடிய நிலையில் இருப்பார்களே தவிர, மிக அதிகமான பேர்கள் இன்றைய தினமும் லாபத்தைச் சம்பாதிக்கக் கூடிய நிலையில் தான் இருக்கிறார்கள், இந்த வரி உயர்வினால் பாதிக்கப்படக் கூடிய நிலையில் இல்லை என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஏனென்றால், இன்றையதினமும் கணக்கு வைத்துக் கொள்ளாமல் இன்கம் டாக்ஸ் கொடுக்கின்றவர்கள் இருக்கிறார்கள். "கம்பவுண்டிங்" செய்து; அல்லது எஸ்டிமேடெட் இன்கம் என்று கொடுத்துக்கொண்டிருக்கும் பஸ் முதலாளிகளும் இருக்கிறார்கள். உள்ளபடியே அவர்களுக்கு லாபம் குறைவாக இருந்தால், கணக்குக் காட்டி இன்கம் டாக்ஸ் கொடுப்பார்கள். வருகிற லாபம் கணக்கில்லாமல் இருக்கிற காரணத்தால்தான், வரியை ஏமாற்றுவதற்கு எஸ்டிமேட் செய்து கொடுக்கின்ற நிலையிலே, இன்றைய தினமும் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஆதாரத்தோடு கூற முடியும் என்றாலும், அப்படிச் சொல்லுவது நல்லதல்ல என்ற காரணத்தால், அதைச் சொல்லாமல் விடுகிறேன். ஆகவே, இந்த வரி விகிதத்தை உயர்த்துவதன் மூலமாகப் பொதுமக்கள் பாதிக்கப்படமாட்டார்கள். அதேநேரத்தில், பஸ் முதலாளிகளுக்கும் தொழில் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுவிடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

கனம் உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் ஒரே நேரத்தில் இரண்டு வகையிலே வாதித்தார். சோஷலிசத்திற்காகவும் வாதித்தார். அதே நேரத்தில் தனியார்த் துறைக்காகவும் வாதித்தார். இது எந்த அளவிற்குப் பொருத்தமோ தெரியவில்லை. பஸ்களைத் தேசியமயமாக்கிவிட்டால் அது நஷ்டத்தில்தான் போகும் என்ற தத்துவத்தைக் கனம் உறுப்பினர்

திரு. விநாயகம் அவர்கள் கூறுவார்களானால், அவர்கள் வாதிக்கும் சோஷலிசத்தில் அவர்களுக்கு எவ்வளவு தூரம் நம்பிக்கை இருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

கனம் உறுப்பினர் திரு. விநாயகம் இன்னொன்றும் சொன்னார். 250 மைல் அதிகமாக ஆக்குவதன் மூலமாகத் தொழிலாளர்களுக்கு வேலைப் பளு அதிகமாகிவிடாதா? என்று கேட்டார்கள். அதைப் பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமை. முதலாளிகள் தொழிலாளர்களை ஏமாற்றினார்கள் என்றால், கஷ்டப்படுத்தினார்கள் என்றால், தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்கவும், சலுகை கிடைக்கவும் செய்ய வேண்டியது நம்முடைய பொறுப்பு. அதற்காக நாம் இருக்கிறோம். ஆகவே, இந்த ஒரு காரணத்தைக் காட்டி, அவர்களுக்கு வேலைப் பளு அதிகமாக வந்துவிடும் என்றால், அது பொருத்தமாக இருக்காது என்று கூறிக்கொண்டு, இந்த வரி உயர்வு நியாயமானது, இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படமாட்டார்கள், அதிகமாகச் சம்பாதிக்கின்ற முதலாளிகளிடமிருந்து ஓரளவு தொகையைப் பெற்றுப் பொதுமக்களுக்குப் பயன் படுத்துவதற்காகக் கொண்டுவந்திருக்கும் இந்த நியாயமான வரியை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறி, இந்த மசோதாவிற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்து, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் ஆதரித்து வரவேற்றாலுங்கூட, ஒரு சில திருத்தங்களை அதிலே செய்து, அதிலுள்ள சில குறைகளை நிவர்த்தி செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று சொல்லி, என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்

ஸ்மால் ஆபரேடர்ஸ், பிக் ஆபரேடர்ஸ் என்று இரண்டு வகையினர் இருக்கின்றார்கள். போட்ட வரிகளால் அதிகமாகப் பாதிக்கக்கூடியவர்கள் ஸ்மால் ஆபரேட்டர்ஸ்தான். இருந்தாலுங்கூட, இங்கே இருக்கக்கூடிய கட்சிக்காரர்களிலே ஒரு கட்சியினர் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்த்தால், "பஸ்களை நாஷனலைஸ் பண்ணுவதே தப்பு, அவர்களை விட்டால்தான் நல்ல விதத்தில் நடத்துவார்கள், அரசாங்கம் எடுத்து நடத்தினால் லாபத்தைப் பார்க்க முடியாது" என்கிறார்கள். உண்மையாகச் சொல்லப் போனால், இன்றைக்கு அதைச் சொல்லக் கூடிய கட்சிக்காரர்களுக்கு எதிராகவும் வாதம் செய்யலாம். அவர்கள் ஓட்டக்கூடிய வண்டிகளெல்லாம் கூட இன்றுள்ள சாலைகளில்தான் ஓடி ஆகவேண்டும். இன்றைக்கிருக்கும் சாலைகளெல்லாம் மிக நவீனமான முறையில் அமைந்திருக்கின்றன. தார் ரோடு, சிமெண்ட் ரோடு போட்டு இருக்கிறோம். அந்த நல்ல ரோடுகளில் அவர்களுடைய பஸ்கள் ஒருவிதமான சேதமும் இல்லாமல் ஓடுவதன்மூலமாக, அவர்களுக்கு நல்ல லாபம் ஏற்பட்டிருக்கிறது. மக்களுடைய பணத்தை வைத்துத்தான், மக்களுடைய பொருளாதாரத்தை வைத்துத்தான், ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. அந்த ரோடுகளில் தான் பஸ் ஆபரேடர்களுடைய வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இவர்களுடைய வாழ்க்கையும் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதைச் சூசகமாக நாம் அறியலாம். ஆகவே, அரசாங்கம் என்பது பொதுமக்களின் சார்பாக இருக்கக்கூடியது. பொதுமக்களுடையதுதான். பொதுமக்களை நம்பிதான் பஸ்கள் ஓடுகின்றன. "மனாபலி" என்ற முறையில் ஒரு சில பெரிய பஸ் கம்பெனிகளுக்கு அதிகமான அளவிற்கு இடம் அளிப்பதை நான் முற்றிலும் வரவேற்கவில்லை. பெரிய பஸ் கம்பெனிக்காரர்களில் பத்து ரூட்களுக்கு மேல் ஒருவருக்கு இருக்குமானால், ரென்யூவலுக்கு வரும்போது பத்து ரூட்களோடு நிறுத்திவிட்டு, பாக்கி ரூட்களைப் பொறுத்தவரையில் நோடிபிகேஷன் கொடுத்து, அவற்றை ஸ்மால் ஆப்பரேட்டர்களுக்குக் கொடுத்து விட்டால், மிக நல்ல முறையில் நம்முடைய அரசாங்கம் கொண்டிருக்கும் சோஷலிசக் கொள்கை நல்ல விதத்தில் வளரும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

இதிலே ஸ்மால் ஆபரேட்டர்களுக்கு வரியைக் குறைக்க வேண்டும். மனுபலி வைத்துக்கொண்டிருக்கும் பெரிய பஸ் ஆபரேட்டர்களுக்கு, பத்து ரூட்களுக்கு மேலே கொடுக்கக்கூடாது. ரென்யூவலுக்கு வரும் போதே நிறுத்திவிட்டு, நோடிபிகேஷன் கொடுத்து, அதைப் பரவலாக ஸ்மால் ஆபரேட்டர்களுக்கு அளிக்க வேண்டும். இப்படிச் செய்தால், ஸ்மால் ஆபரேட்டர்ஸ் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு, நல்ல மனப்பான்மையிலே ஜனங்களுக்குச் சௌகரியம் செய்யக் கூடிய அளவிற்கு முன்வரக்கூடும். இந்த நிலையைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, ஸ்மால் ஆபரேட்டர்களுக்கு வரியைக் குறைக்க வேண்டும் என்ற கருத்தை மீண்டும் வலியுறுத்தி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று இந்த அவையிலே கொண்டுவந்திருக்கும் மசோதாவைக் குறித்து ஓரிரண்டு கருத்துக்கள் சொல்ல நான் விரும்புகிறேன்.

முதன் முதலாக, ப்ரைவேட் மோட்டார் கார்களுக்கும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பத்து ரூபாய் அளவிற்கு வரி ஜாஸ்தியாகியிருக்கிறது. இரண்டாவதாக, பஸ்களுக்கு வரியை ஜாஸ்தியாகப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த வரியை நாம் வரவேற்கலாமா, இந்த வரியைப் போடுவதனால், ஏதாவது சிக்கல்கள் உண்டா என்ற பிரச்சினைதான் இந்த மன்றத்திலே இப்பொழுது ஆராயப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

ஆனால், நண்பர்கள், பல கருத்துக்களைச் சொன்னார்கள். தேசியமயம் ஆக்கலாமா? வேண்டாமா? என்பதைக் குறித்த கருத்துக்களும், எந்த அளவிற்குத் தேசியமயமாக்கலாம், எந்த அளவிற்குப் பெரிய பெரிய மோட்டார் முதலாளிகளுக்கும், சிறிய சிறிய மோட்டார் முதலாளிகளுக்கும் சலுகைக்கொடுக்கலாம் என்றெல்லாம் இந்த இடத்தில் விவாதிக்கப்பட்டது. அந்தக் கருத்துக்களைப் பற்றி ஓரளவுக்கு பட்ஜெட் விவாதத்திலேயே நாங்கள் சொல்லியாகிவிட்டது. அதுவுமல்லாமல், மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, மூன்று நான்கு நாட்கள் கழித்த பிறகு, மானியக் கோரிக்கை வரும் சமயத்தில் அதைப் பேசிக் கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன்.

இந்த மன்றத்திலே நான் தேடுகிற உறுதி என்னவென்றால், இப்படிப் பஸ்களுக்குப் போடுகிற வரியை உயர்த்துகிற காரணத்தால் ஏழைகள் பாதிக்கப்படாமல் இருப்பார்களா என்பது தான். முதலாளிகளுக்கோ, அல்லது அரசாங்கத்திற்கோ கிடைக்கக் கூடிய வருவாயில் ஓரளவு குறைந்துவிட்டால் அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால் வரி உயர்வினால் ஏழைகள் பாதிக்கப்படுவார்கள் என்றுதான் நான்
பி. ப. 1-40 தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு வரி போட்டிருக்கக்கூடிய நிலையில் பஸ்களை ஓட்டுவதற்கான செலவைச் சரிக்கட்ட முடியாமல் பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்ற ஒரு நிலைமை உருவாகிவிட்டால், அப்பொழுது இன்று போடப்பட்ட வரியினால் நாளைக்கு மக்கள் பாதிக்கப்படுகிற அளவிற்கு கட்டணம் உயர்ந்துவிட்டது என்ற குற்றச்சாட்டுக்கு அரசாங்கம் பலியாகக் கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணமாகும்.

இது சிறு வரிதானே என்று பலர் சொல்லலாம். இந்த வரி உயர்வினால் எந்தவிதமான அபாயமும் இல்லை; கட்டணம் உயராது என்று வாதாடலாம். இன்னொரு விஷயத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். மத்திய அரசாங்கம் டீசல், பெட்ரோல் மீது வரியை உயர்த்தியிருக்கிறது. அதே சமயத்தில் நீங்களும் மாநில அரசாங்கமும் வரியை உயர்த்தினால் பொதுமக்கள் என்ன நினைப்பார்கள்? மத்திய அரசாங்கம் டீசல், பெட்ரோல் மீது வரி போட்டால், மேலே மாநில சர்க்கார் டாக்சேஷன் பேரிலே வரியை உயர்த்தியிருக்கிறது என்றால், அது பயங்கரமான நிலைமையைத் தான் ஏற்படுத்தும். இந்த வரி உயர்வினால், தனியார் துறையில் ஓடுகின்ற பஸ்களின் கட்டணம் உயரும்போது, " டீசல்,

பெட்ரோல் விலையேற்றத்தின் காரணமாக நாங்களும் கஷ்டப்படுகிறோம், பஸ் கட்டணத்தை ஏற்றக்கூடிய நிலைமையில் இருக்கிறோம் " என்று ஒரு கவர்ன்மெண்ட் ஆர்டர் மூலமாக அரசாங்கமும் பஸ் கட்டணத்தை உயர்த்தக்கூடிய பயங்கரமான நிலைமை ஏற்படும். நஷ்டம் ஏற்பட்டாலும் அப்போதுகூட நாங்கள் கூறும் குற்றச்சாட்டுக்கு அரசாங்கம் பலியாகும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, வரி ஏற்றிய காரணத்தினால், அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படக்கூடாது என்பது ஒன்று. நஷ்டம் ஏற்படும் என்ற அச்சத்தோடு கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்பது இரண்டு. மூன்றாவது தனியார் பஸ் முதலாளிகளும் கட்டணத்தை உயர்த்தும்படி விடக்கூடாது. இந்த மூன்று பாதுகாப்புகளையும் அரசாங்கம் கொடுக்கிறது என்றால், நான் இதனை எதிர்க்கவில்லையென்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது கொண்டுவரும்படியான மசோதா, பஸ் கட்டணத்தை-வரியை அதிகமாக்க கொண்டுவரப்படுகிறது. காங்கிரஸ் சர்க்கார்தான் முதலிலே இதைக் கொண்டு வந்தது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். இப்போது கொஞ்சம்தான் வரியை அதிகப்படுத்தியிருக்கிறேன் என்று அமைச்சர் சொல்வார்கள். அதோடுமட்டுமல்ல. நம்முடைய நண்பர் அழகமுத்து அவர்கள் " பஸ் ஓடும்படியான தூரத்தை அதிகப்படுத்தியதால், முன்னிருந்த வசதிகளையும் கொடுத்து, வசதிகளையும் அதிகப்படுத்தியிருக்கிறோம் " என்று சொன்னார்கள். இப்போது இருக்கும்படியான நிலையில் எந்த வரி போட்டாலும் சரியே, மக்களிடத்தில் ஒரு நல்ல அபிப்பிராயம் இல்லாமல், அவர்களுக்கு ஏதோ தொந்தரவு கொடுக்கும்படியான நிலைதான் இருக்கிறதென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எழுபத்தைந்து மைலுக்குள் இருக்கும்படியான பஸ் வழிகளையெல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்லும்போது, நாம் ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். இப்போது சிறு சிறு பஸ் ஆபரேட்டர்கள் இருக்கிறார்கள். ஒரு பஸ், இரண்டு பஸ் என்று புதிதாக அனுமதி வாங்கிக் கொண்டு, 15 மைல், 20 மைல் தூரம் ஓட்டும்படியான ஆபரேட்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கடன் வாங்கி, அதற்கு அதிகமான வட்டியும் கொடுத்து, சிறு பஸ்களை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். முதலாளிகளுக்கு என்றால், 5, 6, 7, 8 பஸ்கள் என்றிருக்கும். ஒரு டிரைவர் இருக்கிறார் என்றால், ஒரு கண்டக்டர் இருக்கிறார் என்றால் அவர் ஏதோ கொஞ்சம் பணம் சம்பாதித்து ஒரு பஸ் வாங்கியிருப்பார். தொழிலாளியாக இருந்து பஸ் வாங்கி, முதலீட்டை அதிகமாகப் போட்டு, கடனை அடைத்துக் கொண்டிருப்பார். இப்போது திடீரென்று வரியை உயர்த்தினால் அதிகமான கஷ்டம் ஏற்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

மேலும், இந்த வரி உயர்வு டவுன் பஸ்ஸிலே மட்டும் இல்லையென்று குறிப்பிட்டார்கள். சென்னை நகரத்திலே ஓடும்படியான பஸ்களினால் 1967-68-ல் 34 லட்சம் ரூபாய் நஷ்டம் வரும் என்று அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற தேசிய மயமாக்கும் கொள்கைக்கு அவ்வளவு ஆதரவாக இருக்காது என்று கருதித்தான் செய்திருக்கிறாரா? சர்க்கார் நடத்தும் பஸ்களுக்கு மட்டும் ஒரு சலுகை — வெளியிலே பஸ் ஓட்டுபவர்களுக்கு, ஒரு பஸ்ஸுக்கு இவ்வளவு வரி என்று சொல்வதிலே என்ன நியாயம் இருக்க முடியும்? வரியே போட வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. எந்த இடத்தில், எப்படிப் போட வேண்டும், எப்படி வசூல் செய்ய வேண்டும் என்பதிலே நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதைத்தான் சொல்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். ஒரு பஸ், இரண்டு பஸ், வைத்துக்கொண்டு 15 மைல் தூரத்தை ஏழு, எட்டு ட்ரிப்புகளை ஓட்டுபவர்களுக்கு — அந்த பஸ்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள இந்த மசோதா குறித்து பல கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் இடையிலே குறுக்கிட்டுக் கூறியவாறு, பேருந்து வண்டிகளை நாட்டுடைமையாக்கப்படுவதற்காக வேண்டிய விஷயங்கள் இங்கே பேசப்பட்டன. என்றாலும், நண்பர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. விநாயகம் அவர்கள் "மெள்ள, மெள்ளத்தான் நீங்கள் நடக்க வேண்டும்" என்று எடுத்துச் சொன்னார்கள். மெள்ள, மெள்ள நடக்கிறோம் என்பதற்கு அடையாளமாகத்தான், திடீரென்று பஸ் எல்லாம் நாட்டு உடைமையாக்கப்பட்டுவிட்டன என்ற அறிவிப்பைத் தராமல், முதல் கட்டமாக 75 மைல்களும், அதற்கு மேலும் உள்ள பஸ்களும் தேசியமயமாக்கப்படும் என்ற திட்டத்தை மெள்ள மெள்ள, படிப்படியாக அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் இருப்பவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவாதிக்கப்படுகின்ற இந்த மசோதா, பஸ்களில் உள்ள இடம் ஒன்றுக்கு இதுவரையிலும் தந்த வரி விகிதத்திலேயிருந்து, இனிமேல் எவ்வளவு தர வேண்டுமென்பதை நிர்ணயித்து அனுமதி பெறுவதற்காக இந்த மன்றத்தின் முன்னாலே வைக்கப்பட்டிருக்கிறது. 1962 ஜூலைத் திங்கள் 28-ம் நாள் இந்த மன்றத்திலே பேருந்து வண்டிகளுக்கு வரி உயர்வை அதிகமாக்குகின்ற மசோதா கொண்டுவரப்பட்டது. அன்றைய முதலமைச்சர் மதிப்பிற்குரிய பக்தவத்சலம் அவர்கள், அந்த மசோதாவை இந்த மன்றத்தின் முன்னாலே வைத்தார்கள். வியப்புக்குரிய வகையிலே இந்த மன்றத்திலே இருந்த அத்தனை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் அந்த மசோதாவை எதிர்த்தார்கள். "இது பஸ் முதலாளிகளைத் தொல்லைப்படுத்தக்கூடியது—அவர்களை வேதனைப்படுத்தக்கூடிய வரி உயர்வு—ஆகாது" என்று அத்தனை பேரும் பேசினார்கள். அப்போது அவர்களுக்கு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒரு பதிலைத் தந்தார்கள். அதனை நான் சுட்டிக்காட்டுவது நல்லது என்று கருதுகிறேன். "நான் போடுகின்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பொருள் தேவையாக இருக்கிறது, அதில் ஏற்படுகின்ற பற்றுக்குறையைச் சமாளிப்பதற்காகத்தான். லாரி சொந்தக்காரர்கள், பஸ் சொந்தக்காரர்கள் அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள் என்ற நோக்கம் அரசாங்கத்திற்குக் கிடையாது" என்று முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலேயே எடுத்துச் சொன்னார்கள், காங்கிரஸ் உறுப்பினர்கள் மேலும் மேலும் தங்களுடைய கொள்கைகளை வலியுறுத்திச் சொன்னார்கள். "1953-ல் வரி அதிகப்படுத்தப்பட்டது. 1954-லிருந்து 9 ஆண்டுகளாக அதிகப்படுத்தவில்லை. சாலைகள் நன்கு அபிவிருத்தியடைந்திருக்கிறது; வரி அதிகப்பட்டதால், சிறிய அளவில் தொழில் நடத்துபவர்களால் இதனைத் தாங்க முடியுமா, கொடுக்க முடியுமா என்று பரிசீலிக்கப்பட்டு, லாபத்தில் ஒரு சிறு பகுதிதான் வரியாகப் போடுவது என்று வரி விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டது" என்பதை அன்றைய தினம் இருந்த முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். முன்பு ஆட்சியாளர்கள், சர்சார்ஜ் 10 ரூபாயும், மோட்டார் வாகன வரி 30 ரூபாயும் ஆக மொத்தம் 40 ரூபாய் கால் ஆண்டுக்குக் கட்டக்கூடிய மொத்த வரியாகப்போட்டு இருந்தது முதல் கட்டமாகும். அப்போது உயர்த்தப்பட்ட வரிவிகித அமைப்பு 210 கிலோ மீட்டருக்கு மேற்படாதிருப்பின் ஒரு நபர் இடத்துக்கு காலாண்டுக்கு 35 ரூபாய். 210 கிலோ மீட்டருக்கு மேல் 270 கிலோ மீட்டருக்கு மேற்படாது இருப்பின் 40 ரூபாய். 270 கிலோ மீட்டருக்கு மேல் 45 ரூபாய். அவ்வாண்டு ஜூலை 28-ஆம் நாள் இந்த வரி விகித உயர்வு கொண்டுவரப்பட்டு ஜூலை 1-ஆம் தேதி முதலே இது அமுலுக்கு வரும் என்பதாக ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கப்பட்டு அந்த மசோதா நிறைவேறியது. அதே ஒற்றுமை இப்போதும் ஏற்பட்டு நிறைவேற்றப்பட இருக்கிறது. ஜூலை 28-ம் நாள் தான் விவாதத்திற்கு வந்திருக்கிறது. இந்த மசோதா இம்மாதம் 1-ஆம் தேதி முதலே அமுலுக்கு வரும் என்கிற அளவிலும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்பதை ஒற்றுமை உணர்வுக்காக நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று காங்கிரஸ் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பஸ் முதலாளிகள் கஷ்டப்படுகிறார்கள். "அவர்களுக்கு என்ன வருமானம் வருகிறது? அவர்களை இப்படிக் கொல்கிறீர்களே" என்பதாக காங்கிரஸ் கட்சி கொறடா மதிப்பிற்குரிய விநாயகம் அவர்கள் மெத்தவும் கவலைப்பட்டார்கள். அவர்கள் கவலைப்படத்தான் வேண்டும். அவர் கவலைப்படமாட்டாரா என்று பலர் எதிர்பார்ப்பார்கள். கவலைப்பட வேண்டிய அவசியம் இருந்தது. ஆகவே, கவலைப்பட்டார்கள். ஆனால், எந்த வருமான அடிப்படையில் எப்படி எப்படி பஸ் முதலாளிகள் வரிகளைச் செலுத்தி வருகிறார்கள், என்ன என்ன வகையில் என்பதை இந்த மன்றத்தில் விளக்குவது இன்றியமையாதது. சுமார் 250 கிலோ மீட்டர் ஓடுகிற 50 சீட்டுகள் கொண்ட ஒரு பஸ்ஸுக்கு ஒரு நாள் வருமானம் 250 ரூபாய் என்று வைத்துக்கொள்வோம். அப்படி வைத்துக்கொண்டு கணக்கைத் தொடங்கினால்—டி.பி.ஜி. ஆக்ட் கணக்கில் எடுத்துக்கொள்கிறபோது ஒரு பஸ்ஸுக்கு சர்சார்ஜ் என்ற அளவில் ஒரு ரூபாய்க்கு 10 பைசா வீதம் ஒரு நாள் வருமானம் 250 ரூபாய்க்கு 25 ரூபாய் கட்ட வேண்டும், ஒரு நாளைக்கு. காலாண்டுக்குக் கணக்குப் பார்க்கிறபோது 25 இண்டு 90 என்றால் 2,250 ரூபாய் தரவேண்டும். ஆனால், இந்த 2,250 வரியாகத் தரவேண்டும் என்பது அதிகம் என்று பஸ் முதலாளிகள் முறையிட்டுக்கொண்டதன் காரணமாக கம்பவுண்டிங் செய்து கொள்ள உடன்பட்டு ஒத்துக்கொண்ட வகையில் வரையறுக்கப்பட்ட வரி விகிதம் ஒரு காலாண்டுக்கு ஒரு சீட்டுக்கு 48 பைசா என்ற விகிதத்தில் கணக்கிட்டால் 1,500 ரூபாய் வருகிறது. 2,250 ரூபாய் கட்ட வேண்டிய நிலைமையில் இருந்து 1,500 ரூபாய் கட்டலாம் என்ற நிலைமை உருவாயிற்று. அதை அடுத்து இன்னொரு மாற்று முறையும் தரப்பட்டது. அந்த முறை இன்னும் வரிப்பளுவைக் குறைத்தது. ஒரு சீட்டுக்கு ஒரு காலாண்டுக்கு 25 ரூபாய் வீதம் 25 இண்டு 50 என்பதாக 1,250 ரூபாய் கட்ட வகை செய்தது. ஆகவே, இந்த மூன்றிலே எதை பஸ் முதலாளிகள் தேர்ந்தெடுத்திருப்பார்கள் என்பதை நான் சொல்லித் தெரிந்துக் கொள்ள வேண்டியதில்லை. 1,250 என்ற வகையில் கட்டுகிறார்கள். இப்போது ஒரு காலாண்டுக்கு மோட்டார் வாகன வரி 40 ரூபாய் என்றால் 50 சீட்டுக்கு 2,000 ஆகிறது. அதிக பட்சம் டிரைவர், கண்டக்டர் சம்பளம், டீசல் எண்ணெய் செலவு ஆகியவற்றுக்கு நாள் ஒன்றுக்கு 80 ரூபாய் என்ற அளவில் கணக்குப் போட்டால் காலாண்டுக்கு 7,200 ஆகிறது. பராமரிப்புச் செலவை தாராளமாகப் போட்டு—அடிக்கடி அவர்களுடைய பஸ் பழுதாகிவிடுகிறது என்கிற வகையிலும் இடம் அளித்து ஒதுக்கினால் மூன்று மாதத்திற்கு 4,000 ஆகிறது. ஆக, மொத்தச் செலவு காலாண்டு, சர்சார்ஜ் கம்பவுண்டிங்கில் 1,250. மோட்டார் வாகன வரி 2,000, மூன்று மாதச் தினச்செலவு 7,200, பராமரிப்புச் செலவு 4,000 ஆக 14,450 ஆகிறது. வருமானம் நாள் ஒன்றுக்கு 250 என்கிற அடிப்படையில் 90 நாட்களுக்கு 22,500 வரும். செலவு போக ஒரு பஸ்ஸின் மூலம் காலாண்டுக்கு 8,000 ரூபாய் லாபம் நிற்கிறது. இந்த எட்டாயிரம் ரூபாய் லாபத்தில் நல்ல காரியங்களுக்காக ஒரு 500 ரூபாய் காலாண்டுக்குக் கொடுங்கள் என்று கேட்டால் தருவதற்கு மனம் இளகக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். காலாண்டுக்கு 8,000 லாபம் நிற்கிறது என்கிறபோது 500 ரூபாய் கேட்பது அதிகமான பளுவை அவர்களுக்குத் தராது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திரு. விநாயகம் அவர்கள் வட்டி கட்ட வேண்டாமா என்கிறார்கள். பஸ் வாங்கக் கடன் வாங்கியிருப்பதாக வைத்துக் கொண்டு, வட்டி கட்டினாலும்கூட லாபம் நிற்கிறது. எல்லோரும் கடன் வாங்குபவரும் அல்ல.

அடுத்து, இப்படிப்பட்ட வரி உயர்வினால் பஸ் கட்டணம் உயர்த்தப்படுமா? உயர்த்தப்படாது என்பதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று திரு. ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். நிச்சயமாக இந்த அரசு அந்த உத்தரவாதத்தை அளிக்கிறது. பஸ் கட்டணம் இப்போது உள்ளதைவிட நிச்சயமாக அதிகப்படமாட்டாது.

அடுத்து, திரு. காசிராமன் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருத்தம் அவசியம் இந்த மசோதாவில் இடம் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் திருத்தம்

முறையாகவே இடம் பெறுவதற்கு உரியதா என்பது ஆராய வேண்டிய விஷயம். ஆயினும் அந்தத் திருத்தம் கோருகிற கருத்தை முழுவதும் மறுத்துவிடுவதற்கில்லை. திருத்தத்தில் under rule 268-A என்று எழுதியிருக்கிருர்கள். எப்போதும் ஆக்டில் ரூலை இணைப்பது சரியல்ல. ரூல் என்பது சட்டமன்றத்தில் உருவாக்கப்படுவதில்லை. நிர்வாகம் தனிப் பட்ட முறையில் ரூலை உண்டாக்கும். தனிப்பட்ட முறையில் ரத்தும் செய்துவிடலாம். ஆகவே, ரூலை சட்டத்தில் சேர்க்கவேண்டும் என்கிற திருத்தம் முறையானது அல்ல. ஆயினும் அதன் மூலம் அவர் சில கருத்துக்களைச் சொன்ஞர் என்ற முறையில் அதற்குரிய பதிலைத் தரக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் குறிப்பிடுவது வரவுசெலவுத் திட்டத்தில் நகர பஸ் போக்குவரத்து என்பது எல்லா நகரங்களிலும் ஓடுபவனவற்றைக் குறிப்பது அல்ல. நகர பஸ் போக்குவரத்து குறிப்பிட்ட நகரங்களில் ஓடுகின்ற பஸ் போக்குவரத்தாகும். என் அழுத்தம் திருத்தமாகச் சொல் கிறேன் என்றுல், பழைய சர்க்கார் நிறைவேற்றியிருக்கிற சட்டத்திலும் இதே முறையில் வரி விகிதங்கள் இருந்திருக்கின்றன. திரு. காசிராமன் சொல்வதுபோல பரவலாக எப்போதும் இருந்தது இல்லை. நகரங்களில் ஓடுகின்ற பஸ்களின் வருமானம், மற்ற பஸ்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது, குறைவாகவே இருக்கும் என்கிற காரணத்திஞல் இவற்றுக்கு வரியை அதிகப்படுத்த எடுத்துக்கொள்ளவில்லை. ஆனல், திரு. காசி ராமன் அவர்கள் திருத்தத்தை ஏற்றுக்கொள்வோமாஞல் ஏறத்தாழ 500 பஸ்கள் தப்பித்துக்கொள்ளும். அப்படி 500 பஸ்கள் தப்பித்துக் கொள்வதால் மொத்தமாக அரசாங்கத்திற்கு எதிர்பார்க்கின்ற வருமானத்திலிருந்து குறையக்கூடிய தொகை 12 லட்சம் ரூபாய். 12 லட்ச ரூபாயை இந்த நேரத்திலே அரசாங்கம் இழப்பதற்குத் தயாராக இல்லை. ரூல் 268. ஏ. யிலே என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றுல் ஒரு நகரத்திலிருந்து புறப்பட்ட பஸ் நகரத்தின் விளிம்பிலே மாத்திரமல்லாமல் புறப்பட்ட இடத்திலிருந்து 24 கிலோமீட்டர் அளவுக்கு வெளியிலே சென்று விடுமாஞல் அது நாம் குறிப்பிடுகின்ற வரிக்கு உட்பட்ட வண்டியாக ஆகிவிடும். அதை மாற்ற வேண்டுமென்று அவர்கள் விரும்புகிருர்கள். அப்படி மாற்றிவிட்டால், உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன், கடலூரி லிருந்து பாண்டிச்சேரிக்கு ஒரு பஸ் சென்றுவந்தால் அது சென்ற தூரம் 24 கிலோமீட்டர் என்று வைத்துக்கொண்டால் அங்கே பஸ் விட்டுக் கொண்டிருக்கின்ற பஸ்காரர்களும், தங்களுக்கும் விலக்கு வேண்டுமென்று கோருவார்களாஞல் அதிலே நியாயம் இருக்க முடியும். இப்பொழுது உயர்த்தப்பட்டிருக்கின்ற விகிதாசாரப்படி அவர்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிருர்கள். நகரத்திற்குள்ளேயிருந்து வெளியிலே செல்லுகின்ற பஸ்கள், அதுவும் தொழிற்பேட்டைகள் அதிகரித்துள்ள இந்த நிலையில், லாபகரமான இந்த நிலையில் எல்லையைத்தாண்டிச் சென்றுவருகின்ற பஸ்களுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று சொல்வார்களாஞல் அதை ஏற்றுக்கொள்வதற்கு இல்லையென்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். குறைந்த தூரமே போகக்கூடிய பஸ்களுக்கு என்ன வருமானம் வருகிறது, அவர்கள் வரி கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். வருமானத்தின் அடிப்படையிலே பார்த்தால் சர்சார்ஜ் 100-க்கு 10 சதவீதம் கொடுக்கலாம். 25 ரூபாய் கம்பவுண்டிங் ரேட்டிலே கொடுக்க வேண்டுமென்பது இல்லை, 48 ரூபாய் ஒரு வருஷத்திற்கு ஒரு சீட்டிற்கு என்று குறிப்பிட்டேனே அதுவும் இல்லை; வருமானம் குறையக் குறைய 10 ரூபாய் நூற்றுக்குக் கட்டலாம் என்ற முறையிலே சர்சார்ஜ் இருக்கிறது, அதை ஏற்றுக்கொள்ளலாம்.

எனவே, இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் பஸ் முதலாளிகளுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாது. 1962-ஆம் ஆண்டிலே வரி ஏற்றுவதைப்பற்றிய நோட்கள் இருக்கின்றன. அதைப்பார்க்கின்ற பொழுது அப்பொழுது 88 ரூபாய் வரை உயர்த்தலாமா என்ற அளவுக்குத் திட்டம் போடப்பட்டு, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல் திரு. பக்தவத்சலம் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று பஸ் முதலாளிகளும், மற்றவர்களும் வலியுறுத்தியதன் காரணமாக அந்த நிலையிலேதான் இறங்கி விட்டோம் என்று அவர்கள் சொல்லியிருக்கின்ற நிலையை வைத்துப்

பார்த்தால் இது 1962-லேயே வந்திருக்கவேண்டியது; நாங்கள் வந்துதான் வரவேண்டுமென்று இருந்திருக்கிறது. தனிப்பட்ட முதலாளிகள் பாதிக்கப் படக்கூடாது என்ற நிலையில் மெள்ள மெள்ளச் செல்லவேண்டுமென்றும் ஒரேயடியாகக் கொல்கிருர்களே என்றும் சொன்ஞர்கள். இது கொல்லக் கூடிய சமாச்சாரம் அல்ல. நாட்டுடைமை ஆக்குவது வேறு, இது வேறு என்று வேறுபடுத்திப் பார்த்தால் இதைப் புரிந்துகொள்ளலாம். அப் பொழுதுதான் இரண்டையும் ஒன்ருகப்போட்டு குழப்பிக்கொள்ள மாட்டார்கள். பஸ்களை நாட்டுடைமை ஆக்குவது தனிப்பட்ட விஷயம். இருக்கின்ற வரியை உயர்த்துவது வேறு. வரியை உயர்த்துவதிஞல் பாதிக்கப்படமாட்டார்கள். இதைத் தவிர 200 மைலிலிருந்து 250 மைல் வரையில் அதாவது 220 கிலோ மீட்டரிலிருந்து 400 கிலோ மீட்டர் வரையில் செல்லுகின்ற வழித்தடங்களைத் தாராளமாக அனுமதித்திருக் கின்ற காரணத்தாலே அவர்கள் இதஞல் பாதிக்கப்படமாட்டார்கள் என்று அறிவித்து, இந்த உறுதிமொழிகளை மனதிலே கொண்டு திருத்தங் களை வலியுறுத்தமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு, இந்த மசோதாவை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. விஞயகம் : ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார், அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது 1962-வது ஆண்டிலே இப்பொழுது வந்திருக்கிற மசோதா வரவேண்டிய சூழ்நிலையில் இருந்தது. அப் பொழுது திரு. பக்தவத்சலம் அவர்கள் சொன்ன வார்த்தைகளைத்தான் அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். ஆனல், இப்பொழுது இருக்கின்ற அமைச்சர் அவர்கள் அப்பொழுது என்ன இந்த மன்றத்திலே சொன்ஞர் கள் என்பதையும் படித்துக்காட்டிஞல் நன்ருக இருக்கும்.

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : அதற்கு நான் பதில் சொல்ல வழியில்லாமல் அப்பொழுது திரு பக்தவத்சலம் அவர்கள் என்னை திருச்சி சிறையிலே போட்டுவிட்டார்.

திரு. கே. விஞயகம் : அவர் இல்லாவிட்டாலும் அவர்களுடைய கட்சி சார்பில் யாராவது பேசியிருந்தால் அதைச் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : எல்லோருமே சிறையில்தான் இருந்தார்கள், அப்படி இங்கே இருந்திருந்தாலும் ஆதரித்துத்தான் இருப்பார்கள், காங்கிரஸ் நண்பர்களைப்போல் எதிர்த்து இருக்கமாட்டார்கள்.

THIRU K. VINAYAKAM: Sir, coming to a serious problem . . .

MR. SPEAKER : The hon. Member can ask for an elucidation.

THIRU K. VINAYAKAM : I want an explanation on the Bill . . .

MR. SPEAKER: Only with the permission of the Speaker, the hon. Member can rise on a point of clarification.

THIRU K. VINAYAKAM : The Hon. Speaker may be gracious enough to give me one more chance. இந்த மசோதாவின் மூலமாக அரசாங்கம் எவ்வளவு வருமானம் வரும் என்று எதிர்பார்க்கிறது. அதையும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : இந்த ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் வரும், இந்த ஆண்டு கால் ஆண்டு முடிந்துவிட்ட காரணத்தால் அடுத்த ஆண்டு $1\frac{1}{4}$ கோடி ரூபாய் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்தை வாக்களிப் பிற்கு விடும் முன்ஞல் ஒரு குறிப்பு. ஆருவது பிரிவுக்கு திரு. காசிராமன் அவர்கள் கொடுத்த திருத்தத் தீர்மானம் விதிகளுக்குள்ளே வருகிறதா,

சரியாக இருக்கிறதா என்பது எனக்கே ஐயமாக இருந்தது. எனவே சட்டத் துறைக்கு அதை அனுப்பி, சட்டத் துறையிலிருந்து எனக்குக் கிடைத்த பதிலை இங்கே மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இருப்பதால் கூறுகிறேன்.

"In this view, the amendment may be said to be in order'.

இதை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்பொழுது விவாதம் முடிந்தது.

மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்களின் தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பி.ப. மணி 5-00. 2 முதல் 5 வரை உள்ள பிரிவுகள் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

6-வது பிரிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின்முன் உள்ள கேள்வி— "6வது பிரிவு மசோதாவிற்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்". இந்தப் பிரிவுக்கு ஒரு திருத்தம் இருக்கிறது. தீர்மானத்தை முன் மொழிந்து வழி மொழிந்த பிறகு வாக்கெடுப்பு எடுக்கப்படும்.

திரு. நா. காசிராமன் : கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை முன் மொழிகிறேன் :—

'In Schedule II to the Principal Act (Madras Act III of 1931) in clause (*a*), after sub-item (ii), the following shall be added, namely :—

(ii) (A) Vehicles permitted to ply as stage carriages and to carry more than six persons (other than the driver) and plying exclusively as a town service as classified under rule 268-A of the Madras Motor Vehicles Rules.

(*a*) For every seated passenger (other than the driver and conductor) which the vehicle is permitted to carry and where the total distance permitted to be covered by the vehicle in a day.

	RS.	RS.
(1) Does not exceed 210 k.ms.	35·00	50·00
(2) Exceeds 210 k.ms. but does not exceed 270 k.ms.	40·00	55·00
(3) Exceeds 270 k.ms. ..	45·00	60·00

திரு. என். எஸ். வி. சித்தன் : நான் இந்தத் திருத்தத்தைவழி மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் திருத்தத்தின் மீது ஏற்கெனவே பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. மீண்டும் பேச விரும்புகிறீர்களா ?

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தம் சம்பந்தமாக நான் கூறிய கருத்துக்களுக்கு அமைச்சர் அவர்கள் சில சமாதானங்களைச் சொன்னார்கள். ரூல் 268-எ என்று எதற்காக அதில் சேர்த்தேன் என்றால், மோட்டார் வாகனச் சட்டத்தில் டவுன் சர்வீஸ் என்பதைப் பற்றிய விளக்கம் அந்த ஒரு ரூலிலேதான் இருக்கிறது என்பதால்தான். அதைத் தவிர வேறு எங்குமே டவுன் சர்வீஸ் என்றால் என்ன என்று இல்லை.

அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல் கடலூரிலிருந்து பாண்டிச்சேரி போகும் பஸ்களுக்கு இந்தத் திருத்தம் ஏற்பட்ட பிறகு கூடுதலான வரி விதிப்புதான் வரும். திருத்தத்தில் குறிப்பிட்ட டவுன் சர்வீஸ் என்று ஓடும் பஸ்களுக்குத்தான் என்று சொல்லியிருக்கிறார்கள். 268-ல் கொடுக்கப்பட்டிருக்கும் 15 மைல்களுக்கு ஓடும் பஸ்களுக்கு மாத்திரம் அல்ல. டவுன் சர்வீஸ் பஸ்கள் என்று கிளாசிபிகேஷன் கொண்டு வந்தால் இந்தத் திருத்தத்திற்கு உட்படும். இரண்டையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் தம்முடைய பட்ஜட் உரையில் சொல்லும்போது—

'As town services are generally not so remunerative there will be no enhancement in rates of tax on town services'.

என்றுதான் இருக்கிறது. நகருக்குள்ளே ஓடும்—

'Services plying within the town limits or within the city limits'.

என்று பட்ஜட் உரையிலே இல்லை. பாலிஸி ஸ்டேட்மெண்டை உறுதிப்படுத்த வேண்டும். அதை முக்கியமாகக் குறிப்பிட்டார்களே என்பதற்காகத்தானே தவிர, வரியைக் குறைக்க வேண்டுமென்பதற்காகவோ, வரி அதிகம் என்ற காரணத்திற்காகவோ அல்ல.

டவுன் சர்வீஸ்கள் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதைக் கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸ் கொடுத்திருக்கும் பட்ஜட்டில் இருந்தே நன்றாக உணரலாம். சர்க்கார் பஸ் சொர்விசுக்கு 1967–68-ம் வருஷத்திற்கு பஸ்களுக்காகச் செலுத்தபட வேண்டிய வரித்தொகை 50 லட்சம் என்று கொடுத்திருக்கிறார்கள். அதே வரித்தொகையை 1966–67-க்கும் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்க பஸ் சொர்விசும் நகரத்திற்குள்ளேயும் வெளியிலும் நடத்தப்படுகிறது. அந்த சொர்விசும் டவுன் சர்வீஸ் என்றுதான் இருக்கிறது. அதுவும் பாதிக்கப்படும் என்ற நிலைமை இருந்திருந்தால் ஒதுக்கப்பட்டது 50 லட்சமாக இருக்காது, இன்னும் அதிகமாக ஒதுக்கி இருப்பார்கள். அதிகமாக ஒதுக்காமல் இருப்பதிலிருந்தே டவுன் சர்வீஸ் எல்லாவற்றுக்கும் இந்த வரி உயராது என்ற முதலமைச்சர் உறுதிமொழியை எடுத்துக் கூறும் வகையில்தான், அந்த நம்பிக்கையில்தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

டவுன் சர்வீஸ் என்பதைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். 15, 20 வருஷங்களுக்கு முன்பாக டவுன் சர்வீஸ் நகரத்திற்குள்ளேயே ஓடுகின்ற நிலை இருந்தது. மெட்ராஸ் என்றால் சென்னைக்குள்ளேயே ஓடிக்கொண்டிருந்தது. இப்போது நகரப் புறங்களில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளும், காலனிகளும், மெடிகல் காலேஜுகளும், எஞ்சினியரிங் காலேஜுகளும், மற்றும் பல அபிவிருத்திகளும் ஏற்பட்டதன் காரணமாக மக்களுக்குச் சவுகரியம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால் டவுன் சர்வீஸ்கள் விஸ்தரிக்கப்பட்டன. ஒரு நாளைக்கு 250 மைல் செல்வதற்குச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். 250 மைல் ஒரு டவுன் சர்வீஸ் ஓட முடியாது. 10 மைல் ரூட்டாக இருந்தாலும் கூட ஒரு நாளைக்கு 25 ட்ரிப் அடித்தால்தான் 250 மைலைப் பூர்த்தி செய்ய முடியும். காலை 4 மணிக்கு ஆரம்பித்து இரவு 11 மணிவரை ஓட்டினாலும் கூட, இருக்கும்படியான சிக்கல்கள், டிராபிக் கஞ்செஷன்.

இரண்டு பர்லாங்குக்கு ஒரு ஸ்டாப் என்ற நிலையில் 250 மைல் ஓட்ட முடியாது. மபஸல் சர்விசாக இருந்தால் 4 மைலுக்கு ஒரு ஸ்டாப். டவுன் சர்விசில் 2 பர்லாங்குக்கு ஒரு ஸ்டாப் இருப்பதால் காலதாமதம் ஏற்படும். ஆகவே, இது சலுகை கொடுத்தும் கொடுக்காத சலுகைதான். வரியை உயர்த்துவதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் இந்தச் சலுகை "இம்ப்ராக்டிகபிள் கன்ஸெஷன்". அனுபவத்தில் கொண்டு வர முடியாத சலுகையாகும். அதனால்தான் அரசாங்கமே நடத்துகிற பஸ்களை இதற்குள்ளே உட்படுத்திக்கொள்ளவில்லை.

பழைய வரி விகிதத்தை போட்டும்கூட 34 லட்சம் டவுன் சர்வீஸ் பஸ்களுக்கு, நஷ்டம் காட்டியிருக்கிறது. மோட்டார் வெகிள் டாக்ஸ்படி 50 லட்சம் ஒதுக்கியிருந்தும் கூட 34 லட்சம் நஷ்டம் வருகிறது. இது எதைக் காட்டுகிறது ? சர்க்காரே டவுன் சர்விஸ்களில் லாபம் இல்லை என்ற உண்மையை ஒத்துக் கொண்டதை நன்றாகக் காட்டுகிறது. ஆகவே தான் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்குப் பேச அனுமதி தந்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது பற்றிய விளக்கத்தைக் கூறியிருக்கிறேன். இது முன்னரே உள்ள வேறுபாடுதான். முந்திய சர்க்காரிலே தீர யோசிக்கப்பட்டு சட்டத்திலே வரி விலக்கு விதி விலக்கு அளிக்க முடியாத நிலையிலேதான் இந்த மசோதா தீட்டப்பட்டது. அந்த வேறுபாட்டை இப்போது நீக்குவதற்கான அவசியம் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. குறைந்த தூரந்தான் டவுன் செர்விசுகள் போகின்றன என்று குறிப்பிட்டார்கள். முன்பே சொன்னேன் ; 130 மைல் போவதிலேயே வருகின்ற வருமானத்திற்கு ஏற்றவாறு 10 சதவீதம் என்ற அளவிலே சர்சார்ஜ் கொடுக்கிற நேரத்தில் மொத்தமாகக் கட்ட வேண்டிய வரிச் சுமையில் இருந்து விலகிக் கொள்ளுகிறார்கள். ஆகவே, அவர்கள் சொன்ன வாதம் ஒத்துக் கொள்ளக்கூடியதாக இல்லை.

வரவு-செலவுத் திட்டத்தில் உள்ள ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். சர்க்காருடைய பஸ் போக்குவரத்தினுடைய கணக்கில் டவுன் சர்விசுக்கு இந்த வரி புகுத்தப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை என்று குறிப்பிட்டார்கள். இந்த மசோதா நிறைவேறுவதற்கு முன்பே தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் என்ற காரணத்தால் அதிலே இதைப் புகுத்த இயலாது என்பதை உணருவார்கள். இனிமேல் அது இடம் பெறும் என்று தெரிவித்துக்கொண்டு, எந்த வகையிலும் இந்த நகர பஸ் என்று இருப்பதற்கும் நகரத்திற்குள் ஓடுகின்ற பஸ் என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை அகற்ற முடியாத நிலையில் இருக்கிறேன். முன்பு சொன்னதைத் தான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதற்கு விதிவிலக்கு அளித்துவிட்டால் குறைந்த தூரம் 15 மைல்—24 கிலோ மீட்டர் நகரில் சேராமல் இருக்கிற [illegible] பஸ்[illegible]கள் 50, 55 ரூபாயை வரியாகக் கட்டும்போது தாங்[illegible]சிக்கப்ப[illegible]தாக, பாரபட்சம் காட்டுவதாக எண்ண இடம் [illegible]டும். அரசாங்க வருமானத்திலே 12 லட்சம் ரூபாய் துண்[illegible]கூடிய வகையி[illegible]க்கிற இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொ[illegible]தற்கில்லை என்று கூ[illegible]ர்கிறேன்.

திரு. நா. காசிராமன் [illegible]களுடைய திருத்தம் [illegible]வையின் முடிவிற்கு விடப்பட்டு, நிராகரிக்கப்பட்டது.

6-வது பிரிவு பேரவையின் முடிவிற்கு விட[illegible] நிறைவேற்றப் பட்டது.

7-வது பிரிவு பேரவையின் முடிவிற்கு விடப்பட்[illegible]றைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு, முன்னுரை, முதல் [illegible] இவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேர[illegible] தலைவ[illegible]ர்களே, தமிழ்நாடு 1967–ம் ஆண்டு மோட்டா[illegible] வண்டிகள் வ[illegible]திப்பு (திருத்த) மசோதா சட்டமாக்கப்பட வேண்[illegible]" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு வி[illegible]டு, மசோதா நிறைவே[illegible] பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : [illegible]ய நிகழ்ச்சிகள் இத்[illegible] முடிவடைகின்றன. நாளைக் காலை ஒ[illegible] மணி அளவில் [illegible] பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

4. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

*205. Notification issued with G.O. Ms. No. 1444, Agriculture, dated the 29th April 1967, directing the Coimbatore Market Committee to provide the facilities for the purchase and sale of cotton, groundnut, tobacco and turmeric at Kodumudi in Coimbatore district. [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agriculture Produce Markets Act*. 1959 (*Madras Act* 23 *of* 1959).]

* 206. Notification issued with G.O. Ms. No. 791, Revenue, dated the 18th April 1967, fixing the land revenue payable in respect of pannai lands and the ryoti lands held by the ryots in Pudukkottai inam estates. [*Laid on the Table of the House under section* 73 (5) *of the Madras Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Act*, 1963 (*Madras Act* 26 *of* 1963).]

* 207. Notification issued with G.O. Ms. No. 796, Revenue, dated the 18th April 1967, appointing the 1st day of June 1967, as the date on which the provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari)Act, 1963 shall come into force in Seevalrayanendal and Kurukkalkulam inam estates Sankarankoil taluk of the Tirunelveli district. [*Laid on the Table of the House under section* 73 (5) *of the Madras Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari Act*. 1963 (*Madras Act* 26 *of* 1963).]

* 208. Notification issued with G.O. Ms. No. 1396, Industries, Labour and Housing (Industries). dated the 26th April 1967, making certain amendments to the Madras Small Scale and Cottage Industries Loans and Subsidy Rules 1956, published at pages 439 to 453 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 29th August 1956, as subsequently amended. [*Laid on the Table of the House under section* 19 (*d*) *of the Madras State Aid to Industries Act*, 1922 (*Madras Act V of* 1923).]

B. Reports, Notification and other Papers.

Nil.

Laid on the Table of the House on 27th June 1967.

65010
R11,31 N6
N67-3-1

இரண்டு பர்லாங்குக்கு ஒரு ஸ்டாப் என்ற நிலையில் 250 மைல் ஓட்ட முடியாது. மபஸல் சர்விசாக இருந்தால் 4 மைலுக்கு ஒரு ஸ்டாப். டவுன் சர்விசில் 2 பர்லாங்குக்கு ஒரு ஸ்டாப் இருப்பதால் காலதாமதம் ஏற்படும். ஆகவே, இது சலுகை கொடுத்தும் கொடுக்காத சலுகைதான். வரியை உயர்த்துவதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் இந்தச் சலுகை "இம்ப்ராக்டிகபிள் கன்செஷன்". அனுபவத்தில் கொண்டு வர முடியாத சலுகையாகும். அதனால்தான் அரசாங்கமே நடத்துகிற பஸ்களை இதற்குள்ளே உட்படுத்திக்கொள்ளவில்லை.

பழைய வரி விகிதத்தைப் போட்டுக்கூட 34 லட்சம் டவுன் சர்விஸ் பஸ்களுக்கு, நஷ்டம் காட்டியிருக்கிறது. மோட்டார் வெகிகிள் டாக்ஸ்படி 50 லட்சம் ஒதுக்கியிருந்தும் கூட 34 லட்சம் நஷ்டம் வருகிறது. இது எதைக் காட்டுகிறது? சர்க்காரே டவுன் சர்விஸ் நடத்தி லாபம் இல்லை என்ற உண்மையை ஒத்துக் கொண்டதை நன்றாகக் காட்டுகிறது. ஆகவே தான் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்குப் பேச அனுமதி தந்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது பற்றிய விளக்கத்தைக் கூறியிருக்கிறேன். இது முன்னரே உள்ள வேறுபாடுதான். முந்திய சர்க்காரிலே தீர யோசிக்கப்பட்டு சட்டத்திலே வரி விலக்கு விதி விலக்கு அளிக்க முடியாத நிலையிலேதான் இந்த மசோதா தீட்டப்பட்டது. அந்த வேறுபாட்டை இப்போது நீக்குவதற்கான அவசியம் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. குறைந்த தூரந் தான் டவுன் செர்விசுகள் போகின்றன என்று குறிப்பிட்டார்கள். முன்பே சொன்னேன்; 130 மைல் போனாலேயே வருகின்ற வருமானத்திற்கு ஏற்றவாறு 10 சதவீதம் என்ற அளவிலே சர்சார்ஜ் கொடுக்கிற நே[illegible] மொத்தமாகக் கட்ட வேண்டிய வரிச் சுமையில் இருந்து [illegible] கொள்ளுகிறார்கள். ஆகவே, அவர்கள் சொன்ன வாதம் [illegible] கொள்ளக்கூடியதாக இல்லை.